

# கோமதியின் காதலன்

தேவன்

CONNEMARA PUBLIC LIBRARY
10 MAR
CHENNAI

**தேவன்**

8.9.1913-ல் திருவிடைமருதூரில் பிறந்தவர். இயற்பெயர் ஆர். மகாதேவன். கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றவர். சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

எழுத்துத் துறையில் இருந்த ஆர்வத்தில் ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து, நிர்வாக ஆசிரியரானவர். 23 ஆண்டுகள் விகடனில் பணியாற்றிய தேவன், நகைச் சுவைக் கதைகளும் கட்டுரைகளும் எழுதினார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருமுறை பதவி வகித்தவர். மே 5, 1957 அன்று தம்முடைய 44-ம் வயதில் காலமானார்.





## அத்தியாயம் - 1

CONNEMARA PUBLIC LIBRARY
CHENNAI

*'திருடர்கள் ஜாக்கிரதை!'*

*- ரயில் வண்டி விளம்பரம்*

அபாயச் சங்கு 'ஊ...ஊ...ஊ...' என்று சேர்ந்தாற் போல் ஒரு நிமிஷ நேரம் நீண்ட ஊதலாக ஊதியது. அதைத் தொடர்ந்து ஏற்றியும் இறக்கியும் அடுத்த நிமிஷம் பூராவும் அலறத் தொடங்கியது.

இந்த அலறல் ஓய்ந்த சுருக்கோடு, சுருக்காகச் சென்னையின் பல பாகங்களிலும் ஏ.ஆர்.பி. ஊதல்களின் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. தெருக்களில் நடந்தவர்களில் பெரும்பாலோர் தாங்களாகவே பக்கத்திலிருந்த கட்டடங்களுக் குள் நுழைந்து கொண்டார்கள். மிகுதி இருந்தவர் களை ஏ.ஆர்.பி. வார்டன்கள் விரட்டினார்கள்.

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமை யில் இருந்த ஒரு ரஸ்தாவில், ஏ.ஆர்.பி. சீனுவின் அதிகாரம் தூள் பறந்தது. 'ஏய்! யாரடாவன், கிழவன்! காது கேட்கலே உனக்கு? போ, ஓரம்! ஹூம்!' என்று வயோதிக வழிப்போக்கன் ஒரு வனை ஒரு சத்திரத்துத் திண்ணைக்குக் கொண்டு தள்ளினான். ஒரு கட்டை வண்டியைத் தட் சணமே அவிழ்த்துப் போடும்படி ஆக்ஞை

பிறப்பித்தான். கூடையில் கோழியுடன் ஒதுங்கிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீயை அவன் வெறித்த வெறியில், அவளும் கோழியும் அதே ஸ்தலத்தில் பஸ்மீகரமாகாததே ஓர் ஆச்சரியம் என்று தோன்றும்படி செய்தான்.

ஒருவழியாகத் தெருவைக் காலி செய்துவிட்டு, நிர்மானுஷ்ய மாக்கப்பட்ட பிரதேசத்தை மேலும் கீழும் பார்த்தான். பிறகு தன் மார்பையும் பார்த்துக்கொண்டு தற்பெருமையால் பூரித்து நின்ற சீனுவின் கௌரவத்துக்கு அவ்வளவு சீக்கிரத்திலேயே பங்கம் ஏற்படப்போகிறதென்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

தெருக் கோடியில் ஆஜானுபாகுவான ஓர் இளைஞன், கையில் சூட்கேஸுடன் அப்போது தோன்றினான். சற்று முன் வந்த எலெக்ட்ரிக் டிரெயினில் அவன் இறங்கியிருக்க வேண்டும். சங்கு ஊதியதையோ, தெருவில் யாராவது நடக்கிறார்களா என் பதையோ அவன் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. ஏன், உணர்ந்ததாகக்கூடத் தெரியவில்லை. ஏ.ஆர்.பி. சீனுவினுடைய சர்வாதிகாரம் பெற்ற பிரதேசத்தில் காலடி வைக்கிறோமென்ற அச்சம்கூட அவனுக்கு ஏற்படவில்லை! ஐந்தரை அல்லது ஐந்தேமுக்கால் அடி உயரமும், வாட்ட சாட்டமாய்த் திரட்சியுற்ற அங்கங்களுடன் பார்ப்பதற்கு அதிகார கம்பீரத் தோற்றமுடையவ னாக இருந்த அந்த இளைஞன், சூட்கேஸை ஆட்டிக் கொண்டு வெகு சாவதானமாகத்தான் தெருவோடு நடந்து வந்தான்.

இந்தக் காட்சியைக் கண்ட ஏ.ஆர்.பி. சீனு, ஒரு நிமிஷ நேரம் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப்போய் விட்டான். என்ன அசட்டுத் தைரியம் இவனுக்கு! 'ஏய்!' என்று ஓர் இரைச்சல் போட்டான் சீனு. அவனுக்கு ஏற்பட்ட பிரமிப்பில் குரல்கூட அப்போது கணீரென்று கிளம்பவில்லை.

இளைஞன் திரும்பிப் பார்க்கவுமில்லை; குரல் கேட்டதாகவும் காண்பித்துக் கொள்ளவில்லை.

'ஏய்! உன்னைத்தான்!'

மறுபடி அவன் பேசாமல் மேலே நடந்தான். சீனுவுக்கு இனி மேலும் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. ஓடிப்போய் அவன் எதிரில் நின்று வழியை மறித்து, 'எங்கே தம்பி போறே! மாமனார் ஊட்டுக்கா? குஷியா நடக்கிறீயே?' என்றான் எகத்தாளமாக.



இளைஞன் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'ஏன் உனக்குச் சொல்லித்தான் ஆகணுமோ?' என்று கேட்டான்.

'சொல்லத் தேவை இல்லை. தம்பி! சங்கு ஊதிச்சே, அதுவாவது உன் காதிலே விழுந்துதா?'

இதைக் கேட்டு சத்திரத்தில் ஒதுங்கியிருந்தவர்களில் இரண் டொருவர் சிரித்தார்கள். அரை மீசையும் கிருதாவும் வைத்துக் கொண்டு, ஒரு சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்த ஒரு பேர்வழி, வாயின் ஒரு புறத்தால் மட்டும் சிரித்துவிட்டு, 'காது இவனுக்கு டமாரமோ என்னமோ?' என்றான்.

'ஆமாம்... ஊதினாப்லே இருந்தது... அதற்கென்ன?' என்று கேட்டான் இளைஞன்.

'சங்கு ஊதினா, இன்னிக்குப் பதுங்கிக்கணும்... இன்னிக்கு 'நிஜ ஒத்திகை' பண்றாங்க. போ, அப்படி! நாட்டுப்புறம் போலே இருக்கு! ஹூம்.'

ஏ.ஆர்.பி. சீனு அவன் கையைப் பிடித்துக்கொண்டு சரசரவென்று நடந்து சென்று, சத்திரத்துத் திண்ணையில் கொண்டு அவனை நிறுத்தினான். 'படிச்சவங்க, படிக்காதவங்க எல்லாம் ஒண்ணாத் தான் இருக்காங்க... ஏதடா சங்குதான் ஊதிச்சே, ஓர் அரைமணி ஒதுங்குவோம் என்ற அறிவு கிடையாது' என்று அவன் ஒரு சிறு லெக்சர் அடிக்க ஆரம்பித்தான். ஆனால், இளைஞன் முகம் சிவப்பதைக் கண்டு, புத்திசாலித்தனமாக நிறுத்திக்கொண்டான். தன் கடமையை மீறிக்கொண்டு அவமரியாதையாகப் பேசும் சீனுவை, நடக்கிறது நடக்கட்டுமென்று ஓர் அறை கொடுக்கத் தான் இளைஞன் தீர்மானம் செய்துகொண்டிருந்தான். ஆனால், அவன் கையால் அறை வாங்கும் பாக்கியத்தைச் சீனு கொடுத்து வைக்கவில்லை. அதற்கென்று வேறொருவர் பிறந்து வளர்ந் திருந்தாராகையால், எங்கிருந்தோ தெரு நடுவில் வந்து கொண் டிருந்த ஒரு பிச்சைக்காரனை விரட்டிக் கொண்டு ஊதலுடன் ஒரே ஓட்டமாக ஓடினான்.

இளைஞன் கையிலிருந்த சூட்கேஸ் சிறியதுதான். அழகாக அதில் 'ரங்கராஜன்' என்று அவன் பெயரும் எழுதியிருந்தது. அதை வெகு நேரமாகக் கையிலேயே வைத்திருந்த காரணத்தினால், நிமிஷத்துக்கு நிமிஷம் அதன் கனம் அதிகமாகிக்கொண்டே வந்து, அந்தச் சமயத்தில் அரை டன் கனக்க வேண்டுமென்ற

பிரமை அவனுக்கு உண்டாகிக் கொண்டிருந்தது. ஆகவே, அதைத் திண்ணையின் மேல் வைத்துவிட்டு, அங்கிருந்தவர்கள் மீது திருஷ்டியைச் செலுத்தினான். திண்ணையின் ஒரு மூலையில் உட்கார்ந்து, வயோதிகனும் கோழிக்கூடை வைத்திருந்த ஸ்திரீயும் பேசிக்கொண்டிருந்தார்கள். நடுநடுவில் கூடையிலிருந்த கோழியும் தலையைத் தூக்கி, 'கொக் கொக் கொக் கோ' என்று அவர்கள் சம்பாஷணையில் கலந்து கொண்டது.

அடுத்தபடியாக ரங்கராஜனுடைய திருஷ்டி, ஒருபுறமாகத் திரும்பிக்கொண்டு நாணத்துடன் நின்ற ஒரு யுவதியின் மீது விழுந்தது. அவளை ஒரு முறை பார்த்தவுடனேயே அவனுடைய நெஞ்சம் ஒரு குதி குதித்ததாகத் தோன்றியது. இதற்கு முன்பு அவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான். ஆனால், ஒருமுறை பார்த்தபின் இரண்டாம் முறையும் பார்க்க வேண்டுமென்ற அவாவைத் தூண்டியவள் இதுவரை யாரும் இருந்ததில்லை. இவள் அதற்கு விதிவிலக்காக அல்லவோ இருக்கிறாள்? எடுப்பான மூக்கு, நீண்ட கருவிழிகள், படிப்படியான கேசம்... சிவப்பு என்று சொல்ல முடியாது; இருந்தால் என்ன? சாதாரணமான சீட்டிப் புடைவைதான், பள்ளிகூடத்து மாணவிகள் உடுத்தும் பாணியில் உடுத்தியிருந்தாள்; அதிலேயே ஒரு கவர்ச்சி அல்லவா தென்பட்டது? ஒரு மூக்கு மட்டும் குத்திக்கொண்டு, அதில் ஒரு பேஸரி அணிந்திருந்தாள். கைக்கு ஒரு மெல்லிய வளையல்; சோப்புப் பெட்டி அளவுக்குக் கையில் ஓர் அட்டைப் பெட்டி மட்டும் வைத்திருந்தாள்.

இளைஞன் மூன்றாம் முறையாக அவளை நோக்கினான், அவன் தன்னைக் கூர்ந்து கவனிக்கிறான் என்று அவள் ஜாடையாக அறிந்து கொண்டதனாலோ என்னவோ, இன்னும் கொஞ்சம் அதிகமாக வேறுபக்கம் திரும்பிக் கொண்டாள். இவள் யார்? அதை அறிந்து கொள்ள ரங்கராஜன் மனம் அடித்துக்கொண்டது.

அரை மீசைக்காரன் திண்ணையில் ஏறிக் குத்திட்டு உட்கார்ந்து கொண்டு, இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். ரங்கராஜன் அவனை ஒரு பார்வை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டு, அங்கிருந்த மற்றொருவரையும் கவனித்தான். இதுகாறும் ஒரு சம்ஸ்கிருத புத்தகத்தில் கவனமாயிருந்த அவர், தலையை நிமிர்த்தி ரங்கராஜனைக் கூர்ந்து பார்த்தார். ஐம்பது வயதிருக்கும். அவர் நெற்றியில் சந்தனக் கீறலின் நடுவில்



ஒரு குங்குமப் பொட்டும், சட்டை மேல் யோக வேஷ்டியும் அணிந்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது, வைதிகமாக இருப்பார் என்று ஊகித்தான். உதடுகளின் அமைப்பு, ஹாஸ்யச்சுவை உடையவரென்று வெளியாக்கியது. மூக்குக் கண்ணாடியை நுனி மூக்கில் நிறுத்தி, அதன் வழியாக ரங்கராஜனைப் பார்த்துவிட்டு, 'பட்டணத்துக்குப் புதுசு போலிருக்கே, ஓய்! உமக்கு எந்த ஊர்?' என்று, கணீரென்ற குரலில் விசாரித்தார்.

'தஞ்சாவூர் பக்கம்' என்றான் ரங்கராஜன்.

மற்றும் அவனை மேலும் கீழும் பார்த்துவிட்டுப் பெரியவர், 'உத்தியோக நிமித்தமாக வந்திருக்காப்பலேயோ? வேகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே! ஆனா, அது ஒரு சோக நாடகம். பட்டணத்திலே கிடைப்பது ரோகம்தான்! இருந்தாலும், இந்த மோகம் விடமாட்டேனென்கிறது' என்றார் அவர்.

ரங்கராஜன் புன்னகை செய்தான். ஆசாமி பிராஸத்தில் கைக்காரர் என்று புரிந்துகொண்டு, 'என்ன செய்கிறது. அப்படி இருக்கிறதே லோகம்; வேலை கேட்கிறதே தேகம்!' என்றான். 'களுக்' கென்று சிரிப்பு கேட்கவே, அவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் இப்போது நன்றாகவே வேறுபுறம் திரும்பிக்கொண்டிருந்தாள். ஆனாலும், சிரித்தது அவளாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை.

பெரியவர் மேலும் சொன்னார்: 'இந்த நாளைப் பிள்ளைகளுக்கு எல்லாமே அலட்சியம்; வேதம் என்றால் காத தூரத்துக்குப் போகிறார்கள். வெள்ளைக்காரன் நாகரிகம்தான் பிடிக்கிறது. உண்மையிலே அது ஒரு வலை. அதில் கொடுக்கிறான் இவன் தலை. மேலும் மேலும் அடிக்கிறது அலை!'

'ரொம்ப சரி, சார்! இந்தக் காலத்தில், சேலைதான் கேட்கிறது வேலை. புருஷர்களுக்குக் கிடைப்பதோ தொல்லை!'

இதுவரை பெரியவர் பிராஸத்தில் தனக்கு நிகர் சமானமானவர்களைக் கண்டதில்லை. ரங்கராஜனின் பதில் அவரை வியப்பில் ஆழ்த்தியது. 'நீர் புத்திசாலியாயிருக்கிறீர் ஓய்! நம்ம பெரியவாள் முன்பு செய்திருந்த திட்டமெல்லாம் எவ்வளவு புத்திசாலித்தனமானது! இப்போ இருக்கிற கஷ்ட நஷ்டங்கள், பஞ்சம் பிணியெல்லாம் அந்த நாளிலே உண்டா? ஹிண்டூஸ் ஒரு நாளும் மண்டூஸ் இல்லை!'

'சந்தேகமென்ன! அவர்கள் என்றைக்கும் 'குண்டூஸ்' தான்!'

மறுபடியும் சிரிப்புச் சத்தம் கேட்டது. 'சபாஷ்!' என்று ரங்கராஜனின் முதுகில் தட்டினார் பெரியவர். 'என் பெயர் வேதராம சாஸ்திரி; வேதராம அய்யர் என்றும் சொல்வார்கள். இந்தப் பஞ்சங்கள் போக, நான் தெய்வங்களுக்கே லஞ்சங்கள் கொடுத்துப் பலபேருடைய கைங்கரியமாக ஒரு யாகம் நடத்தப் போகிறேன்' என்று நிறுத்தினார்.

'நான் எத்தனை தியாகம் செய்ய வேண்டும்!' என்று ரங்கராஜன் மணிபாக்ஸை எடுத்தான். அவனுக்குப் பெரியவரை அதற்குள்ளாகவே மிகவும் பிடித்துப் போய்விட்டது.

அரை மீசைக்காரன் இவர்களுடையப் பேச்சைக் கேட்டுக் கொண்டே இளைஞனுக்குப் பின்புறம் மெல்ல நகர்ந்து உட்கார்ந்துகொண்டான். திண்ணையில் இருந்த ரங்கராஜனுடைய கைப்பெட்டியின் மேல் தனது கையை வைத்து எழும்பி, தோள் மேலாக மணிபாக்ஸுக்குள் பார்த்தான். அதில் நிறைய ரூபாய் நோட்டுகள் தென்பட்டன. ரங்கராஜன் இரண்டு ரூபாய்களை மட்டும் எடுத்துக்கொண்டு திரும்ப அதை மூடி ஜாக்கிரதையாக தன் கோட்டின் உள் பாக்கெட்டில் வைத்துக்கொண்டபோது, அரை மீசைக்காரன் முகம் சற்றே வாடியது.

'தேங்க்ஸ்' என்றார் பெரியவர். பணம் அவர் சட்டைப் பையைப் போய் அடைந்ததும், ஒத்திகை முடிந்ததற்கு அடையாளமாகச் சங்கு உடனே ஊதியது. அடுத்த வீட்டு வாசலில் நின்ற மோட்டார் ஒன்று கிளம்ப ஆயத்தம் செய்யவே, பெரியவர் விழுந்தடித்துக்கொண்டு ஓடி, அதில் உட்கார்ந்திருந்தவருடன் ஏதோ பேசினார். அவர் சற்று நகர்ந்து இடம் கொடுக்கவே, இவரும் மோட்டார் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து கொண்டு, ரங்கராஜனுக்கும் ஒரு புன்னகையை விநியோகம் செய்து, 'அப்புறம் சந்திக்கலாம் சார்!' என்றார். மோட்டார் கிளம்பிச் சிறிது தூரம் போகும் வரையில் ரங்கராஜன் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு பெருமூச்சுவிட்டு, 'பெரியவர் பலே காரியவாதி' என்று திரும்பியவன் திடுக்கிட்டான். சத்திரத்துத் திண்ணையில் அப்போது யாருமே இல்லை.

ஆம், அந்தப் பெண்ணும்கூட இல்லை! அதற்குள் எங்கே போய் விட்டாள்! எப்படி மாயமாக மறைந்தாள்! பெரியவரோடு பேசிக் கொண்டு வழி அனுப்பிக்கொண்டிருந்தபோது, எல்லாரும்



போயிருக்க வேண்டும். 'சரி, தாமும் பெட்டியுடன் கிளம்பலாம்' என்று திண்ணையைப் பார்த்தான். திண்ணையும் காலியாகத்தான் இருந்தது. பெட்டி எங்கே? ஐயோ, எங்கே? யாரைக் கேட்பது? யார் சொல்வார்?

பதினைந்து நிமிஷ நேரத்துக்கு ரங்கராஜன் ஓடி ஆடிப் பார்த்தான். அவனுக்கு முதலில் பகீரென்றது. என்ன! இப்போது இருந்த பெட்டி எங்கே போய்விடும்? இன்னும் இருட்டவில்லை, பகல்தான். அதிலேயும்கூடக் கொள்ளையா? என்ன ஆச்சரியம்? அப்படி யார் எடுப்பார்கள்! கிழவனா? அரை மீசைக்காரனா? அல்லது யுவதியா? ரங்கராஜன் மனம் அலைபாய்ந்தது. யாரிடமாவது சொன்னால்கூட சிரிப்பார்களே! இதைவிட முட்டாள் தனம், மடத்தனம் எங்கேயாவது இருக்க முடியுமா?

மனித சுபாவத்தில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. ஒரு சிலர் கையில் பண்டம் இருக்கும் வரையில் அதை எவ்வளவோ கட்டிக் காப்பாற்றி, பிறர் கையில் விடாமல் பாதுகாப்பார்கள்; அவ்வளவு ஜாக்கிரதையும் பந்தோபஸ்தையும் மீறி அது போய் விட்டால், சிறிது நேரம்தான் சஞ்சலப்படுவார்கள். ஆனால், அந்தச் சஞ்சலத்துடனேயேகூட ஒரு திடசங்கல்பமும் நிச்சய புத்தியும் ஏற்பட்டுக்கொண்டு வரும். 'போனால் போகட்டும்! போனதைக் குறித்து யோசிப்பதைவிட, நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசிக்கலாம்' என்ற தீர்மானம்தான் அது. ரங்கராஜனுடைய சுபாவமும் கிட்டத்தட்ட இதை ஒத்திருந்ததாகையால், வெகு சீக்கிரத்திலேயே அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். 'என்ன போய்விட்டது? நாலைந்து சட்டைகள், வேஷ்டிகள், ஒரு நல்ல டயரி, ஒரு பழைய ஃபவுண்டன் பேனா, இவ்வளவு தானே?' என்று எண்ணினான். நல்ல வேளையாக, ஒரு பத்து ரூபாய் நோட்டைத் தவிர, பாக்கிப் பணமெல்லாம் அவன் சட்டைப் பையிலேயே இருந்தது. 'டயரிதான் வேறு எழுத முடியாது, போகட்டும்' என்ற தீர்மானத்துடன் சத்திரத்தை விட்டுக் கிளம்பி, வேகமாக நடந்தான்.

கையெழுத்து மறையும் நேரம். ரங்கராஜன் வேகமாகவே சென்றான். இருட்டுவதற்குள் மவுண்ட் ரோட்டுக்குச் சென்று, ஒரு ஹோட்டலில் அறை பேசிக் கொள்வது என்பது அவன் முடிவு. இரண்டு பர்லாங்கு தூரம் இப்படிச் சென்ற பிறகு, குறுக்கு வழி ஒன்று வந்தது. அந்தச் சந்தின் வழியாகப் போகலாமா, அல்லது

நேரே ரஸ்தாவுடன் போகலாமா என்று ரங்கராஜன் சிந்தித்த சமயம். அந்தச் சந்தில் அவன் கண்ட காட்சி சீக்கிரம் ஒருவித முடிவுக்கு வரச் செய்தது.

சந்தில் ஜனநடமாட்டமே இல்லையென்று சொல்லும்படி இருந்தது. அதில் சிறிது தூரத்தில் அவன் சத்திரத்தில் கண்ட அதே பெண்மணி போய்க்கொண்டிருந்தாள். அவளைப் பின்பற்றி நாகரிகமாக நிஜார் அணிந்த ஒருவனும் சென்று கொண்டிருந்தான். அரை நிமிஷம் கவனிப்பதற்குள் ரங்கராஜனுக்கு அவள் நேராகச் செல்லாமல், அவன் கையில் அகப்படாமலிருக்க வளைந்து வளைந்து செல்வதாகத் தோன்றவே அவன் நின்று மேலும் கவனித்தான். சட்டென்று அந்த மனிதன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று, அவள் வழியை மறிப்பதுபோல் எதிரில் நின்றான். அவனைத் தாண்டிச் செல்ல அவள் முயற்சி செய்வது அடுத்தபடி தெரிந்தது. இனி அதிக நேரம் தாமதிப்பதில் உபயோகமில்லை என்று ரங்கராஜன் ஓட்டமாகச் சென்று சமீபத்தில் நின்று கவனித்தான்.

'எங்கே போறே, சொல்லேன்!' என்று கேட்டுக் கொண்டிருந்தான் மனிதன். சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள அவன் முகம் ஜிவ்வென்று சிவந்திருந்தது. இன்னும் நெருங்கிப் போயிருந்தால் சாராய வாசனை 'கம்'மென்று அவன் மீது வீசியிருக்கும்.

'தயவுசெய்து போங்கள்... எனக்கு விட்டுக்குப் போக வேண்டும். அப்புறம் வீட்டில் கோபிப்பார்கள். வழியை விடுங்கள்!' என்றாள் பரிதாபமாக, அந்தப் பெண்.

'இப்போ என்னா அவசரம்? நான் கொண்டு விடுகிறேன் உன்னை, என் மோட்டாரிலே... சித்தே பேசிக்கிட்டிருக்கலாம் வா, பாரிஜாதம்!'

'இது என்ன எழவு தொந்தரவு! என் பேரு பாரிஜாதமுமில்லை, மல்லிகையுமில்லை, வழியை விடுங்கள்!' என்றாள் பயத்துடன்.

'எங்கேயோ ஓடிட்டேன்னு எண்ணிப்பிட்டேன். திடீர்னு காணாமே போனியா? நல்ல வேளை, இங்கே கண்டு புடிச்சேன். பாரிஜாதம், பாரிஜாதம், எங்கணே போறே!' என்று அவன், பக்கத்தில் நெருங்கினான்.

பெண்ணின் நிலைமை மிகப் பரிதாபகரமாக இருந்தது. அவள் முன் நின்ற மனிதனின் போதையோ வரவர ஏறிக் கொண்டு



வந்ததும் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. இனி மேலும் வேடிக்கை பார்ப்பது உசிதமல்லவென்று ரங்கராஜன் குறுக்கே வந்து, 'ஏன்! இந்த ஆள் உன்னைத் தொந்தரவு செய்கிறானா?' என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லும்முன்பே, 'தம்பி! நீ ஓடிடு தம்பி! அடி விழறத்துக்குள்ளே ஓடிடு! உனக்குப் பள்ளிகூடத்துக்கு நேரமாயிப்போச்சு!' என்றான் குடிகாரன்.

'அடே! என்னை யார் என்று நினைச்சிண்டுட்டே? உம்! இங்கேயிருந்து இப்போ யார் ஓடப்போறா பார்க்கலாம்!' என்ற ரங்கராஜன் கோட்டை வழித்துவிட்டுக்கொண்டான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட யுவதி, மெல்ல அங்கிருந்து நகரவும், அந்தக் குடிகாரன் அதைக் கவனித்து அவசரமாக அவள் பக்கம் ஓர் அடி எடுத்து வைத்தான். ஆனால், அவனை முந்திக்கொண்டு ரங்கராஜன் குறுக்கே பாய்ந்து விட்டான்.

'கிழப் பயலே! போ! உம்!' என்று அவன் மார்பைப் பிடித்துத் தள்ளினான்.

'முடியாது! வழியை விடு! எனக்குப் பாரிஜாதத்தோட பேசணும்! என் பாரிஜாதம்! நீ போடா! உன் மூஞ்சியே நன்னாயில்லை! எனக்கு அதைப் பிடிக்கவில்லை... பாரிஜாதம்! சித்தே நில்லு. இவனை ஒரு குத்திலே தள்ளிவிட்டு வந்துடறேன்' என்று கூவிக்கொண்டு, ரங்கராஜனை முட்டித் தள்ளப் பார்த்தான். ஆனால், அது அவ்வளவு லகுவாக நடக்கும் காரியமாக இல்லாமல் போகவே இரண்டாம் முறையும் அதே குற்றத்தைச் செய்தான்.

'அடே நிறுத்து! மரியாதையாய்... ' என்று சொல்லத் தொடங்கின ரங்கராஜன்மீது ஒரு மெல்லிய குத்து, மார்பு புறத்தில் தாக்கியது. அவ்வளவுதான்! இதுகாறும் வெகு சிரமத்துடன் காப்பாற்றி வந்த பொறுமையை அந்த க்ஷணமே அவன் கைவிட்டான். மேலும், மிஞ்சுவதற்குள் தன் சொரூபத்தையும் காண்பித்தான். 'எலே, போக்கிரி பயலே! வயசானவனாக இருக்கிறாயே என்று பார்த்தால் சரிப்படாதுபோல் இருக்கிறது! இதை வாங்கிக்கொள்!' என்று சொல்லி நாலுமுறை கையை ஓங்கினான்; நாலு முறையும் கை பளார் பளார் என்று குடிகாரன் தோள்புறத்தில் சந்தித்தன. 'அற்ப நாயே! உன்னை அடித்து என் கையை அழுக்காக்கி கொள்ள வேண்டி வந்தது! ஊம், போ!' என்று அவன்

கழுத்தைப் பிடித்து வேகமாக ஒரு திருப்புத் திருப்பி முன்புறம் உந்தித் தள்ளினான்.

இத்தனை மரியாதைகளுக்குப் பிறகு தானாகவே போய்விடுவ தென்றுதான் குடிகாரனும் நிச்சயித்திருந்தான். ஆனால் அவன் போதுமான வேகத்துடன் போவானோ மாட்டானோ என்ற சந்தேகம் தோன்றிய ரங்கராஜன், தன் காலையும் ஒரு வீச்சு வீசி, பலமாக ஓர் உதை கொடுக்கவே, இந்தச் சிசுருஷையை சற்றும் எதிர்பாராத அந்த ஆசாமி அதிதுரிதமாக மண்ணைக் கவ்வுவதற்கு ஓடினான். அடுத்த நிமிஷம், உடம்பில் ஒட்டின குப்பையைக் கூடத் தட்டிக் கொள்ள நிற்காமல் ஓட்டம் பிடித்தான்.

யுவதியின் முகத்தில் அப்போது விகசித்த புன்னகையும், விரிந்த கருவிழிகளில் காணப்பட்ட நன்றியுமே ரங்கராஜனுக்குப் போதுமான வெகுமதிகளாகத் தோன்றின.

'எங்கே போக வேண்டும் இப்போது?' என்று கேட்டான் அவன்.

அவள் பதில் சொல்லாமல் மெல்ல முன்னால் நடந்தாள். அதற்குள்ளாகச் சந்தின் முனை, மெயின் ரஸ்தாவுடன் சேர்ந்து கொண்டது. அவர் திரும்பிப் பார்த்து, 'ரொம்ப வந்தனம்! நீங்கள் வந்து சமயத்தில் உதவியிருக்காவிட்டால் அந்தத் துஷ்டன் போயிருக்கவே மாட்டான்! இந்த நன்றியை நான் மறக்கவே மாட்டேன்!' என்று இனிய குரலில் சொல்லிவிட்டு, தன் சங்கோசத்தை மறைக்க வேகமாக நடந்தாள். மேலே என்ன பேசுவது என்று அறியாமல் ரங்கராஜனும் கூடவே பின் தொடர்ந்தான்.

அப்போது அவன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. குடிகாரன் பின் தொடர்வது அவளுக்கு உபத்திரவம் என்றால், இவன்கூடச் செல்வது மட்டும் ஏன் தொந்தரவு ஆகாது! 'வாலு போச்சு, கத்தி வந்தது' என்று அவள் நினைத்துக் கொண்டு விட்டால்? ஆனால், அவளைக் காப்பாற்றுவது என்ற வியாஜம் ஒன்று அவனுக்கு இருக்கிறதல்லவா? சற்றுத் தைரியமாக, 'மறுபடி அந்தக் குடிகாரப் பயல் தொந்தரவு இல்லாமல் நீ போக வேண்டுமே, நான் வேண்டுமானால் உன் வீடுவரை துணைக்கு வருகிறேன்' என்று கேட்டான் மரியாதையாக.

'தேவை இல்லை; பஸ்ஸில் ஏறிவிட்டேனானால் வீட்டுக்குச் சமீபத்திலேயே இறங்கி விடுவேன். ரொம்ப வந்தனம்' என்று



அவள் இன்னும் வேகமாக நடந்தாள். ஒருகால் நாம் வருவதில் இஷ்டமில்லையோ என்று ரங்கராஜன் தன் நடையைத் தளர்த்தியபோது, ஒரு பஸ் அவனைத் தாண்டிச் சென்று சற்றுத் தூரத்தில் நின்றது. மறுபடி அது கிளம்பிய போது, யுவதியை அங்கே காணவில்லை. அவள் பஸ்ஸில் ஏறிவிட்டாள்.

பிரமித்துப்போய் நின்ற ரங்கராஜன், மூன்று நிமிஷங்களுக்குப் பிறகு தன் மூளையைத் தானே திட்டிக் கொண்டான். 'பஸ் எங்கே போகிறதென்று பார்த்துக்கொள்ளாமல் போனோமே' என்பது தான் அவன் குறை.

'சரி, இனிமேல் சொந்த விஷயத்தைக் கவனிக்கலாம்' என்று பார்த்தபோது, அவன் கிட்டத்தட்ட மவுண்ட் ரோடுக்கு அருகாமையிலேயே வந்துவிட்டது தெரிந்தது. 'பதினைந்து நிமிஷம் நடையை வேகமாக ஓட்டினால் ஹோட்டல் வந்து விடும். அங்கே போய்ச் சேர்ந்து, நாளை காலையில் மற்ற விஷயங் களைப்பற்றி யோசிக்கலாம்' இப்படி ஒரு தீர்மானத்துடன் இரண்டடி எடுத்து வைத்தான். மூன்றாவது அடி வைக்குமுன்பே ஒரு மோட்டார் வண்டி சத்தமின்றி அவன் பக்கத்தில் நின்றது.

அதில் கறுத்துப் பருத்த ஒரு மனிதர், டிரைவர் ஸ்தானத்தில் உட்கார்ந்திருந்தார். ரங்கராஜனைப் பார்த்ததும், 'ஏய், யாரப்பா நீ! ஒரு சின்ன உபகாரம் செய்வாயா?' என்று அதிகாரத் தோரணை யில் கேட்டார்.







## அத்தியாயம் - 2

'என் என்றால் எண்ணெயாக இரு'

- ஒரு பழமொழி

அதிர்ஷ்ட தேவதையை எத்தனையோ அதிர்ஷ்ட ஹீனர்கள் கன்னாபின்னாவென்று திட்டியிருக்கிறார்கள். ரொம்ப நியாயமாகவும் கூட அவர்கள் திட்டியிருக்கிறார்கள். ஆனால், வேறு விதத்தில் அவர்கள் எல்லாரையும் விட வைவதற்கு ஒருவர் உரிமை பெற்றிருந்தார் என்றால், அவர் என் வியாபாரி பிரணதார்த்திஹர அய்யர்தான். மூன்றுவேளை பழையது சாப் பிட்டுக்கொண்டு, ஒற்றை வேஷ்டியைத் துவைத்துக் கட்டிக்கொண்டு, ஊரிலுள்ளவர் இட்ட சில்லறை வேலைகளைச் செய்து அரை அணாவும் கால் அணாவும் சம்பாதித்து வயிறு வளர்த்த அவரை, அதிர்ஷ்ட தேவதை அலாக் காகத் தூக்கி உன்னதமான ஸ்திதியில் கொண்டு வந்து வைத்து விட்டாள்; அவரும் திணறினார்; அவர் உறவினர்களும் திணறினார்கள். இன்று மாம்பலத்தில் பெரிய பங்களாவும் மோட்டாரு மாக இருப்பவர், முன் ஒரு காலத்தில் சேவகா விருத்தி செய்து கொண்டிருந்தார் என்று சொல்ல இப்போது யாருக்குத் தைரியம் வரும்? சொன் னாலும், யார்தான் நம்புவார்கள்?

பட்டணத்தில் முதல்முதல், மாதம் பத்து ரூபாய் சம்பளத்துக்கு வேலை பார்த்து வந்த அவர், ஓர் எள் வியாபாரியிடம் பதினைந்து ரூபாய்க்குக் குமாஸ்தாவாக நுழைந்தார். எள் வியாபாரத்தின் நுட்பங்களைப் பிரணதார்த்தி கற்றுக்கொண்டாரோ என்னவோ, செட்டியாரின் செல்வாக்கு மங்கியது. குமாஸ்தாவே கடை முதலாளியானார். ஊரார், ஆயிரம் சொன்னார்கள். யார் என்ன சொல்லிக் கொண்டால் என்ன? தம்படிக்கு எள் பொட்டலம் மடித்துக் கொடுத்து வந்தவர் மூட்டைக் கணக்கில் வியாபாரம் நடத்தினார். ஆயிரக்கணக்கில் பணம் வந்து குவிய ஆரம்பித்தது.

பிரணதார்த்திஹர அய்யரை இப்படி யோகம் வந்து இறுகத் தழுவிக் கொண்டபோது, அவர் மூச்சு முண்டித் தத்தளித்துப் போய்விட்டார். நண்பர்கள் மோசம் செய்வார்கள் என்று அவர்களை அண்ட விடாமல் இருந்தார். யோசனைகள் கேட்பதற்கு, விதந்துவாகி வீட்டோடு வந்திருந்த தன் தமக்கையையே அவர் நம்பியிருந்தார். நல்லவேளையில் புருஷனை உருட்டிவிட்டு வந்திருந்த அந்தப் பரதேவதை எதற்கும் சளைப்பின்றி 'வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

சிறிது காலத்துக்குப் பிறகு, தமக்கையையும் சில விஷயங்களில் தாம் கலந்து கொள்வதென்று பிரணதார்த்தி தீர்மானம் செய்து கொண்டார். தமக்கு அவசியமாக வேண்டுமென்பதைத் தாமே செய்து கொள்வது; வேண்டுமென்று தோன்றுவதற்குமட்டும் தமக்கையை யோசனை கேட்பது; இதுதான் அவர் கையாண்ட முறை.

தமக்கைக்கு அடுத்தபடி அதிகாரம் சம்சாரத்துக்கு. அவள் பிரணதார்த்தி சார்த்திய வைரங்களில் திக்குமுக்காடிப் போயிருந்ததால், வீட்டு விஷயங்களில் கலந்துகொள்வதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. தட்டான், வீட்டுக்கு வராத நாள் பாக்கியத்துக்குப் பொல்லாத நாள்தான். முருகை அழித்து ஸ்வஸ்திகா வளை; காப்பை அழித்து ஸ்டார் நெக்லெஸ். அட்டிகையை அழித்து, பெங்களூர் பேங்கிள்ஸ் இப்படியாகத் தட்டானுக்குத் தினம் ஒரு வேலை கொடுத்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள். பிரணதார்த்தி குஷியாக இருந்த சமயங்களில் அவளிடம் 'அடி பாக்கியம்! உன் நகைகளெல்லாம் திடீரென்று நாளைக்குத் திருட்டுப் போனால்கூட எனக்குப் போலீஸில் அடையாளம் சொல்ல முடியாதடி! ஏனென்றால் நீதான் தினம் ஒன்றை அழித்துப் புதிதாக செய்து போட்டுக்கொள்கிறாயே!' என்று கொஞ்சுவார்.



பல குழந்தைகளை இழந்த பிறகு அவருக்குக் கடைசியாக மிகுதியிருந்தவை இருபது வயதில் ஒரு பிள்ளையும் பதினெட்டு வயதில் ஒரு பெண்ணும்தான். வீட்டில் தமக்கையின் பேரன்-ஆறு வயதில் சின்னப் பயல் ஒருவனும் வந்திருந்தான்.

பணம் தேக்கம் கண்ட பிரணதார்த்திக்குப் பட்டம் பதவிகளில் மோகம் விழத் தொடங்கியது. அதற்குத் தகுந்த சிநேகிதர்கள் பார்த்துப் பிடித்தார். ராவ் பகதூர் நாகநாத முதலியார் என்ற பிரமுகர், நாளடைவில் பிரணதார்த்தியின் அத்யந்த நண்பரானார். அவர் மூலமாக ஒரு பட்டமும், கவுன்ஸிலில் ஒரு பதவியும் சம்பாதித்துச் கொள்ளலாமென்று பிரணதார்த்தி ஆசைப்பட்டார். இதற்கெல்லாம் பணம் செலவாகுமென்று அவருடைய தமக்கைக்குத் தெரிந்திருந்தால் குறுக்கே விழுந்து தடுத்து, 'வேண்டவே வேண்டாம்' என்று ஆயிரம் ஆணைகள் வைத்திருப்பாள். பிரணதார்த்தி வெகு சமத்காரமாகப் பண விஷயத்தை மட்டும் மறைத்து, 'ராவ்சாகிப் பிரணதார்த்தி என்றால் எப்படி இருக்கும், அக்கா?' என்று கேட்டார்.

'திவ்யமாக இருக்கும்... உன் மாதிரி பெரிய மனுஷனுக்கு அது கட்டாயமாக வேண்டும்!' என்றாள் தமக்கை.

'அது எனக்குக் கிடைக்கப் போகிறது, அக்கா! நம்ப நாகநாத முதலியார் செய்து கொடுப்பார்' என்றார் தம்பி. அவரை வாய் நிறைய தமக்கை ஒருத்தியாவது 'பெரிய மனுஷன்' என்று சொல்லுகிறாளே என்று உச்சி குளிர்ந்து விட்டார்.

அதற்குப் பிறகு வெகு சிரமப்பட்டு ஒரு மோட்டார் அவசியம் வேண்டுமென்று தமக்கையிடம் சொல்லி, அதற்கும் அவள் சம்மதம் பெற்றுக்கொண்டார். மோட்டார் வந்தவுடன் மோட்டார் டிரைவர் ஒருவனும் வந்தான். ஆனால், அவன் சரியாகப் பதினைந்து நாள் வேலையில் இல்லை. போகிற இடங்களுக்கெல்லாம் போய்விட்டு, பெட்ரோல் அதிகம் செலவாகிவிட்டதென்று பிரணதார்த்தி குற்றம் சொல்லிக் கொண்டு வந்தார்.

'சுவாமி? வண்டி எவ்வளவு மைல் போயிருக்கிறதென்று பார்த்துக் கொள்ளுங்கள்! நான் என்ன செய்வேன்?' என்றான் டிரைவர்.

'அதிகப்பிரசங்கித்தனமாகப் பதில் சொல்கிறாயா? நான் அப்படித்தான் போவேன்... நீ யார் கேட்கிறது? இன்னொருதரம்

இப்படி நடந்து கொண்டாயானால் நமக்கு வேண்டாம் நீ!' என்று கோபித்துக் கொண்டார் அய்யர்.

மறுநாள் பிரணதார்த்தியின் தமக்கை, டிரைவர் மீது ஒரு புகார் கொண்டு வந்தாள். அவன் நகத்தைக் கடித்துவிட்டு, கை அலம்பாமல் வண்டி ஓட்டினானாம். வண்டியையே அலம்ப வேண்டுமென்றும், அவனும் ஸ்நானம் செய்துவிட்டு வந்தால் தான் திரும்ப நுழையலாமென்றும் கண்டிப்பாகக் கூறினாள். பிரணதார்த்தியின் தவப் புதல்வியும், டிரைவர் தன்னை அடிக்கடி விறைத்துப் பார்ப்பதாகச் சொல்லவே, டிரைவரின் உத்தியோக காலம் அதி விரைவாக முடிவுக்கு வந்தது. அதற்கு இன்னொரு காரணம், இந்தச் சில நாள்களுக்குள் பிரணதார்த்தியும் ஒரு மாதிரியாக மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டுவிட்டதுதான். ஒரு மாதிரியாகத்தான்; ஞாபகமிருக்கட்டும்!

வேலை செய்த வரைக்கும் சம்பளம் கேட்ட டிரைவரை, 'சம்பளமா? ஹே! என்ன! சம்பளமா? ஹே!' என்றார் பிரண தார்த்தி, கண்களை அகல ஆச்சரியத்தில் விரித்து.

'ஆமாம், சம்பளந்தான்!'

'ஹே! நீ மோட்டார் விட்ட அழகுக்குச் சம்பளம் வேறேயா? ஹே!'

'என்னங்க, அக்கிரமமாயிருக்கே...'

'அதிகமாகப் பேசாதே! நீ வந்தப்புறம் இந்த வீட்டிலே ஒரு வெள்ளிக் கூஜா காணாமே போயிருக்கிறது... நான் ஒரு ஈனு ஷனை வீணாகக் கெடுக்க வேண்டாமென்று சும்மா இருக்கேன்!' என்றார் அய்யர்.

'ஒரு புத்தம் புது ஜரிகை அங்கவஸ்திரம் கூடத்துக் கொடியிலே இருந்தது, மாயமாய்ப் போயிருக்கு' என்றாள் தமக்கை.

'அப்பா! என் கை வளை ஒன்றைக் கூடக் காணோம், அப்பா!' என்றாள் செல்வப் புதல்வி.

பிரணதார்த்தியின் முகம் சிவந்துகொண்டே வந்தது. 'என்ன! என்கிட்ட இதெல்லாம் நீங்கள் முன்னாலேயே சொல்ல வேண்டாம்? ஹும்! இவனை நான் முன்னாலேயே போலீஸிலே ஹாண்ட்ஓவர் செய்திருப்பேனே! நம்ம ராவ் பகதூர் நாகநாத முதலியாரிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்...'



டிரைவர் பதறி விட்டான். 'சுவாமி! சுவாமி! எனக்குச் சம்பளம் வேண்டாம்... இதெல்லாம் என்மேல் சுமத்தாதீர்கள்!' என்று கெஞ்ச ஆரம்பித்தான்.

'தெரிந்ததா? ஹே! நான் வாயசைத்தால் நீ ஜெயிலுக்குப் போகணும்! பிள்ளைகுட்டிக்காரனாயிருக்கிறாயே என்று பார்த்தால் சம்பளம் கேட்கிறாயே, சம்பளம்? ஹே! சம்பளமா வேணும்? உதை தின்னாமல் போனால் போதாது?'

டிரைவர் கண்ணில் நீர் ததும்பியது. வேறே எங்கேயானும் ஜீவனம் செய்வதையும் இந்தப் 'புண்யாத்மா' கெடுத்துவிடப் போகிறாரே என்ற திகில் உண்டாகவே பதில் பேசாமல் திரும்பினான்.

அவன் சிறிது தூரம் போன பிறகு, பிரணதார்த்திக்கே கொஞ்சம் இரக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். 'ஏ டிரைவர்! இங்கே வா!' என்று கூப்பிட்டார்.

'இன்னும் என்ன ஆபத்தோ?' என்று நடுக்கத்துடன் வந்தவனிடம், 'போனால் போகிறது! உனக்கும் பிழைக்க வேண்டும்; நானும் போனதை மறந்துவிடுகிறேன்... உனக்கு ஒரு ஸர்டிபிகேட் கொடுக்கிறேன் என்ன?' என்றார்.

'இவன் முகரைக்கு ஸர்டிபிகேட் வேறேயா? பிரணதார்த்தி! ஆனாலும் உனக்குக் கோழை மனசுடா!' என்றாள் தமக்கை.

'இப்படி இரக்கப்பட்டு இரக்கப்பட்டுத்தான் ஓட்டிக்கு இரட்டி செலவாகிறது' என்றாள் மனைவி, தன் காதுக் கம்மலை ஒரு நாய்த் தோலால் பாலிஷ் செய்து கொண்டே.

'வேண்டாம், எஜமான்!' என்றான் டிரைவர்.

'வேண்டாமாமே! என்ன அகம்பாவம் பார்த்தியோன்னோ? இந்தப் பேர்வழிகளிடம் நடந்துக்கிறபடின்னா நடந்துக்கணும்?' என்று அவர் சீறவே, டிரைவர், 'இப்போது வேண்டாம் என்றுதான் சொன்னேன், பிரபு! பின்னால் தேவை இருக்கும்போது காலில் விழுந்து வாங்கிக் கொள்ள மாட்டேனா?' என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் கம்பி நீட்டினான்.

அப்புறம் பிரணதார்த்தி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தார். 'எப்படி என் வேலை? பஸ்ட் கிளாஸ்!' என்று கையைத் தட்டிக் குதூகலப்பட்டார்.

'அயோக்கியன்கள்கிட்ட இப்படித்தான் நடந்துக்கணும்!' என்றாள் தமக்கைக்காரி.

'சமயத்திலே நீயும் வந்து, ஜரிகை அங்கவஸ்திரத்தைக் காணோம் என்றாயே, அது நல்ல பலன் கொடுத்தது!'

'நான் கூட ஒரு வளையைக் காணோம்னேனே. அதுக்கென்ன சொல்றே?' என்றாள் புதல்வி.

'நிஜமாக ஒன்றும் கெட்டுப் போகவில்லையே! ரொம்ப சரி!' என்றார் பிரணதார்த்தி.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்து ஒரு வாரம் ஆகிறது. பிரணதார்த்தி டிரைவர் வைத்துக்கொள்ளாமலேயே முக்கியக் காரியங்களுக்குத் தாமே காரை ஓட்டிக்கொண்டு செல்ல ஆரம்பித்தார். கேவலம் சித்திரகுப்தனுடைய கணக்குப் பூர்த்தியாகாத ஒரு காரணத்தினால் மட்டும் இதுவரை சுமார் ஐம்பது பாதசாரிகள், ஒன்பது ரிக்ஷாக்கள், ஆறு ஜட்கா வண்டிகள், மூன்று மோட்டார்கள் வேறே, ஒரு கட்டை வண்டி இவ்வளவும் பிரணதார்த்தியின் காருடன் மோதிக்கொள்ளாமல் தப்பின. வேறு டிரைவர் வேண்டும் என்ற அவசியத்தை அவர் நன்றாக உணர்ந்திருந்தார் என்றாலும், முடிந்தவரையில் தாமே ஓட்டுவதென்று பிடிவாதமாக இருந்தார்.

இந்தச் சமயத்தில், மோட்டார்மீது அதிகக் கவனம் செலுத்தப் படாததால், ஓடும்போது அது அடிக்கடி தகராறு செய்யத் தொடங்கியது. எதிர்பாராத இடங்களில் சட் சட்டென்று நின்றது. அநேகம் தடவைகளில் அதை வீடு வரை ஆட்களே தள்ளிவர வேண்டியும் இருந்திருக்கிறது. ஒரு சமயம் ராவ் பகதூர் நாகநாத முதலியார் வீட்டுக்குப் போய் அவர் இல்லை என்று அறிந்து திரும்புகையில்தான், எழும்பூருக்கு அருகாமையில் மோட்டார் மக்கார் செய்து கொண்டு நின்றது. அப்போது, சென்ற அத்தியாயத்தின் கடைசியில் கூறியபடி பிரணதார்த்தி ரங்கராஜன் நிற்பதைப் பார்த்து, 'ஏய்! யாரப்பா நீ! ஒரு சின்ன உபகாரம் செய்வாயா?' என்று கேட்டார்.

அவரை ஒருமுறை பார்த்துவிட்டு ரங்கராஜன், 'சின்ன உபகாரம் ஒன்றும் செய்ய முடியாது; ஏதேனும் பெரிதாக இருந்தால் சொல்லுங்களேன்' என்றான்.



அவன் குரல் தொனித்த விதம், பிரணதார்த்திக்குப் பிடிக்கவில்லை. தம்மைமீறி ஒருவன் பேசுகிறதா என்று ஆத்திரம்தான் வந்தது. ஆனால், இந்தச் சமயம் இந்த இளைஞனுக்குப் பாடம் கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பம் அல்லவே! இருட்டுமுன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாக வேண்டுமே!

'இதைக் கொஞ்சம் தள்ளு, பார்ப்போம்!' என்றார் அவர்.

'தள்ள முடியாது. வேண்டுமானால் ஸ்டார்ட் செய்து தருகிறேன்' என்றான் ரங்கராஜன்.

'அதுகூட உனக்குத் தெரியுமா? எங்கே, அப்படித்தான் செய்யேன்!'

ரங்கராஜன் முன்னால் சென்று பான்னெட்டைத் திறந்து கவனித்தான். சில நிமிஷங்கள் முனைந்து வேலை செய்துவிட்டு, திரும்ப அதை மூடினான். 'எங்கே, இப்போ ஸ்டார்ட் செய்யுங்கள்!' என்றான்.

பிரணதார்த்தி ஆச்சரியத்தில் மூழ்கினார். 'புர்ர்...' என்று ஸ்டார்ட் ஆகிவிட்டது வண்டி. தமது மணி பாக்ஸைத் திறந்து ஓர் அணாவை எடுத்து, ரங்கராஜனின் கையில் கொடுக்க வந்தார்.

'வேண்டாம். சார்!' என்றான் அவன், கேலிப்புன்னகையுடன்.

'வைத்துக் கொள், அப்பா! காபி சாப்பிடு! உம்... சும்மாப் பிடி!' என்று வற்புறுத்தினார்.

ரங்கராஜன் அதை அலட்சியமாக வாங்கிக்கொள்ளவே மோட்டார் நகர்ந்தது.

சுமார் பத்து கஜம்தான் போயிருக்கும். மோட்டாரின் பின் புறத்திலிருந்து 'படார்', 'படார்' என்ற ஐந்தாறு வேட்டுகள் தீர்ந்தன. மறுபடி வண்டி நின்றுவிட்டது. பிரணதார்த்தி தலையை நீட்டி, 'ஹே!' என்றார்.

ரங்கராஜன் வந்ததும், 'இப்ப என்ன செய்வது? வீட்டுக்குப் போயாக வேண்டுமே!' என்றார் கவலையுடன்.

ரங்கராஜன் அடுத்த பதினைந்து நிமிஷங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்தான். அவன் பானெட்டை மூடினதும் மறுபடியும் வண்டி ஓடத் தயாராயிற்று.

'உன் கையிலே ஏதோ மந்திரசக்தி இருக்கிறது அப்பா! நீ தொட்டவுடனே வண்டி ஓடுகிறது' என்றார்.

'உங்கள் கையிலே கூடத்தான் வேறொரு மந்திரசக்தி இருக்கிறது. நீங்கள் தொட்டவுடனேயே அது நிற்கிறது' என்றான் ரங்கராஜன்.

'இவன் யார் இவன்? இவ்வளவு திமிராகப் பேசுகிறானே! ஹூம்? இவனை அடக்கியாக வேண்டும்! நான் யார் என்று காண்பிக்க வேண்டும்!' என்று அவர் மனத்துக்குள் கருவியபோது, ஸ்டார்ட் ஆன மோட்டார் மூன்றாம் முறையாகவும் நின்றுவிட்டது. இரண்டு நிமிஷம் பிரணதார்த்தி யோசித்தார். அவர் மனத்தில் ஒரு புது யோசனை ஜனனமாயிற்று. 'உம்... நீ ஒரு காரியம் செய்கிறாயா? நீ எங்கே போறே இப்போ?' என்றார்.

'நீங்க எங்கே போகணும்? அதல்லவா முக்கியம்?'

'என் வீடு வரைக்கும் வண்டியை நீ ஓட்டிக்கொண்டு வரயா?'

ரங்கராஜன் யோசித்தான். அப்போதே, கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டுமென்று இடம் ஒன்றும் இல்லை. இதோ ஒருவர் கூப்பிடுகிறார்... போய்த்தான் பார்க்கலாமா?

ரங்கராஜன் அடுத்த நிமிஷம் மோட்டார் கதவைத் திறந்து கொண்டு உள்ளே உட்கார்ந்துகொண்டான்.

அவன் கை வைத்ததுமே வண்டி ஆனந்தத்துடன் கனைத்து விட்டுக் கொண்டதுபோல் தோன்றியது. அடுத்த கணம் குப் பென்று முன்னால் கிளம்பியது. மோட்டார் வேகம் 45, 50, 55, 60 வரை ஏறிற்று. தார் போட்ட ரோடு; வண்டியும் முதல் தரமான மேக்; ஆகையால் அன்னபட்சிபோல் நலுங்காமல் பறந்து சென்றது.

எழும்பூர் ஓவர் பிரிட்ஜ் பறந்தது. எழும்பூர் ஹைரோடு அதை 'வா வா' என்று அழைத்து ஸ்பர்டாங்க் ரோடிடம் சீக்கிரமே ஒப்புவித்தது. ஸ்பர்டாங்க் ஓர் ஓடும் படக் காட்சியாகத்தான் தெரிந்தது. முன்னால் தொலைவில் தெரிந்த மதகு ஒன்று அடுத்த நிமிஷம் பின்னால் நெடுந்தூரத்தில் மறைந்துகொண்டிருந்தது. ஸ்டர்லிங் ரோடு மோட்டாரைப் பஜார் ரோடிடம் வழுக்கி விட்டது. நுங்கம்பாக்கம் ஹைரோடு ஒரு பறக்கும் மோட்டாரைக் கண்டு பிரமித்துப்போய் அசையாமல் கிடந்தது.



பிரணதார்த்தியின் மனத்தில் ஓர் ஆனந்தமும் அச்சமும் சேர்ந்தாற்போல் போராடின. இந்த மாதிரி மோட்டார் ஓட்டி அவர் யாரையும் பார்த்ததில்லை. என்ன வேகம்! என்ன அநாயாசம்! 'பூம்ம்! பூம்ம்!' என்று இருமுறை ஹார்ன் சத்தம் கேட்டது. ஒரு ரிக்ஷாவுக்கும் ஜட்காவுக்கும் இடையில் கண்ணிமைக்கும் நேரத்தில் புகுந்து புறப்பட்டு விட்டது கார்.

'ஹே! ஒரு சமாசாரம்!' - பிரணதார்த்தி உள்ளம் குளிர்ந்து விட்டார்.

ரங்கராஜன் மோட்டார் வேகத்தைத் தணித்து 'என்ன அது? சீக்கிரமே சொல்லுங்கள்!' என்றான்.

'உனக்கு வேறே எங்கேயும் வேலை இல்லை என்றால் என்னிடமே டிரைவராக இருந்துவிடேன்' என்றார். பிறகு அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்.

'மன்னிக்க வேண்டும்! எனக்கு வேலை வேண்டியதுதான். ஆனால், மோட்டார் டிரைவராக இருப்பதாக உத்தேசம் இல்லை' என்றான்.

'மாதம் இருபத்தைந்து ரூபாய் தர்றேன். என் தமக்கையிடம் மட்டும் பதினைந்து என்று சொல்லு; அவள் கோபிப்பாள். நீயும் டிரைவராக மட்டும் இருக்க வேண்டாம். என் பிஸினஸ் இருக்கிறது. அதிலும் சான்ஸ் வந்தால் தரேன்.'

'என்ன பிஸினஸ் அது?'

'என் வியாபாரம். உலகத்திலே உத்க்ருஷ்டமான பொருள் அப்பா, அது. என் இல்லாவிட்டால் எண்ணெய் உண்டா என்று நான் கேட்கிறேன்? அப்புறம், அப்யங்கன ஸ்நானம் உண்டா? அதுதான் போகட்டும், வைதிகர்கள்தான் தர்ப்பணம், சிரார்த்தம் எல்லாம் எப்படிப் பண்ணுவார்கள், சொல்லேன்?' என்று கேட்டார் பிரணதார்த்தி.

'வாஸ்தவம்! என் பார்ப்பதற்குச் சின்னதாக இருக்கிறதே ஒழிய, ரொம்பவும் பிரும்மாண்டமான விஷயம்தான். ஆனால், எனக்கு அதில் வேலை வேண்டாம்' என்றான். அவன் கேலிசெய்கிறானா, யதார்த்தமாகச் சொல்கிறானா என்பதை அவன் குரலிலிருந்து பிரணதார்த்தியினால் ஊகிக்க முடியவில்லை.

எப்படியும் அவனைக் கொஞ்ச நாளாவது நிறுத்தி வைத்துக் கொண்டு, மோட்டார் ரகசியங்களை மலிவாகக் கற்றுக்கொள்ள பிரணதார்த்திக்கு ஆவல். ஆகவே, சற்றுப் பொறுத்து, 'உன் பெயர் தெரியவில்லையே! எனக்கு, முனிஸிபல் கவுன்ஸிலுக்குக்கூட எலெக்ஷனாகப் போகிறது. அங்கேயும் செல்வாக்கு உண்டு. என்னிடம் கொஞ்ச நாள் இருந்துதான் பாரேன்' என்றார்.

'தேவையில்லை; இப்போ எங்கே போகணும் சொல்லுங்கள்!' என்றான் ரங்கராஜன். மாம்பலம் வெங்கடநாராயணாரோட் திருப்பத்தில் கார் வந்து கொண்டிருந்தது. 'இந்த ரோடுதான், விடு! அதோ தெரிகிறதே அந்தப் பங்களா!' என்றார் பிரணதார்த்தி.

பங்களா வாசலில் அவர் இறங்கிக்கொள்ளவும் காரைப் பின்புறம் இருந்த கேரேஜில் கொண்டுவிடச் சென்றான் ரங்கராஜன். அவன் சிந்தனைகள் அன்று மாலை தொடங்கி நடந்த சம்பவங்கள் மீது தான் லயித்தன. எங்கே கிளம்பினவன், எங்கே வந்திருக்கிறான்! கேரேஜிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போதும் அதே யோசனைகள்தான்; ஆனால், அவை சட்டென்று தடைப்பட்டன. சமையற்கட்டின் வெளிப்புறம் இருந்த ஜன்னலுக்கு அருகாமையில் குரோட்டன்சுகளுக்கு மறைவில் யாரோ ஒரு மனிதன் பதுங்கிப் பதுங்கிச் செல்வதைக் கவனித்தான் அவன். அடிமேல் அடிவைத்து ஜன்னலைத்தான் நெருங்கிக் கொண்டிருந்தான் அந்தப் பேர்வழி. இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று ஊகித்த ரங்கராஜன். 'டேய்! யார் அங்கே?' என்று குரல் கொடுத்தான்.

ஆள் திரும்பிப் பார்த்துவிட்டு ஓட யத்தனித்தான். மான் போல் பாய்ந்து ரங்கராஜன் இரண்டே எட்டில் அந்த ஜன்னலடிக்கு வந்துவிட்டான். ஆனால், அந்த ஆள் அதற்குள் மூலை திரும்பி எங்கேயோ நழுவி விட்டான். தான் குரல் கொடுத்ததுதான் பிசகாய்ப் போய்விட்டதென்று ஒரு கணம் அவன் எண்ணியவாறு தயங்கியபோது, ஜன்னல் வழியாக வளையணிந்த கை ஒன்று வந்தது. அது ஒரு பெரிய கரண்டியையும் பிடித்திருந்தது. ரங்கராஜன் நகர்ந்து கொள்வதற்குள்ளாக அதிலிருந்து 'மொட்'டென்று அவன் கிராப் தலையில் பலமாக ஓர் அடியும் விழுந்து விட்டது. அப்படியே கீழே உட்கார்ந்துவிட்டான். ஒரு நிமிஷம் உலகமே கண்கள் முன் சுழன்று வந்தது. பல நட்சத்திரங்கள் பறப்பதுபோல் தோன்றியது. சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்கவே நிமிர்ந்து நோக்கினான்.



'அட! நீங்கள் இங்கே எங்கே வந்தீர்கள்? அந்தக் குடிகாரப் பயல் என்றல்லவா அடித்து விட்டேன்? அடப்பாவமே! எத்தனையோ நாளாக அவன் வாங்கக் காத்துக் கொண்டிருந்ததை நீங்கள் வந்து வாங்கிக்கொண்டீர்களே!' என்றது ஒரு பெண் குரல்.

மங்கின வெளிச்சத்தில் தோன்றிய ஒரு வனதேவதைபோல் நின்ற அந்த யுவதி, தான் அன்று மாலை குடிகாரன் கையிலிருந்து தப்புவித்த அதே பெண்மணிதான் என்பதை ரங்கராஜன் அறிந்துகொண்டான். உடனே, கரண்டியால் வாங்கின அடியின் வலிகூட மறந்து போயிற்று!

'நீ இருப்பது இங்கேதானா?' என்று கேட்டான்.

'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாக அவள் தலையை அசைத்தாள்.

தலையைத் தடவிக்கொண்டே வந்த ரங்கராஜனைப் பிரணதார்த்தி, 'என்ன யோசனை செய்கிறாய்?' என்று கேட்டார்.

'ஒன்றுமில்லை. நீங்கள் சொன்ன விஷயத்தை மறுபடி யோசனை செய்து பார்த்தேன்...'

'எந்த விஷயத்தை?'

'இங்கே டிரைவராக இருப்பதைத்தான்!'

'என்ன முடிவுக்கு வந்தாய்?'

'இப்போதைக்கு அந்த வேலையை ஒப்புக்கொள்ளலாமென்ற தீர்மானத்துக்கு வந்து விட்டேன்!' என்றான் ரங்கராஜன்.

இனாமாக அவனுக்குக் கொடுக்கலாமென்று எடுத்திருந்த நாலணாவைத் திரும்ப மணிபாக்ஸில் போட்டுக் கொண்டு, 'சரி! அப்படியே ஆகட்டும்... உன் பெயர் என்னவென்று இன்னும் சொல்லவில்லையே?' என்று கேட்டார்.

'ரங்க...' என்ற ஆரம்பித்தவன் ஏதோ நினைத்தவனாய் நிறுத்தி, 'ராஜாராமன், சார்!' என்றான்.





## அத்தியாயம் - 3

காதல் - அன்பு, ஆசை, ஆவல், வேட்கை
- தமிழ் அகராதி

தஞ்சாவூரில் ஒரு கிழவர் இருக்கிறார். அவரை நமஸ்காரம் செய்யும் இளைஞர்களையெல்லாம் அவர், 'அப்பா! நீ சின்னவேலி ஜமீன்தார் மாதிரி இருக்கணும்!' என்று ஆசீர்வாதம் செய்து வருகிறார். சின்னவேலி ஜமீன் அதன் பெயருக்கு நேர் எதிராகப் பெரிய ஜமீன்தான். அதன் ஜமீன்தாரான சுப்ரமணிய அய்யர் ஹோதாவிலும் தடபுடலிலும் ஜபர்தஸ்திலும் இருந்த அமர்க்களம்தான் மேற்படி கிழவரை மேலே கூறியபடி எல்லாரையும் ஆசீர்வாதம் செய்யத் தூண்டி இருக்க வேண்டும்.

பனங்குடி கோபால தீட்சிதர்தான், முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் இந்த சுப்ரமணிய அய்யருடைய ஜாதகத்தையும் ஸ்ரீமதி காவேரி அம்மாள் ஜாதகத்தையும் பொருத்தம் பார்த்து, 'தாராளமாகத் திருமணம் செய்யுங்கள். திவ்யமான சத்புத்ரர்கள் பிறப்பார்கள். குடும்பமும் விருத்தியாகும்' என்று சொன்னாராம். அந்தப் புண்ணியவான் காதில் குண்டலங்கள் ஆட, கண்களில் மூக்குக் கண்ணாடிகள் ஜ்வலிக்கச் சொன்ன ஜோஸ்யம், உண்மையில் ஜாதகத்தைப் பார்த்துச்

சொன்னதோ அல்லது 'பின்னால் நடக்கிறபோது இதை நினைவு வைத்துக்கொண்டு நம்மைக் கேட்டால் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொன்னதோ, யாருக்கும் தெரியாது; அந்தப் பெரியவரின் காலமும் ஆகிவிட்டது. சின்னவேலி ஜமீன்தாருக்கு இரண்டு புருஷ பிரஜைகள் ஜனனம் ஏற்பட்டது. மூத்த பிள்ளை கோபாலன், கும்பகோணம் கல்லூரியில் பி. ஏ. பாஸ் செய்து விட்டு, 'மூத்தது மோழை' என்ற பழமொழியைப் பொய்யாக்க மனம் வராதவன்போல் வீட்டோடு உட்கார்ந்து கொண்டான். 'ஆம்பளையாளுடன் பேசிக்கொண்டிருக்க என் பிள்ளைக்கு அறுபது நாழிகையும் போறல்லை' என்று, காவேரி அம்மாள்-தன் பிள்ளை காதில் படாத இடங்களிலெல்லாம்- சொல்லி யிருக்கிறாள். அப்படியே அது கோபாலன் காதில் பட்டிருந்தால் கூட அவன் ஒன்றும் சொல்லியிருக்க மாட்டான். அதே வார்த்தையை அவன் தம்பி ரங்கராஜன் சொன்னால்தான் கோபம் வந்திருக்கும்!

ரங்கராஜனுக்கும் கோபாலனுக்கும் எதற்கெடுத்தாலும் வாதம் தான்,- தர்க்கம்தான். தகப்பனார் சுப்ரமணிய அய்யர் இல்லாத சமயங்களில் சிறு பிள்ளையாக இரண்டு பேரும் எத்தனையோ தடவை சிண்டைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

'ரங்கராஜன் சொல்லி விட்டானோல்லியோ! அது நடக்காது!' என்பான் அண்ணன்.

'அண்ணாவாள் கொஞ்சம் தலையிடாமல் இருந்து பார்க்கிறது தானே!' என்று ரங்கராஜன் தயங்காமல் பதில் சொல்லுவான்.

'ஏண்டா சண்டை போட்டுக்கிறேள்? சுந்தோபசுந்தாள் மாதிரி வந்து பிறந்தீர்களே, பிள்ளைகளா!' என்பாள் காவேரி அம்மாள்.

'ஏன்னா? அவர் வழிக்கு நீங்க ஏன் போறேள்? அப்புறம் ஏதாவது ஒண்ணுகிடக்க ஒண்ணு சொல்லுவார்' என்று கோபாலன் மனைவி கல்யாணி பாதி இரைந்தும் பாதி இரகசியமாகவும் தன் புருஷனை அடக்குவாள்.

ரங்கராஜன் என்னதான் அண்ணனுக்குப் பதில் பேசினாலும், எதிர்த்துச் சொன்னாலும் ஒரு வரம்பைத் தாண்டியதில்லை; அண்ணன் தம்பிகளின் தர்க்கம் வீட்டுக்கு வெளியேயும் வந்த தில்லை. ஆனால், இப்போது ரங்கராஜனும் படிப்பை முடித்துக்



கொண்டு வீட்டோடு வந்து உட்கார்ந்ததும், தர்க்கங்கள் அதிகப் பட்டன. அதுவும் ஜமீன்தார் அடிக்கடி சென்னைப்பட்டணத் துக்கும் மதுரைக்கும் ஓடிக் கொண்டு அப்போது அமர்க் களப்பட்டுக் கொண்டிருந்த முல்லைவாசல் ஜமீன் ஸுட்டில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளத் தொடங்கவே, இவர்களுக் குள் சண்டைகளுக்குக் கேட்க வேண்டியதில்லை.

ஒழிந்த நேரங்களில் ரங்கராஜன் மோட்டாரை எடுத்துக்கொண்டு சுற்றினான். அதை அக்கக்காக எடுத்துப் போட்டுவிட்டு மீண்டும் பூட்டினான். மோட்டாரில் பல வேடிக்கைகள் செய்யக் கற்றுக் கொண்டான். சின்னவேலி ஜமீன் பெண்கள், 'சின்ன ஐயா' காத தூரத்தில் மோட்டாரில் வரும்போதே கதவைச் சாத்திக் கொண்டார்கள். தெருவில் நடந்தவர்கள் சிலர் பக்கத்திலிருந்த மரம், லாந்தல் கம்பங்கள்மீது அவசரமாக ஏறிக் கொண்டார்கள். இந்த முன் ஜாக்கிரதையெல்லாம் தேவையே இல்லை என்பதை நிரூபிப்பதைப்போல் ரங்கராஜன் மோட்டார் அடியில் ஒரு கோழிக்குஞ்சுகூட நாளதுவரையில் அகப்பட்டுக் கொண்ட தில்லை!

ஒரு நாள் மத்தியானம்; ஜமீன்தார் அப்போது மதுரைக்குப் போயிருந்தார். சாப்பாட்டுக்குப் பிறகு கோபாலனும் ரங்கராஜ னும் ஹாலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். என்றுமில்லாத படி அபூர்வமாக அண்ணனும் தம்பியும் ரொம்ப சௌஜன்யமாக இருப்பதைக் கண்டு, கல்யாணிக்குத் திகில் உண்டாயிற்று. 'இது பெரிய சண்டைக்கு ஆரம்பமாய் இருக்கப்படாதே!' என்று எண்ணினாள். அவள் நினைத்த மூன்றாம் நிமிஷம் அங்கே நிலவிய சாந்தியில் இடி விழுந்தது.

'உன்பாடு குஷி, அப்பா! மோட்டார் விட்டுக்கொண்டிருந்தால் எல்லாம் ஆகிவிடும் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்! வேறே ஒண்ணும் கவனிக்க வேண்டாம்!' என்றான் அண்ணன் காரன்.

'எல்லாம் நீங்கள் பெரியவாள் கவனிக்கிறபோது நானும் என்னத் துக்குப் புகுந்து புறப்படணும்?' என்று பதில் சொன்னான் ரங்க ராஜன்.

'அவர் பாட்டுக்கு இருக்கட்டும்ன்னா! நீங்க பேசாமல் இருங்கோ!' என்று கல்யாணி குறுக்கிட்டு, விஷயம் முற்றாமல் பார்த்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால், ஒரு கல்யாணி அல்ல, பதினாயிரம் கல்யாணிகள் சேர்ந்துகொண்டு கோபாலன் வாயைப் பொத்தியிருந்தாலும்கூட அவனை அடக்கியிருக்க முடியாது- 'நான் கவனித்துக்கொண் டிருக்கிறேன்... நீ டயரி எழுதிக் கொண்டிரு!' என்று சொல்லி விட்டான். அந்த ஒரு வார்த்தை ரங்கராஜனுக்கு அவ்வளவு தூரம் கோபமூட்டியிருக்குமென்று கோபாலன் எதிர்பார்த்திருந்தானா னால், ஒருகால் அதைச் சொல்லியிருக்கவே மாட்டான்.

'நான் டயரி எழுதுகிறேன், சும்மா இருக்கிறேன் உனக்கென்ன? அது என் வேலை!' என்று உஷ்ணமாகச் சீறினான் தம்பி.

'நீ இப்போ சொன்னயே, ரொம்ப சரி! உனக்கு ஒருத்தன் வேலை வேறே கொடுப்பானா? உன் மாதிரி ஆசாமிகளுக்கு அப்பா ஜமீன்தார் மிட்டாதார்களாக இருந்தால்தான் பிழைப்பு. ஓர் இடத்தில் ஒரு நாள் உடம்பு வணங்கி வேலை செய்ய முடியுமா?' என்று பேச்சுக்கு மேலே பேச்சாக, கோபாலன் சொன்னான்.

'அடே! உனக்காகவானாலும் நான் வேலை செய்து காட்டு கிறேன்; சம்பாதித்துக் காட்டுகிறேன்! இந்தச் சிங்கம்'

'இந்தச் சிங்கம் நல்ல சாப்பாடாக இருந்தால் வெளுத்து வாங்கும், யாராவது நிறையச் சொத்து வைத்தால் அதை அழித்துக் காட்டும்!' என்று சளைக்காமல் முடித்தான் கோபாலன்.

ரங்கராஜனுக்கு நிஜமாகவே கோபம் வந்துவிட்டது. எழுந் திருந்து விட்டான். 'இன்னிக்கு நான் இங்கிருந்து போகிறேன். உன் கண்ணெதிரில் என் சம்பாத்தியமாகச் செய்து பிழைத்துக் கொள்ளுகிறேன்... அப்போ உன் மூஞ்சியை...'

இந்த இரைச்சல் கேட்டுக் காவேரி அம்மாள் ஓடி வந்தாள். 'நன்னாயிருக்குடா, அண்ணன்-தம்பி என்கிற மரியாதை இல்லா மல்! உங்கப்பா வந்தால் என்ன சொல்லுவார்? ஏண்டா கோபாலா, உனக்குத்தான் வயசாகலையா, அந்த இரண்டுங் கெட்டானோடே...' என்று ஆரம்பித்தாள்.

மூலையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த குமாஸ்தா ராமய்யர் மெல்ல எழுந்து, இந்த அசந்தர்ப்பமான வேளையில் இருக்கக் கூடாதென்று புத்திசாலித்தனமாக வாசல் பக்கம் நழுவி, வேறு யாரும் உள்ளே வராமல் பார்த்துக் கொண்டார்.



'நீ சும்மா இரு, அம்மா! இவனுக்கு எப்பவுமே என்னைக் கண் டால் ஆகிறதில்லை... அலட்சியம்தான்! நான் ஒரு நாழி இங்கே இருக்க மாட்டேன். இத்தனை நாளாக நான் ஹாஸ்டலில் இல்லையா?' என்றான் சின்னப்பிள்ளை ரோஷத்துடன்.

'என்னா உங்களுக்கு? நாளைக்கு மாமனார் வந்தால்' என்று கல்யாணி அடக்கினாள் புருஷனை.

'உன் மாமனார்தான் வரட்டுமே! பிள்ளை வளர்த்திருக்கிற அழகைப் பார்க்கட்டுமே!' என்றான் கோபாலன்.

'அப்பா ரங்கராஜா! உங்கப்பா வந்தப்புறம் சண்டை போடுடா!' என்று தாயார் சின்னப் பிள்ளையைக் கெஞ்சினாள்.

'அப்பா வந்தப்புறம் எல்லாவற்றையும் நீ சொல்லிக் கொள்! அதுவரைக்கும் இவன் மூஞ்சியைப் பார்த்துக் கொண்டு நான் இருக்கப் போகிறதில்லை! என் துணிமணிகளை எடுத்துக் கொண்டு...' என்று படபடப்பாகப் பேசிய ரங்கராஜனைக் குறுக்கிட்டு கோபாலன், 'ஞாபகமாக உன் டயரியையும் எடுத்துக்கொண்டு போ!' என்றான்.

இரண்டாம் முறையாக டயரி குறிப்பிடப்பட்டபோது, ரங்கராஜ னின் ஆத்திரம் பன்மடங்கு அதிகமாயிற்று. ரகசியம் என்று எண்ணி, மனத்தில் தோன்றியதையெல்லாம் எழுதி வைத்திருக்கும் ஒன்றை இவன் பார்ப்பதாவது, படிப்பதாவது என்று சீறினான். 'வெட்கக் கேடு, ஒருத்தர் டயரியை ஒருத்தர் படிப்பது!' என்றான்.

'அதில் இருக்கும் சமாசாரம் அதைவிட வெட்கக்கேடாக இருக்கே!' என்று சளைக்காமல் கோபாலன் கேட்டான்.

'ஐயோ பிள்ளைகளா! உங்களுக்குப் புத்தி உலக்கைக் கொழுந்தா? ஒவ்வொருத்தனுக்கும் நாலு குழந்தை பிறக்கிற வயசாச்சு!' என்று தாயார் கூவினாள்.

'அதிகமாக வேண்டாம்! இதோ கிளம்பிட்டேன்... முதல் சம்ப ளத்தை நான் மணியார்டரில் அனுப்புகிறேன். அண்ணா, உன் விலாசத்துக்கு அனுப்புகிறேன்!' என்றான் ரங்கராஜன் எகத் தாளமாக.

'அதை வைத்துக்கொண்டு நான் அசுவமேத யாகம் பண்ணு கிறேன்!'

'அதெல்லாம் வேண்டாம், அண்ணா! ஒரு டீ பார்ட்டி கொடுத்து ஒரு பட்டம் சம்பாதிச்சுக்கோ, உனக்கிருக்கிற அபார மூளைக்கு ஒரு பட்டம் குறைச்சலாக இருக்கப்படாது.'

தன் மனைவியின் எதிரில் இவன் அப்படிப் பேசியது சுள்ளென்று தைக்கவே, 'சீ நாயே! நாக்கை அடக்கிண்டு வெளியே போ!' என்றான் கோபாலன்.

'உங்கள் எச்சிலிலைகள் வேண்டாமென்றுதான் இந்த நாய் போகிறது! நாய்கள்கூட எத்தனையோ மனுஷாளைவிடப் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதுண்டல்லவா?' என்றான் ரங்கராஜன்.

'இங்கே நின்னியோ...' என்று பாய்ந்த கோபாலனின் ஒரு கையை கல்யாணியும் ஒரு கையை காவேரியுமாகப் பிடித்துக் கொண்டார்கள்.

ரங்கராஜன் அதற்குமேல் நிற்கவில்லை. அடுத்த ஐந்து நிமிஷங் கள் அவனுடைய அறை அல்லோலகல்லோலப் பட்டது. வேண் டாதவற்றை ஒரு மூலையில் எறிந்தான். ஒரு சின்ன சூட்கேஸை எடுத்து ஒழித்து நாலு ஷர்ட்டுகள், சில வேஷ்டிகள், அரை டஜன் துண்டுகள், சில கைக்குட்டைகள், டயரி, பழைய ஃபவுண்டன் பேனா இவற்றை அள்ளிப்போட்டு மூடிக்கொண்டு, மணி பாக்ஸைத் திறந்து பார்த்தான். அவன் பணமாக நூறு ரூபாய் இருந்தது. திரும்ப மணிபாக்ஸைப் பையில் போட்டுக்கொண்டு, வாசலுக்கு வந்தான். மோட்டார் டிரைவர் துரைசாமி தூங்கிக் கொண்டிருந்தான். ரங்கராஜன் தட்டினதும் திடுக்கிட்டு விழித்தான்.

'எடு வண்டியை! தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கு விடு!' என்று உத்தரவு கொடுத்தான். அவன் ஏறும்போது அதுவரை வாசலில் ஒண்டிக் கொண்டிருந்த ராமய்யர் வந்து, 'மன்னிக்கணும்... பட்டணத் திலே மாமா டி.வி.எஸ். அய்யர் வந்திருக்காரே, அங்கே போறேளா?' என்று கேட்டார் உள்ளூரப் பயத்துடன்.

'உமக்கென்னங்காணும் அது?' என்றான் ரங்கராஜன் வெடுக் கென்று.

'இல்லை, கேட்டேன்!'



'அதைத்தான் உமக்கென்னன்னு நான் கேட்கிறேன்! உள்ளே போய்ப் பெரியவருக்குக் காலைப் பிடியும், போம்! அவருக்குக் குதிச்சுக் குதிச்சு சுளுக்கு ஏற்பட்டிருக்கு!'

ராமய்யர் ஒதுங்கிக் கொண்டார். மேலே பேசியிருந்தால் ரங்கராஜன் தனக்கு இருந்த கோபத்தில் எதுவும் செய்யத் தயங்கி யிருக்கமாட்டான் என்பதைத்தான் அவர் அப்போது தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

தஞ்சாவூர் ஸ்டேஷனிலே கொண்டுவந்து விட்ட டிரைவர், ரங்கராஜனிடம் விடை பெற்றுக்கொண்டும் தயங்கித் தயங்கி நின்றான். ரங்கராஜன் சென்னைக்குப் போகிறான் என்பதைக் கண்டுபிடித்த பிறகுதான் திரும்பினான்.

சொந்தத்தில் ஏதாவது வேலை சம்பாதித்துக்கொண்டு, முதல் சம்பளத்தைத் தன் அண்ணாவுக்கு அனுப்ப வேண்டுமென்ற உறுதியுடன் வந்த அதே ரங்கராஜன்தான், சென்னையில் வந்து இறங்கியிருந்தான். வந்த சூட்டோடு சூடாகப் பெட்டியைக் கெட்டுப் போக்கியதுதான் தெரிந்த விஷயமாகப் போயிற்று. சென்னைக்கு வந்தவுடனேயே பரங்கிமலையில் இருந்த தன் தாய் மாமனைப் பார்க்கலாமென்று அவனுக்கு ஓர் ஆசை உண்டு. சமீபகாலம்வரை சர்க்கார் உத்தியோகத்தில் பல இடங்கள் மாறி, இப்போது மாஜிஸ்டிரேட்டாக அவர் சென்னையில் இருப்பது அவனுக்குத் தெரியும். அவரைத்தான் டி.வி.எஸ். அய்யர் என்று குமாஸ்தா ராமய்யர்கூடக் குறிப்பிட்டார். ஜமீன்தாருடன் வெகு நாள் முன்பு ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக, அவர் பல வருஷங்களாகவே சின்னவேலிக்கு வந்ததில்லை. ரங்கராஜன் சென்னைக்கு எவ்வளவோ தடவை வந்திருந்தும் அந்தச் சமயங்களில் டி.வி.எஸ். அய்யர் வீட்டுக்குச் சென்றதில்லை. இப்போதும், கைப்பெட்டி காணாமல் போன பிறகு, மாமா வீட்டுக்குப் போவதென்பதை அவன் மனத்தைவிட்டு அடியோடு தள்ளிவிட்டு, ஒரு பெண்ணை வியாஜமாகக் கொண்டு பிரணதார்த்தியின் மோட்டார் டிரைவராக வந்திருக்கிறான். பெயரையும் மாற்றி ராஜாராமன் என்று வைத்துக்கொண்டிருக் கிறான்.

சென்ற அத்தியாயத்தில் நடந்த சம்பவங்களுக்கு மறுநாள் காலை, பிரணதார்த்தி, ரங்கராஜனைத் தமது குடும்பத்துக்கு அறிமுகப் படுத்தினார். பிரணதார்த்தியின் மனைவி பாக்கியம், அப்போது

புதிதாகச் செய்து வந்திருந்த முத்து வளையலில் சிரத்தையாக, புது டிரைவரை அதிகமாக லட்சியம் செய்யவில்லை.

'ஏண்டாப்பா, உன் பேருதான் ராஜாராமனோ?' என்று கேட்டாள் தமக்கை, தன் பெரிய விழிகளை உருட்டி விழித்து.

'ஆமாம், அம்மா!' என்றான் அவன்.

'இதுக்கு முந்தி எங்கேயெல்லாம் டிரைவராயிருந்தே?'

'எங்கேயும் இருந்ததில்லை. முதல்லே இங்கேதான் இருக்கப் போறேன்.'

'என்னது! ஏண்டா பிரணதார்த்தி! வேலை தெரியாதவனா யிருந்து...'

'இல்லை, அம்மா! நான் வேலைக்கு இருந்ததில்லையே ஒழிய, வேலை தெரியாதவன் இல்லே! நன்னா மோட்டார் ஓட்டு வேன்... நீங்க உங்க தம்பியைக் கூப்பிட வேண்டாம்!'

தமக்கைக்குச் சொரேர் என்றது. இவன் வெடுக்கும் துடுக்குமாக இருக்கிறானே; நம் தம்பிக்குச் சரிப்படுமா என்று சந்தேகப் பட்டாள். பிடிக்காவிட்டால் எதற்கும் பழைய வழி இருக்கிற தென்று எண்ணி, 'நீ வேலைக்கு இரு. பார்க்கலாம்! இந்த வீட்டிலே நகைகளும் வெள்ளிப் பாத்திரமும் துணிமணிகளும் இறைபடும். கை நீளம்கள் இங்கே சரிப்படாது... உன் வேலையுண்டு, நீ உண்டு என்று நீ இருந்தால், என் தம்பி உனக்கு நாலு இடத்திலே சிபாரிசு செய்வான், உனக்கும் அதிர்ஷ்டம் இருக்கணுமே?' என்றாள்.

'அது சரிதான்! அப்புறம் நான் உங்க தம்பிக்கு நல்ல டிரைவராக சிபாரிசு செய்யணும்!'

தமக்கைக்கு இவன் பேச்சே புதிராக இருந்தது. அதற்குள் அங்கே வந்த பிரணதார்த்தி, 'என்ன ராஜாராமன், வண்டியை எடுக்கி றாயா?' என்றார்.

'அது முடியாதுன்னு சொல்லத்தான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!' என்றான் ரங்கராஜன் கண்டிப்பாக.

'ஏன்?' என்றார் பிரணதார்த்தி திடுக்கிட்டு.

'வண்டி ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது, சார்! இன்னிக்குப் பூராவும் கிளீனிங்தான். நாளைக்கு எங்கே வேணாலும் போகலாம்...'



பிரணதார்த்தி யோசித்தார். 'சரி! கிளீன் செய். நான் இன்னிக்கு எப்படியாவது பார்த்துக்கொள்ளுகிறேன்!' என்று சொல்லி விட்டு, உடனேயே பஸ் ஸ்டாண்டுக்குக் கிளம்பினார்.

கேரேஜில் வேலை செய்து கொண்டிருந்த ரங்கராஜனுடைய கண்கள் அடிக்கடி பங்களாவின் பின்புறத்தையே நோக்கித் திரும்பின. இன்னும் அவள் வெளிப்படவில்லையே ஏன்? அவளுடன் தனித்துப் பேச இதைவிடப் பெரிய சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது? ரங்கராஜன் துடியாய்த் துடித்தான். இரண்டு மணி நேரம் ஓடிவிட்டது. இனிமேல் அவள் வரப் போவதில்லை என்று அவன் சோர்வடைந்து வேலையைக் கவனிக்கப் போன சமயம், அவள் குரல் அமிர்தவர்ஷம் போல் அவன் காதில் கேட்டது.

'அடே பாலு! நீ கண்ட இடத்துக்கு ஓடினாயோ, அப்புறம் அடிப் பேன்!' என்று சொல்லிக்கொண்டு அவள் வந்தாள்.

பாலு என்ற சின்னப்பையன், ஓர் அணில் பிள்ளையைத் துரத்தி வந்தவன், சட்டென்று நின்று, 'சரி, அக்கா அத்து மீறி நடப்பவர் கள் தண்டனைக்குள்ளாவார்கள் அப்படித்தானே?' என்றான்.

'ஆமாம்! அதோ அங்கே அந்த மாமா மோட்டார் ரிப்பேர் செய்யறா! அதைப் பார்க்கலாம், வா!' என்று பையனை அழைத்துக்கொண்டு அவள் கேரேஜுக்குச் சற்றுத் தூரத்தில் வந்து நின்றாள்.

முதல் நாள் அவளுக்கு உதவி செய்தது ஒன்று, அவள் கையால் அடி வாங்கியது ஒன்று ஆகிய இரு சம்பவங்களுக்குப் பிறகு தாராளமாகப் பேசலாம் என்ற தைரியம் ரங்கராஜனுக்கு உண்டு. சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாதென்று, 'நீங்கள்தான் எஜமான ருடைய பெண்ணா?' என்று கேட்டு விட்டான்.

'இல்லை!' என்றாள் அவள்.

ரங்கராஜன் ஒரு பெருமூச்சு விட்டான்.

'ஒவ்வொரு வண்டியும் புறப்படுவதற்கு அரை மணிக்கு முன் இங்கே டிக்கெட்டு கொடுக்கப்படும்' என்றான் பாலு மடமட வென்று.

புரியாமல் விழித்த ரங்கராஜனிடம், 'இந்தப் பிள்ளை இப்படித் தான் பேசும். எங்கே எந்த நோட்டீஸ் எழுதி ஒட்டியிருந்தாலும்

அதை நெட்டுரு பண்ணி வைத்துக் கொண்டு சமயாசமயம் பார்க்காமல் ஒப்பிக்கிறது' என்றாள் அவள்.

'நீங்கள் இவர் பெண் இல்லையென்றால் வேறு...'

'எச்.டி. பெருங்காயத்தையே எப்போதும் உபயோகியுங்கள்!' என்றான் பாலு.

'நான் இங்கே யாரும் உறவில்லை. கொஞ்ச நாள் தங்கியிருக்கலாமென்று வந்திருக்கிறேன். எங்கப்பாவும் இந்த வீட்டு எஜமானரும் பழைய நாளைய சிநேகிதர்கள். என் தகப்பனார் டில்லிக்கு ஓர் அவசர காரியமாகப் போனபோது, இங்கே என்னை விட்டுவிட்டுப் போனார்...'

'உங்கள் தாயார்?'

அதைக் கேட்டதுமே அவள் கண்கள் கலங்குவதைக் கண்டு, 'நான் புரிந்து கொண்டு விட்டேன்... மன்னிக்கணும்...அவர் காலமாகி எத்தனை வருஷமாகிறதோ?' என்று கேட்டான் ரங்கராஜன்.

'இரண்டு வருஷம் ஆகப் போகிறது. அவள் சிராத்தத்துக்கு அப்பா வந்தாக வேண்டும். அதுவரை இங்கேதான் இருப்பேன்.'

'உங்கள் பெயர்?'

'கோமதி.'

'கோமதிஹி-- கோமதீ--கோமதயஹ' என்றான் பாலு.

'அடே! சும்மா இருக்கணும், தெரியுமா? இல்லாவிட்டால் மாமா கோவிச்சுக்குவா அப்புறம்!' என்று அவனை அதட்டிவிட்டு, 'இவனுக்கு இதுவே பெரிய பயித்தியமாய்ப் போச்சு!' என்றாள்.

ரங்கராஜனுக்குச் சின்னப் பயல்கள், அதுவும் சூட்டிகையான பயல்கள் என்றால் அத்யந்தப் பிரேமை. பாலு குறு குறுப்பாகவும் வெகு துடியாகவும் இருக்கவே, அவனைப் பக்கத்தில் இழுத்து அணைத்துக்கொண்டு, 'எலே! எனக்கும் இது மாதிரி எத்தனையோ தெரியும். சொல்லித் தரேன் கேளு: 'துப்பு இங்கே', 'அபாய அறிவிப்பு', 'வண்டியை நிறுத்த கைப்பிடியை இழு', 'இடது பக்கம் போ', 'ஆட்ட காலச் சட்டத்தை அனுமதிப்பதே முறை', 'உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது', 'வகுப்பு மாறி



உட்காருபவர்களிடம் இரட்டிப்பு சார்ஜ் 'வசூலிக்கப்படும்' போதுமா, இன்னம் வேணுமா?' என்றான்.

பாலு திணறினான். 'இந்த மாமா கெட்டிக்காரராக இருக்காரே!' என்று தன் அபிப்பிராயத்தையும் தெரிவித்தான்.

'நேற்றுச் சாயந்திரம் ஓர் ஆள் ஒளிந்து கொண்டானே...' என்று ரங்கராஜன் விசாரிக்கத் தொடங்கினபோது கோமதி, 'அவன் கிடக்கிறான்... அவன்தான் இந்த வீட்டுக்காரர் பிள்ளை. சர்வ அசடு. அவனுக்குப் போட்டியா ஒரு பெண் வேறே இருக்கு. நாலு நாளா அவள் டவுனுக்குச் சித்தி வீட்டுக்குப் போயிருக்கா. நீங்கள் கூட நேற்று அவனை விரட்டிக்கொண்டு சிரமப்பட்டிருக்க வேண்டாம். நானே அவனுக்குச் சூடு கொடுத்து...' என்று நிறுத்தினாள்.

'இந்த வீட்டில் நான் இருக்கும் வரைக்கும் உங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம்!' என்றான் இளைஞன்.

கோமதி புன்னகை செய்து, 'நீங்கள் இங்கே அதிக நாள் இருக்க வேண்டுமே!' என்றாள்.

'ஏன், அது ரொம்ப சிரமமோ?'

'போகப் போகத் தெரிய வேண்டும். அதுவும் நான் சொன்னதாகத் தெரிய வேண்டாம்.'

'பார்க்கலாமே! எதற்கும் வயிறு ஒன்று இருக்கிறதே! அதற்காக எங்கேயாவது உழைத்துதானே ஆக வேண்டும். அது கிடக்கட்டும், இங்கே உங்களுக்காவது அசௌகரியமொன்றும் இல்லாமல் இருக்கிறதல்லவா?'

'சௌகரியம், அசௌகரியம் பார்த்து முடியுமா? புருஷர்களைப் போலவே பெண்களுக்கும் வயிறு ஒன்று இருக்கிறதல்லவா?' என்று கோமதி சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

ரங்கராஜன் அவளை எவ்வளவோ கேட்க வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தான். அவளை நேரில் கண்டவுடன் ஏனோ எல்லாம் மறந்து விட்டன. அவன் யோசித்தபோதே, வீட்டின் இரண்டாங்கட்டில் பிரணதார்த்தியின் குரல் கணீரென்று கேட்டது.

'அக்கா! அக்கா! ஒரு விஷயம்னா! நம்ம சாரதாவுக்கு பஸ்டு கிளாஸ் வரன் ஒண்ணு வந்திருக்கு!' என்று சொல்லிக்கொண்டு வந்தார் அவர்.

'எந்த ஊரு? பிள்ளைக்குச் சொத்திருக்கா? எத்தனை இருக்கும்?'

'தஞ்சாவூரே! நம்ப பக்கம்தான்! நாகநாத முதலியார்தான் பையனைக் காண்பித்தார். பையனே நாளைக்கு வருவான் இங்கே! கொள்ளை கொள்ளையாகச் சொத்து இருக்கிறது!'

'அவனுக்குப் பிராப்தம் இருக்கணும் இங்கே வர! ஏண்டா, பிள்ளை யாருன்னு சொல்லல்லையே?'

'பிள்ளையா? சின்னவேலி ஜமீன்தாருடைய இரண்டாவது பிள்ளையாம்! பேரு ரங்கராஜனாம். பார்க்கிறதக்கு ராஜா மாதிரியிருக்கான். கிடைக்கணும், சாரதா அதிர்ஷ்டம்!' என்றார் பிரணதார்த்தி.

பிரணதார்த்தியின் கடைசி வார்த்தைகளைக் கேட்ட ரங்கராஜன் பிரமித்துப் போய் நின்றுவிட்டான்.



## அத்தியாயம் - 4

'ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராஜா; அகப்பட்டுக் கொண்டவனுக்கு அஷ்டமத்திலே சனி.'

- ஜோதிஷ சாஸ்திரம்

கும்பகோணம் வெற்றிலை, பேரளம் வடை, பழனி பஞ்சாமிர்தம், ஆலங்குடி பாக்குவெட்டி என்ற சேர்க்கைகளைப்போல், 'மெட்ராஸ் மணி' என்ற பெயரும் ஒருகால் பிரபலமடையக்கூடும். ஏனென்றால் இந்த மணியிடம் அப்படிப் பிரபல்யமடைவதற்கு வேண்டிய அநேக சூசகங்கள் இருக்கின்றன. ஆனால், போலீஸ் அதிகாரிகள் அவசரப்பட்டுக் கொண்டு குறுக்கிட்டு, அநேக திருட்டுக் குற்றங்களுக்கு அவன் பொறுப்பாளியாயிருந்தான் என்பதைக் கண்டுபிடித்து, அவனைச் சிறைச்சாலையிலும் தள்ளி அவன் புகழ் வெளிவராமல் தடுத்துவிட்டால், அதற்கு நாம் ஜவாப்தாரியாக முடியாது.

மணி ஒரு சாதாரணத் திருடனல்ல. அவன் திருடர்களிலே ரசிகன். அவசியமானபோதுதான் திருடுவான்; அவசியம் இல்லையென்றால் சும்மா இருப்பான். முயற்சிக்குப் பலன் கிடைத்தால் அதை அனுபவிப்பான்; அதன் பலன் அடிதான் என்றால் அதையும் புன்னகையுடன் அவன்





அனுபவிக்கத் தயார் தான். அவனுக்கு எந்த ஊரும் சொந்த ஊர்; எல்லோரும் நண்பர்கள். பம்பாயில் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ஏஜெண்ட் என்று சொல்லிக்கொண்டு, பல இடங்களில் பிரீமியம் வசூல் செய்தான். யாரோ ஒரு 'சந்தேகப் பிராணி' அற்பத்தனமாக மேற்படி கம்பெனி எங்கே என்று விசாரித்துக் கொண்டு போய், அப்படி ஒன்றுமே இருந்ததில்லை என்று கண்டு பிடிக்கவே, மணி பம்பாய் ஜாகையை அவசரமாக ஒழித்தான். டெல்லியில் 'கட்டுப்பாடு' ஆபீஸராகக் கொஞ்ச நாள் நடித்து விட்டு, விஷயம் வெளியாகும் தறுவாயில் போலீஸார் கையி லிருந்து தப்பித்துக்கொண்டு கல்கத்தாவுக்கு ஓடி வந்தான். தானும் 'பர்மா அகதி' கள் கோஷ்டியைச் சேர்ந்தவனென்றும், பல லட்ச ரூபாய்களையும் சொந்த வீட்டையும் ஒரு ரேடியோ ஸெட்டையும் அப்படியே போட்டுவிட்டு வந்ததாகவும் மூக்கால் அழுது கொஞ்ச காலம் வயிற்றை அலம்பினான். ஆனால், இந்த வேலையை அவன் நீடித்து நடத்த முடியாதபடி பல பேர் இதில் போட்டிக்கு வந்துவிடவே, அதையும் கைவிட்டான்.

அடுத்தபடியாக, மிகவும் பசித்த சமயம் ஒரு ரயில் வண்டியில் கொழுத்த வியாபாரியின் கோட்டுப் பையிலும் கைவிட்டான். தூங்குகிறாப்போலிருந்த வியாபாரி, நம்பிக்கைத் துரோகம் செய்து விழித்துப் புன்னகையுடன் 'டேய்' என்றார். 'மன்னிக்கணும், என் பையாக்கும் என்று எண்ணி விட்டேன்' என்று மணி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவர் விடாமல் புன்னகை செய்து கொண்டே மணியின் முதுகைத் தோலுரியப் பதம் பார்த்துவிட்டு, 'என் முதுகாக்கும் என்று எண்ணிக் கொண்டேன்' என்றார். மணிக்கு ஹாஸ்ய உணர்ச்சி உண்டாகையால், அதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

அப்பேர்ப்பட்ட சாமர்த்தியங்கள் கொண்ட மணி, இப்போது பட்டணத்து மண்ணை மிதித்தான். வந்து ஒரு வாரமும் ஆகி விட்டது. அவன் பட்டணத்துக்குப் புதிதுதான் என்றாலும் பிழைத்துக் கொள்ளலாமென்ற தைரியம் மட்டும் அவனுக்கு இருந்தது. அவனுடன் சுக துக்கங்களில் கைவிடாமல் இருந்த பக்கிரியும் அப்படித்தான் சொன்னான். ஆனால், இரண்டு பேரும் பட்டணத்துக்கு வந்து ஒரு வாரமாகக் காய்கிறார்கள்; ஓர் இடத் திலும் காலணா புறப்படவில்லை. மணி தங்கிய அறையில் பக்கிரி சோர்ந்து படுத்துவிட்டான். மணி மட்டும் புறப்பட்டு கடைசி முறையாகச் சுற்றிவரலாமென்று வந்து கொண்டிருந்த

போதுதான், திடீரென்று அபாயச்சங்கு ஊதி அவன் ஒரு சத்திரத்துத் திண்ணையில் அரை மணி அவகாசம் தங்க நேரிட்டது. அரை மீசையும் வாயில் சிகரெட்டுமாக உட்கார்ந் திருந்த மணியை இப்போது எல்லாருக்கும் ஞாபகம் வரலாம்.

பெண்கள் என்ற பயித்தியம் மணிக்கு ஒன்றும் கிடையாது. வயிறு நிறைய வேண்டும். பையில் பணத்துடன் குஷியாகத் திரிய வேண்டும்; அவ்வளவே அவன் அபிலாஷை. ஆகவே, கோமதி யும் அதே சத்திரத்தில் நின்றபோது, அவளை அவன் ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. சத்திரத்துக்குள் வேதராம சாஸ்திரிகள் வந்தார்; அவருடன் பேசினால் தன்னிடமுள்ள இரண்டொரு நாணயங்களையும் ஏதாவது தர்மத்துக்குக் கேட்டுவிடுவார் என்று ஊகித்து, அவருடன் பேச்சுக் கொடுக்காமல் இருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஏ.ஆர்.பி. சீனு தன் அதிகாரங்களையெல் லாம் ஒருமிக்க உபயோகித்து, ரங்கராஜனையும் அதே ஸ்தலத் துக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

ரங்கராஜனைப் பார்த்தவுடன் மணியின் முகம் சற்றுப் பிரகாசம் அடைந்தது. 'இந்தப் புள்ளியிடம் ஏதாவது சம்பாதிக்கலாம்' என்று நம்பிக்கையும் பிறந்தது. ரங்கராஜனும் திண்ணைமீது பெட்டியை வைத்துவிட்டு வேதராம சாஸ்திரிகளுடன் சம்பா ஷணையில் இறங்கவே, மணி பெட்டியையும் அதன் மேலிருந்த பெயரையும் கவனித்துக்கொண்டான். திண்ணையிலிருந்த கோழிக் கூடைக்காரியும் வயோதிகனும் தங்கள் சம்பாஷணை யிலே ஈடுபட்டிருந்தார்களாகையால் மணியின் காரியங்களில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. கோமதியும் ஒரு புறமாகத் திரும்பிக்கொண்டிருக்கவே மணிக்குத் தன் சோதனைகளை நடத்துவதில் இடைஞ்சல் ஏதுமில்லை. ரங்கராஜன் மணி பாக்ஸைத் திறந்து சாஸ்திரியிடம் இரண்டு ரூபாய் கொடுத்த போது, மணி பின்னாலிருந்தபடி எழும்பிப் பார்த்தான். ஒரு சான்ஸ் மட்டும் கிடைத்தால் அந்த மணிபாக்ஸையே கொண்டு போகலாம் என்று அவன் உள்ளம் இச்சைப்பட்டது. ஆனால், அவனோ அதைப் பத்திரமாக உள் பையில் வைத்துக்கொண்டு விட்டான்.

மணி உதட்டைக் கடித்துக்கொண்டு தன்னிடமிருந்த கடி காரத்தைப் பார்த்தான். கடைசிச் சங்கு ஊத இரண்டு நிமிஷங் களே பாக்கி இருந்தன. சங்கு ஊதிவிட்டால் இந்த ரங்கராஜன் பெட்டியுடன் வெளியேறிவிடுவான். அப்புறம் 'தும்பை விட்டு



வாலைப் பிடிக்கிற' கதைதான். நெருக்கடியான சமயங்களில் மணிக்கு ஏற்படும் 'வந்தது வரட்டும்' என்கிற முரட்டுத் தைரியம் அவனைப் பற்றிக்கொண்டது. சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு, சத்திரத்துக்குள் தைரியமாக நுழைந்து புழக்கடைக்கு வந்தான். அங்கிருந்த முள் வேலிக்குள் புகுந்து புறப்பட்டு ஒரு சந்துக்குள் வந்தான். வேகமாக நடக்கவும், எழும்பூர் பஸ் ஸ்டாண்டுக்கு நேர் எதிரில் கொண்டுவிட்டது அது. அங்கேயும் அவனுக்கு 'அதிர்ஷ்டம்'; தயாராக நின்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் ஏறி ஜம்மென்று புரசைவாக்கத்தில் வந்திறங்கினான்.

அவன் அறையில் சோர்ந்து படுத்திருந்த பக்கிரி கண்ணை விழித்துப் பார்த்தான். ஒரு பெரிய சோம்பலாக முறித்து, 'என்னங்க! ஊட்டுக்காரன் வாடகையை வைச்சிட்டுக் காலி பண்ணச் சொன் னான். அட்வான்ஸ் இல்லாமே இதுவரை விட்டதே இல்லையாம். இப்பதான் இரைஞ்சிட்டுப் போனான்' என்றான்.

'உதைச்சப் போகச் சொல்றதுதானே?' என்றான் மணி சூட் கேஸைக் கீழே வைத்து.

'அதுக்கு உடம்பிலே 'திராணி' இல்லிங்களே! சரியாகச் சாப்பிட்டு இரண்டு நாளாவுதே!'

பக்கிரி என்பவனுக்கு அவன் தாயார் 'போக்கிரி' என்று பெயர் வைத்திருந்தால், மிகவும் தீர்க்க திருஷ்டியுள்ளவள் என்று அவளைச் சொல்லியிருக்கலாம். வேண்டியபோதெல்லாம் மணிக்கு அவன் வலது கையாக இருந்து கொண்டு, இன்னும் பல்வேறு தொழில்களும் செய்திருக்கிறான். ஒரு காலத்தில் மிகப் பெரிய திருடனாக இருந்து, ஊரில் உள்ள ஒவ்வொரு பங்களா விலும் இரும்புப் பெட்டி எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டிருப்பவன். சேவகம் செய்வதிலும் நிகரற்ற வன். காலையில் எழுப்பி, இரவில் படுக்க வைத்து, மணியின் செல்லறைகளை அபேஸ் செய்து, சித்துக்காரியங்கள் செய்து கொடுத்து, கடன்காரர்களுக்குப் பொய் சொல்லி, ஓடுவதற்கும் உடந்தையாக இருந்து, மொத்தத்தில் மிக மிக உபயோகமாக இருந்திருக்கிறான். பக்கிரி இல்லாவிட்டால் மணியின் காரியங் களில் பாதி நடந்திரா என்றுகூடச் சொல்லலாம்.

சூட்கேஸுடன் வந்த மணியின் பக்கம் எழுந்துவந்த பக்கிரி, அதை வாங்கி ஒரு நொடியில் திறந்தான். உடனே மணி சாமான்

களை எடுத்து வைத்தான். நாலு சட்டை, கோட்டு, வேஷ்டிகள், கர்ச்சிப்புகள்... 'பக்கிரி! எனக்கு டிரெஸ் தைத்துக்கொள்ள ணும்னு நேத்து சொன்னேனே உன்னிடம்? இப்போ அது அவசியமில்லையடா!' என்றான் மணி.

'மேலே பாருங்க! வவுத்துக்கு எதினாச்சியும்-' என்றான் பக்கிரி.

டிரங்கின் அடியில் இருந்தது ஒரு பத்து ரூபாய் நோட்டு. அதைப் பக்கிரியின் பக்கமாகச் சுழற்றி எறிந்து, 'போ! நீயும் சாப்பிட்டு விட்டு எனக்கும் ஏதானும் கொண்டு வா! ஹூம்' என்றான் மணி.

பக்கிரி பறந்தான். அவன் பசி அவனுக்குத் தெரியும்! மணி சூட் கேஸுக்குள் திரும்பத் துணிகளை வைத்து மூடினான். டயரி மட்டும் தனியே கிடந்தது. அஸ்தமன வேளையாகையால் அறைக்குள் இருள் கவ்விக்கொண்டு வந்தது. டயரியைக் கொண்டுபோய் ஜன்னல் வெளிச்சத்தில் பிடித்துப் படித்தான்.

யாரோ சொன்னார்களே, முழு டயரியும் எழுதுகிற ஆசாமியே உலகத்திலே கிடையாது என்று! அவர்மட்டும் இதைப் பார்த் திருந்தால் தமது தவறை ஒப்புக்கொண்டு ஒரு டயரி பூராவும் இம்போஸிஷன் எழுதியிருப்பார். இதோ ஒருவன் பக்கம் பக்க மாகத் தன்னைப்பற்றி வரைந்து தள்ளியிருக்கிறானே! மணி படித்தான்:

'அண்ணனாம் அண்ணன்! சில வருஷங்கள் முன்னால் பிறந்து விட்டதற்காக இவ்வளவுதான் பேசுகிறது என்கிறதில்லையோ? நாளைக்கு எப்படியும் பேச்சுக் கொடுக்காமல் போகப் போகி றானா? வரட்டும். வெளுத்துக் கட்டிவிடுகிறேன். மன்னி இருந்தால் இருக்கட்டுமே!' என்று ஒரு குறிப்பு இருந்தது.

'என் மாமா வீட்டுக்குப் போகலாமா, வேண்டாமா? வேண்டாம் என்றுதான் தோன்றுகிறது! அதுவும் வீட்டில் கோபித்துக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு போனால் வெட்கக்கேடு அல்லவா?'

இப்படியாக ஏகப்பட்ட குறிப்புகள்! இந்த மாதிரி எவனாவது எழுதுவானா என்று மணி யோசித்தான். மேலும் வாசித்தான். வாசிக்க வாசிக்க அவன் முகம் பிரகாசம் அடைந்தது. பல விஷயங்கள் விளங்க ஆரம்பித்தன. ஒரு குடும்பக் கதையே அல்லவா அதில் இருந்தது? 'இவன் ஜமீன்தாரின் இரண்டாவது



பிள்ளை. பட்டணத்தில் மாமன் வீட்டிற்கோ போகப்போகிற தில்லை; மாமனைப் பார்த்தும் பதினேழு வருஷம் ஆகிறதென்று எழுதியிருக்கிறான். நாம் ஏன் இவனுக்குப் பதிலாக 'மாமா'வைப் பார்த்துவிட்டு வரக்கூடாது?' - இந்த யோசனைதான் மணிக்கு ஏற்பட்டது. பக்கிரி வாங்கிக்கொண்டு வந்த ஆகாராதிகள் வயிற்றில் செல்லவும் தைரியமும் கூடவே பிறந்தது. 'நடக்கிறது நடக்கட்டும், பார்த்துவிடுகிறது ஒரு கை! என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

உடனேயே உடை மாற்றிக்கொண்டான்; அதற்கு சூட்கேஸி லிருந்த ஆடைகள்தான் பயன்பட்டனவென்று சொல்ல வேண்டியதில்லை. பரங்கிமலையில் ரங்கராஜனின் மாமாவாகிய மிஸ்டர் டி.வி. எஸ். அய்யருடைய பங்களாவுக்குப் பிரயாண மானான்.

மணி போனபோது பங்களாவில் காவல்காரனும் சமையல் காரனும்தான் இருந்தார்கள். சின்னவெலியிலிருந்து தான் வந் திருப்பதாகச் சொல்லிக்கொண்ட உடனே அவனைப் பெரிய ஹாலில் உட்கார்த்தி வைத்தார்கள். குடும்ப சகிதம் பீச்சுக்குப் போயிருந்த அய்யர் ஒன்பது மணிக்குமேல்தான் திரும்பினார். அவர் நுழையுமுன்பே, வாசலில் 'ரங்கராஜன் வந்திருக்கிறான்' என்று கேள்விப்பட்டுவிட்டாராகையால், 'வா அப்பா! தம்பி! உன்னை ஐந்து வயதில் பார்த்தது. உங்கம்மா சௌக்கியமா? அப்பா எங்கேயிருக்கார்? டேய் ராமன்! ரங்கராஜனுக்கு ஏதானும் டிரிங்க் கொடுத்தாயாடா? ரொம்ப சந்தோஷம்! எங்கே வந்தே?' என்று மடமடவென்று யோக க்ஷேமங்கள் விசாரித்தார்.

சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய டி.வி.எஸ். அய்யர் பார்த்த வுடன் நல்லவர் என்று சொல்லும் தோற்றத்துடன் இருந்தார். கண்களில் சாந்தமும், அகன்ற நெற்றியில் நிதானமும் நிலவின. மணியை நன்றாகக் கவனித்தபோது, அவன் அரை மீசையிலும் முக ஜாடையிலும் அவர் அவ்வளவாகத் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. எனினும் அதைப் பட்டவர்த்தனமாக அவர் வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை. அவரைப் பின் தொடர்ந்து வந்த அவருடைய மனைவியையும் பதினெட்டு வயதுப் பெண்ணையும் மணி கடைக்கண்ணால் கவனித்தான். இருவரும் வைர ஆபரணங்கள் அணிந்துகொண்டிருந்தார்கள் என்பதுதான் முக்கியமாக அவன் கவனத்தில் பட்டது.

மணி வெகு ஜாக்கிரதையாகவே நடந்துகொண்டான். அதிகம் பேசவில்லை; பேசியதிலுங்கூட, தான் 'டயரி'யிலிருந்து தெரிந்துகொண்டவற்றை மட்டும் உபயோகித்துப் பேசினான். அவன் அதிகம் பேச இராதபடி சௌகரியமாக அன்றிரவு பத்தரை மணிக்கு ராவ் பகதூர் நாகநாத முதலியார் என்ற பிரமுகர் டி.வி.எஸ். அய்யரைப் பார்க்க வந்துவிட்டார். முதலியார் உலக விஷயங்களையெல்லாம் பற்றிப் பேசி, நான்கு மாதத்தில் வரப்போகும் கவுன்சில் எலெக்ஷனையும் பிரஸ்தாபித்து, கடைசியில் மணியைப் பார்த்தவுடன், 'இவர் யார்? தெரிய லீங்களே!' என்று விசாரித்தார்.

'இவன் என் தங்கையின் பிள்ளை. சின்ன வேலி ஜமீன்தார் இவன் தகப்பனார். இவனுக்கு மூத்த பையன் ஒருவனும் இருக்கிறான்' என்றார் அய்யர்.

'திருமணம் ஆகிவிட்டதோ?'

'மூத்தவனுக்கு ஆகிவிட்டது. இவனுக்கு ஆக வேண்டும்.'

மணி புன்னகை செய்து, 'எனக்கு ஒண்ணும் அதற்கு அவசர மில்லை!' என்றான் நாசூக்காக.

'ஸார்! உங்க மாதிரி பேசிக்கிட்டிருந்தவங்கதான் ஸார், நாங்களும்! அது அது நடக்க வேண்டிய காலத்திலே நடக்க வேண் டாமா? நீங்க சந்தோஷமாய் இருக்கிறதைப் பார்க்கத்தானே பெரியவங்க காத்திருக்காங்க? நான் எதுக்குக் கேட்டேன்னா, நம்ம சிநேகிதரு ஒருத்தரு இருக்காரு, நாலு லட்சம் வைச் சிருக்காரு. அவரு மகளுக்கு வரன் தேடிக்கிட்டிருக்காரு' என்றார் முதலியார்.

'யார் அவர்?' என்று விசாரித்தார் அய்யர்.

'உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பிரணதார்த்திஹர அய்யர்னு மாம்பலத்திலே பங்களா கட்டிண்டு இருக்காரு. பலத்த புள்ளிதான்.'

'ஓ!' என்றார் டி.வி.எஸ் அய்யர்.

'உங்க பேரென்னங்க? நம்ம பங்களாவுக்கு நாளை காலையிலே வாங்க பேசிக்கிட்டிருக்கலாம். எனக்கும் பொழுது போவணும் பாருங்க!' என்று முதலியார் மணியை அழைத்தார்.



'அதற்கென்ன, வரேன்!' என்றான் மணி.

மேலே நடந்த காரியங்கள் அவனுக்குக் குழப்பத்தை உண்டாக் கின. அவன் உத்தேசம் செய்தது டி.வி.எஸ். அய்யர் வீட்டில் அகப்பட்டதைக் சுருட்டிக்கொண்டுபோய் விடலாம் என்பதே. நாகநாத முதலியாரைப் பார்த்த பிறகும், அவர் அவனை அழைத்தபோதும், அவன் திட்டங்களை மாற்றிப் போட்டான். பட்டணத்தில் அவனைத் தெரிந்தவர்கள் யாருமில்லை. இந்த முதலியார் மூலமாக இன்னும் லாபம் அடைந்தாலென்ன என்பதே அவன் யோசனை. நாகநாத முதலியார் மீது லேசாக வீசிய சாராய வாசனையை மணி கவனித்தான்; அவருடைய அந்தக் குணவிசேஷங்கூட அவனுக்கு அநுகூலமாகத்தான் இருக்கும் என்று நினைத்தான்.

651360

மறுநாள் காலை, பிரணதார்த்தியின் வீட்டில் ரங்கராஜன் மோட்டார் கிளீன் செய்துகொண்டிருந்தபோது, மணி ஒரு மோட்டார் சைக்கிளில் நாகநாத முதலியார் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். டி.வி.எஸ். அய்யரின் புதல்வன் அப்போது விடுமுறைக்கு வேட்டகம் சென்றிருந்தானாதலால், அவன் விட்டிருந்த மோட்டார் சைக்கிள்தான் மணிக்கு இப்போது உபயோகமாயிருந்தது. அவன் போய்ச் சேர்ந்த சமயம், பிரண தார்த்திஹர அய்யரும் அங்கே வந்து முதலியாருடன் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்.

894.8113
G10M

'ஒரு பயலை டிரைவராகப் போட்டிருக்கிறேன் நேத்துலேருந்து. ராஜாராமன்னு பேர். பிரமாதமாக மோட்டார் ஓட்டுகிறான் என்கிறேன். ஹோ!' என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

'எங்கே பிடிச்சீர் ஆளை?' என்று கேட்டார் முதலியார்.

'நேத்து உங்கள் வீட்டண்டை வந்துவிட்டுப் போனேனா... எழும்பூர்கிட்டே வண்டி நின்னுடுத்து. இந்தப் பையன் பார்த்துக் கொண்டே இருந்தவன் நிமிஷத்திலே வண்டியைக் கிளப்பி விட்டான். நேத்து வீட்டுக்கு வண்டி விட்டிருக்கான் பாருங்கள், அற்புதம், அபாரம்!'

நமக்குக்கூட அந்த மாதிரி ஒரு டிரைவர் சம்பாதிச்சுக் கொடுங்க, சார்!' என்று முதலியார் சொல்லிவிட்டு, மணியின் முதுகைத் தடவி, 'இவரு யாரு, தெரியுங்களா?' என்று கேட்டார்.

CONNEMARA
CPL 651360

பிரணதார்த்தி ஒரு முறை பார்த்துவிட்டு 'தெரியவில்லையே?' என்றார்.

'சின்னவேலி ஜமீன் என்று கேள்விப்பட்டிருக்கிறீங்களா? தஞ்சா ஊரிலே பெரிய கையுங்க. ஜமீன்தாருடைய இரண்டாவது பிள்ளை! உங்களுக்காகத்தான் தருவிச்சேன் இவரை. உங்க மகளுக்கு வரன் வேணும்னீங்களே, ரொம்ப நல்ல இடம்!' என்று முடித்தார் முதலியார்.

'ஓஹோ! இங்கே யாரானும் பந்துக்கள்...' என்று நிறுத்தினார் பிரணதார்த்தி, மணியைப் பார்த்துக் கொண்டே.

'இருக்கிறார், என் மாமா டி.வி.எஸ். அய்யர் இருக்கிறார்!'

'ரொம்ப சந்தோஷமாப் போச்சு! நீ வாயேன் நம்மாத்துக்கு... கொழந்தைகூட டவுனிலே அவள் சித்தியாத்துக்குப் போய் இருக்கா. தமக்கையும் சம்சாரமும்தான் ஆத்திலே. ஈசுவர அநுக்ரகமும் பிராப்தமும் இருந்தால்தானே கல்யாணம் நடக்கிறது! எல்லாம் அந்தத் திரிபுர சுந்தரியின் கிருபை!' என்றார் பிரணதார்த்தி.

'உங்களுக்கு எப்பொழுதும் தெய்வபக்தி அதிகம், ஸார்!' என்று முதலியார் பிரணதார்த்தியைப் புகழ்ந்தார்.

மணி தன் கண்களை பிரணதார்த்தியின் முகத்திலிருந்து அகற்றவேயில்லை. அசட்டுக் கௌரவம், புதுப்பணம் இரண்டும் ஏக காலத்தில் இந்த மனிதன் மூளையைக் குழப்புகின்றன என்று புரிந்துகொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. 'விதி எங்கேயோ நம்மையும் இழுத்துப் போகிறது; மேலும் விளையாடிப் பார்க்கலாமே' என்று தீர்மானித்துக்கொண்டிருந்தபோது, பிரணதார்த்தி எழுந்து அவன் கையைப் பிடித்துக் குலுக்கினார். 'தம்பி! நீ நம்மாத்துக்குக் கட்டாயம் வரணும்' என்றார்.

'அவசியம் வருகிறேன். இரண்டு நாள் போகட்டும்' என்றான் மணி.

இதற்கு மறுநாள் மாலைதான் மணி தன் உடைகளை மீண்டும் மாற்றிக்கொண்டு பிரணதார்த்தியின் வீட்டுக்குக் கிளம்பினான். ரங்கராஜனுடைய உடுப்புகள் அவனுக்கு அளவெடுத்ததைப் போல் அவ்வளவு கணக்காக இருக்கவே, மணி பார்வைக்கு



ஜோராக இருந்தான். கிராப்புத் தலையைப் பளபளவென்று வாரி விட்டுக்கொண்டு, ஓர் அழகிய வாக்கிங் ஸ்டிக்கையும் சுழற்றிக்கொண்டு அவன் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்ததைப் பார்த்தவர்கள், அவன் யாரோ ஜமீன்தாரின் பிள்ளை என்று சத்யம்கூடச் செய்வார்கள். ஒரு சிகரெட்டை வாயில் வைத்துக் கொளுத்திக் கொள்ளப்போன சமயம், 'பம்' 'பம்' என்று பெரிய மோட்டாரின் கம்பீரமான ஊதுகுழல் கேட்டு நிமிர்ந்தான். அவன் கண்ட காட்சி அவனை ஒரு கணம் கல்லாகச் சமைத்துவிட்டது: டிரைவர் உட்காருமிடத்தில் அவன் சூட்கேஸை திருடிய ஆசாமியே உட்கார்ந்திருந்தான்; வண்டிக்குள் பிரணதார்த்தியும் அவர் மனைவியும் ஆனந்தமாகச் சிரித்துப் பேசிக் குலாவிக் கொண்டிருந்தார்கள்! ஒரு க்ஷணத்தில் மோட்டார் அவனைத் தாண்டிச் சென்று மறைந்துவிட்டது.

மணியின் மூளை வேலை செய்தது. இதைப் பார்க்காமல் இருந்து பிரணதார்த்தியின் வீட்டுக்குப் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்! படுமோசம் அல்லவா விளைந்திருக்கும்? பிரணதார்த்தியிடம் இந்த டிரைவர் உத்தியோகத்திலிருக்கும் வரையில் அவன் மாம்பலத்தில் கால் வைக்க முடியாது. அவனை எப்படியாவது உடனே அகற்றிவிட்டு மறுகாரியம் பார்த்தாக வேண்டும்! மணி அதிக நேரம் யோசித்துக் கொண்டு நிற்கவில்லை. தன் அறைக்குத் திரும்பினவன், அப்போதுதான் அவனுடைய சிகரெட்டுகளைத் திருடிக் குடித்துக் கொண்டிருந்த பக்கிரியைத் திணற அடித்தான்.

ஏதோ சமாதானம் சொல்ல வாயெடுத்த பக்கிரியை அடக்கி, 'அதிருக்கட்டும்! நான் சொல்வதைக் கேள்; நீ இப்போது உடனே ஒரு காரியம் செய்ய வேண்டும். நேரே, மாம்பலம் போய்க் காத்திருந்து அதைச் செய்து முடிக்க வேண்டும். அதுமட்டும் முடிந்ததோ, நான் ராஜா, நீ மந்திரிதான்!' என்றான். பிறகு ரகசியமாகச் சில விஷயங்களைச் சொல்லித் தயார் செய்யவும், பக்கிரி அவசரமாக மாம்பலத்துக்குப் புறப்பட்டான்.

ரங்கராஜன் கையில் மோட்டார் சொன்னபடியெல்லாம் கேட்டது. பிரணதார்த்தியும் பாக்கியமும் ஆனந்தமாக உட்கார்ந்து அனுபவித்தார்கள். இளந் தம்பதிகள் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் அவர்களுக்குத் தோன்றின. பீச்சில் ஒரு கோடியிலிருந்து ஒரு கோடிக்காக, ஆறு தடவை போயாகிவிட்டது. இன்னும் அலுக்கவில்லை அவர்களுக்கு.

'என்ன அற்புதமாக ஓட்டுகிறான், பார்! அபாரம் போ!' என்று பிரணதார்த்தி சொல்லிக்கொண்டு வந்தார். எட்டு மணி வரை சுற்றிவிட்டுத் திரும்பியபோதும் பிரணதார்த்திக்கு இன்னும் கொஞ்ச நேரம் போய்க்கொண்டிருக்கப்படாதா என்ற ஆசையே உண்டாயிற்று. கார் வாசலில் நின்றதும் தம்பதிகள் இறங்கினார் கள். ரங்கராஜனும் இறங்கின சமயத்தில் அவன் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

'டேய்! ராஜாராமனாடா?' என்று ஒரு குரல் கணீரென்று கேட்டது. வாசற்படி ஏறிக்கொண்டிருந்த பிரணதார்த்தியும் பாக்கியமும் நின்று திரும்பிப் பார்த்தார்கள். ரங்கராஜனும் புருவத்தை நெரிந்து வியப்புடன் நோக்கினான். மீசை வைத்த ஓர் ஆள் அவனை வேகமாக அணுகி, 'என்ன தம்பி! நீ இங்கேயா இருக்கே!' என்று கேட்டான். அவன் பக்கிரிதான்.

ரங்கராஜன், 'யார் நீ? என்னோட பேசறே?' என்று கேட்டான்.

'உன்னோடேதான்! அதுக்குள்ளே என்னை மறந்துட்டயா? நான் யாரிமுத்து இல்லே? என்ன தம்பி, நீ!' என்றான், அவன் வெண் கலத் துவனியில் சிறிதும் தயக்கமின்றி.

'ஆள் தெரியாமே யாரோடேயோ பேசறே!' என்று ரங்கராஜன் நகர்ந்தான்.

அவன் ஏளனமாகச் சிரித்து, 'என்னா நீ, எனக்குக் காதுகுத்தறே? என்னையா தெரியல்லே உனக்கு? நீ கூட ஒரு சங்கிலி திருடிப் பிட்டு வேலூர் ஜெயிலிலே இருக்கச்சே, நாம ரெண்டு பேரும் ஓர் அறையில் இல்லே? நல்லா நினைச்சுப் பார்!' என்றான் அவன்.

ரங்கராஜனுக்கு இது வியப்பாக இருந்தது. இருந்தாலும் அலட்சியமாகவே, 'டேய்! உனக்கு உதை கேட்கிறது!' என்று நாலடி வைத்து அவன் சிண்டைப் பற்றிக் கொண்டான்.

பிரணதார்த்தி சட்டென்று இறங்கி வந்து, 'யாரப்பா நீ? உமக்கு டிரைவரைத் தெரியுமா?' என்றார்.

'தெரியுமாவா? என்னங்க நீங்க! இதே ராஜாராமனும் நானும் ஒரே ஜெயில்லே ஆறு மாசம் இருந்திருக்கிறோமுங்களே!' என்றான் அவன்.



'நிஜமாவா?' என்றார் பிரணதார்த்தி ஸ்தம்பித்து. 'பொய்! பொய்!' என்றான் ரங்கராஜன் ஆவேசத்துடன்.

'பொய் என்றால் உன் பெயர் எப்படித் தெரியும் இவனுக்கு?' என்று கேட்டார் பிரணதார்த்தி.


ரங்கராஜனால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. 'என்னமாகத் தெரியும்? என்னமாகத் தெரியும்?' என்று முணுமுணுத்தான். அதே சமயம் அவன் கைப்பிடி இறுகுவதைக் கவனித்த பக்கிரி, 'என்னமோ தம்பி! என்னை மறந்தாலும் மறந்துக்கோ! இனிமேயானும் நீ ஒழுங்காயிரு! ஐயா ரொம்ப நல்லவராயிருக்காரு. இங்கேயாவது திருடாமே கொள்ளாமே யோக்கியமாப் பிழை! எதினாச்சியும் வேணும்னா கேட்டு வாங்கிக்க. திருட மட்டும் திருடாதே!' என்றான்.

ரங்கராஜனுக்குக் கோபம் ஜ்வாலை விட்டெரிந்தது. 'இது என்ன வேலை, ஹூம்? உன் மென்னியைத் திருகிவிடுகிறேன்' என்று வெகு ஆத்திரத்தோடு கிளம்பிய அவனைப் பிரணதார்த்தி அடக்கினார். சந்தர்ப்பம் பார்த்து நழுவிக்கொண்ட பக்கிரி துள்ளி ஓடிச் சற்று ஒதுங்கி நின்று கொண்டு, 'தம்பி! யோக்யனா மட்டும் இரு! ஐயா வேண்டியது கொடுப்பாங்க!' என்று கத்திவிட்டு மறைந்தான்.

பிரணதார்த்தியின் பக்கம் திரும்பிய ரங்கராஜன் 'இவனை நீங்கள் நம்பக் கூடாது! அத்தனையும் புளுகு!' என்றான் ஆத்திரத்துடன்.

ரங்கராஜனை அவர் நம்பத் தயாராயில்லை என்பதை அவர் முகம் ஸ்பஷ்டமாகத் தெளிவாக்கியது. 'அது அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். வண்டியை முதலில் கேரேஜில் விட்டுவிட்டு அரைமணி நேரம் கழித்து மாடியில் என் ரூமுக்கு வா!' என்று சொல்லிவிட்டு, விடுவிடுவென்று வீட்டின் உள்ளே சென்றார்.

தன் வேலைக்குச் சீட்டுக் கிழிக்கத்தான் கூப்பிடுகிறார் என்ற முடிவுடன், வண்டியைக் கேரேஜ் பக்கம் கொண்டு சென்ற ரங்கராஜனுக்கு அங்கேயும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.





## அத்தியாயம் - 5

'ஏ பித்தம் பிடித்த மூடாத்மாவே! இப்போதாவது தெரிந்துகொள். புருஷர்களின் உறுதிக்கு மிகப் கொடிய சத்ரு ஸ்திரீகள்தான்.'

- சிவ கீதை வசனம்

சூரியனைப் பார்த்தவன் கண்ணுக்கு வேறெங்கே பார்த்தாலும் சூரியனுடைய பிம்பமே தோன்றுகிறதல்லவா? ரங்கராஜன் முதன்முதலாகக் கோமதியைக் கண்டு பேசிய பின்னர், மேற்கூறிய நிலையையே அடைந்திருந்தான். எங்கே பார்த்தாலும் கோமதியின் முகமே அவனுக்குத் தெரிந்தது. அவள் பிரணதார்த்தியின் பெண் அல்ல என்று அறிந்து கொண்டபோது, அவனையும் அறியாத ஆனந்தமும் திருப்தியும் உண்டாயின. 'இங்கே நீங்கள் அதிக நாள் இருக்க வேண்டுமே!' என்று அவள் சொன்னதில், 'நீங்கள் இங்கேதான் இருக்க வேண்டும்' என்ற ஆசையைத்தான் அவள் வெளிப்படுத்திக்கொண்டாள் என்றே நினைத்தான். ஆனால், முதல் சந்திப்பு அதிக நேரம் நீடிக்க முடியாதபடி பிரணதார்த்தி அப்போது தமது தமக்கையிடம் புதிய வரன் ஒன்று வந்திருப்பதைச் சொல்லிக்கொண்டு வந்து விட்டார். கோமதியும் அதற்குமேல் அங்கே நிற்காமல் உள்ளே சென்று விட்டாள்.

'நம்மைத் தவிர வேறு யார் ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளை? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது' என்று ஊகித்தான் ரங்கராஜன். 'எவனாக இருந்தாலும் வரட்டும்; வேடிக்கை பார்க்கலாம். ஆனால், நாம் இன்னாரென்று இப்போதே சொல்லிக்கொண்டு வேலையைப் போக்கிக் கொள்ளக் கூடாது' என்று ஒரு முடிவும் செய்து கொண்டான்.

அன்று சாயந்திரத்துக்குள்ளும் மறுநாளும் கோமதியுடன் இரண்டு, மூன்று முறை பேசுவதற்கு அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவனைப் பார்க்கும்போது அவள் வதனத்தில் தோன்றிய குறுநகையும் குழைவும், அவனை அவள் அந்நியனாக மதித்து ஒதுக்கவில்லை என்பதை அவனுக்கு விளக்கின. ஒவ்வொரு சமயமும் அவள் பாலுவைக் கூடக்கூட இழுத்து வைத்துக் கொண்டுதான் அவனுடன் பேச வந்தாள். ரங்கராஜன் அவளிடமிருந்து பிரணதார்த்தியின் குடும்ப விவரங்களைப் பேச்சுவாக்கில் அறிந்துகொண்டான்.

'பிரணதார்த்திஹரா அய்யரும் என் தகப்பனாரும் பள்ளிக்கூடத்துத் தோழர்களாம். அண்ணன், தம்பிகள் மாதிரியே பழகுகிறார்கள். அதனால்தான் என்னை இங்கே நம்பிக்கையாக அப்பா விட்டிருக்கிறார்' என்றாள் கோமதி.

'ஓஹோ! ரொம்ப சந்தோஷம். இங்கே அவர் விடக் கொண்டு தானே அடியேனுக்குத் தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது?' என்றான் ரங்கராஜன்.

கோமதி சிரித்துக் கொண்டாள். 'நீங்கள் ரொம்பவும் குறும்பாகப் பேசுகிறீர்கள். இப்படியேதான் பிரணதார்த்தியிடமும் அவர் தமக்கையிடமும்கூடப் பேசுகிறீர்கள். அப்போதெல்லாம் எனக்குப் பயமாயிருக்கிறது' என்று கோமதி சொன்னாள்.

'இனிமேல் உங்களை நான் அப்படிப் பயமுறுத்துவதில்லை. சரிதானே?' என்று சிரித்தான் ரங்கராஜன்.

'ஆனால் ஒண்ணு... பிரணதார்த்தியின் பெண்ணுடன் நீங்கள் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். என்னிடம் பேசினாற்போல் பேசினீர்களோ, இத்தனை நேரத்துக்குள் உங்கள் வேலை போயிருக்கும். இன்னும் நீங்கள் அவர் பிள்ளையாண்டானைப் பார்க்கவேயில்லையே!'



'இருட்டில் பார்த்ததுதான். அவர் முதுகுத் தோலைப் பார்ப்பதற்குள் அன்றைக்குத்தான் ஓடிவிட்டாரே! அவர் எப்படியோ?'

'சர்வ அசடு; அசட்டுப் பொல்லாததுங்கூட... இதில் தவறாமல் சீட்டாட்டம். எங்கேயாவது போய்விடுவார். அதிகாரம் தூள் பறக்கும். இன்னும் உங்களைக் கவனிக்கவில்லை அவர். இரண்டு நாள் போனால் தானே தெரியும்.'

'நானே அதற்குள் அவரைக் கவனிக்கிறேன். நீங்கள் வெயிலில் நிற்கிறீர்களே!' என்றான் அவன்.

இவ்வளவு நேரம் ஒரு வெட்டுக்கிளியைத் துரத்திக் கொண்டிருந்த பாலு, இப்போது அவர்களை நோக்கி வந்தான்.

'இந்தப் பிரணதார்த்தி அய்யருக்குத் தங்கமான பெண்ணாக ஒன்று இருந்து, திடீரென்று தவறிப்போய்விட்டது. என்ன பண்ணுகிறது! சுகம் துக்கம் எல்லாம் எங்கேயும் கலந்துதான் வருகிறது. சரி, நான் வருகிறேன்' என்று கூறி, பாலுவின் கையைப் பிடித்துக்கொண்டு, 'வாடா, கண்ணே, உள்ளே போகலாம்!' என்று கிளம்பினாள்.

'அக்கா! இந்த மாமா உன்னை என்னவோ மாதிரி பார்க்கிறார்!' என்றான் பயல், ரங்கராஜனைக் குறிப்பாகப் பார்த்துக்கொண்டே.

அது காதில் படாததுபோல் அவனை அழைத்துக்கொண்டு போய், வாசற்படிக்குப் போன பிறகு கடைக்கண்ணால் ரங்கராஜனை ஒருமுறை பார்த்துவிட்டுக் கோமதி மறைந்தாள்.

அன்று சாயந்தரம் பிரணதார்த்தியும் பாக்கியமும் பீச்சுக்குக் கிளம்பினார்கள். பிரணதார்த்தியின் சகோதரி கோயிலுக்குச் சென்றாள்; தன் தம்பியின் பெருமையைப் பிரசாரம் செய்வதற்குக் கோயில் பிராகாரம்தான் சிறந்த இடம் என்பதை அந்த அம்மாள் கண்டுகொண்டாள். வீட்டில் கோமதியும் பாலுவும் மட்டுமே இருந்தனர்.

ரங்கராஜன் சுமார் எட்டு மணிக்குத் திரும்பியபோதுதான் வாசலில் பக்கிரி அவனைத் தன் தோழன் என்று அழைத்துவிட்டு, ஏதோ பூர்வஜன்ம பூஜா பலத்தால் அடிபடாமல் ஓடித் தப்பித்துக்கொண்டான். பிரணதார்த்தி, ரங்கராஜனை அரை மணிக்குப் பின் தமது அறைக்கு வரும்படி கூறிவிட்டுச் சென்ற

சமயம், அவன் மனம் மிகவும் குழம்பிப்போய் இருந்தது என்று சொல்ல வேண்டியதில்லை. வண்டியைக் கேரேஜ் பக்கம் மெல்லக் கொண்டுபோகும்போது, சில செடிகள் சலசலத்ததை அவன் கவனித்தான். அதை அடுத்து ஒரு குரல் கேட்கவே, சட்டென்று வண்டியை நிறுத்தினான்.

'நீ நாசமாப் போக! இப்போ போகமாட்டே, போகாட்டா அப்புறம் நான் கத்துவேன்...'

'சூ! நான் சொன்னதைக் கேளு... உன் கன்னத்திலே மட்டும் ஒண்ணே ஒண்ணு...'

செடிகள் சலசலப்பு அதிகமாயிற்று. ஒருவர் பிடியிலிருந்து ஒருவர் திமிறுகிறாற்போலும் தோன்றியது.

சத்தப்படுத்தாமல் ரங்கராஜன் மோட்டார் கதவைத் திறந்து இறங்கினான். செடிகளுக்குப் பின்னால் பார்த்தபோது, கோமதி பிரணதார்த்தியின் புதல்வனின் பிடியில் திமிறிக்கொண்டிருந்ததைக் கண்டான்.

ரங்கராஜன் தாமதிக்கவில்லை. அந்தத் துஷ்டனின் மார்புப் புறத்தில் சட்டையைப் பித்தான்களுடன் சேர்த்து ஒரு பிடி பிடித்து முறைப்பாக முன்னால் இழுத்தான். இதைச் சிறிதும் எதிர்பாராத பிரணதார்த்தியின் புதல்வன், 'சிவ பூஜையில் கரடி விட்டவன்' போல் வந்த ரங்கராஜனை எரித்துவிடுகிற மாதிரி ஒரு பார்வை பார்த்து, 'ஏய் டிரைவர்! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!' என்றான் அதிகாரமாக.

'டிரைவரா...டிரைவர்! ஹூ! உன்னை இங்கிருந்து டிரைவ் பண்றேன், பார்! இவன் பேர் என்ன?' என்று கேட்டான் ரங்கராஜன்.

'தத்தாத்ரி!' என்றாள் கோமதி.

'சரியான பெயர்! இவன் நல்ல தத்தாரிதான்! அடே, இதை வாங்கிக்கோ!' என்று ஒரு குத்து விட்டு, அவனை முன்னால் தள்ளினான்.

தத்தாத்ரிக்கு ரங்கராஜனுடன் மல்யுத்தம் செய்வதில் உபயோகமில்லை என்று நன்றாகத் தெரியும். ஆகையால் எழுந்து, 'அடே! என் அப்பாவிடம் சொல்லி உன்னை...' என்று விறாப்புடன் ஆரம்பித்தான்.



மறுபடி அவனை ஒரு பாய்ச்சலில் பற்றிக்கொண்டு விட்டான் ரங்கராஜன். 'அடே! உங்கப்பாவே இந்தக் காரியம் செய்தால் அவருக்கும் இதுதான். பித்ருலோகத்திலேருந்து உன் பாட்டனார் வந்து செய்தால் அவருக்கும் இதுதான்... நான் இங்கே இருக்கும் வரையில் நீ மறுபடி கோமதியிடம் நெருங்கினாயோ, உனக்கும் இதுதான்!' என்று சொல்லி, 'இது' என்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு குத்தையும் பரிமாறினான். பிறகு, 'போ, தத்தாரி! தத்தாரி! உன் பெயர்மட்டும் என்னவோ நன்றாயிருக்கிறது' என்று ஒரு கல்தாவும் கொடுத்தான்.

தத்தாத்ரி நிற்கவில்லை. ரங்கராஜன் கோமதியின் பக்கம் திரும்பி, 'என்ன, உங்களுக்கு இங்கேயும் ஒரு தொல்லை இருக்கிறாற்போலிருக்கிறதே!' என்று கேட்டான்.

'இவனுக்குத் தைரியம் கிடையாது. அசடு; அவ்வளவுதான்! அதுவும், என்னிடமும் அவன் அம்மாவிடமும் பயம்கூட உண்டு. இன்னிக்குப் பாலுவும் தூங்கிப்போய் நானும் தனியாக இருக்கவே துணிந்துபோய்...'

'இப்படி மறுபடி ஒரு சமயம் நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு இப்போதே கவலையாயிருக்கிறது.'

'எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. இவன் விரோதம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டதே, அதனால் உங்கள் வேலைக்கு என்னால் கெடுதல் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்றுதான் கவலையாக இருக்கிறது.'

ரங்கராஜனுக்குச் சட்டென்று தன் நிலைமை ஞாபகம் வந்தது. பல்லைக் கடித்துக்கொண்டான். மேலே பேசிக்கொண்டு நிற்காமல், மோட்டாரைக் கேரேஜின் பக்கம் தள்ளினான். கோமதியும் புழக்கடைப் பக்கமாகச் சமையற்கட்டுக்குள் நுழைந்தாள்.

சுமார் அரை மணிக்குப் பிறகு ரங்கராஜன் பிரணதார்த்திஹர அய்யரின் மாடி அறைக்குள் பிரவேசித்தான். போகும்போதே, அன்றுவரை சம்பளத்தைக் கையில் எண்ணி வைத்து, 'போ வெளியே!' என்று அவர் கண்டிப்பாகக் கூறப்போகிறார் என்று எதிர்பார்த்துக்கொண்டுதான் அவன் நுழைந்தான். அப்புறம் கோமதியை எங்கே எப்படிப் பார்ப்பது?

அறையில் பிரணதார்த்தி ஈஸிசேரில் சாய்ந்திருந்தார். பெரிய மின்சார விளக்குப் போட்டிருந்தது. அவன் நுழைந்ததும், 'வா,

அப்பா! ராஜாராமா! வரப்போது கதவைச் சார்த்திக் கொண்டு வா!' என்றார் அவர் மிகவும் குழைவான குரலில்.

'இந்த மனிதன் நம்மைக் கேலியும் செய்து அனுப்பத்தான் இப்படிப் பேசுகிறானோ' என்று ரங்கராஜன் ஒரு கணம் எண்ணினான். 'இருக்கட்டும், நடக்கிறதைக் கவனிக்கலாம்' என்று, அவர் சொன்னபடி கதவைச் சார்த்திக்கொண்டு வந்து நின்றான்.

'இப்படி உட்கார், பக்கத்தில்!' என்றார் அவர் அன்பு ததும்பும் குரலில்.

' பரவாயில்லை, நிற்கிறேன்.'

'உட்கார், அப்பா! நான் சொல்கிறேன், உட்கார்!' என்று அவனைப் பலவந்தப்படுத்தி அவர் அமர்த்தினார். அவன் உட்கார்ந்து கொண்டவுடன், 'ஹ¬ம்... உன் சிநேகிதன் போய்விட்டானா?' என்று ஆரம்பித்தார்.

'யார் என் சிநேகிதன்?'

'அவன்தான், அப்பா! உன்னைக் கூப்பிட்டானே வாசலில்! ஹே!'

'அவன் என் சிநேகிதனே இல்லை; அவனை இதற்கு முந்தி நான் பார்த்ததுகூடக் கிடையாது. நான் ஜெயிலில் இருந்ததுமில்லை, அவன் சொன்னது அத்தனையும் பொய், சுத்தப் பொய்!' என்றான் ரங்கராஜன் படபடப்பாக.

'ஏன் வீணாகப் பதட்டப்படறே? ஹே! உனக்குச் சிநேகிதன் இருக்கிறது பிசகு என்று நான் இப்போ சொல்ல வரவில்லையே! ஒரு மனுஷன் சிரமதசையில் இருக்கிறபோது, ஒரு காரியம் தவறுதலாகச் செய்து விட்டால் அதற்காக அவனை...'

'நான் திருடினதில்லை என்கிறேன்; நீங்கள் விடாமல் அதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்களே!'

'என்னப்பா நீ, நான் என்ன நேற்றுப் பிறந்த பச்சைக் குழந்தையா? ஹே! இதுவரை நம்ம வீட்டில் நீ ஒண்ணும் திருடவில்லை; உன் பழைய நடத்தையைப் பற்றியும் எனக்கு அக்கறையில்லை. ஏதோ நடந்தது நடந்து போச்சு. இப்போ யோக்கியனாயிருக்கே... அவ்வளவுதானே வேண்டியது எனக்கு? அதற்குமேல் என்ன?'



'நீங்கள் அப்படி நினைப்பது...'

'எப்படி நினைப்பது? திருடுவது பிசகு என்று நான் சொல்லவில்லையே! அதெல்லாம் சமய சந்தர்ப்பத்தைப் பொறுத்தது! உன்னிடம் சொன்னால் என்ன! ஹே! நானே ஒரு சமயம் திருடியிருக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளேன்!' என்றார் அவர்.

ரங்கராஜன் மௌனமாகக் கேட்கத் தயாரானான். 'பாரு! முன்னே நான் வியாபாரம் ஆரம்பிச்ச சமயத்திலே, என் கையில் அதிக முதல் கிடையாது. உன் மாதிரிதான் இருந்தேன். என் கடைக்குப் பக்கத்துக் கடையிலே பெரிய நஷ்டம் வந்துவிட்டது. அது கண்ணாடிச் சாமான் விற்கிற கடை; கடன்காரன்கள் வந்தார்கள்; கடையைப் பூட்டி ஸீல் வைத்துவிட்டுப் போய்ட்டான்கள். தெரிந்ததா?' என்று நிறுத்தினார் அவர்.

'சரி!'

'நம்ம கடைக்கும் அந்தக் கடைக்கும் நடுவிலே உயரத்திலே ஒரு சின்ன ஜன்னல். ஜன்னலிலே கம்பி கிடையாது. நான் என்ன செய்தேன்னா, ஒருநீளக்கம்பியை அது வழியாக விடறது, 'கப்' 'கப்'னு முழு முழு விளக்காகத் தூக்கிடறது. இப்படியே தினம் பதினைந்து இருபது விளக்காக எடுத்து விடுகிறது. நமக்கு வேண்டியவர்கள், ஆப்தர்களாகப் பார்த்து, இரண்டு மூன்று தள்ளி விற்கிறது. யாருக்கு நஷ்டம் இதனாலே? நீயே சொல்லு! கடன் காரன்களுக்கென்னமோ ஒருபோதும் முழுப்பணம் வரப்போற தில்லை, நம்ம சிநேகிதாளுக்கும் உபகாரமாயிருக்கும்; நானும் கொஞ்சம் ஐந்து, பத்து எடுத்திண்டாப்போல் இருக்கும், ஹே!'

ரங்கராஜன் பெருமூச்சு விட்டான். பிரணதார்த்தியின் மூஞ்சியில் அப்போதே காறி உமிழலாமா என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

'என்ன பேசாமல் இருக்கே? இது என்ன திருட்டா? ஹே!' என்று கேட்டார் அவர்.

'அது எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகிறது. என்னைக் கூப்பிட்ட காரியத்தைச் சொல்லுங்கள் முன்னால்! கேட்டுவிட்டுப் போகிறேன்' என்றான் ரங்கராஜன் பொறுமை யிழந்து.

'அதை ஒரு வார்த்தையிலெல்லாம் சொல்ல முடியாது. தெரிந்ததா, ஹே!'

'உங்கள் இஷ்டப்படி சொல்லுங்கள்!'

'நானும் உன் மாதிரி குஷியாக இருந்தவன்தான், நாலு வருஷத்துக்கு முந்தி, 'ஷோக்' காயிருப்பேன். ஸில்க் ஜிப்பாதான் போடுவேன், ஜமீன்தார் பிள்ளையோன்னு என்னை நினைப்பார்கள். ஹே!'

பிரணதார்த்தி ஸில்க் ஜிப்பா போட்டுக்கொண்டால் எப்படி இருப்பார் என்று ரங்கராஜன் சிந்தித்துப் பார்த்தபோது அடக்க முடியாதபடி சிரிப்பு வந்தது அவனுக்கு.

'விளையாட்டில்லை; நிஜமாகத்தான்! நிறையா பணத்தை விளையாடியிருக்கேன்... அப்போ பார், இந்த ஊரிலே ஒரு நாட்டியக்காரி இருந்தாள்; பொன்னாயி, பொன்னாயின்னு பேரு, ரொம்ப ஷோக்காயிருப்பாள், கச்சை கட்டிண்டு சதஸிலே வந்து நின்னுட்டான்னா, அழுத பிள்ளை வாய் மூடிடும்! அபாரமாயிருக்கும்! அந்தப் பொன்னாயிக்குப் பாரு, என்மேலே அசாத்திய பிரேமை. 'மாமா! நம்ம ஊட்டுக்கு வாருங்கோ! வரவே மாட்டேங்கிறீங்களே!' என்று வருந்துவாள். நானும் அந்த நாளிலே ஜம்னு இருப்பேன். ஹே!'

'இப்போதான் உங்கள் அழகுக்கு என்ன?' என்றான் ரங்கராஜன் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

'பார், ராஜாராமன்! அந்த நாளிலே இந்தப் பொன்னாயியும் நானும் வெளியூர்களுக்கெல்லாம் போவோம். அப்போதுதான் ஓர் அசட்டுக் காரியம் செய்துவிட்டேன். நானும் அவளுமாக ஒரு போட்டோ எடுத்துக்கொண்டேன். போட்டோகிராபருக்குப் பணம் நான் கொடுத்திருக்கிறேன். போட்டோ மாத்திரம் அவளிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டது. இப்போ பார், நான் கவுன்ஸில் எலெக்ஷனுக்கு நிற்கப் போகிற சமயத்தில்- நல்லபேர் வாங்கப் போகிற சமயத்தில் - அந்த போட்டோ வேறே யார் கையிலானாலும் அகப்பட்டால், எனக்கு எதிராகப் பிரசாரம் செய்ய எவ்வளவு சௌகரியமாக இருக்கும்?'

'சௌகரியமாகத்தான் இருக்கும்?'



'நீ போய் அதைக் கொண்டு வந்துவிட வேண்டியது! அதற்காகத் தான் உன்னைக் கூப்பிட்டேன்.'

'நானா? நான் எதற்கு? நீங்களே பொன்னாயியைக் கேட்டால் தானே கொடுத்துவிடுகிறாள்! உங்கமேல்தான் அவள் காதல் கொண்டுவிட்டாளே!'

'கொடுக்க மாட்டாள், எனக்குக் கொடுக்கவே மாட்டாள், அதனால்தான் உன்னைக் கொண்டுவரச் சொன்னது, ஹே!'

'நான் கேட்டால் மட்டும் எப்படிக் கொடுப்பாள்?'

'உன்னை யார் அப்பா அவளைப் போய்க் கேட்கச் சொன்னது? ஹே! மெல்ல எடுத்துக்கொண்டு வந்துவிடு! அவ்வளவுதான்!'

'திருடிக்கொண்டா? என்னிடம் மட்டும் அந்தப் பேச்சு...'

'என் கூச்சல் போடறே? இதுக்கு முந்தி இந்த மாதிரி வேலைகள் நீ செய்திருக்கிறதனாலேதான் உன்னண்டை அதைச் சொன்னேன்!'

'யாரைப் பார்த்து நீங்கள்...' என்று ஆத்திரமாக ரங்கராஜன் எழுந்தான்.

'உட்கார், அப்பா! உட்கார்! யாரை என்ன சொல்லிவிட்டேன்? போட்டோ என் சொத்து; அதைக் கொண்டு வரச் சொல்கிறேன். அதை என்னிடம் கொடுப்பதால் திருடுவதே ஆகாது! இஷ்டமானால் செய்! வேலையிலும் இரு. இல்லையானால் போய்விடு!'

'என்ன சொல்கிறீர்கள்?'

'நான் உன் பழங்கதையையெல்லாம்பற்றி விசாரிக்கவில்லை. கேள்விப்பட்டப்புறம்கூட அதைக் காதில் போட்டுக் கொள்ளப் போவதில்லை. நான் சொன்னதைச் செய்து கொண்டிருந்தால் பேசாமல் ஜமீன்தார் பிள்ளை மாதிரி இங்கேயே இருக்கலாம். ஹே! நீ நல்லவன்; உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. உன்னைப் போகச் சொல்கிறதென்றால் எனக்கும் மனத்துக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது! யோசித்துப் பார்.'

ரங்கராஜன் யோசித்தான். கோமதியின் நினைவுதான் அவனுக்கு வந்தது. உடனே, பிரணதார்த்தியுடன் சிறிது பணிவாகப் பேசிப் பார்க்கலாமென்று ஆரம்பித்தான்.

'சுவாமி! எல்லாம் சரிதான், என்னைத் திருடச் சொல்கிறீர்களே!'

'என் பண்டத்தை என்னிடம் சேர்ப்பது திருட்டாகுமா?'

'அப்படியே இருக்கட்டும். நான் அதை எடுக்கும்போது அகப்பட்டுக் கொண்டுவிட்டால் என் கதி என்ன?'

'அகப்பட்டுக் கொள்வானேன்? ஜாக்கிரதையாகப் போய்விட்டு வாயேன். அவள் இல்லாத சமயத்தில் மெல்லப் போகிறது. சட்டென்று எடுத்துக் கொள்கிறது. வேகமாக ஓடியே வந்துவிடுகிறது. எங்கேயோ சினிமாவில் கூட அவள் இப்போ நடிக்கிறாளாம். வீட்டில் அதிகமாக இருக்கமாட்டாள். பீரோவில்தான் வைத்திருப்பாள் படத்தை...'

'என்ன சார், நான் போகிறதாகவே தீர்மானம் செய்து பேசுகிறீர்களே! அப்போ, நான் போக மறுத்தால் இங்கே வேலை கிடையாதா? போனால்தான் இருக்கலாமா?'

'உன்னை இனிமேல் வைத்துக்கொள்வதிலும் எத்தனை சிரமம் இருக்கிறது தெரியுமா? என் தமக்கையும் ஒய்ஃப்பும் வந்து, 'திருடனை டிரைவராக வைத்துக்கொள்கிறதா?' என்று சண்டை போடப் போகிறார்கள். 'நன்றாய்ச் சொல்கிறாய்! ராவ் பகதூர் நாகநாத முதலியாருக்குத் தெரிந்த ஆள் இவன், அவர்கூட ரொம்பச் சிலாகிச்சிண்டார்' என்று சொல்லப்போறேன். ஹே! பார்த்துக்கோ! உனக்காக நான் இங்கே பொய் வேறே சொல்ல வேண்டியிருக்கிறது! ஹே!'

ரங்கராஜன் மனம் தீவிரமாக வேலை செய்தது. 'மாட்டேன்' என்று சொல்லிவிட்டால், அப்போதே வேலை போய்விடும். மனுஷனோ கிராதகனாக இருக்கிறான். இப்போதைக்கு, 'சரி' என்று ஒப்புக்கொண்டால், போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம். அப்படியே போட்டோ லகுவாகக் கிடைத்தாலும் கொடுத்துவிடுவது... இப்படித்தான் அவன் யோசனைகள் ஓடின.

'சரி, ஸார்!' என்றான் அவன்.

'அப்பாடா! இத்தனை நாழியாச்சா உனக்கு நல்ல புத்தி வரத்துக்கு? பாரு, எலெக்ஷன்னா எத்தனையோ விஷயங்கள் இருக்கு. நாம யோக்கியமா இருக்கோம்; எதிர்க்கட்சி ஆசாமி என்ன வெல்லாம் திருட்டு வேலை பண்ணுவானோ! அதனாலே



நமக்குச் சிரமமாப்போயிடறது! ஹே! நீ இப்போ போ. நாளைக்குச் சாயந்தரமே ஞாபகமாப் போயிடு. எலெக்ஷனுக்கு இன்னும் அதிக நாள் இல்லே. ஹே!'

இந்தப் பேச்சு இங்கே நடக்கும்போது பாக்கியம் சமையற்கட்டில், டிரைவரை யாரோ ஓர் ஆள் கூப்பிட்ட விவரங்களைத் தன் நாத்தனாருக்கும் கோமதிக்கும் ஆதியோடந்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். 'ஜாக்கிரதையாக இருக்கணும்டி, அம்மா! காது கழுத்து ராவுக்கு ராவே அவன் அறுத்துண்டு போனாலும் போயிடுவான். நல்ல வேளையிலே கணக்கைத் தீர்த்து அனுப்பச் சொல்லணும்' என்று முடித்தாள்.

கோமதிக்கு 'சொரேர்' என்றது இந்தப் புதிய சமாசாரம். 'இது நிஜமாக இருக்குமா? டிரைவரா திருடன்? யாராவது துவேஷத்தின்மேல் சொல்வதாக இருக்குமோ? சேச்சே! திருடனாக இருக்கவே முடியாது!'

கோமதிக்கு நிம்மதியே இல்லை. ரங்கராஜனுக்குத் தான் கடமைப்பட்டிருப்பதாகத் தோன்றவே, அவன் பிரணதார்த்தியின் தமக்கையிடம் தனிமையில் டிரைவரைச் சிலாகித்துப் பேசிப் பார்த்தாள். 'அதெல்லாம் நம்பிவிடாதீர்கள், அத்தை! அவர் நல்லவராகத்தான் இருக்கிறார். உங்களைப் பார்த்தவுடனேயே, 'இந்த அம்மாள் ரொம்ப விவேகியாக இருக்கணும். இவர் இருக்கிற இடமே லட்சுமிகரமாக இருக்கும்' என்றார், அத்தை! அவ்வளவு புத்திசாலித்தனமாக இருக்கிறவர், திருடுவார் என்றால் நம்ப முடிகிறதா?' என்றாள்.

'அப்படிச் சொன்னானா?' என்று கேட்டாள் அவள்.

'ஆமாம்னா... இன்னும் உங்களை எப்படியெல்லாமோ புகழ்ந்தார். எனக்குத்தான் இப்போ சொல்ல வரவில்லை. பேச்சு முரட்டுத்தனமாக இருக்கிறதே ஒழிய, அவர் வெகுளி; நல்ல புத்திசாலிகூட, நான் பார்த்தவரையில் உங்களுக்குச் சொல்கிறேன்.'

தமக்கைக்காரி சரிப்பட்டு விடுவாள் என்று அவள் முகத்தில் தோன்றிய பிரகாசத்திலிருந்து கோமதி உணர்ந்து கொண்டு விட்டாள். மறுநாள் காலை ரங்கராஜனையே கண்டு நேரில் கேட்க வேண்டுமென்று துடித்தாள்.

ஆனால், மறுநாள் முழுவதும் ரங்கராஜன் அவள் கண்ணிலேயே படவில்லை. வேண்டுமென்றே ஒதுங்கிக் கொண்டான் போல் கூடத் தோன்றியது. பிரணதார்த்தியைப் பல வியாபார ஸ்தலங் களுக்கு ஓட்டிக்கொண்டிருந்துவிட்டு, மாலையில்தான் திரும்பி னான். ஆனால், வந்ததும் வராததுமாக, பிரணதார்த்தி, 'என்ன! நேற்று நான் சொன்ன விஷயம் ஞாபகம் இருக்கா. அதுக்குள்ளே மறந்துட்டாயா? ஹே!' என்றார்.

ரங்கராஜன் மென்று விழுங்கினான்.

'தைரியமாய்ப் போ! திரிபுரசுந்தரி உன்கூட வருவாள்; இப்பவே போ! அவள் வீட்டு அடையாளம் ஞாபகமிருக்கட்டும். ஜாக் கிரதை!' என்று விரட்டினார்.

சிறிது தயங்கிய ரங்கராஜன் மனக்கண்முன் கோமதியின் முகம் தெரிந்தது. ஏதோ முடிவுசெய்தவன் போல் விடுவிடுவென்று அங்கிருந்து நடந்தான்.

அவன் தலை மறைந்ததுமே அவசர அவசரமாகக் காரைத் தாமே எடுத்துக்கொண்டு ராவ் பகதூர் நாகநாத முதலியார் வீட்டுக்குக் கிளம்பினார் பிரணதார்த்தி.

இருவரும் வீட்டிலிருந்து வெளியேறிய பத்து நிமிஷத்துக் கெல்லாம், தாம் செய்த யுக்தி எவ்வளவு தூரம் பலித்திருக்கிற தென்று அறியும் நோக்கத்துடன் அந்த வீட்டுக்குள் 'மெட்ராஸ் மணி' விறைப்பாக நுழைந்தான்.

•

இதே சமயத்தில் தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனில் போட் மெயிலில் வெவ்வேறு பெட்டிகளில் ஏறி இரண்டு நபர்கள் சென்னைக்குப் பிரயாணமானார்கள். சின்னவேலி ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளை ரங்கராஜன் சென்னை பட்டணத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்று ரிப்போர்ட் செய்யத்தான் அவர்கள் கிளம்பினார்கள். இதில் மிக வேடிக்கையான அம்சம் என்னவென்றால், ஒருவர் புறப்பட்டு வருவது மற்றவருக்குத் தெரியாது என்பதே!



## அத்தியாயம் - 6

'... நாலு குரல் கூவுமாகில், நாழியில் கலகம் உண்டாம்; ஐந்து குரல் கூவுமாகில், அங்கொரு பயணம் நேரும்.'

**- ஆந்தை கூவுதல் (சகுன பலன்)**

பாத்திரங்களினாலும் சரி, கதாபாத்திரங்களானா லும் சரி, ஒரொரு சமயங்களில் அசாத்திய உஷ்ணத்தைப் பெற்றுத் தகித்தாலும், இதர சமயங்களில் ஆறித்தான் ஆக வேண்டும். இதே நிலைமையைத்தான் சின்னவேலி ஜமீன்தாரின் ஜ்யேஷ்ட புதல்வனாகிய கோபாலன், தனது இளைய சகோதரன் கோபமாக வெளியேறிய பிறகு மெல்ல மெல்ல அடையத் தொடங்கி னான். ரங்கராஜன் மூட்டை கட்டினபோது அவன் மனம் சிறிது சஞ்சலம் அடைந்தது; மோட்டாரில் அவன் போய் ஏறிய போது, மேலும் குழம்பி, அவனைக் கூப்பிட்டு விடுவோமா என்றுகூட எண்ணியது. ஆனால், 'கௌரவம்' என்ற பிசாசு அவனை அப்போது வழிமறித்தது.

அன்றிரவு டிரைவர் துரைசாமி வந்து, 'ஐயா பட்டணத்துக்கு டிக்கெட் வாங்கி வண்டி ஏறிட் டாங்க!' என்றவுடன் திகிலே பிடித்துக் கொண்டது. எனினும், தனது மனக் குழப்பத்தை வெளிக் காட்டிக்கொள்ளாமல் 'போகட்டும்,

தடிக் கழுதை! தன்னால் குட்டுப்பட்டுக் கொண்டு திரும்பும்!' என்றான்.

அன்றிரவு தனியாகச் சாப்பிட உட்கார்ந்தபோது கோபாலனுக்குத் தான் ஏதோ கொலைக் குற்றம் செய்து விட்டதுபோன்ற உணர்ச்சியே மேலோங்கியிருந்தது. எப்போதும் புன்முறுவலும் குறும்புத்தனமும் அன்பு பொழியும் வதனமுமாக அவன் இன்பக் கிளியாகத் திகழ்ந்த அந்தக் கல்யாணியின் முகத்தில் கூட ஏனோ கலகலப்பைக் காணோம். தாயார் காவேரி அம்மாளோ மூக்கைச் சிந்திப் போட்டுக்கொண்டு அவன் கண்ணிலேயே படவில்லை.

விறைப்பாகத் தனது அறைக்குச் சென்றவனைக் கல்யாணி மெல்லப் பின் தொடர்ந்து, 'ஏன்னா, அம்மா சாப்பிடமாட்டேங் கறாரே!' என்றாள்.

சள்ளென்று அவள்மேல் எரிந்து விழுந்தான் கோபாலன். 'என்னை எடுத்து ஊட்டச் சொல்கிறாயா?' என்றான்.

'என்னமோ, நீங்கள் ரொம்பத்தான் படபடப்பாக மச்சினர்கிட்டப் பேசிட்டேள். ஏன்னா, அவர் பட்டணத்திலே எங்கே போயிருப் பார்?' என்று கேட்டாள் கல்யாணி.

இது மேலும் கோபாலன் ஆத்திரத்தைக் கிளப்பியது. 'நீயும் சேர்ந்துகொண்டு விட்டாயா அவர்களோடு? போ! ஒரு கடப் பாரையைக் கொண்டு வந்து என் தலையில் போட்டு விட்டு நிம்மதியாயிரு!' என்றான்.

'அழகுதான்... போங்கோ! இப்போ அம்மாவைப் பட்டினியாகக் படுத்துக்கொள்ளச் சொல்லாதேங்கோ!'

'நான் யாரையும் உபவாசம் இருக்கச் சொல்லவில்லையே! அப்படிச் செல்லப் பிள்ளையாயிருந்தால் வழி மறித்து உள்ளே அழைத்துச் சீராட்டுகிறதுதானே?' என்றான் கோபலன். இப்படிச் சொன்னானேயொழிய, அந்தக் காரியத்தைத் தானே செய்திருக்க வேண்டுமென்று அவன் மனசாட்சி குத்திக் காட்டியது. சட் டென்று எழுந்து வந்து, அறையின் ஒரு மூலையில் கட்டாந் தரையில் படுத்திருந்த தாயாரை, 'அம்மா, அம்மா!' என்று இரண்டு குரல் கூப்பிட்டான். பதில் ஏதும் இல்லை.

'உன்னைத்தான், அம்மா! சாப்பிடாமல் தூங்கறயே? எழுந்திரு.'





காவேரி அம்மாள் படுத்தபடியே முகத்தைச் சிறிது நிமிர்த்தி, 'எனக்குச் சாப்பாடு வேண்டாம்... அம்மா கல்யாணி, நீ சாப்பிட்டுப் படுத்துக்கோ, போ!' என்றாள்.

'ஏன் சாப்பாடு வேண்டாம்? ஹூம்?'

'ஏனோ வேண்டாம்! உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு நீ போயேன்! பிள்ளைகளைப் பெற்ற அழகுக்கு ஒரு வேளை பட்டினி கிடந்துவிட்டால்தான் என்ன கேடு?'

'என்ன, உன் பிள்ளைகள் கெட்டுப்போய்விட்டான்கள்! சின்னப் பிள்ளை அழகைத்தான் பார்த்தியே? சம்பாதிக்கப் போடக் கிளம்பிட்டான், என்ன குறைச்சல்?'

'அப்பா! உன்னோட எனக்குப் பேசத் தள்ளல்லே... கல்யாணி, நீ இரண்டாந்தரம்கூட ஒண்ணும் பண்ணல்லை; சுருக்கச் சாப்பிடு!' என்று காவேரி அம்மாள் சொல்லி, திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

'திருவாரூர்ப் பெரிய தேரை ஒரு கையினால் இழுத்தாலும் இழுத்துவிடலாம்; பிடிவாதம் பிடிக்கிற பொம்மனாட்டியை இரண்டு கையாலும் அசைக்க முடியாது' என்று முணுமுணுத்துக் கொண்டு கோபாலன் திரும்பினான். பத்து நிமிஷத்துக்கெல்லாம் கல்யாணியும் வந்துவிட்டாள்.

'அதற்குள் சாப்பிட்டுவிட்டாயா?'

'சாப்பிடவில்லை, அம்மா சாப்பிடாமல் நான் மட்டும் சாப் பிடுவதா?'

'ஏன் அம்மா சாதத்தை நீ சாப்பிட்டாற் போலாகிவிடுமோ?'

'உங்களோடு நான் பேசவில்லை. கண்ணை மூடிக் கொண்டு தூங்குங்கள்!'

'கண்ணைத் திறந்துகொண்டேதான் தூங்கிவிட்டுப் போகி றேன்... வர வர நீ ரொம்ப அதிகப் பிரசங்கியாகிவிட்டாய் கல்யாணி, ஆமாம்!'

'எல்லாம் உங்கள் சகவாசதோஷம்தான்!' என்றாள் அவள்.

'கல்யாணி!'



'ஏன்?'

'நீ செய்கிறது ரொம்ப நன்னாயில்லை.'

'நீங்கள் செய்ததுகூடத்தான்!'

கோபாலன் தன் மனைவியின் மென்மையான முகத்தைப் பார்த் தான். அதில் நிலவிய சாந்தமும், அவனை அணைத்த மெல்லிய கரமும் மனத்தில் எரிந்த தீயைக்கூடச் சமனம் செய்ததுபோல் இருந்தது. 'சரி, வார்த்தையை வளர்க்க வேண்டாம். விட்டுப் பிடிக்கலாம். நாளைக்குக் காலை ஏதாவது செய்யலாம். நாளன் னைக்கு ரங்கராஜனிடமிருந்து கடிதமும் வந்துவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும்' என்று சமாதானம் செய்துகொண்டு, நித்திரை வசமானான்.

'சின்னவேலி ஜமீன் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லக்கூடியவர் யாராவது இருந்தால், அது நான் ஒருவனே!' என்று ஜோஸ்யர் கிருஷ்ணய்யர் எத்தனையோ முறை பெருமையடித்துக்கொண் டிருக்கிறார். ஆனால், அவருக்கே அன்றைய ஜோஸ்ய பலன் தெரியாத காரணத்தால் காலையில் எழுந்ததுமே, அவர் தமது பார்வையின் கோபத்துக்கு ஆளாகி விட்டார். அவளுடைய ஒடிந்த சங்கிலியை அவர் உடனே ஒக்கப்பண்ணி வரவில்லை என்ற கோபம் அந்த அம்மாளுக்கு.

'ஊரானுக்கெல்லாம் ஜோஸ்யம் சொல்றேளே, என்னை எப்போ எமன் வந்து கொண்டுபோவான்னு பார்த்துச் சொல்லுங்கோ! என் பிடுங்கல் இல்லாமலாவது நீங்கள் இருக்கலாம்!' என்று கேட்டாள் மனைவி.

'அப்படியெல்லாம் ஜோஸ்யம் சொல்ல முடிஞ்சிருந்தா உன் மாதிரி அபச்சரியத்தை முதலில் ஏன் கல்யாணமே பண்ணிக் கிறேன்! பேசாதே இரு. இன்னிக்கே ஏதானும் கிடைக்கட்டும். சாயந்தரமே நான் போய்...' என்று ஜோஸ்யர் சொல்லி வரும் போதே, 'எங்கேயானும் பயணமோ!' என்று கேட்டுக்கொண்டே காவேரி அம்மாள் வந்தாள்.

'வாருங்கோ! வாங்கோ! அபரூபமான்னா இருக்கு!' என்று வாயெல்லாம் பல்லாக ஜோஸ்யர் உபகாரம் செய்து அம்மாளை உள்ளே அழைத்து உட்காரச் சொன்னார்.

'ஜோஸ்யரே! ஒரு முக்கியக் காரியமாக வந்திருக்கேன்...' என்று தொடங்கினாள் அம்மாள்.

ஜோஸ்யர் சற்று நிதானித்தார். சமீபத்தில் ஜமீன்தார் வீட்டில் மயிலைக் காளை ஒன்று காணாமற்போனதாக அவருக்குக் கேள்வி. அதை மனத்தில் வைத்துக்கொண்டு, 'உம்... ஆத்திலே, காளைகூட...' என்றார்.

'ஆமாம்... என் பிள்ளை இருக்கே, சின்னக்காளை, அதுதான் புறப்பட்டுப் போயிருக்கு!' என்றாள் அம்மாள். சொல்லிவிட்டு அவன் ஜாதகத்தையும் நீட்டினாள்.

ஜோஸ்யர் ஜாதகத்தை வாங்கி விரல் விட்டுக்கொண்டே கடைக் கண் நோக்காக அம்மாளைக் கவனித்துக் கொண்டே, 'இப்போ...' என்றார்.

'ஆமாம், இப்போதான் போனான்!' என்றாள் அம்மாள்.

'அதைத்தானே சொல்ல வந்தேன்! உங்க பெரிய பிள்ளை இருக்காரே...'

'அவனோடு சண்டை போட்டுக்கொண்டுதான் போனான். எனக்குப் பிறந்த இரண்டும் இரண்டு தினுசு!'

'அதைத்தானே சொல்ல வந்தேன்! கவலைப்படாதேங்கோ... இந்த ஜாதகத்திலே ஆறாம் இடத்திலே இரண்டு பாபிகள் வந்து உட்கார்ந்துட்டான்; அதிலேயும் ஒருத்தன் நீசனாயிட்டானா? சொற்ப காலத்துக்கு மனசு நிம்மதி இல்லாமேதான் இருக்கும்; சிறு சண்டைகள், பூசல்கள் ஏற்படும். அதனால் ஒன்றும் பரவாயில்லை! பிள்ளை...'

'பட்டணம் போறதாக...'

'ஆமாம்னா! வட திசையிலேதான் போயிருக்கணும். தானே வந்துடுவான்.'

'ஜோஸ்யரே! தெய்வம் மாதிரி நடந்தது நடந்தபடியே சொல் றேள்! இவனை யாரு வேலை பார்க்கணும், வெட்டி பார்க் கணும்னு சொன்னா? தகப்பனாரோடே அந்தஸ்துக்கு...'

'சித்தே இருங்கோ!' என்று ஜோஸ்யர் மேலும் விரலைவிட்டார். 'உம்... பத்தாமிடத்திலே சனி, உத்யோக ஸ்தானம்... அம்மா,



அது அப்படித்தான் இருக்கும்! சித்த காலத்துக்குச் சேவகாவிருத்தி செய்ய வேண்டிய காலம்...தன்னாலே லாபஸ்தானத்துக்கு அவன் வந்துட்டானானால்...'

'எனக்கென்ன ஜோஸ்யரே! மெத்த காலமாச்சு. இன்னம் சித்த காலம்! இவனுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைச் சுட்டேன்னா, நான்பாட்டுக்குக் காசியோ ராமேசுவரமோ போவேன். அப்புறம் அவன் பெண்டாட்டி பாடு அவன் பாடு!' என்றாள் அம்மாள் விரக்தியாக.

'கல்யாணத்துக்கும் காலம் வந்துட்டுது, அம்மா! லக்னத்தை குரு ஸப்தமத்திலிருந்து நாளைக்கே பார்க்கப் போகிறான்... இப்போதே ஆகணுமே கல்யாணம்!'

'என்ன! நிஜமாவா?'

'என்ன அப்படிச் சொல்றேள்? இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம் நிச்சயமாகாவிட்டால், பாருங்கள்!' என்று உற்சாக மாகக் கீழே தட்டினார். அவர் உற்சாகத்துக்குக் காரணம் அம்மாள் வைத்த பத்து ரூபாய் நோட்டுதான்.

'ஒன்றுமட்டும் கேட்டுக்கொள்கிறேன்: நான் யாரையாவது பட்டணம் அனுப்பி, பிள்ளையைப் பார்த்துவரச் சொல் லட்டுமா?' என்று கேட்டாள் அம்மாள் எழுந்திருந்து.

ஜோஸ்யர் பணத்தை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு சற்று விட்டேத்தியாகவே, 'அவசியமில்லை... அப்படி உங்களுக்கு அனுப்பணும்னு இஷ்டமிருந்தால் அனுப்பியும் வைக்கலாம். அதனாலும் பரவாயில்லை!' என்றார்.

காவேரி அம்மாள் அங்கிருந்து கிளம்பி நேரே கர்ணத்தின் பிள்ளை சேதுவைப் போய்ப் பார்த்தாள். சுமார் இருபது வயதான சேது பார்க்கிறதற்கும் அசடு வழிவான்; உண்மையிலும் அவன் அசடேதான். ஆனால், சொன்னால் சொன்னபடி செய்வான் என்றுதான் பெண்கள் அவனைச் சிறு அலுவல்களுக்கு அனுப்பி வைப்பதுண்டு.

காவேரி அம்மாள் முப்பது ரூபாயை எடுத்து வைத்து, 'அடே சேது! எனக்கு நீ ஓர் உபகாரம் பண்ணணும்டா! நீ மகராஜனா யிருப்பே!' என்றாள்.

'என்ன மாமி? நான் செய்யறேன்' என்றான் சேது உற்சாகமாக.

'இந்தப் பணத்தை வைத்துக் கொள். நேரே பட்டணத்துக்குப் போ. எங்கள் ரங்கராஜன் அங்கேதான் போயிருக்கான். அவன் அங்கே என்ன செய்கிறான் என்று...'

'ஐயோ மாமி! நான் மாட்டேன்! என்னை அவர் அடிச்சுக் கொன்னு...'

'அவனை நீ பார்க்க வேண்டாம்டா! அவன் இருக்கிறானா, எங்கே இருக்கிறான், என்ன பண்றான், இங்கே வர்றதாக உத்தேசம் வைத்திருக்கானா என்று அவனுக்குத் தெரியாமல் பாரு. வேறே ஒண்ணும் வேண்டாம்... விஷயத்தைத் தெரிஞ்சிண்டு திரும்பி வந்துடு. என் கண்ணோல்லியோ!'

சேது யோசித்தான்; 'பட்டணம் போனாப்பலேயும் இருக்கும், கையையும் பிடிக்காது, வேலையும் அதிகமில்லை.' -'சரி, மாமி! நாளை ராத்திரி புறப்பட்டுப் போகிறேன்!' என்றான்.

'நீ போகிறது ரகசியமாயிருக்கட்டும். என் பெரிய பிள்ளைக்குக் கூடச் சங்கதி தெரியப்படாது' என்றாள் காவேரி.

அதேசமயத்தில் பெரிய பிள்ளை கோபாலன் தன் நண்பன் ஆறாவமுதுவைப் பட்டணம் போகச் சொல்லிக் கொண்டிருந்தான். 'என் மாமா டி.வி.எஸ். அய்யரிடம் நீ போ. நான் அனுப்பினதாகச் சொல்லி, ரங்கராஜனைப் பற்றி விசாரிச்சுக்கோ. உடனே திரும்பிவிடு. அப்படி அவன் அங்கே இல்லைன்னாலும் நீ திரும்பிவிடு. நான் சொல்றது தெரிந்ததா? நாளை ராத்திரி மெயிலுக்கு நானும் ஸ்டேஷனுக்கு வரேன், நீ போகிற விஷயம் என் மதருக்குக்கூட தெரியப்படாது' என்றான்.

வீட்டில் நடக்கும் குழப்பங்களைக் கவனித்த குமாஸ்தா ராமய்யர், காதுங்காதும் வைத்தாற்போல், 'ஆத்தில் ரகளை, உடனே புறப்பட்டு வரவும்' என்று அன்றே ஜமீன்தாருக்குத் தந்தி அடித்துவிட்டு, ஒன்றும் தெரியாத சாதுபோல் உட்கார்ந்திருந்தார்.

மறுநாள் ஆறாவமுதுவும் சேதுவும் போட் மெயிலில் சென்னைக்குப் பிரயாணமானார்கள். அதே சமயத்தில்தான் சென்னையில் ரங்கராஜன் ஒருபுறம் செல்ல, பிரணதார்த்தி தம் காரை எடுத்துக்கொண்டு நாகநாத முதலியார் வீட்டுக்குக் கிளம்பி இருந்தார்.



பிரணதார்த்திஹர அய்யர் ரங்கராஜனை டிரைவராக அமர்த்திய பிறகு அவன், 'ஸார்! நான் இருக்கிறவரை நீங்கள் காரை ஓட்ட வேண்டியது அவசியமில்லை. வேண்டவும் வேண்டாம். அதனால் உங்களுக்கும் நல்லது. காருக்கும் நல்லது' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டான். அவருக்கும் அதற்குப் பின்னர் வண்டியை எடுக்கச் சௌகரியப்படவில்லை. ஆனால், ரங்கராஜன் ஓட்டும்போது மட்டும் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். இப்போது அவன் வேறு காரியமாக வெளியில் கிளம்பவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாகநாத முதலியார் வீட்டுக்குப் போய்விட்டு வந்துவிடலாமென்றுதான் கிளம்பினார். வரப் போகும் எலெக்ஷனில் தமக்காக அவர் வேலை செய்யப் போவதை முன்னிட்டு, தம் வீட்டில் அவருக்கு இரண்டு, மூன்று தினங்களில் ஒரு டீ பார்ட்டி வைக்க உத்தேசித்திருப்பதைப்பற்றி இப்போதே ஜாடையாக முதலியாரிடம் பிரஸ்தாபிக்கலாம் என்பதும் அவர் சென்றதன் நோக்கம்.

நன்றாக கிளீன் செய்யப்பட்டிருந்தபடியால் மாம்பலம் ரஸ்தாவில் அவர் மோட்டார் பறந்தது. சில நிமிஷங்களில் பல வீதிகளைத் தாண்டிவிட்டார்.

ஒரு வீட்டு வாசலில் கறிகாய் வண்டிக்காரன் ஒருவன் அவனிடம் மிகுதியிருந்த உருளைக் கிழங்குகளுடன் பேரம் செய்துகொண்டிருந்தான். விலை குதிராமல் போகவே அவன் வண்டியை இழுத்துக்கொண்டு கிளம்பினான். குடித்தனக்காரர், 'ஏய்! உனக்குத்தான் போகத்தெரியுமோ? என்னமோ கேட்டுக்கிட்டே இருக்கேன். மோட்டார் வேகத்திலே வண்டியை விட்டுக் கொண்டு போறயே!' என்றார்.

கறிகாய்க்காரன் வண்டியை நிறுத்தி, ஒரு கிழங்கைப் பொறுக்கி எடுத்து அவரிடம் கொண்டு போய், 'கிழங்கைப் பார்த்துப் பேசய்யா! இதுக்கு நீ கேட்கிற விலையைப் பார்த்தா மோட்டார் வேகத்தில் போகாமே...' என்று நிறுத்தினான். அப்போதுதான் பிரணதார்த்தியின் மோட்டார் அந்த வண்டியைத் தாண்டிச் சென்றிருக்க வேண்டும். ஆனால், என்ன காரணத்தாலோ சட்டென்று நின்றது. அப்படி நின்ற மோட்டாரின் பின்புறத்திலிருந்து பல வேட்டுகளும் ஒரே கரிப்புகைப் படலமுமாகக் கிளம்பின. அதை அடுத்து, மோட்டார் ஏனோ பின்னால் ஒரு கஜம் வந்து கறிகாய் வண்டியின்மீது இலேசாக மோதியது. பிரணதார்த்தியின் முகத்தில் ஆச்சரியக்குறி தோன்றியது. உண்மையில் அவர் இந்தத்

திசையில் மோட்டாரை ஓட்ட விரும்பவில்லையே! அவசரமாக அவர் ஏதோ ஒரு விசையை அழுத்தினார். மோட்டார் மறுபடி முன்னால் ஓடத் தொடங்கியது. இப்போது அதுமட்டும் ஓட வில்லை. கறிகாய் வண்டியிலிருந்த ஒரு கயிறும், மோட்டாரின் பின்புறமிருந்த ஒரு கொக்கியும் மாட்டிக்கொண்டு விடவே, இரண்டு வண்டிகளும் சேர்ந்தாப்போல் நகர்ந்தன!

மோட்டார் போட்ட இரைச்சலில் கறிகாய்க்காரனும் குடித்தனக் காரரும் அலறிய அலறலும், 'கட கடா குடு குடு' என்று தம் பின்னால் ஓடிவரும் கறிகாய் வண்டியின் ஓசையும் பிரணதார்த்தி யின் காதில் கேட்கவேயில்லை. ரங்கராஜன் செய்த 'வித்தை' களை மோட்டாரில் தாமும் செய்து பார்க்கக் காத்திருந்த அவருக்கு இந்த லோக நினைவே இல்லை. மோட்டாரைக் கடும் வேகத்தில் செலுத்தினார். பின்னால் அந்தக் கறிகாய் வண்டியும் அதன் ஆயுளில் இதுவரை ஓடியிராத வேகத்துடன் மேடு பள்ளங்களில் குதித்துக் குதித்து ஓடத் தொடங்கியது. அதோடு உருளைக்கிழங்குக் கூடையும் சகலவிதமான நாட்டியங்களையும் செய்யவே, உருளைக்கிழங்குகள் நாலா மூலையிலும் ஆனந்தமாகத் துள்ளி ஓடின.

தெருவில் சென்ற ஜனங்கள் நின்று, 'ஹா' வென்று வாயைப் பிளந்து வேடிக்கை பார்த்தார்கள். இரண்டொருவர் கையைக் காண்பித்தனர். பிரணதார்த்தியோ தமது திறமையைத்தான் அவர்கள் மெச்சுகிறார்கள் என்று பெருமிதத்துடன் மேலும் வேகமாக வண்டியை விட்டார். இதே நிலைமை அதிக நேரம் நீடித்திருந்தால் என்ன நடந்திருக்குமோ, நமக்குத் தெரியாது.

நல்ல வேளையாகக் கறிகாய் வண்டியின் கயிறும் அறுந்து கொள்ளவே, அதன் வேகம் குறைந்தது. தடாலென்று பெரிய சத்தத்துடன் ஓர் ஓரத்தில் போய் விழுந்தது. என்னவோ விபரீதம் நடந்துவிட்டதென்று ஊகித்த பிரணதார்த்தி, வண்டியை நிறுத்தி னார். ஆனால், அவர் கௌரவம், விஷயம் என்னவென்று இறங்கி பார்க்க அனுமதிக்கவில்லை. சிறிது தூரத்துக்கப்பால் ஒரு டீ கடையில் நின்றுகொண்டிருந்த கான்ஸ்டபிள் குமரவேல்தான் அவருக்கு விஷயத்தை விளக்கிச் சொல்ல ஓட்டமும் நடையுமாக அங்கே வந்து சேர்ந்தான்.

சாதாரணமாக அனுபவத்தில், 'இது என் பீட் இல்லை' என்று ஒதுங்கிக்கொள்ளும் தன் வழக்கத்துக்கு நேர்மாறாக, பிரண



தார்த்தியின் மோட்டார் நின்றவுடனேயே, அவன், 'ஓய்! நில்லய்யா! நில்லய்யா!' என்று கூவிக் கொண்டு வந்து, 'என்ன நீ! நிறுத்தச் சொன்னா நிறுத்தாமே வரே!' என்றான் அதிகாரமாக.

பிரணதார்த்தி அசைந்து கொடுக்காமல், 'என்ன அப்பா! ஹே!' என்றார்.

'என்ன ஹே! இறங்கு நீ!' என்றான் குமரவேல்.

இதற்குள் பின்னாலே ஓடி வந்த கறிகாய்க்காரன் வண்டி விழுந்த இடத்துக்கு வந்து பார்த்து, இடுப்பில் கை வைத்துக் கொண்டு வாய் பேசமாட்டாமல் வயிற்றெரிச்சலுடன் நின்றான்.

குமரவேலுக்கு நல்ல கேசுகள் வந்து ரொம்ப நாளாயிற்று. இப் போது ஒன்று அகப்பட்டவுடன் நிதானமாகத் தன் நோட் புத்தகத்தை எடுத்து, பென்ஸில் கூர்ப்பை நாக்கால் நக்கிக் கொடுத்து, 'என்ன கலாட்டா இது?' என்றான்.

நடந்த விஷயத்தைப் பார்த்த பிரணதார்த்தி, திடுக்கிட்டுப் போனார். 'இது, என்ன இது?' என்றார் அவரும்.

'என் ஐயா உன் மோட்டாரிலே இந்த வண்டியைக் கட்டி இவ்வளவு தூரம் இழுத்திட்டு வந்தே?'

'எனக்குத் தெரியாது! யாரோ போக்கிரிப் பயல் இதைக் கட்டியிருக்கான்!' என்றார் அவர் ஒரே போடாக.

'ஓஹோ! உனக்குத் தெரியாதா?'

'நிச்சயமாகத் தெரியாது!'

வண்டிக்காரன் நெருங்கிவிட்டான். 'ஏ கடங்கார மனுசா! என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிறயா! என் மொதல் போச்சே! என் வண்டி போச்சே! உன் மோட்டாரிலே இடி விழ!' என்று பிரண தார்த்தியைப் பார்த்துக் கூச்சல் போட-ஆரம்பித்தான்.

'கேளு, கான்ஸ்டபிள்! அவனைக் கவனி! என்னைத் திட்டறான், அதை எழுதிக்கோ! ஹே!' என்றார் பிரணதார்த்தி.

குமரவேல் கறிகாய்க்காரனை, 'ஏ ஆளு! சும்மாப் பேசாதே! விஷயம் என்ன?' என்று கேட்டான்.

'நான் சொல்றேன்! இந்தப் பயலுக்கு உருளைக்கிழங்கே வியாபாரமாகல்லை. எல்லாம் அழுகிப் போச்சு! இப்படி என் மோட்டாரிலே வண்டியை மாட்டி, கிழங்கெல்லாம் கொட்டிப் போச்சுன்னா, என்னண்டை பணம் வாங்கலாம் இல்லை? அதுதான் இந்த வேலை செய்தான்! நல்ல வேலை! ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'இருக்கும்... அப்படியும் இருக்கும்! என்ன தம்பி, அப்படித் தானே?' என்றான் குமரவேல் கேலியாக.

'அப்படிக் கேளு... ஹே! விடாதே! போக்கிரிப் பயலை நன்றாய் மாட்டு!' என்றார் பிரணதார்த்தி உற்சாகமாக.

குமரவேல் திரும்பி, 'சார்! உங்க பேரைச் சொல்லுங்க...' என்றான்.

'பிரணதார்த்திஹர அய்யர்' என்றார் அவர் கம்பீரமாக.

'பிராணத்தை வாங்கற ஐயர்தான் இவரு! என் வாயிலே மண்ணைப் போட்டுட்டாரே?' என்று ஓலமிட்டான் வண்டிக்காரன்.

'நீ பேசாதே!' என்று குமரவேல் அவனை அடக்கவும், 'இரண்டு போடு, அப்பா அவனை! அப்பத்தான் அடங்குவான்! ஹே! என்ன போக்கிரித்தனம் பண்ணியிருக்கான், ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'சரி... இருக்கட்டும்! உங்க லைசென்ஸை எடுங்க!' என்றான் கான்ஸ்டபிள்.

பிரணதார்த்தியின் முகம் சரேலென்று அசடு தட்டியது. 'லைசென்ஸா?' என்றார் விழித்து.

'ஆமாம், டிரைவிங் லைசென்ஸை. அது இல்லாமலேயா ஓட்றீங்க?'

'ஹி...ஹி... அது ஒண்ணு வாங்கச் சொல்லணும்... அவகாசப் படல்லே!'

'அட எளவே! பின்னே உங்கமேலே அது ஒரு சார்ஜ் ஆச்சுங்களே! பெரிய குத்தமில்லை அது!'



'ஒரு குத்தமுங்களா! ஐயா தர்மதுரையே! நான் பாட்டுக்கு வியாபாரம் பண்ணிக்கிட்டு வர்றவன். வண்டியை இழுத்து வந்து, இப்படி ஒடிச்சு, என் கறிகாய்களை வாரி இறைச்சு...'

குடித்தனக்காரர் இதற்குள் வந்து சேர்ந்துவிட்டார். 'ஆமாம், கான்ஸ்டபிள்! அப்படித்தான்!' என்று அவரும் ஆமோதித்தார்.

'பொய்... இத்தனை பேரும் திருட்டுப் பசங்கள்! ஹே!' என்று குதித்தார் பிரணதார்த்தி.

'சும்மா இரு ஐயா! கத்தாதே!' என்று குமரவேல் அடக்கி, குடித்தனக்காரரைப் பேசச் சொன்னான். 'நான் உருளைக்கிழங்கு வாங்கிக்கொண்டிருந்தேன். இந்த மனுஷர் ஏனோ மோட்டாரைத் தள்ளி, .இவன் கறிகாய் வண்டியை மாட்டிக்கொண்டு, நாங்க எல்லாரும் கத்தக் கத்தக் காதில்போட்டுக் கொள்ளாமல் வேகமாக வந்துட்டார்! இங்கே யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்!' என்றார் அவர்.

அங்கே கூடியிருந்த சிறு கூட்டமும் அதை ஆமோதித்தது. ஏழை வண்டிக்காரன்மீதே அனுதாபம் காட்டிற்று.

'ஐயரே! கார் லைசென்ஸில்லாமே நீ விட்டிருக்கே!அதோடே ஜனங்களுக்கு ஆபத்து ஏற்படும்படியா வேறே விட்டிருக்கே. உன்மேலே இரண்டு குற்றமாச்சு!' என்றான் குமரவேல்.

பிரணதார்த்தி முஷ்டியைக் காண்பித்து, 'ஹே! கான்ஸ்டபிள்! நீ இப்போ பண்றது அயோக்கியத்தனம். நான் யாரென்று...' என்று ஆரம்பித்தார்.

'நீ யாராயிருந்தா என்ன எனக்கு? மோட்டார் விபத்து நடந்தப்புறம் நிக்காமே வேறே ஓட்டி வந்திருக்கே... அது வேறே ஒரு குற்றம்.'

'ஹே!'

'ஐயரே! ஏன் சும்மா 'ஹே!' 'ஹே!' என்கிறே! நீ என்ன ஜட்கா வண்டி ஓட்றியா என்ன?'

பிரணதார்த்திக்குக் கோபம் வந்துவிட்டது. 'என்னைப் பச்சைப் பிள்ளைன்னு நீ நினைச்சிண்டு அவமானப்படுத்தப் பாக்கிறியா? ஹே!' என்று கையை ஓங்கிக்கொண்டு கான்ஸ்டபிள்மீது ஆத்திரத்துடன் பாய்ந்தார். குமரவேல், சமயத்தில் நகர்ந்துகொண்டு,

'ஓஹோ அது வேறயா? ஹூம்! இன்னொரு குத்தம், ஒரு போலீஸ்க்காரர் டூட்டி செய்யறப்போ செய்யவொட்டாமல் தடுத்துத் தாக்கினது! நட ஸ்டேஷனுக்கு' என்றான்.

பிரணதார்த்திக்கு மூச்சு வாங்கியது. சுற்றியிருந்த ஜனங்களில் ஒருவராவது அவரிடம் மரியாதையோ அனுதாபமோ காட்டுவதாகத் தெரியவில்லை. அதைவிட்டு, அத்தனை பேரும் அவரை ஒரு பயித்தியக்காரனைப் பார்ப்பதுபோல வேடிக்கை பார்த்துக் கைதட்டவும் தொடங்கிவிட்டார்கள். வேறு வழியில்லாமல் போகவே, 'வா, நீ சொல்றபடி போலீஸ் ஸ்டேஷனுக்கே போகலாம். அங்கேயானும் நியாயம் பிறக்கிறதோ, பார்க்கலாம்! ஹே!' என்றார்.

'உனக்கு நியாயம் பிறக்குணும்னா நீ இனிமே எந்த மோட்டாரிலேயும் ஏறப்படாதுன்னு உத்தரவு போடணும்' என்றான் குமரவேல்.

பிரணதார்த்தி போலீஸ் ஸ்டேஷனில் ஸ்டேட்மென்ட் எழுதிக் கொடுத்துவிட்டு, மனம் ஒடிந்த நிலையில்தான் திரும்பினார். அப்போது மெட்ராஸ் மணி தம் வீட்டுக்கு வந்து நடத்திய நாடகமும், போன இடத்தில் ரங்கராஜனுக்கு ஏற்பட்ட புதிய அனுபவங்களும் தெரிந்திருந்தால் அவர் மேலும் கலங்கிப் போயிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.



## அத்தியாயம் - 7

'நீ யாருடையவன்? நீ யார்? எவ்விடத்திலிருந்து எங்கு எதற்காக வந்திருக்கிறாய்? இதுபற்றி நீ பிராந்தனாயிருக்கிறாய்! உண்மையை நன்றாக விசாரி!'

**- ஆதி சங்கரர் (பஜகோவிந்தம்)**

கொசுக்களினால் ஏற்பட்ட பெரும் வியாதிக்கு அடுத்தபடியாக, மாம்பலத்தில் அதன் தெருக்களின் விசேஷத்தைதான் சொல்ல வேண்டும். மாம்பலவாசிகளுக்கே மாம்பலத்திலுள்ள தெருக்களெல்லாம் எங்கெங்கேயிருக்கின்றன என்று சொல்ல முடியாமல் இருக்கும்போது, ரங்கராஜன் 'ராமக்கோனார் ஸ்டிரீட்' எங்கே என்று விசாரித்துக்கொண்டு சென்றதில் ஆச்சரியமொன்றுமில்லை. 'நேற்றுச் சாயந்தரம் வரையில் அப்படி ஒரு தெரு இருந்ததாக நமக்குத் தெரியவில்லை. அதற்கப்புறம் ஏற்பட்டிருக்கலாம். விசாரித்துப் பாருங்கள்!' என்றுகூட ரங்கராஜனுக்கு இரண்டொருவர் சொல்லவே, அவனுக்கு ஆத்திரந்தான் பற்றிக்கொண்டு வந்தது.

போகும்போது ரங்கராஜன் ஒரு திடமான சங்கல்பத்தைச் செய்துகொண்டே போனான். பிரணதார்த்தி தற்சமயம் பணக்காரரே ஒழிய, தமது சொந்த லாபத்தைக் கருதி எவ்வளவு கேவலமான





காரியங்களும் செய்யத் தயங்கமாட்டார் என்பது அவனுக்கு அவர் பேச்சிலிருந்தும் நடத்தையிலிருந்தும் வெட்ட வெளிச்ச மாகிவிட்டது. டிரைவர் வேலையைப் பிடுங்கி விடுவதாகச் சொல்லி மிரட்டி, இப்போது அவனை அனுப்பியிருக்கிறார். 'நம்மைத் தோழன் என்று கூப்பிட்ட அந்தப் போக்கிரியைக்கூடப் பிரணதார்த்தியேதான் ஏற்பாடு செய்திருக்கலாமோ?' என்று ஒரு கணம் அவன் யோசனைகள் ஓடின. 'சின்னவேலி ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளை என்று சொல்லிக்கொண்டு யாரோ ஒருத்தன் வருவதாகச் சொல்லியிருந்தானே, அவன் யாராக இருக்கக்கூடும்? ஒருகால் நம் பெட்டியைக் களவாடிய வனாகவே இருக்கலாமோ? அதிலிருந்த டயரியைப் படித்து விட்டு...' என்று எண்ணியதும் அவன் நெஞ்சில் சொரேர் என்று தைத்தது. 'நம் அண்ணாவைப் போய்ச் சண்டை போட்டோம்! அவன் சொன்னதில் என்ன பிசகு? ஓர் இடத்தில் ஒரு வாரம் சேர்ந்தாற்போல் வேலை செய்ய உன்னால் முடியாது என்றானே-அவன் எவ்வளவு அளந்து சொல்லியிருக்கிறான்!' - மனத்தில் போராடும் எண்ணங்களை விட்டொழிப்பதே நோக்கம்போல் ரங்கராஜன் மேலும் வேகமாக நடந்தான்.

'இப்போது அவன் செய்ய வேண்டியது என்ன?'

கோமதியை அன்றே தனிமையில் கண்டு அந்தரங்கங்களை அவளிடம் சொல்லி, தன் உள்ளக்கிடையில் கிடந்த பிரேமை யையும் திறந்து காட்டிவிட வேண்டுமென்று பார்த்தான். ஆனால், பிரணதார்த்தி அன்று காலையிலிருந்து அதற்கு இடம் கொடுக்கவில்லை. இதோ திருடிக்கொண்டு வரச்சொல்லியும் அனுப்பிவிட்டார்! தவறினால் வேலை போய்விடும்!

திருடுவதென்பதோ இந்த ஜன்மத்தில் இல்லை என்று அவன் முன்னமேயே முடிவு செய்துகொண்டு விட்டான். கடைசி கடைசியாக அவன் தீர்மானம், அந்தப் பொன்னாயியிடம் நேரில் போய் உள்ளது உள்ளபடியே சொல்லி, ஏதேனும் பணம் கொடுத்தாலாவது படத்தைக் கொடுப்பாளா என்று பார்ப்ப தென்பதுதான். அப்படியும் அவள் முடியாது என்று சொல்லி விட்டால்? அதை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்!

ரங்கராஜன் இப்போது ஒரு புதிய தெருவின் முனைக்கு வந்து சேர்ந்தான். அங்கே ஒரு ஸ்தம்பம் அதன்மீது தெருவின் பெயர் போட்ட பலகை மாட்டப்பட்டிருந்தது. நன்றாக அஸ்தமித்து

விட்டபடியால் எழுத்துகள் அவனுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிய வில்லை. வெளிச்சமிருந்திருந்தாலுங்கூட, அவனுக்கு இருந்த துடிதுடிப்பில் அதைச் சரியாகப் படித்திருப்பான் என்று சொல் வதற்கில்லை. 'ராஜக்கோனார் தெரு' வுக்கும், 'ராமக்கோனார் தெரு'வுக்குமிடையில் ஒரே ஒரு எழுத்துதான் வித்தியாச மாகையால் ரங்கராஜன் ராஜக்கோனார் தெருவைத்தான் தாசி பொன்னாயி இருக்கும் ராமக்கோனார் தெருவென்று எண்ணிக் கொண்டு நடந்தான். இந்த ஒரு பிசகானது, அவனுடைய சரித்திரத்தின் ஒரு பகுதியையே பெரிதும் பாதிக்கப்போகிற தென்று அவன் அப்போது கண்டானா, என்ன? பதினாலாம் நம்பர் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து வாசலில் சிறிது தயங்கினான்.

ஹாலில் வெளிச்சம் தெரிந்தது. இரண்டொரு ஸோபாக்களும் வாசலில் நின்றபடி பார்க்கும்போதே தென்பட்டன. உள்ளே போகலாமென்று ஒருவாறு மனத்தைத் திடம் செய்துகொண்டு ஹால் வரைக்கும் போனான். எங்கிருந்தோ 'உர்ர்...ர்' என்று ஓர் உறுமல் சத்தம் கேட்டது. அடுத்த விநாடி பெரிய மிருகம் ஒன்று அவன் எதிரில் தோன்றியது.

முதலில் அதை அவன் ஒரு பெரிய கன்றுக்குட்டி என்றுதான் நினைத்தான். ஊன்றிப் பார்த்த பிறகுதான் அது நாய் என்று அவனுக்குப் புலனாயிற்று. தனது இருபத்து மூன்று வயதில் ரங்கராஜன் அவ்வளவு பெரிய நாயைப் பார்த்ததேயில்லை. ஒரு முறை அதைப் பார்த்தவுடனேயே ரங்கராஜன், 'பிறந்தவுடன் குளத்தில் ஆற்றில் போட்டுக் கொன்று போட்டிருக்க வேண்டிய ஜன்மம் இது' என்று முடிவு செய்துவிட்டான். அது தனது பெரிய உடம்பை ஒரு முறை அசைத்துவிட்டுக் கொண்டு, குப்பென்று தலையைத் தூக்கி வெகு அலட்சியமாக ரங்கராஜனைப் பார்த்தது. பிறகு ஓர் உறுமல் உறுமி, அர்த்த புஷ்டியான பாவங்களுடன் அதன் பற்களை அவனுக்குக் காண்பித்தது. பிறகு எழுந்து, முன் கால்கள் இரண்டையும் அவனை நோக்கி வேகமாக வைத்தது.

யுத்த தந்திரங்களில் கைதேர்ந்தவர்கள்கூட, தம்மை மிஞ்சிய எதிரி வந்துவிட்டால் பின்வாங்குவதே உத்தமமான புத்திசாலித் தனமான காரியம் என்று கண்டுபிடித்துக் கடைப்பிடித்தும் வரு கிறார்கள் அல்லவா? ரங்கராஜனுக்கு உயர்ந்த போர்த் தந்திரங் களில் அவ்வளவு பரிச்சயம் இல்லை. எனினும், முதல்முதலாக ஓடிவிடுவோமா என்றுதான் எண்ணினான். ஆனால், முதுகுப்



புறம் காட்டியவுடன் அந்தப் பைரவன் பின்னால் தாக்கிவிடு வான் என்ற அச்சமும் ஏற்படவே, தற்காப்புக்கு வழியின்றி நின்றான். எந்த நிமிஷமும் மேலே விழுந்து அது பிடுங்கப் போகு மென்று எதிர் பார்த்தபோது, மாடியிலிருந்து ஓர் இளைஞன், 'ஏய்! ஜாக்! போக்கிரிப் பயலே! டேய்! வாடா!' என்று கூவிக் கொண்டே அவசரமாக இறங்கினான்.

'ஜாக்' என்று அழைக்கப்பட்டதும் அந்த நாய் திரும்பியது.

இளைஞன் ரங்கராஜனைப் பார்த்து, 'நீர் யார்?' என்றான் அதிகாரமாக.

'பொன்னாயி என்கிற...'

'இது பொன்னாயி வீடு இல்லை!' என்றான் அவன் பட்டென்று.

ரங்கராஜன் அவன் வார்த்தையை நம்பவில்லை, 'பொன்னாயி யின் காதலன்போல் இருக்கிறது இவன். நம்மை ஏமாற்றி வெளியே அனுப்பவே இம்மாதிரி சொல்கிறான்' என்று ஊகித்துக் கொண்டு, 'ஸார்! இது பதினாலாம் நம்பர் வீடுதானே?' என்றான்.

'ஆமாம்! அதற்கென்ன?'

'பின் இது பொன்னாயி வீடு என்று...'

'யாரய்யா நீ! இது என்ன தாசி வீடென்றா கேட்கிறாய்? ஹும்?'

'கோபப்படக் கூடாது! நான் இந்தப் பக்கத்துக்குப் புதிது. ராமக் கோனார் தெருவில்...'

இளைஞன் சிரித்தான். 'நீர் போய்த் தெருக்கோடியில் மறுபடியும் தெருவின் பெயரைச் சரியாகப் பாரும். இது ராஜக்கோனார் தெரு!' என்றான் அவன்.

ரங்கராஜனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அதற்கு மேல் அவ னுக்கு இங்கே நிற்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இளைஞனின் முகம் எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது ரங்க ராஜனுக்கு, எங்கே பார்த்திருக்கிறோம்?

அவன் தயங்கியபோது, மாடியிலிருந்து ஒரு ஸ்திரீயின் குரல், 'அடே சீனு! அங்கே யாரோடே பேசறே?' என்று கேட்டது. 'சீனு'

என்ற வார்த்தை ஒரு மந்திர சக்திபோல் ரங்கராஜன் மனத்தில் வேலை செய்தது; பழைய ஞாபகங்களை, பத்து வருஷத்துக்கு முந்திய ஞாபகங்களை வரவழைத்தது.

'மன்னிக்கணும்... நீங்கள் தஞ்சாவூர் மகா கணபதி அய்யர் பிள்ளை அல்லவா?' என்று கேட்டான்.

ரங்கராஜனை இதற்குள் கூர்ந்து கவனிக்கத் தொடங்கிய இளைஞனும் நெருங்கிவிட்டான். 'ஆமாம்... நீ நம்ம ரங்கராஜன் இல்லை?' என்று கேட்டான். அடுத்த நிமிஷம் இருவரும் கை கோத்துக்கொண்டு ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டார்கள்.

'ஏண்டா பழி! இங்கே எங்கேடா தாசி வீட்டைத் தேடிக்கொண்டு வந்தே!' என்று கேட்டான் சீனு. 'எத்தனை நாளா உனக்கு இந்தப் பழக்கம்? ஜமீன்தார் பிள்ளை என்றால் இயற்கையாகவே இந்தப் பழக்கம் வந்துவிடுமோ?' என்றான்.

ரங்கராஜனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. 'அது வேறு விஷயம்... அப்புறம் சொல்கிறேன்... நீ எங்கே இங்கே இருக்கிறாய்?' என்று கேட்டான்.

'நான் பத்து வருஷமாக இந்த ஊரில்தானே இருக்கிறேன்!'

'ஆமாம்... உனக்குக் கல்யாணம்கூட இங்கேதானே ஆகியிருக்கிறது? உன் ஒய்ப் இருக்கிறாள் அல்லவா? எத்தனை பசங்கள்?' என்றான் ரங்கராஜன். கேட்டு விட்டுச் சீனுவின் முகத்தைப் பார்த்தபோதுதான், ஒரு பெரிய பிசகைச் செய்துவிட்டது போன்ற உணர்ச்சி ரங்கராஜனுக்கு ஏற்பட்டது. சீனு தன் தலையை ரங்கராஜன் மீது சாய்த்துக் கொண்டுவிட்டான். அவன் கண்கள் நீரை மழைபோல் வர்ஷித்தன.

'என்னடா சீனு! இப்படி நீ கோழையாக இருக்கிறாய்? எனக்குத் தெரியவே தெரியாதுடா! எப்போ அப்படி ஆச்சு?' என்று ரங்கராஜன் தன் பழைய நண்பனைக் கேட்டான் பரிவுடன்.

சுமார் பத்து நிமிஷத்துக்குச் சீனு பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. பிறகு தொண்டை அடைக்க, 'மங்களம் போய் விட்டாள்!' என்றான்.

ரங்கராஜனுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. தன் தமையனும் மன்னியும் இருக்கும் அன்னியோன்யத்தை அவன் கவனித்திருக்



கிறான். 'மன்னி இல்லாவிட்டால் அண்ணாவால் என்ன ஆகும்?' என்று எண்ணியிருக்கிறான். அதேபோல்தானே சீனுவும் அவன் மனைவியும் இருந்திருக்க வேண்டும்! உயிருக்குயிரான ஸஹதர்மினியைப் பிரிந்து அவன் கஷ்டப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது?

'ஏண்டா! உனக்கு இந்த ஊரில் தானே கல்யாணம்?'

'ஆமாம்... இந்த ஊரிலேயே கஷ்டமும் வந்து விட்டது!'

'ஹூம்... மாமனார் யார்?'

சீனுவின் துக்கம் ஒரு க்ஷணம் பறந்துபோய் விட்டதுபோல் தோன்றியது. 'அவன் பெயரை என்னிடம் கேட்காதே!' என்றான்.

'ரொம்பக் கேவலப்படுத்திப் பேசாதே! பாவம்! அவருக்கும் கஷ்டம் தானே அது?'

'கஷ்டமா? அவனுக்கா? அந்த எள் விற்கிறவனுக்கா? ஹூம்!'

'யார்! உன் மாமனாரா எள் விற்கிறவர்?'

'சந்தேகமென்ன? எள் வியாபாரி பிரணதார்த்திஹர அய்யர் தாண்டா என் மாமனார். அந்தப்...'

ரங்கராஜன் கல்லாய்ச் சமைந்துவிட்டான். இதுபற்றிக் கோமதி சொல்லியிருந்த ஒரு சமாசாரமும் அப்போது ஞாபகம் வந்தது அவனுக்கு! இதென்ன விசித்திரம்! இவன் இங்கே வந்தது கடவுள் செயலா? அவருக்காகப் பொன்னாயியைத் தேடிக்கொண்டு போகும் இடத்தில், அவருடைய மாப்பிள்ளையிடமே வருவானேன்? அந்த மாப்பிள்ளையும் அவனுடைய பழைய நண்பனாகப் போவானேன்?

'அது கிடக்கட்டும்! தாசி பொன்னாயிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டான் சீனு.

'ஒரு சம்பந்தமுமில்லை. அதைவிடு! வேறொருத்தருக்காகப் பார்க்க வந்தேன்.'

'யார் அந்த ஒருத்தர்?'

'யாரோ ஒருத்தர்.'

'நீ சொல்லப் போகிறதில்லை?'

'சும்மா தொந்தரவுபடுத்தாதே!'

'அடே! உன் மாமா டி.வி.எஸ். அய்யரை இன்று காலையில்தான் பார்த்தேன். அவருக்கு ஓர் உபகாரம் கூட பண்ணியிருக்கேன்... இப்போதான் ஞாபகம் வருகிறது. அடேடே! நீ வந்திருக்கிறதாகக்கூட அவர் சொன்னாரே! அவரிடம் நாளைக் காலையில் போய், நீ இங்கே பொன்னாயியைத் தேடிக் கொண்டு வந்த சமாசாரத்தைச் சொல்லி...'

ரங்கராஜனுக்குப் பகீரென்றது. 'எப்போ பார்த்தாய் அவரை?' என்று கேட்டான்.

'இதற்கு முன்பு அவரைத் தெரியாது. பார்த்ததுகூட இல்லை. சென்ட்ரல் ஸ்டேஷனில் நான் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்தேன். இவர் ஒரு பேப்பரைப் படித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். சற்று நேரம் கழித்துப் பார்க்கிறேன். ஒரு பயல் இவர் கோட்டுப் பையில் கைவிட்டு, மணிபாக்ஸை அநேகமாக எடுத்தே விட்டான்!'

'ஹூம்? அப்புறம்?'

'நான் பின்புறமாகவே போனேன். அவன் கழுத்துப் பக்கத்தில் 'பட்' 'பட்' டென்று நாலு போட்டு, 'எடுத்த இடத்திலேயே அதை வை!' என்றேன். இவர் திரும்பிப் பார்த்தார். 'அடடா! நீங்கள் பார்த்திராவிட்டால் அறுநூறு ரூபாய் களவு போயிருக்குமே' என்று மணிபாக்ஸை திறந்து என்னிடம் காண்பித்தார். அப்புறம் தம் விஸிடிங் கார்டைக் கொடுத்து, தம் வீட்டுக்கு வரும்படி அழைத்திருக்கிறார்.

'அந்தப் பயலை என்ன பண்ணினீர்கள்?'

'என்ன பண்ணுகிறது? பண்டம் கிடைத்துவிட்டது. அவனோடு அப்புறம் என்ன? இரண்டு கொடுத்து விட்டுவிட்டேன்... கார்டில் பெயரைப் பார்த்தப்புறம்தான் அவர் உன் மாமா என்று தெரிந்து கொண்டேன். உன்னைப் பற்றிச் சொன்னேன். 'அவன் கூட வந்திருக்கான். நம்மாத்திலேதான் இருக்கிறான்' என்றார். எனக்குத்தான் ஞாபகமில்லை! நீ அங்கேதானே இருக்கிறாய்?'



உடனே பொய் சொல்ல ரங்கராஜனுக்கு வாய் வரவில்லை. சற்று விழித்துவிட்டு மென்று விழுங்கினான்.

'நிஜத்தைச் சொல்!' என்று சீனு எழுந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டான். இவ்வளவு தூரம் தெரிந்த பிறகு இனியும் மறைக்க ரங்கராஜனுக்கு இஷ்டமில்லை. 'யாரிடமும் சொல்லக்கூடாது, என் வழியேதான் விடணும்' என்று சீனுவிடம் உறுதி பெற்றுக்கொண்டு, ஆதியோடந்தமாக, தான் சென்னையில் வந்ததுமுதல் அதுவரை நடந்த விஷயங்களை ரங்கராஜன் சொன்னான். அது அவனுக்கு ஆறுதலாகக்கூட இருந்தது.

சீனு வாயைப் பிளந்துகொண்டு கேட்டான். 'ஏண்டா இதெல்லாம் நிஜமா? கதையா?' என்றான்.

'ஆமாம்... நிஜமேதான்! அதற்காகத்தான் பொன்னாயியைத் தேடிக் கொண்டு வந்தேன். தெரு தவறி இங்கே வந்துவிட்டேன். உன்னிடமும் மாட்டிக்கொண்டேன். ஏதானும் நீதான் வழி சொல்லு! நான் அங்கே இன்னும் பதினைந்து நாளாவது அந்த வேலையில்தான் இருக்கணும்!' என்றான் ரங்கராஜன் விறுவிறுப்புடன்.

சீனு, ரங்கராஜனின் முதுகில் ஒரு ஷொட்டுக் கொடுத்து, 'ஒன்றும் அவசரப்படாதே! நான் சொல்றபடி செய் இப்போது!' என்றான்.

'என்ன?' என்று ஆவலுடன் விசாரித்தான் ரங்கராஜன்.

'இப்போது என்னோடு முதலில் சாப்பிடு. பிற்பாடு எல்லாம் சொல்கிறேன்' என்றான் அவன்.

சீனுவின் தாயார் ஒரு நிமிஷத்தில் ரங்கராஜனை அடையாளம் கண்டுகொண்டாள். 'காவேரி பிள்ளையோன்னோடா நீ? முகத்திலே ஜாடையிருக்கே!' என்றாள்.

'நீ தேவலை, அம்மா! எனக்கு முதலில் இவனைத் தெரியவேயில்லை!' என்றான் சீனு.

பரிமாறும்போது, சீனு ஒருதரம் கண்ணீர்விட்டான். 'அடே! நான் சாப்பிடும்போது மங்களம் பக்கத்தில் நின்று விசிறுவாள்டா! அந்த ஆசை ஒன்றே போதும்... அவள் மாதிரி பிறவியே கிடையாதுடா!' என்றான்.

சீனுவின் தாயாரும் முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டாள். 'அப்பா ரங்கராஜா! நீதான் உன் சிநேகிதனுக்குச் சொல்லு... அதையே நினைச்சிண்டு எப்போ பார்த்தாலும் உருகறான். இனிமேல் என்ன பிரயோஜனம்? மறந்துட்டு, மறுபடி கல்யாணம் கார்த்திகை பண்ணிண்டு...' என்றாள்.

'இந்த ஜன்மத்தில் மங்களத்தைத் தவிர, வேறு பெண்ணைத் தொடுவதா?' என்றான் சீனு.

'உனக்கு மங்களம் மாதிரியே ஒரு பெண் அகப்பட்டால்கூடச் செய்து கொள்ள மாட்டாயா?'

'அப்போது பார்க்கலாமே!'

சாப்பிட்ட பிறகு ரங்கராஜனுக்குத் தன் கவலை பற்றிக் கொண்டது. 'என்ன சீனு, நான் இப்போ என்ன செய்வது?' என்றான்.

'வா, பேசிக்கொண்டே போகலாம்' என்று கூப்பிட்டு, 'அடே ஜாக், நீயும் வரியாடா?' என்றான்.

'ஜாக்' என்ற அந்தப் பெரிய மிருகம், அலட்சியமாக வாலை ஆட்டிற்று. 'இவன் ரொம்ப நல்ல ஜாதி, அப்பா! உங்க பிரணதார்த்திஹர அய்யரையெல்லாம்விட மேலான அறிவுள்ள பிறவி, அப்பா!' என்றான் சீனு.

ரங்கராஜனும் சீனுவும் நாய் பின்தொடரப் பேசியவாறு நடந்தார்கள். 'நான் சொல்கிறபடி கேளு! எப்போது பிராணதார்த்தி உன்னிடம் அயோக்கியத்தனமாக நடக்கிறானோ, அப்போது நீ சத்தியசந்தனாக நடக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பிரணதார்த்தி வெளிக்கு அரட்டல் மிரட்டலாக இருக்கிறானே ஒழிய, உள்ளுக்குள் அவன் ஒரு பயந்தாங்கொள்ளி. நீ பொன்னாயி வீட்டுக்குப் போனதாகவே சொல்லு; வீடு முழுவதும் தேடினதாகவும் சொல்லு! ஆனால் வீட்டில் எங்குமே அதைக் காணோமென்று சாதித்துவிடு. அப்புறம் பார்க்கலாம்!' என்றான் சீனு.

'நீ வேலைக்கு வேண்டாம், நின்றுகொள் என்று அவர் சொன்னால்?'

'அவசரப்படாதே, தம்பி!-நீ போட்டோவை இன்று கொண்டு கொடுப்பதாகவே வைத்துக்கொள். அதை வாங்கிக் வைத்துக்



கொண்டு, உன்னை அவன் வேலையை விட்டுத் தள்ளினால் என்ன செய்வாயாம்? அவன் காரியமாகி விட்டால் உன்னை ஏன் ஒரு க்ஷணம் வைத்துக்கொள்ள போகிறான்.'

'அதை நான் யோசிக்கவேயில்லை, சீனு!'

'இப்போதைக்கு நீ இப்படிச் சொல்லிப் பார். இன்னொரு முயற்சி வேண்டுமானாலும் செய்து பார்க்கிறேனென்று சொல்லு!'

'அது எதற்கு?'

'சும்மாச் சொல்லேன்... எனக்கும் ஓர் உபகாரம் செய்யணும்டா நீ. என் மங்களம் இருந்தாளே, அவள் ஞாபகத்துக்கு என்னிடம் ஒரு படங்கூட இல்லை. இருந்த ஒன்றே ஒன்றையும் பிரணதார்த்தி வைத்துக்கொண்டு விட்டான்...'

'அதை என்னைத் திருடிக்கொண்டு வரச் சொல்கிறாயா?' என்று கேட்டான் ரங்கராஜன்.

சீனு ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். அப்போது தெருவில் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. குறுக்கே ஒரு பெரிய பெருச்சாளியை, கிட்டத்தட்ட அதே அளவுள்ள ஒரு கறுப்புச் சடை நாய் துரத்தி வந்தது. எதிரில் படு வேகமாக வந்த ஒரு மோட்டாரில் அகப்படாமல் இமையளவு தப்பி பெருச்சாளி ஓடிவிட்டது. நாய் ஓடுவதற்குள் மோட்டார் குறுக்கிட்டு, நிற்காமல் மேலே சென்றது.

'ஐயோ!' என்று இரண்டு பேரும் ஓடிப் போய்ப் பார்த்தார்கள். அந்த அழகிய சடை நாய் தெரு நடுவில் அசைவற்றுக் கிடந்தது. அவர்கள் பின்னால் வேறோர் ஆளும் வந்தான். 'ஐயோ பாவம்! என் நாய் செத்திடுச்சே!' என்றான் அவன்.

'ஒன்றும் அடிப்பட்டாப்போல தெரியல்லையே!' என்றான் சீனு.

அந்த ஆள் அதைத் தூக்கிப் பார்க்கக் குனிந்தான். ஆனால், அவன் விரல் படுமுன் இதுவரை அசைவற்றிருந்த அவ்வுடல், திடீரென்று உயிர் பெற்று எழுந்தது. இரண்டு குரைப்பு குரைத்துவிட்டு நாய் ஓடத் தொடங்கியது.

'ஜிம்மி! ஜிம்மி!' என்று அந்த ஆள் அதை அழைத்தான். ஆனால், சடை நாய் அவன் அழைப்பை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

'உன் நாயா அது?' என்று கேட்டான் சீனு, சம்சயத்துடன்.

'ஆமாங்க!'

'அப்படியானால் நீ கூப்பிட்டால் ஏன் வர மாட்டேங்குது?'

'அது புதுசுங்க'.

'ஓஹோ! நேத்துத்தான் திருடினயோ? ஹு¬ம்... வழியை விட்டு நகரு!' என்று சொல்லி, சீனு நாயைத் தூக்கித் தடவிக் கொடுத்தான்.

'ஜிம்மி! ஜிம்மி!' என்றான் ஆள் இன்னும் போகாமல். அது அவனைக் கேவலம் ஒரு புழுவைப்போல் மதித்து அவன் நின்ற பக்கத்தில்கூடத் தலையைத் திருப்பவில்லை.

'சரி! நாய் இனிமேல் நம்மதுதான்! ஏய் ஆளு! இங்கே நின்னயோ இதோ 'ஜாக்' உன்னை ருசி பார்த்துவிடும்... என்னடா 'ஜாக்'! சரிதானே?' என்று சீனு தன் நாயைப் பார்த்தான். ஜாக் அதன் ரத்த வர்ணமான கண்களை அந்த ஆள்மீது கம்பீரமாகத் திருப்பியது; அந்த ஆள் தன் திருஷ்டியை மேற்கு நோக்கித் திருப்பி கால் களுக்குத் துரிதமான வேலை கொடுத்தான்.

அந்த இடத்திலேயே சிறிது நேரத்துக்குப்பின் ரங்கராஜனும் சீனுவும் பிரிந்தார்கள். எவ்வளவோ தைரியம் சொல்லித்தான் அவனைச் சீனு அனுப்பியிருந்தும், போகும்போது ரங்கராஜன் மனம் சிறிது தளர்ச்சியே அடைந்தது. நடையும் கூடவே தளர்ந் தது. தலை குனிந்தவாறு யோசனையுடன் சென்றவன் யாரோ ஒருவர்மீது மோதிக் கொண்டு நிமிர்ந்தான். 'என்ன அப்பா! எங்கே யோசனையோ? எந்தக் கன்னிகைக்கு நெஞ்சிலே அர்ச்சனை?' என்று கேட்டு வேதராம அய்யர் ரங்கராஜனை நிறுத்தினார்.

'சௌக்கியமா, ஸார்!' என்றான் ரங்கராஜன் அவரை அறிந்து கொண்டு.

'உன்னைப் பார்த்தவுடனேயே நினைத்துக் கொண்டேன்; தெரு விலே இப்படி நடக்கிறவர்களுக்கெல்லாம் ஆபத்துதான்; மோட் டாரினால் ஏற்படுவது விபத்துதான். லாரிகள் வியாபித்திருப் பதால், சாவுகள் சோபித்திருக்கின்றன. அதற்காக ஒரு ஜபம் வைக்கப் போகிறேன். எனக்கொரு லாபமும் வேண்டாம்; ஜனங் கள் தாபம் தீரவே பார்க்கிறேன்!' என்றார்.



ரங்கராஜன் புரிந்துகொண்டான். பெரியவர் ஏதானும் கேட்கத் தான் இப்படிச் சொல்கிறாரென்று உடனே ஒரு ரூபாய் பணத்தை எடுத்து அவர் கையில் வைத்து, 'நான் வருகிறேன், ஸார்!' என்று நகர்ந்தான்.

வேதராம அய்யர் அவனை நிறுத்தி, 'எவனெவனோ பயல்கள் ஜமீன்தார்கள் என்று சொல்லிக்கொண்டு வருகிறான்கள்! உண்மையில் நீதான் ஜமீன்தார் பிள்ளை! உன் மனசு அப்படி இருக்கிறது. பார், இப்போதுதான் சின்னவேலி ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளையைப் பார்த்தேன்... அந்தப் பயல்...' என்றார்.

'எங்கே பார்த்தீர்கள்?' என்றான் ரங்கராஜன் புருவத்தை நெறித்து.

'பிரணதார்த்திஹர அய்யர்னு ஒரு கஞ்சன் இருக்கான், அதோ அந்தப் பங்களாவிலே. அவன் நெஞ்சிலே இரக்கம் என்பதே பஞ்சம்! அங்கேதான் இந்த ஜமீன்தார் பிள்ளையும் வந்து...'

'நிஜமாகவா? அப்போதா?'

'ஆமாம்... ஆனால்...' என்று வேதராம அய்யர் ஆரம்பிக்கும் போதே ரங்கராஜன் அவரைத் தாண்டிக்கொண்டு அந்த வீட்டை நோக்கிப் பயித்தியக்காரன்போல் ஓடத்தொடங்கினான். வேத ராம அய்யர் நின்று பார்த்துவிட்டு, 'சிறு பசங்களே இப்படித் தான்!' என்று ஒரு பெருமூச்சு விட்டு, ஒரு ரூபாயை இடுப்பில் செருகிக்கொண்டு மேலே நடந்தார்.





## அத்தியாயம் - 8

'காய்கறிகள் குவியலாகச் சேருவதுதான்
அவியல் செய்வதற்கு ஏற்ற காலமாகும்.'

-பாக சாஸ்திரம்

பகல் பன்னிரண்டு மணி வெயிலில் சென்னை மவுண்ட் ரோட்டில் செருப்புமில்லாமல் குடையுமில்லாமல் அகப்பட்டுக் கொண்ட பாதசாரியைப்போல், மெட்ராஸ் மணியின் உள்ளம் துடித்தது. பிரணதார்த்தியின் வீட்டிலிருந்து டிரைவரைத் துரத்தினானேயொழிய அங்கே நுழைவதற்கு வசதியில்லை என்று அப்போது அவனுக்குத் தோன்றியது. அதற்காக அவன் பக்கிரியை ஏற்பாடு செய்து, அவர் வீட்டு வாசலில் அவர் முன்னிலையில் ஒரு நாடகம் நடிக்கச் சொல்லிவிட்டு வந்தான். பக்கிரியும் ரொம்ப இயற்கையாகவே நடித்துவிட்டு வந்ததாகத்தான் மார்தட்டிக்கொண்டான். அதன் பலன் என்ன ஆயிற்று? டிரைவர் போய்விட்டானோ? இப்போது தாராளமாக அங்கே அவன் போகலாமா?

மணி இப்போது பிரணதார்த்திஹர அய்யர் வீட்டுக்குப் போக அவசரப்பட்டதற்குப் பல முக்கியக் காரணங்கள் இருந்தன. டி.வி.எஸ். அய்யர் வீட்டில் இருப்பவர்கள், மணி

எதிர்பார்த்ததற்கு நேர் எதிராக இருந்தார்கள். தவிர, மணி அடிக்கடி வெளியே கிளம்புகிறான் என்று அவர்கள் புகார் வேறு செய்யத் தொடங்கினார்கள். அய்யர் அவனுடைய அரை மீசையை வெறுப்புடன் பார்த்தார் என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. அய்யரின் பெண் ருக்மினியும் அவனைச் சந்தேகத்துடன் பார்ப்பதுபோலவே அவனுக்குப் பட்டது. அவள் கழற்றி வைத்துவிட்டுப் போன ஒரு தங்க வளையலை அவன் தூக்கிக் கொண்டு வந்து பக்கிரியிடம் கொடுக்க, பக்கிரி ஒரு பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டான். அதை விற்கப்போன இடத்தில், ஒரு கடைக்காரர் சந்தேகப்பட்டுப் போலீஸ்காரரை வரவழைக்கப் போக, பண்டத்தை அங்கேயே விட்டுவிட்டு அவன் ஓடியே வந்துவிட்டான். இது விஷயமாகப் பக்கிரிக்கும் மணிக்குங்கூட சிறிது வாக்குவாதம் நடந்தது.

பக்கிரி கோபித்துக்கொண்டு, தானே போய்ச் சம்பாதித்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான். இதற்கு முதல் நாள் மாலைதான் ரங்கராஜனைப் பக்கிரி தன் தோழன் என்று அழைத்திருந்தானாகையால், அதன் பலன் என்னவென்று மாலையில் சென்று பார்க்கவே மணி காத்திருந்தான். வெளியே சென்ற சிறிது நேரத்தில் பக்கிரி மூஞ்சியைத் தொங்கப்போட்டுக் கொண்டு திரும்பி வந்தான்.

'என்ன சம்பாதிச்சே?' என்று கேட்டான் மணி.

பக்கிரி தன் கன்னத்தைக் காண்பித்தான். பிறகு சட்டையைத் தூக்கி தன் முதுகையும் காண்பித்தான். கன்னத்தில் ஐந்து விரல்கள் பதிந்திருந்தன; பலமான குத்துகள் இரண்டு விழுந்து முதுகும் கன்றிப்போயிருந்தது.

'என்ன? யார் உன்னை இப்படி அடித்தது?' என்று கேட்டான் மணி.

'யாரோ ஒருத்தரு பேப்பர் படிச்சிக்கிட்டு நின்னுண்டிருந்தார், அவர் பணத்தை எடுத்தால் இந்தப் பயலுக்கு என்னவாம்? ஹாம்!' என்றான் பக்கிரி.

'சொல்கிறதைச் சரியாகச் சொன்னாலல்லவா புரியும்!'

'ஒருத்தர் சட்டையிலேருந்து மணிபாக்லை எடுத்தேன். யாரோ ஒருத்தன் அதைப் பார்த்து என்னை அடிச்சு அதை அங்கேயே



வைக்கச் சொன்னான். அதிலே அறுநூறு ரூபாய் இருந்ததாம். அவன் குறுக்கிடாமே இருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்? எல்லாம் என் போதாத காலம்!' என்றான் பக்கிரி.

'உன்னை உதையோடு விட்டானே,அதுவே நல்ல காலம்! யார் அந்த ஆள்?'

'நான் என்னத்தைக் கண்டேன்? யாரோ டி.வி.எஸ். அய்யர்னாரு அந்த அய்யர். இன்னொரு ஆளு...'

மணி திடுக்கிட்டான். 'என்னது! டி.வி.எஸ். அய்யரா! உயரமா, கண்ணாடி போட்டுக்கொண்டிருந்தாரா?'

'ஆமாம்... அப்படித்தான்'

'கன்னத்திலே அவருக்கு ஒரு மச்சம் கூட இருந்ததா?'

'இருந்தது, இருந்தது! அவரு உனக்குத் தெரிந்த பேர் வழிதானா?'

'தெரிஞ்சவரா! அடப்பாவி! அவர் வீட்டில்தான்டா நான் இறங்கியிருக்கேன்!'

'நான் என்னாத்தைக் கண்டேன்!'

'சரி, சரி! அகப்பட்டுக்கொண்டும் என் பேரைச் சந்தியில் இழுக்காமல் வந்தயே, அதுவரை நீ புத்திசாலிதான்!' என்றான் மணி.

ராவ்பகதூர் நாகநாத முதலியாரின் வீட்டுக்கு ஒரு முறை மணி போய்விட்டு வந்தான். இதுவரை அங்கே பல முறை போய் அவருக்கு ஆப்தனாகக்கூட ஆகிவிட்டான். முக்கியமாக, முதலியாருக்குப் பான வகைகளில் ருசி அதிகமாகையால், அதே பழக்கமுள்ள மணியும் ஏற்ற சகாவானதில் ஆச்சரியமும் இல்லை. ஆனால், மணிக்குக் குடிப்பதற்குக் கிடைத்ததே ஒழிய, கைக்கு உருப்படியாக அவர் வீட்டில் எந்தப் பொருளும் கிட்டவில்லை. ஆகையினால்தான், பிரணதார்த்தியின் வீட்டை எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சோதனை போடத் துடித்துக்கொண்டிருந்தான்.

அன்று மாலை பிரணதார்த்தியின் வீட்டுக்குள் அவன் தைரியமாக நுழைந்தான். ரங்கராஜன் வழியிலேயே எதிர்ப்பட்டு விட்டானாகையால், அவனைச் சந்திக்க வேண்டியிருக்குமோ என்ற

பயமும் நீங்கிற்று. பங்களாவின் ஹாலை அடைந்து, 'ஸார்!' என்றான்.

அவனை முதல்முதலில் பார்த்தது பாலுதான். 'ஹிட்லர் வந்திருக் கார்!' என்று கூச்சல் போட்டுக்கொண்டு அவன் ஓடினான் உள்ளே.

'அது யாருடா ஹிட்லர்?' என்று கேட்டுக்கொண்டு வந்த கோமதி, யாரோ ஓர் இளைஞன் நிற்பதைக் கண்டு சற்றுப் பின்வாங்கினாள். பின்னாலேயே பிரணதார்த்தியின் தமக்கையும் ஹாலுக்கு வந்து சேர்ந்தாள்.

'யார் நீங்கள்?'

'நான் இங்கே பிரணதார்த்திஹர அய்யரைப் பார்க்க வந்தேன்...'

'அவன் இப்போதானே வெளியே போனான். வந்துடுவான்... நீங்க யாரு?'

மணிக்கு இதுவே மிகமிகச் சௌகரியமான சந்தர்ப்பம் என்று பட்டது. பிரணதார்த்தியின் குடும்பத்து ஸ்திரீகள் மனத்தை டிரைவருக்கு எதிராகக் கலைத்துவிட்டால், அவனுக்கு அவர் சீட்டுக் கொடுப்பது இன்னும் லகுவாகும் அல்லவா? ஆகவே, தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, 'அவரைப் பார்க்கலா மென்று வந்தேன்... வேலை ஒன்றும் இல்லை... என்னை வரச் சொல்லியிருந்தார்' என்றான்.

தமக்கைக்காரியின் உடம்பில் ஒரு நூதன உணர்ச்சியே ஏற் பட்டது. ஒரு பரபரப்பும் வந்தது. 'வாருங்கோ! வாருங்கோ! உட்காருங்கோ! அடி பாக்கியம்!' என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே ஓடினாள். மணி அப்படியே ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டான். நல்ல காபியாக வரப்போகிறதென்றும் அவன் ஊகித்துக் கொண்டான்.

வாசற்படியில் செருப்புச் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு மணி திரும்பினான். வேதராம அய்யர்-அன்று ரங்கராஜன் பெட்டியை அவன் திருடியபோது, அவனுக்குப் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த அதே பேர்வழி- அங்கே வந்து நின்றுகொண்டு இருந்தார்.

'அய்யர்வாள் இருக்காரோ?' என்று கேட்டார் அவர்.



'இல்லை போலிருக்கிறது' என்றான் மணி.

'நீங்களும் அவாளைப் பார்க்கத்தானே காத்துண்டிருக்கிறீர்கள்?'

'இல்லை- ஆமாம்-இல்லை.'

'ரொம்ப சரி! நானுந்தான் காத்துக்கொண்டிருக்கேனே!' என்று சொல்லி அவர் தமது கைத்தடி சகிதம் உள்ளே வந்து, மணியின் பக்கத்தில் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்.

'இதேதடா சனியன்!' என்று மணி முகத்தைச்சுளித்துக் கொண் டான். ஆனால், வேதராமய்யர் அதைக் கவனித்ததாகவோ, கவனித்துச் சட்டை செய்ததாகவோ துளிக்கூடக் காட்டிக் கொள்ளவில்லை.

'அவர் வர ரொம்ப நேரம் பிடிக்குமே!' என்றான் மணி.

'நேரம் ஆகட்டுமே; எனக்கு வேறெங்கும் இப்போ பேரம் இல்லை!' என்றார் வேதராம அய்யர்.

'இது விடாது நம்மை' என்று மணி மனம் தளர்ந்திருந்த சமயம், பிரணதார்த்தியின் தமக்கையும் சம்சாரமும் வந்து விட்டார்கள். ஒரு டம்ளர் காபியைக் கொண்டு வந்து பாக்கியம் வைக்கவே, மணி அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பிரணதார்த்தியின் தமக்கை மணியைப் பார்த்து, 'உங்களுக்குக் கூடப் பிறந்த பேர் எத்தனை?' என்று கேட்டு கொண்டே எதிரில் உட்கார்ந்தாள். மணியிடம் பேச்சுக் கொடுத்து, சின்னவேலி ஜமீன்தாரின் குடும்ப விஷயங்களைக் கிரகிக்கலாமென்பது அவள் உத்தேசம். மணி ஜாடையாகப் பாக்கியத்தின் கழுத்து, கைகளில் ஒரு கண்ணோட்டம் விட்டான். அங்கிருந்த நகைகள் அவனுக்குத் திருப்தியளித்தன.

'ஓர் அண்ணன் இருக்கிறான்' என்றான் மணி, கூடியவரை முகமலர்ச்சியுடன்.

'உங்களுக்கு எந்த ஊர்?' என்று வேதராம அய்யர் விசாரித்தார்.

'எனக்குச் சின்னவேலி' என்றான் மணி சுருக்கமாக. 'சின்ன வேலியா! ஹா! தங்கமான ஊர்னா அது! அங்கே ஜமீன்தார் சுப்ரமணிய அய்யர்னு இருக்கார்! உத்தமமான மனுஷன்...' என்றார் வேதராம அய்யர் உற்சாகமாக.



CONNEMARA PUBLIC LIBRARY

'அந்த ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளைதான் இவர்' என்றாள் பிரணதார்த்தியின் தமக்கை குறுக்கிட்டு.

'ஓஹோ, ரொம்ப ஆனந்தமான்னா இருக்கு கேட்க! அப்படியா?' என்றார் அய்யர்.

'உம்' என்றான் மணி.

'உங்கள் தமையனாருக்கு மத்தியார்ச்சுனத்திலே கலியாணமோல் லியோ?' என்று விசாரித்தார் அய்யர்.

'ஆமாம்...' என்றான் மணி. அவனுக்கு விஷயம் தெரியாது. 'ஆமாம்' போட்டுக்கொண்டே அவரிடம் தப்பித்துக்கொள்ள பார்த்தான்.

'அங்கே உங்கள் தமையனாரின் மாமனார் பத்மநாபய்யர்...'

'சௌக்கியமாயிருக்கிறார்!' என்றான் மணி. இதில்தான் சிறிது அவசரப்பட்டுவிட்டான் அவன்.

'இருக்கிறாரா! உம்! அவர் காலமாகி விட்டதாகப் பத்திரிகையில் வந்திருந்ததே?'

'அது வேறே ஆசாமியாயிருக்கணும்!' என்றான் மணி ஒரே போடாக. எனினும், அவனுக்கு வியர்த்துவிட்டது. 'இது யார் இவன் கடன்காரன்' என்று வாயோடு முணுமுணுத்துக் கொண்டான். டயரியில் கண்ட விஷயத்துக்கு மேல் கேட்டால் அவன் என்ன பண்ணுவான்? தவிர, இப்போது கோமதி ஒரு பீரோ இடுக்கிலிருந்து அவர்களை உன்னிப்பாகக் கவனிப்பதைக் கண்டான். இதெல்லாவற்றிலுமிருந்து எப்படியாவது தப்பினால் போதும்போல் இருந்தது. வேதராம அய்யரோ அவன் கையைப் பிடித்துக் கொண்டு, 'சொல்லுங்கள், ஸார்! அந்த முல்லைவாசல் கேஸ் எந்த மட்டிலிருக்கிறது! ஜட்ஜ்மெண்ட் சொல்லியாகி விட்டது என்கிறார்கள்; ரிஸெர்வ்ட் என்கிறார்கள். இதில் எது நிஜம்?' என்றார்.

மணி அவர் கையை உதறிக்கொண்டு, 'நான் என் தகப்பனார் விஷயங்களைக் கவனிப்பதில்லை' என்றான்.

'சும்மா! அதெல்லாம் மறைக்காதேயும்! பலே கைக்காரர் நீர்! உமக்கு இது தெரியாமல் இருக்குமா? என்ன இருந்தாலும் அந்த நடேசய்யருக்கு சான்ஸ் ஜாஸ்தி என்கிறார்களே, சரிதானே அது?'



'இருக்கலாம்.'

'நம்ப ஜமீன்தார் எதிர்கட்சிக்கு உதவி செய்யறாப்பலே இருக்கு!'

'அது அவர் இஷ்டமாயிருக்கும்.'

'ஹூம்... எல்லாம் கூடிய சீக்கிரத்திலே பேப்பரிலே வந்துடறது!' என்றார் வேதராம அய்யர். பிறகு, 'உங்கள் பெயரென்ன? அதைச் சொல்லவில்லையே!' என்றார்.

'ரங்கராஜன்' என்றான் மணி.

'ரொம்ப நல்ல பேர், ரங்க-ராஜன், ராஜ-ரங்கன்! பேஷ், நன்றாக இருக்கிறது! நம்ப பத்மநாபய்யர் இருக்கிறார் என்கிறீர்களே, அது ஆச்சரியமாயிருக்கே!'

'அப்படித்தான் இருக்கும். அவர் உயிருடன் இருக்கிறாரே!'

'என்ன விலாசமோ?'

'எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்று கேட்டான் மணி வெறுப்புடன்.

'ஒன்றுமில்லை... இப்போ வெயில் எப்படியிருக்கிறது! வெயிலைத் தணிப்பது ஈசுவரன் செயலில் இருக்கிறது. அதற்கு ஒரு தபம்; ஒரு ஜபம் ஏற்பாடு செய்யப்போகிறேன். கனவான்கள், தனவான்கள்தான் சகாயம் செய்ய வேண்டும். ஏன், நீங்கள் கூடத்தான் உபயம் கொடுக்க வேண்டும்!'

'எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை, ஸார்!' என்றான் மணி.

'அப்படித்தான் சொல்லுவீர்கள்; ஆனால், கொடுத்துவிடுவீர்கள். உங்கப்பாகூட அப்படித்தான்; ரொம்ப இளகின மனசு அவருக்கு!'

இந்தச் சமயத்தில் எங்கிருந்தோ பாலு மறுபடி வந்துவிட்டான். 'ஏ ஹிட்லர்! ஹிட்லர்! உன்னை நன்னா உதைக்கணும்னு டிரைவர் மாமா சொன்னா!' என்றான் நட்ட நடுவில் நின்று.

மணி முகத்தில் அசடு வழிந்தது. 'அது யார் அவன் டிரைவர்? எனக்குத் தெரியாதே அவனை!' என்றான்.

பிரணதார்த்தியின் தமக்கை, இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தவள், 'புதுசா ஒருத்தனை வேலைக்கு வச்சிருக்கு; மூணு நாளாச்சு!' என்று விஷயத்தை விவரித்தாள்.

'நல்ல ஆள்தானே? இந்த நாளில், பார்த்து வைத்துக் கொள்ள ணும். திருட்டுப் பசங்களெல்லாம் டிரைவராக வந்துவிடு கிறான்!' என்றான் மணி. சமயம் ஏற்பட்டபோது இப்படி ஒரு வார்த்தை போடுவதே உசிதம் என்றுதான், அவன் அதைச் சொல்லி வைத்தான். அதற்கு அவனுக்குக் கிடைத்த பதில்தான் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

'இவனெல்லாம் அப்படி இல்லை. பிரணதார்த்திக்கு ஒரு மனுஷாளைப் பார்த்தவுடனேயே நல்லவன் கெட்டவன்னு தெரிந்துவிடும்!' என்றாள் அவள், சந்தேகத்துக்குச் சிறிதும் இடம் வைக்காமல்.

மணிக்கு மேலும் அங்கே தாமதிக்க மனமில்லை. அவன் தெரிந்துகொள்ள விரும்பி வந்த விஷயமோ வெளியாகிவிட்டது. ஆகவே, 'சரி, இரண்டோர் இடங்களில் டிரைவர்கள் அயோக்கி யர்களாக இருப்பது காதில் பட்டது; சொன்னேன். எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது அல்லவா? எனக்கு அவசர ஜோலி ஒன்று இருக்கிறது. இன்னொரு சமயம் வரேன்' என்று சொல்லிக்கொண்டு எழுந்தான்.

'என்னைக் கவனிக்காமல் போறீரே, ஓய்!' என்று கேட்டார் அய்யர்.

மணி அவரை வெட்டுகிறாற்போல் பார்த்துவிட்டு, மௌனமாக வெளியே வந்தான்.

தயாராகக் காத்திருந்த பாலு, 'ஏ ஹிட்லர்! எங்க டிரைவர் மாமாவையா திருடன் என்கிறே! நீதான் ஹிட்லர்! நீதான் திருடன்... டிரைவர் மாமா வரட்டும்! உன்னைக் கட்டிவைச்சு நன்னா உதைக்கச் சொல்றேன் பார்!' என்றான்.

மணி அப்போது ஓர் அசட்டுக் காரியம் செய்தான். வாசற்புறம் யாரும் இல்லை என்பதைப் பார்த்துக் கொண்டு பாலுவை நெருங்கி அவன் தலையில் நறுக்கென்று ஒரு குட்டு வைத்துவிட்டு, வேகமாக வெளியேறினான். பாலுவுக்குக் குட்டின் வலி ஐந்து நிமிஷத்தில் பறந்து போய்விட்டது; ஆனால், அந்தக் குட்டை மட்டும் அவன் மறக்கவே இல்லை.

மணி வெளியேறிய பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் பிரண தார்த்தி போலீஸ் ஸ்டேஷனில் ஸ்டேட்மென்டில் கையொப்ப மிட்டுவிட்டு வந்தார். வரும்போது கடுங்கோபமாக வந்தா



ரென்று சொல்ல வேண்டியதில்லை. 'கழுவிற்கேற்ற கோமுட்டி' யாக வேதராம அய்யர்தான் அவர் கோபத்தின் வேகத்தைத் தாங்கிக்கொள்ள முதலில் எதிர்ப்பட்டார்.

'நமஸ்காரம்!' என்றார் அய்யர்.

'யாரையா நீ? ஹே!' என்று கேட்டார் பிரணதார்த்தி.

'தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.'

'என்ன கேள்விப்பட்டு விட்டீர்?'

'சித்தே முந்திதான் நம்ம போலீஸ்...' என்று ஆரம்பித்தார் வேத ராம அய்யர். 'போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமுலு உங்களைப் புகழ்ந்தார்' என்பதுதான் அவர் சொல்ல விரும்பியது. ஆனால் பாவம், பிரணதார்த்தி ஒரு கான்ஸ்டபிள் கையில் அகப்பட்டுக் கொண்டதை அவர் கண்டாரா?

'எவன் ஐயா போலீஸ்! என்ன ஐயா கேள்விப்பட்டுவிட்டீர்?' என்று சீறினார் பிரணதார்த்தி.

'கோபப்படக் கூடாது! அதனால் ஏற்படுவது தாபம்; அல்லது பெரியவாள் சாபம்!'

'என்ன... உளறல் இது? ஹே!'

'உளறலுமில்லை, குளறலுமில்லை! உங்களை நான் கேட்க வந்தது...'

'பிச்சைதானே? ஹும்!'

'பிச்சை இல்லை... உங்களுக்கு இச்சையிருந்தால்...'

'நிறுத்தய்யா உன் பிரலாபத்தை...'

'என் பிரலாபம் ஒரு காலும் விரசமாயிராது. இஷ்டமிருந்தால் உங்களுக்கும் நஷ்டமில்லை; எனக்கும் கஷ்டமில்லை.'

'போம் ஐயா! போம்! மென்னியைப் பிடிச்சுத் தள்ளப் போறேன்! ஹே!' என்று பாய்ந்து வந்தார் பிரணதார்த்தி. அவர் கோபம் எல்லை கடந்துவிட்டது.

'ஏன்! மெல்லப் பேசுங்களேன்! என் வியாபாரின்னா 'வள்' ளு விழுணுமா!'

'ஹே! வந்து விட்டான் யாசகத்துக்கு ஒரு கழியையும் தூக்கிண்டு! போ!' என்று விரட்டினார் பிரணதார்த்தி.

படி இறங்கிய வேதராம அய்யர் தடியைத் தூக்கிப் பிரண தார்த்திக்குக் காண்பித்து, 'இது கழி இல்லை, ஸ்வாமி! இது தர்ம தண்டம், இதனால் கிடைப்பது தண்ட தர்மம்! உம் க்ஷேமத்துக் காகச் சொல்ல வந்தேன்! உமக்கு க்ஷாமந்தான் வரும்!' என்று கூறிவிட்டு, வேகமாய் இறங்கினார்.

அவர் நகர்ந்ததும் பிரணதார்த்தி, 'ஏ, பாக்கியம்! டிரைவர் வந்துட் டானா? ஹே! இந்த மாதிரி பிச்சைக்காரப் பசங்களை என்னத் துக்கு சோபாவிலே உட்கார்த்தி வைக்கிறே!' என்று அதட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

வேதராம அய்யர் அங்கிருந்து திரும்பியவர்தான் வழியில் ரங்க ராஜனைக் கண்டு, ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டது... அவர் பேச்சைக் கேட்ட ரங்கராஜன் பயித்தியம் பிடித்தவன்போல் வீட்டை நோக்கி ஓடிவந்தான் அல்லவா? அப்படி வந்தவன் பிரண தார்த்தியின் வீட்டை நெருங்கியதும் சற்று நின்று கவனித்தான்.

வேதராம அய்யர் சென்றவுடனேயே கோமதி மேல்மாடிக்கு ஏறிவிட்டாள். அது மொட்டை மாடியாகையால், பால்போல் நிலா அடித்துக் கொண்டிருந்தது. சந்திரனை நிமிர்ந்து நோக்கிய அவள் கண்களிலிருந்து இரண்டு பெரிய சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தன. தலைப்பால் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு, கைப்பிடிச் சுவரண்டை வந்து நின்று வெளியே நோக்கினாள்.

அவள் மனம் டிரைவரைப் பற்றி எண்ணியது. அன்று முழுவதும் அவன் அவளைச் சந்திக்கவே இல்லை. ஏன்? வேண்டுமென்றே சந்திக்கவில்லையா? இருக்காது, இருக்காது! அதுதான் போகட்டும். இப்போது அவன் எங்கே போய்விட்டான்.

அவள் மனத்துக்குள் எழுந்த கேள்விக்குப் பதில்போல், பங்களாவுக்கு வெளியே ஒருவன் ஓடிவந்து நிற்பதை அவள் கண்டாள். அவன் நெருங்கியவுடன், டிரைவரே தான் என்பதில் அவளுக்குச் சந்தேகமில்லை. அவன் ஏன் ஓடி வருகிறான்? பின் ஏன் நிற்கிறான்? அவள் மேலும் உற்றுக் கவனித்தாள்.

நின்ற ரங்கராஜன், மெல்லப் பதுங்கிப் பதுங்கிப் பூனைபோல் நெருங்கினான். நேரே பங்களாவினுள் நுழையாமல் ஒருவர்



கண்ணிலும் படாமல், ஒதுங்கிச் செடிகளில் பதுங்கினான். கோமதிக்கு நேர்கீழே இருந்த ஒரு ஜன்னலண்டை வந்ததும், நிமிர்ந்து செடிகளை விலக்கி உள்ளே எட்டிப் பார்த்தான்.

கோமதி கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கவனித்தாள். ஏன் இந்த ரகசியம், மர்மம் எல்லாம்? அவளுக்கு ஒன்றுமே விளங்க வில்லை. உண்மையில், அவன் திருடனாகவேயிருக்கலாமோ?

இதொன்றும் அறியாத ரங்கராஜன், தன் பெயரைச் சொல்லித் திரியும் ஆசாமி ஹாலில் இருக்கிறானோவென்று கவனித்தான். ஹால் காலியாக இருக்கவே வீட்டினுள் நுழைந்து மாடிக்கு வந்தான். பிரணதார்த்தி அப்போது தம் அறையில் உட்கார்ந்து, பாக்கியத்துடன் புதிதாகச் செய்து வரப்போகும் ஒரு புருச் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார். அங்கே அப்போது நுழைவது சரியல்லவென்று மேல்மாடிக்கு ஏறினான் ரங்கராஜன். இன்னும் அங்கேயேதான் வெளியே வெறிக்கப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள் கோமதி. 'என்ன, காலையிலிருந்து கண்ணிலே காணோமே?' என்று கேட்டான் ரங்கராஜன்.

அவன் குரல் கேட்டு அவள் மெல்லத் திரும்பினாள்.

'என்னை எதற்காகக் காண வேண்டுமாம்? நீங்கள் வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு போகிறதுதானே?' என்று கேட்டாள் அவள்.

'இல்லை; இங்கே ஒரு முக்கியமான காரியம்...' என்று தொடங்கியவனை நிறுத்தி அவள், 'ஏன்! அப்போது உங்களுக்கு டிரைவர் வேலையைத் தவிர வேறொரு காரியமும் இருப்பதாக ஒப்புக்கொள்கிறீர்களா!' என்று கேட்டாள் வெடுக்கென்று.

தன் மனத்தைத் திறந்துகாட்ட கோமதியே ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதாக நினைத்த ரங்கராஜன், 'ஆட்சேபணை என்ன?' என்றான்.

'அப்படியானால் நீங்கள் நிஜமாக டிரைவர் இல்லையே!'

'இல்லை, வாஸ்தவம்... ஆனால்...'

'புரிந்துகொண்டேன், உங்கள் பெயர்கூட...'

'ராஜாராமன் இல்லை!' என்று ஒப்புக்கொண்டான் அவன்.

இதுவரை மேகத்தில் மறைந்திருந்த சந்திரன் வெளிக் கிளம்பி னான். கோமதியின் முகத்தில் கொதித்த கோபத்தை அப்போது கண்டதும் அவன் அஞ்சிவிட்டான். 'முழுக்கவும் சொல்லிவிடு கிறேன். அப்புறம்-' என்று ஆரம்பித்தான்.

'எனக்கு எல்லாம் தெரியும்! உங்கள் விளையாட்டெல்லாம் போதும்! ஜாக்கிரதையாகவே இருங்கள்!' என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று அவள் மாடியில் இறங்கினாள்.

ஒரு கணம் திகைத்த ரங்கராஜன், அவள் தன் பேச்சைத் தப்பாக அர்த்தம் செய்துகொண்டதாக உணர்ந்தான். 'இதென்ன கஷ்ட காலம்! இவள் என்னவோ மாதிரி பேசுகிறாளே! என்ன அனர்த்தம் இது!' என்று எண்ணியவாறு 'கோமதி! கோமதி!' என்று கூப்பிட்டுக்கொண்டே கீழே பின்தொடர்ந்தான். ஆனால், மாடிப் படியை அவள் அதற்குள் கடந்துவிட்டாள்.

அவன் கீழே இறங்கியபோது, பிரணதார்த்தி தம் அறையிலிருந்து வெளிப்பட்டுப் புன்னகையுடன்- 'என்ன ராஜாராமன்! என்ன சமாசாரம்! எப்ப வந்தே? வா இப்படி! என் அறைக்குள் வந்து விஷயத்தைச் சொல்லு!' என்று அழைத்தார்.



## அத்தியாயம் - 9

'நடிப்பு என்பது மிக மிகக் கடினமான கலை. ஆனால், இது ஸ்திரீகளிடம் இயற்கையாகவே காணப்படுகிறது.'

**- ஒரு நாடக விமரிசகர்**

எத்தனையோ நவீனங்களையும் துப்பறியும் கதைகளையும் படித்துக் கரைகண்டிருந்த ரங்க ராஜனுக்கு, எந்தக் கதையைச் சொன்னாலும் பாதி கேட்கும் போதே முடிவைச் சொல்லும் சாமர்த் தியம் உண்டு. ஆனால், இந்தத் திறமை அவன் சொந்த விஷயத்தில் ஏனோ பயனற்றுப் போய் விட்டது. பிரணதார்த்திஹரா அய்யரை அவன் பின் தொடர்ந்து அவருடைய அறைக்குள் சென்ற போது, சற்று நேரத்துக்குப் பின் உத்தியோகம் தனக்கு இருக்குமா போய்விடுமா என்பதைப்பற்றி அறியாதவனாகவே இருந்தான். ஆனால், கோமதிக்குக்கூட அவன்மீது ஒருமாதிரி சந்தேகப் படும்படி ஆயிற்று என்ற எண்ணமானது, நடக் கிறது நடக்கட்டும் என்று ஓர் அசட்டு-முரட்டு-தைரியத்தையே அவனுக்கு அளித்திருந்தது.

பிரணதார்த்தி ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டு 'உம்... போய்விட்டு வந்துட்டயாக் கும்! இப்படிக் கொடு அந்தப் படத்தை!' என்று கையை ஆவலுடன் நீட்டினார்.





ஒரு நிமிஷம் பதில்சொல்ல ரங்கராஜன் தாமதித்தான். அந்த ஒரு நிமிஷத்தில் எவ்வளவு உறுதியைச் சேகரித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் அவன் சேகரித்துக் கொண்டான்.

'ஸார்! நீங்கள் சொன்ன வார்த்தையைத் தட்டக் கூடாதென்று என்னால் முடிந்தவரை செய்து பார்த்துவிட்டேன்' என்று சொல்லி நிறுத்தினான்.

'உள்ளே நுழையவே முடியவில்லையோ? ஹே!' என்று கேட்டார் பிரணதார்த்தி.

'நுழைந்தே விட்டேன், ஸார்! அந்த வீட்டில் ஒரு டிராயர், ஒரு பெட்டிக் கூடப் பாக்கியில்லை; அவ்வளவையும் குடைந்து பார்த்துவிட்டேன். படம் எங்குமே இல்லை!'

'நன்றாய்ப் பார்த்தாயா?'

'நன்றாகப் பார்த்துவிட்டேன். இனிமேல் அவளையே நேரில் கேட்டால்தான் அது இருக்கும் இடம் தெரியும். சந்தேகமே வேண்டாம்!'

'ஹூம்' என்று பெருமூச்சு விட்டுச் சிறிது யோசனையில் ஆழ்ந்தார் பிரணதார்த்தி. அந்தச் சமயத்தில் அவர் என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்ளத் தயாராகத்தான் ரங்கராஜனும் காத்திருந்தான். பிரணதார்த்தி நிமிர்ந்து 'சரி! உன்மேல் பிசகில்லை. உன்னால் முடிந்தவரை செய்து பார்த்துவிட்டாய். அடுத்த தடவையிலாவது அது கிடைக்காமல் போகிறதா, பார்த்துவிடலாம்!' என்றார்.

'இன்னொரு தடவையா?' என்றான் ரங்கராஜன் ஆத்திரமாக.

'ஆம், இன்னொரு தடவைதான்! இப்போ அவளை நேரில் பார்த்து, ஏதாவது பணம் கொடுத்து அதை வாங்கிவிடுகிறது! என்ன சொல்றே, ஹே!'

'அவள் கொடுப்பாளா? எனக்குத் தோன்றவில்லை!'

'ஒரு சான்ஸ் பார்த்துவிடுகிறது! பணம் என்றால் உடனே யாருமே ஒப்புக்கொள்வார்கள். அதுவும் பொன்னாயிக்குப் பணம் என்றால் உயிர். நீ போ; நான் அனுப்பினேன்னு சொல்லிக் கேட்டுப் பார்! ஹே.'

ரங்கராஜன் மோவாய்க்கட்டையைச் சந்தேகத்துடன் தேய்த்துக் கொண்டான். மறுபடி இந்தக் காரியமாகப் போவதில் அவனுக்குத் துளிகூட இஷ்டமில்லை; அது பலன் அளிக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. அவனுக்கு அப்போது புதிதாக ஏற்பட்டிருந்த ஆச்சரியம் எல்லாம் இந்தப் பிரணதார்த்தி, ஏன் தன்னை உடனே வேலையைவிட்டு விரட்டாமல் வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதுதான். சீனு சொன்னபடி, திருடிக்கொண்டு வந்த பண்டத்தை ஒப்புவிக்காததுதான் காரணமாக இருக்குமோ என்று எண்ணினான். 'சரி, பார்க்கலாம்' என்று ஒரு தீர்மானத்துடன், 'இருக்கட்டும், ஸார்! நான் போய்ப் பார்க்கிறேன். ஆனால், அவள் என்னை வெறுங்கையுடன் அனுப்பினாள் என்றால் என்மேல் நீங்கள் குற்றம் சொல்லக்கூடாது!' என்றான்.

'என்ன கேட்கிறாள் என்று பார்த்துக்கொண்டு வாயேன், ஹே!'

'ஆகட்டும், ஸார்... எங்கே வேலையை விட்டு விரட்டி விடுவீர்களோ என்று நான் பயந்துகொண்டே வந்தேன், ஸார்!'

பிரணதார்த்தி அப்போது ரங்கராஜனை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவர் வேதராம அய்யருடன் சண்டை போட்டபின் கோபம் எல்லாம் தணிந்துபோய், சகஜமாக மனிதர்களுக்கு ஏற்படுவது போல் சற்று அதிகமாகவே மனம் இளகிப் போயிருந்தார்.

'ஆமாம், ராஜாராமா! உனக்காக என் ஒய்ஃப்புடன்கூடச் சண்டை போட்டு பொய் சொல்லியிருக்கிறேன். 'அந்த டிரைவர் கள்ளப் பயல்; இங்கே வைத்துக்கொண்டீர்களானால் ஒரு நிமிஷம்கூட எனக்குத் தூக்கம் வராது' என்றாள். 'அடி அசடே, போ! எவனோ விஷமத்துக்குச் சொல்லியிருக்கான். நம்ம ராவ்பகதூர் நாகநாத முதலியாரே சிபாரிசு பண்ணியிருக்கார் இவனை. அப்புறம் என்ன சந்தேகம் நமக்கு!' என்று ஒரே அடியாக அடித்துவிட்டேன். அதுக்காக நீ நம்ம காரியத்திலே அசிரத்தையாயிருந்துடப் படாது, ஹே!' என்றார்.

'இருக்க மாட்டேன், ஸார்! என்னால் முடிஞ்சவரைக்கும்...'

'ரைட்! காலையிலே முதல் காரியமாகப் பார்த்துவிட்டு வா! இப்போ நேரமாச்சு, நீ போ!'

அன்றிரவு ரங்கராஜன் தூங்கவே இல்லை. இந்த வேலையில் இன்னும் அவன் இருப்பதே ஆச்சரியமாக இருந்தது. அவ



னுடைய மனம் பல விஷயங்களைப் பற்றி எண்ணியது. எல்லாவற்றிலும் முக்கியமாக, கோமதிக்கு ஏன் கோபம் வரவேண்டும் என்று ஆச்சரியப்பட்டான். அவன் என்ன செய்துவிட்டான்? இந்த ஒரு கவலைதான் கடைசிவரை அவன் மனத்தை வெகு நேரம் சஞ்சலத்தில் ஆழ்த்தியது. 'இருக்கட்டும்; நாளைக்குள் எப்படியாவது கோமதியைச் சந்தித்து, உண்மையை அவளுக்குச் சொல்லி அவள் சந்தேகத்தையும் போக்கலாம்' என்று முடிவாகத் தீர்மானித்தான்.

மறுநாள் எழுந்ததுமே தோட்டத்தில் கோமதி நின்றுகொண்டிருந்ததைக் கண்டான். அவளை அணுகவும், அவள் சட்டென்று அவன் வருவதைக் கவனித்து, 'அடே பாலு! உள்ளே வாடா!' என்று பாலுவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நிற்காமல் உள்ளே சென்றுவிட்டாள். ரங்கராஜனுக்கு சொரேர் என்றது.

எட்டு மணிக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தபடி பிரணதார்த்தியும் அவனைக் கூப்பிட்டுவிட்டார். 'என்ன ஹே! நான் நேத்து சொன்னது ஞாபகம் இருக்கிறதா?' என்றார்.

'இருக்கு, ஸார்! கிளம்பறேன்.'

'ஜாக்கிரதையாகப் பேசணும்; காரியம் பழமாகணும்! தெரிந்ததா?'

'தெரியும், ஸார்! என் சொந்த காரியம் மாதிரி செய்கிறேன்.'

'சரி! வண்டியையும் கொண்டுபோ! ஜம்னு வாசலிலே அதை நிறுத்தினாலே, அவன் மதிப்பாக நினைத்துக் கொள்வான். தைரியமாகப் பேசு! நாம் ரொம்ப அவசியமாக அதைக் கேட்கிறோம்னு வெளியிட்டுக்கப்படாது! தெரிந்ததா? ஹே!'

'தெரியும், ஸார்!'

பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம் ரங்கராஜன் பெரிய மோட்டாரை எடுத்துக்கொண்டு பனகல் பார்க்கைச் சுற்றிக் கொண்டு சென்றான். மோட்டார் ஓட்டியபோது அவன் கவனமெல்லாம் எங்கேயோ இருந்தது. தான் போகும் காரியம் பலிக்குமென்பதில் துளியாவது நம்பிக்கை இல்லை. ஒருகால் அது தவறினால்...

மோட்டார் ராஜக்கோனார் தெருவுக்கு வந்தது. 'இதற்கு இவ்வளவு சமீபத்தில் வந்துவிட்டா நேற்று இதைக் கண்டு

பிடிக்காமல் போனோம்?' என்று அவன் நினைத்துக் கொண்
டான். ஒரு நொடியில் பதினாலாம் நம்பர் வீடும் வந்துவிட்டது.

ரங்கராஜன் இறங்கினான். தைரியமாகப் படி ஏறி ஹாலை அடைந்
தான். ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீ அவனைக்
கண்டதும் எழுந்தாள். ரங்கராஜன் ஒரு க்ஷணம் திடுக்கிட்டான்.
அவள் முகத்தில் இலேசாகக் கோமதியின் சாயல் இருந்ததாக
அவனுக்குப்பட்டது. தாராளமாக முப்பது வயதிருக்கும். அவள்,
உடையின் மூலம் சுமார் பதினெட்டு வயது மங்கையைப்போல்
காண்பித்துக்கொள்ள மிகச் சிரமப்பட்டிருந்தாள்.

'யாரு நீங்க?' என்றாள் அவள் கணீரென்ற புருஷக் குரலில்.

'இங்கே பொன்னாயி என்கிற...' என்று தயங்கினான் ரங்கராஜன்,
'தாசி' என்று சொல்வதா, வேண்டாமா என்று திகைத்தான்.

'சரி... இங்கேதான்! மேலே சொல்லுங்க!' என்றாள் அவள். அவ
ளுடைய பேச்சில் துவனித்த துணிச்சல் அவனுக்கு வியப்பாக
இருந்தது.

'நான் ஒரு விஷயமா அவரைப் பார்க்கணும்.'

'பார்த்துக்கிட்டேதானே இருக்கிறீங்க?' என்றாள் அவள்
குறும்பாக.

'ஓ! நீங்கதானா அது? ஒருத்தர் என்னை இங்கே அனுப்பிச்சார்.'

'உங்களுக்கா வரத்தெரியவில்லையா? சரிதான்! அது யாரு அந்தப்
பெரிய ஒருத்தர்?'

'அதைச் சாவகாசமாகச் சொல்லணும்.'

'அப்படியானா, நாள்ளை மத்தாநாள் வாங்க. இப்ப நின்னா எனக்கு
ஸ்டூடியோவுக்கு நேரமாயிடும்!' என்று உள்புறமாக அவள்
நகர்ந்தாள்.

'இல்லை, இல்லை... சற்று நில்லுங்கள். சொல்லி விடுகிறேன்...
உங்களுக்குப் பிரணதார்த்திஹர அய்யர்னு ஒருவரை ஞாபகம்
இருக்கிறதா?' என்று கேட்டான் தயக்கத்துடன்.

'ஞாபகம் வருது! போன வருஷம் ரயிலிலே விழுந்து செத்துட்
டாரே, அவருதானே?'



'அவர் இல்லை. நான் சொல்கிறவர் இன்னம் சாகவில்லை.
உயிரோட, இங்கே மாம்பலத்திலேயேதான் இருக்கார்!'

'பின்னே அவரைப் போய் ரயிலிலே விழச் சொல்லுங்க... எனக்கு
நேரமாகுது!'

அவன் வருமளவும் சும்மா உட்கார்ந்து சோம்பல் முறித்துக்
கொண்டிருந்த பொன்னாயி, ஒரு காரியம் என்று தான் வந்ததும்
அவசரப்படுவதை அப்போது உணர்ந்தாள். தனக்குக் காரியம்
ஆகவேண்டியிருப்பதை உத்தேசித்து, 'விஷயம் என்னன்னா,
இந்தப் பிரணதார்த்திஹர அய்யர் எள் வியாபாரம் பண்ணி
நிறையப் பணம் சேர்த்திருக்கிறவர். அவர்கூட முன்னே இங்கே
உங்களைப் பார்க்க வரது உண்டுன்னு...' என்று தயங்கினான்.

பொன்னாயி சிறிது யோசித்தாள். 'ஓ! நம்ம 'எள்ளுத் தாத்தா'
வையா சொல்றீங்க! அடி கனகம், அடி கனகம்! நம்ம எள்ளு
தாத்தா ஒருத்தரை அனுப்பிச்சிருக்காருடி, கனகம்' என்று
சிரிப்பும் கேலியுமாகக் கூச்சல் போடத் தொடங்கினாள். 'கனகம்'
என்ற குரல் கேட்டு, நடுவயதுள்ள ஒரு ஸ்திரீ சொருக்கும்
தலையுமாக வாய் நிறைய புகையிலையைப் குதப்பியவாறு
அங்கே வந்து நின்றாள்.

ரங்கராஜன், 'அவர்தான் என்னை இங்கே அனுப்பினார்' என்றார்.

'நீங்க யாருங்க?'

'நான் அவர் மோட்டார் டிரைவர்.'

'ஐய்யயோ! நான் யாரோ ஜமீன்தார் பிள்ளையாங்காட்டியும் வந்
துட்டாருன்னா நினைச்சுட்டேன்! அப்பப்பா! எள்ளுத் தாத்தா'வுக்கு
மோட்டார் டிரைவராமேடி, கூத்தைக் கேட்டியாடி, கனகம்?
அப்படின்னா அவரு மோட்டார் வேறே வச்சிருக்காரா?'

'வாங்கியிருக்கார்.'

'உம்... அப்புறம்?'

ரங்கராஜன் சுருக்கமாகத் தான் வந்த காரியத்தை விவரித்து
'உங்களை அவர் கேட்பது அவ்வளவுதான்!' என்று முடித்தான்.

'பாவம்! அய்யரு ரொம்பக் கவலைப்படறாராக்கும்?' என்றாள்
பொன்னாயி முகத்தில் இரக்கம் தோன்ற.

ரங்கராஜன் அதை நம்பி, 'ஆமாம்... உங்களைக் கேட்டு...' என்றான்.

''வாங்கிண்டுடலாம்னு பார்க்கிறாரு, அய்யர்; இல்லை! அது இங்கே நடக்காது! போய்ச் சொல்லுங்க!' என்றாள் பொன்னாயி அழுத்தந்திருத்தமாக.

'நீங்கள் அப்படிச் சொல்லப்படாது... அவரும் ஏதோ பணம் கொடுப்பதாகச் சொல்கிறதனாலே...'

'அதனாலே?-'

'நீங்கள் விஷயத்தைத் திரும்ப யோசித்து, எவ்வளவு பணம் வேணும்னு சொன்னால் நான்...'

'பணம்தானே? ஆயிரம் ரூபாய்' என்று ஆரம்பித்தாள் பொன்னாயி.

பெரிய தொகையாச்சே அது என்பதற்கு அறிகுறியாக ரங்கராஜன் புருவத்தை உயர்த்தினான். அவன் முகத்தையே கூர்மையாகக் கவனித்து வந்த பொன்னாயி, 'கொடுத்தாலும் போட்டோ கிடைக்காதென்று போய்ச் சொல்லுங்க, ஐயா!' என்றாள்.

ரங்கராஜன் பதில் சொல்லாமல் பரிதாபமாக அவளையே நோக்கினான்.

'அந்தப் பிரணதார்த்திதான் பயித்தியக்காரராட்டமா போகச் சொன்னார்னா, நீங்ககூட அதைக் கேட்டுண்டு வந்தீங்களே!' என்றாள் அவள்.

'உங்கள் தொகை என்னவென்று சொல்லுங்களேன் அதைக் கேட்டுக்கொண்டு போகிறேன்!' என்றான் ரங்கராஜன் பிடிவாதமாக.

பொன்னாயி சிந்தனையில் ஆழ்ந்தாற்போல் தோன்றியது. 'சரி, எழுதிக்கிங்க... ஏழாயிரத்தி முந்நூத்தி நாற்பத்தி நாலு ரூபா ஆறே காலணா...'

'அதற்குக் குறையாது?'

'அதை ஒரு செக்கிலே எழுதி, கிழிச்சுப் போட்டு, அதுமேலே அந்த அய்யரை எள்ளும் தண்ணியும் விடச் சொல்லுங்க!' என்றாள். பிறகு கடகட வென்று சிரித்தாள்.



ரங்கராஜனுக்கு அவள் குணம் கிஞ்சித்தும் பிடிபடவேயில்லை. அவள் பரிகாசம்தான் செய்கிறாள் என்று ஒருவாறு புரிந்து கொண்டு, 'அதாவது, படத்தைத் தர முடியாது என்கிறீர்களா?' என்று கேட்டான்.

'அதாவது, நீங்கள் புரிந்துகொண்டீர்களே, ஐயரே!' என்றாள் அவள்.

'அப்போ நான் போகலாமா?'

'இருந்து காபி சாப்பிட்டுட்டுப் போங்க!' என்றாள் அவள். அதைப் பரிகாசமாகச் சொன்னாளா யதார்த்தமாகத்தான் சொன்னாளா என்பதுகூட ரங்கராஜனுக்கு விளங்கவில்லை. ரங்கராஜன் ஒரு சந்தேகமான நிலையில் தயங்கி நின்றபோது, ஓர் ஆள் அவசரமாக வந்தான். 'அம்மா! அதை எங்கெல்லாமோ தேடியாச்சுங்க! எங்கேயுமே காணோமுங்க!' என்றான்.

பொன்னாயியின் முகம் கறுத்தது. 'உபயோகமத்த ஆளுங்க! அது எப்படினாச்சியும் வந்தாவணும். மறுபடி பார்க்கச் சொல்லு; அது இல்லைன்னு இங்கே சொல்லிக்கிட்டு வரப்படாது, சீக்கிரம் போ!' என்றாள். பிறகு கனகத்தின் பக்கத்தில் திரும்பி, 'இது என்னாடி கனகம்! இப்படிச் சொல்றானுவளே! என்னடி செய்வேன்?' என்றாள். அப்போது ரங்கராஜன் நிற்பதைக்கூட அவள் மறந்துவிட்டாள் என்றே தோன்றியது.

'சும்மா அலட்டிக்காதே! தானே வந்திடும், பாரு! நீ அதை அஜாக்கிரதையாக விட்டுட்டுப் போயிருக்கப்படாது!' என்றாள் கனகம்.

'காரிலே வைச்சுட்டு அந்த ஓட்டலுக்குள்ளே போனேனா, நாயை உள்ளே கொண்டாரக் கூடாதுன்னான் அந்தப் பாவி... திரும்பறத்துக்குள்ளே காணோமே, மாயமாய்ப் போயிடுச்சே!'

'நேத்துச் சாயந்திரம் நம்ம ஊட்டுச் சடைநாயி காணாமே போச்சுங்க!' என்றாள் கனகம்.

ரங்கராஜனுக்கு ஒரு சந்தேகம் தட்டியது. 'சடை நாயா? நேத்துச் சாயங்காலமா? எங்கே போச்சு?'

'ஆமாமுங்க... இங்கே மாம்பலத்திலேயே தான் காணாமே போச்சு!'

'உம்... ஒரே கறுப்புச் சடையாக இருக்கும்; இல்லையா!'

'ஆமாமுங்க... அப்படித்தான்.'

'வாலிலே மாத்திரம் வெளுப்பு.'

'அதேதானுங்க...'

பொன்னாயி, 'எங்கே பார்த்தீங்க அதை?' என்றாள் சிரத்தையுடன்.

'எனக்குத் தெரியும், அது இப்போ இருக்கிற இடம்!'

'அப்படின்னா பாருங்களேன்!'

'நான் கொண்டுவந்தால், எனக்கு உபகாரம் பண்ணனும்.'

'நல்லாச்செய்யறேனுங்க! நன்னி மறப்பேனுங்களா? சீக்கிரம் போய்க் கொண்டாருங்க!' என்றாள் பொன்னாயி. அவள் கண்களில் அப்போது நீர் ததும்பியதாக ரங்கராஜன் நினைத்தான். முன்னாலே நிபந்தனைகள் பேசிக் கசந்து முகரக்கூடாதென்று தோன்றியதால், 'இதோ வந்து விட்டேன்!' என்று அங்கிருந்து ஒரே ஓட்டமாகக் கிளம்பினான் அவன்.

திடுதிடுவென்று ஓடி வந்த ரங்கராஜனைச் சீனு, 'என்னடா, என்ன! விஷயத்தைச் சொல்லு!' என்று கேட்டான்.

'விஷயம் அப்புறம் ஆகட்டும்! சடைநாயை என்னிடம் கொடு! அது பொன்னாயியின் நாய்!'

'இருக்கட்டுமேடா! இப்போ-'

'அதை அவளுக்குக் கொடுக்கணும்!'.

'கொடுக்கலாம்டா... சமாசாரத்தைச் சொல்லு முதலில்!'

'அப்புறம் சாவகாசமாக வந்து எல்லாம் சொல்கிறேன். நாய் எங்கே?' என்று சுற்றிப் பார்த்தான். அது ஒரு சோபாவில் கிடப்பதைக் கண்டு, ஒரே அள்ளாக அதை அள்ளித் தூக்கிக்கொண்டு, 'இதோ வரேண்டா' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு ரங்கராஜன் ஒரு நொடியில் திரும்பினான்.

பொன்னாயி நாயைக் கண்டதும், 'இதேதான்!' என்றாள். ஆர்வத்துடன் அதைத் தூக்கி அணைத்து முத்தமிட்டாள். பிறகு நாயை



முகத்துக்கு நேரில் தூக்கிப் பிடித்துக் கொஞ்சவும் தொடங்கி விட்டாள்.

'என் ஜில்லு இல்லாமல் எனக்குத் தூக்கமே வரலை, ஐயா! எங்கேடா ஜில்லு நீ போனே, போக்கிரி நாயே! இனிமேல் போ, இந்த ஐயாகிட்டே சொல்லி, உன்னை நன்னா அச்சு அச்சுனு அச்சு...'

ரங்கராஜன் பார்த்துக்கொண்டே நின்றான். தான் வந்த காரியம் பலிக்கலாம் என்ற நம்பிக்கைகூட அவனுக்குப் பிறக்கத் தொடங்கியது.

'நீங்க பெரிய உபகாரம் செஞ்சுட்டீங்க; போய்வாங்க ஐயா! நான் இந்த நன்னியை மறக்கவே மாட்டேன்' என்றாள் அவள் ரங்கராஜனிடம்.

'அந்தப் படத்தை கொஞ்சம் கொடுத்துவிடுங்கள்!' என்றான் அவன்.

'எந்தப் படம்?'

'பிரணதார்த்திஹர அய்யருடைய படந்தான்.'

'ஓ அதுவா? அதை மறந்துட்டேனே! அது ஏனுங்க உங்களுக்கு? 'அவ மாட்டேனு சொல்லிட்டா' ன்னு சொல்லிட்டுப் போங்க!'

ரங்கராஜன் முகத்தில் ஏமாற்றக் குறி தென்பட்டது. இந்த நடிகை தன்னை ஏமாற்றிவிட்டாள் என்ற ஆத்திரமும் வந்தது. அதற்குள் அவளே, 'இந்த உபகாரத்தை மட்டும் மறக்க மாட்டேனுங்க... உங்களை எள்ளுத் தாத்தா இதுக்காக வேலையை விட்டுத் தள்ளிச்சுன்னா நேரே என்னண்டை வந்து சொல்லுங்க. நான் வேறே வேலை பார்த்து...' என்று தொடங்கினாள்.

எங்கேயோ கடிகாரம் பத்து மணி அடித்தது கேட்டது. துள்ளிக் குதித்தாள் பொன்னாயி. 'ஐயையோ! பத்து மணியா? பத்து இருபதுக்கு நான் ஸ்டுடியோவிலே இருந்தாவணுமே! அந்த முதலியாரு வண்டி அனுப்பறேன்னாரு, அனுப்பாமே போய்ட்டாரே?' என்று அவள் துடித்தாள். நகத்தைக் கடித்துத் தன் மனவேதனையை வெளிப்படுத்தினாள்.

ரங்கராஜன் மனத்தில் இருந்த வெறுப்பு அதிகம்தான். அவள் ஆட்டபாட்டம் அவ்வளவும் வெறும் நடிப்புதான் என்பது

தெரியும். என்றாலும், நம்பிக்கையை மட்டும் விடவில்லை. ஏதாவது ஓர் உபகாரம் செய்து, அதற்குப் பிரதி உபகாரமாகப் படத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாதா என்றுதான் ஆசை தூண்டி யது. இதோ அவளுக்கு அப்படி உதவி செய்ய சந்தர்ப்பமும் இருக்கிறது.

'அம்மா, நான் பிரணதார்த்திஹர அய்யர் மோட்டாரைக் கொணர்ந்திருக்கிறேன். உங்களுக்கு இஷ்டமிருக்குமானால்-' என்று நிறுத்தினான்.

பொன்னாயி அவன் பேசி முடிக்கும்வரைகூடக் காத்திருக்க வில்லை. 'சமய சஞ்சீவி மாதிரின்னா நீங்க வந்திருக்கீங்க! பின்னே, போகலாம்!' என்று கிடுகிடென்று வாசற்புறத்துக்கு வந்துவிட்டாள். ரங்கராஜன் பின் தொடர்ந்தான்.

கடைசி முறையாக, 'அந்தப் படம்...' என்று ஆரம்பித்தான்.

'இப்போ பேசிண்டு நிக்க அவகாசம் இல்லையே. வண்டியிலே ஏறுங்க. போவச்சே எல்லாம் பேசிக்கிட்டே போகலாம்' என்றாள்.

பேச்சுக்கொடுத்துப் பார்க்கலாமே என்றுதான் அவனும் மோட்டாரில் ஏறினான். பொன்னாயி தான் போக வேண்டிய ஸ்டூடியோவின் பெயரைச் சொல்லி, 'பூந்தமல்லி ஹைரோடுக்கு விடுங்க, நானே வழி காண்பிக்கிறேன்' என்றாள்.

ரங்கராஜன் மோட்டாரைத் திருப்பினான். வீதிகள் அவன் முன் பறந்தன.

'ரொம்ப நல்லா விடுறீங்களே! நம்ம மொதலியார் கிட்டச் சொல்றேன்... நீங்கமட்டும் வேலையைப் பத்திக் கவலையை விடுங்க... நான் பார்த்துக்கறேன்' என்றாள் அவள்.

'அது சரி, அம்மா! கொஞ்சம் நான் இருக்கிற இடத்திலேயே இருக்கும்படி உபகாரம் செய்தாலே போதும்' என்றான் அவன்.

'நீங்க அங்கேயே இருங்களேன்!'

'அதற்குப் படம் வேணுமே!'

'என்னாங்க, சும்மாச் சும்மா கிளிப்பிள்ளையாட்டமா பேசறீங்க! அவரு படத்தைப்பத்தி நீங்கன்னா மாய்ஞ்சு போறீங்க! அவரு



கவலையை அவரே படட்டுமே! உங்க கவலையை நீங்க படுங்களேன்!'

மோட்டார் பூந்தமல்லி ஹைரோடில் கடும் வேகமாகச் சென்றது. 'கொஞ்சம் தயவு செய்யுங்கள். நியாயமாக எது கேட்டாலும் நான் சொல்லி வாங்கித் தருகிறேன். எப்போ வரச்சொன்னாலும் வரேன்' என்றான் ரங்கராஜன் விடாமல்.

'நிறுத்துங்கள்!' என்றாள் பொன்னாயி. திடுக்கிட்டு அவனும் பேச்சைத் தட்சணமே நிறுத்தினான்.

'அட! நீங்க பேசிக்கிட்டிருங்க! வண்டியை ஸ்டூடியோ வாசல்லே நிறுத்தத்தானே நான் சொன்னேன்?' என்று சிரித்தாள் பொன்னாயி.

வாசலில் காரை நிறுத்திவிட்டு இறங்கின பொன்னாயியை பின் தொடர்ந்து ரங்கராஜனும் ஸ்டூடியோவுக்குள் சென்றான். இறுதியாக ஆசைக்கு ஒரு வார்த்தை கேட்டுப் பார்த்துவிடலாம் என்ற ஆதுரம்தான் அவனைப் பின்தொடர்ந்து செல்லத் தூண்டியது. தன் காரியமாக உள்ளே சென்றவள், ரஸ்தாவில் நின்று தன்னைக் கவனித்துக் கொண்டிருந்த ஓர் ஆசாமியைப் பார்க்காமல் போனாள்!

அந்த ஆசாமி வேறு யாருமில்லை; சின்னவேலியிலிருந்து காவேரி அம்மாளால் அனுப்பப்பட்ட சேதுதான். 'சேதுவுக்கு மூளை லேது' என்று ஊரில் பிரசித்தமடைந்த அவன், பட்டணத் தில் ரங்கராஜனை எங்கே தேடுவதென்று தெரியாமல், முதன் முதலாகத் தன் உறவினர் ஒருவர் வீட்டில் போய் இறங்கும் உத்தேசத்துடன், பூந்தமல்லி போகும் பஸ் ஒன்றில் ஏறிவிட்டான். ஹைரோடில் இறங்கி, மெல்ல நடந்து வந்தவன், ஸ்டூடியோ வாசலை அடைந்தான்.

அப்போதுதான் ஜம்மென்று ஒரு பெரிய கார் வந்து அங்கே நின்றது. அதிலிருந்து அவன் எதிர்பார்த்தபடி, ஒரு சினிமா ஸ்டார் தான் இறங்கினாள். ஸ்தம்பித்துப்போய் நின்ற சேதுவுக்கு ஒருமுறை தூக்கிவாரிப்போட்டது. அவன் யாரைப் பார்க்க வந்தானோ அதே ஆசாமி அவள் பின்னாலேயே இறங்கினான்! சேது கவனித்தான். அவளைப் பின் தொடர்ந்து ரங்கராஜனும் தாசானுதாசனாகப் போவதுபோல் அவனுக்குப்பட்டது. 'இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டதா! அதுதான் காவேரி

அம்மாமி அவ்வளவு கவலைப்பட்டிருக்கிறாள்!' என்று முணு முணுத்துக்கொண்டான். ரங்கராஜன் வரும்வரை நின்று, அவன் கண்ணில் பட்டு, தன் பொன்மேனியைப் புண் மேனியாக்கிக் கொள்ள அவன் விரும்பவில்லை. அன்றிரவு சின்னவேலி திரும்பும் நோக்கத்துடன், தன் உறவினர் வீட்டுக்குக்கூட போகா மல் எதிர்த்திசையில் வந்த ஒரு பஸ்ஸில் அப்போதே ஏறி விட்டான்.

உள்ளே சென்ற பொன்னாயி தன்னைப் பின் தொடரும் ரங்க ராஜனை கவனியாமலேயே போவதுபோல் தோன்றியது. அவள் ஓர் அறைக்குள் நுழையப் போகவே, இனியும் பேசாமல் செல்வது தகாதென்று ரங்கராஜன், 'நான் வரட்டுமா?' என்றான்.

'அட! நீங்களுமாகூட வர்ரீங்க? என்னத்துக்கு?' என்று கேட்டாள், ஆச்சரியப்பட்ட மாதிரி.

'நீங்கள் என் விஷயத்தில்...'

'என்னா போங்க! இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான்! எதிலேயும் குரங்குப் பிடிதான்! உங்களுக்கு வேலை போனா என்னண்டை வாங்க!'- அவனது பதிலுக்குக்கூட நிற்காமல் நுழைந்தாள்.

ரங்கராஜன் மனம் தளர்ந்துவிட்டான். இந்த முடிவை அவன் எதிர்பார்த்துத்தான் வந்தான் என்றாலும், உண்மையில் அது வரும்போது சிரமமாகத்தான் இருந்தது. பிரணதார்த்திக்கு என்ன பதில் சொல்வது?

நிற்பதில் உபயோகமில்லை என்று கண்டு, கவலை தோய்ந்த முகத்துடன் திரும்பி, ஸ்டுடியோ வாசலுக்கு வந்தான். வந்தவன் வயிற்றில் பகீரென்று ஒரு திகில் உணர்ச்சி ஏற்பட்டது.

சற்றுமுன் அவன் வெளியே நிறுத்திவிட்டுச் சென்ற பிரண தார்த்தியின் பெரிய மோட்டார் இப்போது அங்கே காணப் படவில்லை!



## அத்தியாயம் - 10

'... இன்னும் பல ஆச்சரியமான விவரங்கள் வெளியாகலாமென்று எதிர்பார்க்கப் படுகிறது.'

– பத்திரிகையில் நிருபர் செய்தி

பிரணதார்த்திஹர அய்யர் வீட்டிலிருந்து கிளம்பிய மணிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அவன் ஏற்பாடு செய்த பிளான் பலிக்காமல் போய் விட்டது! 'எதிரி' இன்னும் ஸ்திரமாகவேதான் இருந்தான். அவனைக் கிளப்ப அடுத்த ஏற்பாடு என்ன?

தன்னையும் அறியாமல் அவன் ராவ் பகதூர் நாக நாத முதலியார் வீட்டையே நோக்கி இரண்டாம் முறையாகச் சென்றான். அஸ்தமன வேளை களில் முதலியார் அவர்களை நண்பர்கள் அதிக மாகப் பார்க்கப்போவது வழக்கமில்லை, அநேக மாக அந்தச் சமயங்களில் பாதி போதையும் பாதி நினைவுமாக அவர் இருப்பார். வெகு விரைவில் ஆப்தனாகிவிட்ட மணிக்கு, முதலியார் எந்தச் சமயத்திலும் வேண்டியவர் ஆகிவிட்டபடியால் மடமடவென்று போய் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

'என்னங்க ஐயரே! எங்கே வந்தீங்க?' என்று கேட்டார் முதலியார்.

'ஒன்றுமில்லை. உங்களைப் பார்க்கலாமென்றுதான் வந்தேன். பிரணதார்த்திஹர அய்யர் வரச்சொல்லியிருந்தாரே என்று அவர் வீடுவரை போயிருந்தேன். அவர் இல்லை. இப்படி வந்தேன்.'

'ஓஹோ, பிரணதார்த்தி இல்லையோ? எங்கேயானும் காசு தண்டப் போயிருப்பான்! கஞ்சன் அவன்; சுத்தக் கஞ்சன்!' என்றார் முதலியார்.

'என்ன அப்படிச் சொல்கிறீர்களே!' என்று மணி கேட்டான் ஆச்சரியத்துடன்.

'ஆமாமுங்க... அவன் கருமி; காலணா நெஞ்சாரக் கொடுத்துட மாட்டான், திருட்டுப் பையன்!' என்றார்.

ஒருகால் குடி வெறியால்தான் அவர் அப்படிப் பேசுகிறாரோ என்று மணி சற்றுத் தயங்கினான். ஆனால், முதலியார் தொடர்ந்து, 'ஆமாமுங்க... அவன் வியாபாரம் அத்தனையும் திருட்டு; அவ்வளவுமே புரட்டு, இப்ப கையிலே காசு சேர்ந் திடுச்சு எப்படியோ, அப்ப ஆளு பேச்சு பெரிய மனுஷன் மாதிரி ஆயிப்போச்சு!' என்றார்.

'நீங்கள் ரொம்ப வேண்டியவர், நல்ல அபிப்பிராயம் வைத் திருந்தீர்கள் என்றல்லவா நினைத்துவிட்டேன்?'

'நல்ல அபிப்பிராயமா? ஹ்ூ! எனக்கு அவனாலே ஒரு காரியம் ஆவணும். அதுக்காகவாக்கும் வேஷம் போடறேன்! இவனுக்கு முனிசிபல் மெம்பராய் இருக்க என்ன யோக்கியதைன்னு கேக்கறேன். ஐயரே! நீயே சொல்லேன்!'


'உம்...'

'சொல்லேன், ஐயரே, எள்ளை வித்திட்டுக் காசாக்கிட்டா எல்லாம் தெரிஞ்சு போயிடுத்தோன்னு கேக்கறேன், ஐயரே!'

'உம்...'

முதலியார் எழுந்திருந்தார். 'என்னா நீ, நான் கேக்கிறேன், 'உம்...உம்' என்கிறே! பதில் சொல்லமாட்டே?' என்று பயங்கர மாக நெருங்கினார்.





முதலியாரின் நிலைமையை ஊகித்த மணி, அவர் சொன்னதை ஒப்புகொண்டாலொழியத் தப்பமுடியாதென்று உணர்ந்து கொண்டான். 'நீங்க சொல்றது ரொம்ப சரிங்க!' என்றான்.

'ஆ... அப்படிச் சொல்லு!' என்று திரும்பிப் போய் உட்கார்ந்தார் முதலியார்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாகவே முதலியார் சொல்வதற்கு 'ஆமாம்' போட்டுக்கொண்டு மணி அங்கேதான் தங்கினான். அவன் கிளம்பியபோது, அவன் மூச்சுக் காற்றிலும் சாராய மணம் கலந்துதான் வரத்தொடங்கியது!

அவன் வீட்டை அடைந்தபோது, பதினொன்று அடித்துவிட்டது. ஹாலில் டி.வி.எஸ். அய்யர் உட்கார்ந்திருந்தார். அவர் மனைவியும், புதல்வியும் எதிரில் உட்கார்ந்து மணியைப் பற்றித்தான் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் குரல் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டு அவசரமாக உள்ளே எழுந்து சென்றார்கள். அய்யர் மட்டும் வெறுப்புடன் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டுப் பிறகு, 'என்னப்பா! எங்கே போயிருந்தே! என்ன சமாசாரம்?' என்று விசாரித்தார்.

பக்கத்திலிருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நின்ற மணி, 'எங்குமில்லை, பிரணதார்த்திஹர அய்யர் வரச்சொல்லியிருந்தார். அவர் பங்களா வரைக்கும் போயிருந்தேன்' என்றான்.

'ஓஹோ! என்ன விசேஷமோ அங்கே?'

'விசேஷம் ஒண்ணுமில்லை. சும்மாத்தான் வரச்சொன்னார்!'

'இத்தனை நாழியாச்சாக்கும் அதற்கு? இன்னும் சாப்பிடவில்லையே?'

'இல்லை; ஆனால், தேவையில்லை.'

'பலமாக டிபனோ?' என்று கேட்டுவிட்டு, மூக்கைச் சுளித்துக் கொண்டார் அய்யர். சாராய வாசனை அதற்குள்ளாக மூக்கைப் போய் எட்டிவிட்டது.

மணி இதற்குப் பதில் சொல்லவில்லை. அய்யரின் கூர்மையான பார்வை அவனை வெட்டுவதுபோல் இருந்தது; சட்டென்று திரும்பி, சிறிது தள்ளாடியவாறு மாடிக்கு ஏறினான்.



படுக்கையில் படுத்த மணிக்குச் சற்று நேரத்துக்குப் பின்னரே தெளிவு ஏற்பட்டது. இங்கே செல்வாக்கு மங்கிவிட்டது. அய்யர் அவனை வெறுக்கவே தொடங்கிவிட்டார் என்பதை ஸ்பஷ்டமாக அறிந்தான். வெகு சீக்கிரத்திலேயே அங்கிருந்து அவன் கிளம்பாவிட்டாலும், அவர்களாலேயே கிளப்பிவிடப்படலாம் என்பதும் தெரிந்தது. அவன் திட்டங்களுக்கெல்லாம் குறுக்கே நின்றது அந்த ரங்கராஜன்தான்; அவனைப் பிரணதார்த்தி வீட்டிலிருந்து உடனே துரத்தியாக வேண்டும், அது எப்படி?

அன்றிரவு டி.வி.எஸ். அய்யருக்கு, மணியை நன்றாகக் கண்டித்து விட வேண்டுமென்று எண்ணம்தான். ஆனால் அப்போதே சொல்வதைவிட காலையில் அவனிடம் சொல்வது உத்தமம் என்று அடக்கிக்கொண்டார். இரவெல்லாம் யோசனை செய்துவிட்டு, முதல் காரியமாக மணியைப் பொழுது விடிந்ததுமே அழைத்தார்.

'என்னப்பா! நீ ஏதோ உத்தியோகம் பார்க்க வந்திருக்கிறதாகச் சொன்னாய்! அப்புறம் பேசாமலே இருக்கிறாய். ஏதாவது ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறாயா?' என்று கேட்டார்.

'ஏற்பாடு நடந்து கொண்டுதான் இருக்கிறது' என்றான் மணி சுருக்கமாக.

'அப்படிச் சொன்னால் போதாது; என்ன ஏற்பாடு என்று சொல்லேன், நானும் கேட்கிறேன்!'

'என் ஏற்பாடு கைகூடின அப்புறம் அதை உங்களுக்குச் சொல்லலாமென்றிருக்கிறேன்.'

'அதிருக்கட்டும்... நான் சொல்ல வருகிறதென்னவென்றால், வேண்டுமானால் உனக்கு நானே நல்ல உத்தியோகமாய்ப் பார்த்துத் தருகிறேன். அதற்காக நீ அந்த நாகநாத முதலியாரோடு சுற்றிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லையே!'

'முதலியார் உங்கள் சிநேகிதர்தானே!'

'என் சிநேகிதராயிருந்தால், எது எதில் சேர வேண்டுமோ அதில் நான் நான் அவரோடு சேருகிறேன். பெரிய குடிகாரர் அவர், நீ அவரோடு...'

'...சேர்ந்து குடிக்கிறேன் என்கிறீர்களா?' என்று சீறினான் மணி.

'அவசரப்படாதே! அதுமாதிரி பேர்வழியிடம் நீ பழக வேண்டிய நிர்ப்பந்தம் இப்போ என்ன வந்துவிட்டது என்றுதான் கேட்கிறேன்!'

'நீங்கள் அதெல்லாம் என்னைக் கேட்கப்படாது சார்!'

'அப்படியா! எனக்குத் தெரியாது!'

'உங்களுக்கு நான் இங்கே இருப்பது இஷ்டமில்லையென்றால்...'

'நான் அப்படிச் சொல்லவில்லையே! உன்னை உன் தாயார், தகப்பனாரிடம் சேர்த்துவிட்டேனானால்...'

'அதுமட்டும் ஒரு நாளும் நடக்கப் போகிறதில்லை! இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்... வந்த காரியம் பலித்தவுடன், நானே போய்விடுகிறேன். உங்கள் கண்ணில்கூட அநாவசியமாக நான் படமாட்டேன்!'

'எனக்கு நல்லதாகப் பட்டதைச் சொல்லவந்தேன். அப்பா! அப்புறம் உன் இஷ்டம்!' என்றார் அய்யர். மணி தன்னைத் தூக்கி எறிந்து பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை. கோபம்தான் வந்தது. எனினும், அதை அடக்கிக்கொண்டே பேசினார்.

'எது நல்லது என்று எனக்கும் தெரியும்!' என்றான் மணி. பிறகு மிடுக்காக வெளியே கிளம்பினான். தன் கோபத்தைக் காட்டுவதற்கு அறிகுறியாக மோட்டார் சைக்கிளைக்கூடத் தொடாமல், நடந்தே சென்று பஸ்ஸில் ஏறினான். எழும்பூரில் இறங்கி, பூந்தமல்லி ஹைரோட்டில் நடந்து சென்றான். புரசைவாக்கத்தில் தனது இன்னொரு ஜாகையிலிருந்த பக்கிரியைக் கண்டு அவனுக்குத் தைரியம் சொல்லும் நோக்கத்துடன்தான் அப்போது சென்றது.

மணி கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் டி.வி.எஸ். அய்யர் வீட்டு வாசலில் ஓர் ஆசாமி வந்து நின்றான். ஒரு காகிதத்தில் 'எல்.ஆறாவமுது' என்று எழுதி, சேவகனிடம் கொடுத்து, அய்யரிடம் கொடுக்கச் சொன்னான்.

'இது யார், ஆறாவமுது? கேள்விப்பட்டதாகவே இல்லையே பெயர்? வரச்சொல். பார்க்கலாம்!' என்றார் அய்யர்.



ஆறாவமுது வரும்போதே ஹாலில் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டான். அங்கே அப்போது ரங்கராஜன் இல்லை என்பதைத் தான் அப்படி அவன் கவனித்துக் கொண்டான்.

'நீங்கள் யார்?' என்று கேட்டார் அய்யர்.

'நான் சின்னவேலி. ஜமீன்தார் சுப்ரமணிய அய்யருடைய மூத்த பிள்ளை கோபாலன்தான் என்னை இங்கே அனுப்பினார்.'

'என்ன விசேஷமோ?'

'அவர் தம்பி இங்கே வந்திருக்கிறதாக என்னிடம் சொன்னார்.'

'ஆமாம்... அதற்கென்ன?'

'ஏதோ கோபித்துக்கொண்டு அவன் அங்கிருந்து புறப்பட்டு வந்துவிட்டான். வரும்போது இங்கே போகிறேன் என்றுகூடச் சொல்லவில்லை. ரொம்பக் கவலைப்பட்டு, இங்கே வந்திருக்கானா என்று உங்களை விசாரித்துக் கொண்டு வரும்படி சொன்னார்.'

'அவன் இங்கேதான் இருக்கிறான். இப்போதுதான் வெளியிலே போகிறான். இங்கேயே தங்கியிருந்தீர்களானால் வருவான்.'

'எனக்கு அவனைப் பார்க்க வேண்டுமென்கிறதில்லை. அவன் முன்கோபி, நீங்கள்தான் அவனுக்கு நல்ல வார்த்தையாகச் சொல்லி, ஊருக்குத் திரும்ப அனுப்ப வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ள சொன்னார்' என்றான். இது ஆறாவமுதுவின் சொந்தச் சரக்கு.

'நல்ல பிள்ளைதான்! சொன்னால் கேட்டுவிடுவான் உடனே!' என்றார் அவர்.

'ஆட்சேபணை என்ன?' என்றான் ஆறாவமுது அதை யதார்த்தமாக எடுத்துக் கொண்டு.

'அப்படியானால் அதை நீங்களேதான் சொல்லிக்கொள்ளுங்கள்!' என்றார் அய்யர், சற்று உஷ்ணமாக.

'நீங்கள் சொல்கிறது புரியவில்லை.'

'ராத்திரி வாருங்கள். பிள்ளையாண்டான் புட்டி போட்டுவிட்டு வந்திருப்பான். உங்க நல்ல 'வார்த்தை' யை அப்போது சொல்லி,

பிள்ளையாண்டானைக் கூடவே அழைத்துக்கொண்டு போய் விடுங்கள்!' என்றார் அவர்.

ஆறாவமுது வாயைப் பிளந்தான். 'அட! அப்படியா சமாசாரம்? அது கூடவா ஆரம்பித்துவிட்டான்?' என்றான் ஆச்சரியத்துடன்.

'பின் என்ன? இங்கே குடிகார முதலியார் ஒருத்தனோடு அலை கிறான். இன்னும் அவனோடு சேர்ந்துகொண்டு என்னென்ன செய்கிறானோ? யார் கண்டது?'

'நம்ம ஜமீன்தார் பிள்ளையா அப்படியெல்லாம் செய்கிறான்?'

'ஜமீன்தார் பிள்ளையோ, மண்ணாங்கட்டியோ! அவன் அரை மீசையைப் பார்த்தாலே பற்றிக்கொள்ளுகிறது!'

'அது வேறு ஒன்று புதிதாக வைத்துக்கொண்டு விட்டானா?'

'வேண்டாமா? ஒரு நாளைக்கு ஒரு டின் சிகரெட் போதவில்லை!'

'ஹூம்! எல்லாம் ஆச்சரியமாய்ன்னா இருக்கிறது கேட்க!'

'என் பிள்ளையாக இருந்தால், அடித்தே விரட்டியிருப்பேன், இத்தனை நாள்! என் கண்ணால் பார்க்காததை நான் சொல்ல விரும்பவில்லை; இவன் வந்த பிறகு ஒரு ஜோடி தங்க வளையல் என் வீட்டில் காணாமல் போயிருக்கிறது!'

'அடேடே!'

'அதை நீங்கள் அங்கே ஊரில் போய்ப் பிரஸ்தாபிக்க வேண்டாம்!'

'நன்னாயிருக்கு! நான் மாட்டவே மாட்டேன்!' என்றான் ஆறாவமுது அழுத்தம் திருத்தமாக. அதைத்தான் முதல்முதலாகச் சொல்வதென்று அப்போதே தீர்மானித்துக்கொண்டான் அவன்.

'நீங்கள் இங்கே தங்கி எல்லாம் நேரே பார்த்துவிட்டுப் போகலாம்!'

'தங்குவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை... ஆனால், ரங்க ராஜன் ஒழுங்காக இல்லாததனாலே, நான் வந்து போன விஷயம் அவனுக்குத் தெரிய வேண்டாம் என்று பார்க்கிறேன். சமா சாரத்தை அவன் அண்ணாவிடம் சொல்லிவிடுகிறேன். அப்புறம் அவர்கள் பாடு. அவன் திரும்புவதற்கு முன்பே , நான் புறப் பட்டுவிடுகிறேன்' என்றான்.



ஆறாவமுது கிளம்பிய பதினைந்து நிமிஷத்துக்குப் பிறகு டி.வி.எஸ். அய்யரும் தமது காரை எடுத்துக்கொண்டு கோர்ட்டுக்குப் புறப்பட்டார். அவர் போன பின்னர் அவரைத் தேடிக் கொண்டு சீனு வந்து சேர்ந்தான்.

ரங்கராஜன் தன் வீட்டுக்குள் ஒரே ஓட்டமாக ஓடி வந்து, சடைநாயைத் தூக்கிக்கொண்டு போன பின் அவன் வருவான் வருவானென்று சீனு வெகு நேரம்வரை காத்திருந்தான். சுமார் ஒரு மணி நேரமாகியும் அவன் வராமல் போகவே, சீனு பொறுமையிழந்து ராமக்கோனார் தெருவுக்கே சென்று பார்த் தான். அங்கே பொன்னாயி வீட்டு வாசல்கதவு தாழ்ப்பாளிட்டிருந் தது. வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் ஒருவனை விசாரித்த போது, பொன்னாயி ஒரு காரில் ஏறிக்கொண்டு சென்ற விவரங் களை அறிந்து கொண்டு திரும்பினான்.

இப்படியே ரங்கராஜனை நிலைமையை முற்றவிட்டுக் கொண் டிருப்பதில் அவனுக்கு மனமில்லை. வீட்டுக்குத் திரும்பியவன் நேரே டி.வி.எஸ். அய்யரிடம் போய், விவரங்கள் பூராவையும் தெரிவித்துவிடுவதென்று முடிவு செய்தான். அதுவும், அய்யரே அவனை வரச்சொல்லியிருந்ததால், அவர் வார்த்தையைத் தட்டாமல் போகிறாற்போல் சென்று, மெல்ல விஷயத்தை வெளியிட விரும்பினான். அந்த நோக்கத்துடன்தான் டி.வி.எஸ். அய்யர் வீட்டின் படிகளில் அவன் ஏறினான்.

கதவைத் திறந்தாள் ஒரு காரிகை. நிமிர்ந்து நோக்கிய சீனு, அவள் முகத்திலிருந்த பொலிவைக் கண்டு மயங்கினான். 'இவள் டி.வி.எஸ்.அய்யரின் புதல்வியாக இருக்கலாமோ?' என்று நினைத்துச் சற்றுத் தயங்கினான். பிறகுதான் தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு, 'மிஸ்டர் அய்யர் இருக்கிறாரா?' என்று கேட்டான் சீனு.

'நீங்கள் யார்?' என்றாள் அந்தப் பெண்மணி, கதவின் பின்னால் பாதி மறைந்து நின்றவாறு.

'என்னை இங்கே அவர் நேற்று வரும்படி சொல்லியிருந்தார்.'

'அப்படியா? எதற்காகவோ?'

கேட்ட கேள்விக்கு உடனே பதில்சொல்லாமல், இவள் தன்னை ஏன் எதற்காக இப்படிக் கேள்விகள் கேட்கிறாள் என்று ஒருகணம்

சிந்தித்தான். அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. 'ஒன்றும் யோசிக்க வேண்டாம்... அவர் வந்தவுடன், 'யார் வந்தார்கள்' என்று கேட்டால் நான் பதில் சொல்ல வேண்டும் அல்லவா?' என்றாள்.

'அப்படியானால் அவர் இப்போது இல்லையா?' என்று கேட்டான் சீனு.

'இல்லை, தாங்கள் யார்?'

'என் பெயர் சீனு. நேற்றுக் காலை அவரை நான் பார்த்தேன்...'

'சென்ட்ரல் ஸ்டேஷனில் நீங்கள்தான் அப்பாவின் மணி பாக்ஸைத் திருடினவனைக்கூட....'

'ஆமாம், ஆமாம்... நான்தான்...'

'சற்று உள்ளே வருகிறீர்களா? நான் அம்மாவைக் கூப்பிடு கிறேன்!'

'வீணாகச் சிரமப்பட வேண்டாம். நான் இன்னொரு சமயம் வருகிறேன்!'

'அவசியமாக வாருங்கள். அப்பா ரொம்ப சந்தோஷப்படுவார். நீங்கள் வரவில்லையே என்றுகூட நேற்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்.'

சீனு அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். மனத்திலுள் அவனையும் அறியாமல் ஒரு வேதனை உண்டாயிற்று. அந்த அழகிய முகம் அவனுக்கு வேறொரு முகத்தை ஞாபக மூட்டி விட்டது. அதிலிருந்த களையும், குறுகுறுப்பும், இதிலும் இருந்தது. அதன் புன்னகையில் தோன்றும் கவர்ச்சி இங்கேயும் இருந்தது. சீனு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'சரி, நான் வருகிறேன்.'

'வாருங்கள்' என்றாள் அவள். சீனு இறங்கி வந்தான். பத்தடி வந்த பிறகு திரும்பிப் பார்த்தபோது, அந்தப் பெண் அங்கேயே நின்று மேலும் தன்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு, சங்கோசத்துடன் வேகமாக நடந்தான்.

இவ்வளவு விஷயங்கள் நடந்து கொண்டிருந்தபோது, பூந்த மல்லி ஹைரோடில் மணி சீட்டியடித்தவாறு நடந்து வந்து



கொண்டிருந்தான். செங்குரெட்டி ரோடுக்கு அருகாமையில் புரசைவாக்கத்துக்கு அவன் திரும்ப யத்தனிக்கையில், 'பூம்பூம்' என்று மோட்டார் ஊதுகுழல் கேட்டு நின்றான். எங்கேயோ கேட்டிருக்கிறோமே இந்த ஊதுகுழலை!' என்று அவன் எண்ணியவாறு ஒதுங்கிய சமயம், ஒரு மோட்டார் அவனைத் தாண்டிச் சென்றது. கடும் வேகமாகத்தான் அது சென்றதென்றாலும், டிரைவர் சீட்டில் ரங்கராஜனையும், பின் சீட்டில் ஒரு ஸ்திரீயையும் அவன் பார்த்துவிட்டான். யார் அது, எங்கே போகிறார்கள் இவர்கள்?

மணி வேகமாக நடந்தான். சிறிது ஓட்டமாகவும் ஓடினான். பத்து நிமிஷத்துக்குப் பிறகு, அந்த கார் வெகு தொலைவில் ஸ்டூடியோவின் வெளியில் நிற்பதைக் கண்ணுற்றான். மேலும் விடாமல் ஓடி அதை நெருங்கியபோது, அதனுள் இப்போது யாருமில்லையென்பது வெளியாயிற்று. அப்போதே அவன் மனத்தில் ஒரு புதிய யோசனையும் உதயமாயிற்று.

மணியின் யோசனையெல்லாம் மோட்டாரைக் கொண்டே போய்விடுவது என்பதுதான். அதை எங்கேயாவது ஓட்டிச் சென்று, ஒரு சந்தில் கண் மறைவாக விட்டுவிட்டுப் போய்விட வேண்டியது. இங்கே ரங்கராஜன் வெளியே வந்து மோட்டாரைக் காணாமல் திண்டாடுவான்; நிச்சயமாக பிரணதார்த்தியிடம் ஓடுவான். அவனுக்கு வேலை போய்விடும். அல்லது, வீட்டை விட்டாவது மோட்டார் அகப்படும் வரையில் போயிருக்க வேண்டிவரும். அதற்குள்ளாகவே அங்கே நடக்க வேண்டிய மல்லியின் காரியங்கள் பூர்த்தியாகிவிடும்.

சுற்றுமுற்றும் பார்த்தான் மணி. யாரும் இல்லை. யாரோ அசடுபோல் தோற்றமளித்த ஒருவன் மட்டும் ஸ்டூடியோவை வெறிக்கப் பார்த்துவிட்டு, இப்போது வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். மணி தைரியமாக வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டான். அதை டவுனை நோக்கித் திருப்பினான், தன் காரியம் கைகூடப் போகிறதென்ற உவகையில், திமிராகத் தான் மோட்டாரை ஓட்டினான்.

சரியாகப் பதினைந்து நிமிஷங்களில் அவன் பிராட்வேக்கு வந்து விட்டான். அதுவரை ஒரு தொந்தரவுமில்லை அரண்மனைக் காரன் தெருவில் வண்டியைத் திருப்பி இருநூறு கஜம் சென்றுவிட்டான். அப்போது குறுக்கே ஒரு தெரு வருவதை

அவன் கவனிக்கவுமில்லை; ஹார்ன் செய்யவுமில்லை. அதுதான் போகட்டுமென்றால் குறுக்குத் தெருவிலிருந்து 'பம்பம்' என்று அலறிக்கொண்டு வேகமாக வந்த ஒரு மோட்டாரையும் அவன் லட்சியம் செய்யவில்லை. ஆகவே, திடீரென்று 'கிரீச்' என்று தன் முன் ஒரு மோட்டார் அவசரமாக நிறுத்தப்படும் சத்தம் கேட்டு அவன் திடுக்கிட்டுத் தன் வண்டியையும் நிறுத்தினான். ஆனால், அதற்குள் காரியம் மிஞ்சிப்போய் விட்டது. இரண்டு மோட்டார்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு, நடு ரஸ்தாவில் நின்றன.

சட்டென்று மணி இறங்கினான். மற்ற வண்டியிலிருந்து நிஜார் அணிந்த ஓர் ஆசாமியும் இறங்கினார். அவர் முகம் கோபத்தில் ஜ்வலித்தது. 'யாரடா நீ. இடியட்! உனக்கு மூளையிருக்காடா மண்டையிலே! மோட்டார் விட வந்துட்டாயேடா, கழுதை!' என்று உஷ்ணமாகத் தொடங்கினார்.

வெளிப்பார்வைக்கு மணி கோபித்துக்கொண்டதாகத் தெரியவில்லை. சாந்தமாக அவரைப் பார்த்து, 'என்ன சார்? என்ன?' என்றான்.

'என்னவா! உன் மூஞ்சியிலே கண் இல்லை? இல்லை, இந்தத் தெருவையே நீ விலைக்கு வாங்கிட்டாயோ? ஹூம்! நான் ஹாரன் கொடுத்துக்கொண்டே வரேன்! ஹூம்!'

'மன்னிக்கணும்! என் பிசகு!' என்று ஒத்துக்கொண்டான் மணி.

அந்தப் பேர்வழி குதிகுதியென்று குதித்தார். 'பிசகாம், பிசகு! மூஞ்சியைப் பார்! உங்களையெல்லாம் ஜெயிலிலே போடணும்! தெருவிலே தலைகாட்டாதபடி செய்யணும்! அப்பதான் நாங்கள் வரலாம்! ஹூம்! பார், என் மோட்டார் என்னமாகிவிட்டது! பார் இங்கே!'

'கோபப்பட வேண்டாம்' என்று மணி, இரு மோட்டார்களையும் விலக்கினான். பிரணதார்த்தியின் கார் உயர்ந்த அழுத்தமான மேக் ஆகையால் அதில் துளிக்கூடச் சேதம் என்பது ஏற்படவில்லை. ஆனால், அந்த ஆசாமியின் காரின் முன்புறம் அப்பட்டமாக நசுங்கி, சப்பை மூக்குடன் அதன் காட்சி கோரமாகத்தான் இருந்தது.

'அடப்பாவமே! நீங்கள் வந்ததை நான் கவனிக்காமல் போனேன்...'



'கவனிக்காமல் போனயா! உன்னை...' என்று பல்லைக் கடித்தார் மனிதர். அவர் போகிற வழி விட்டிருந்தால் மணியை அவர் அறைந்திருப்பார்.

இதற்குள் சிறு கூட்டம் கூடிவிட்டது. சாதாரணமாக, மணி இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எதிராளிக்கு அதிக இடம் கொடுப்பதில்லை. இப்போது நிலைமை வேறாக இருந்தது. கூட்டத்தில் யாராவது பிரணதார்த்தியின் மோட்டாரை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்கவேண்டுமே என்ற கவலையும் வந்துவிட்டது. மோட்டார் நசுங்கிய ஆசாமியோ பெரிய கிண்டனாக இருந்தார். அவருடன் எதிர்த்து வாக்குவாதம் செய்துகொண்டிருப்பதில் நன்மையுமில்லை. தணிந்து போவதே உசிதமென்று எண்ணி, மிஸ்டர்! நீங்கள் சொல்வது ரொம்ப சரி! ஆனால், பாருங்கள். நான் என்ன, வேணுமென்றா மோதினேன்? என் பிசகு என்று ஒப்புக் கொள்கிறேன். அப்புறமும் நீங்கள் கோபிப்பதில் என்ன உபயோகம்?' என்றான் மணி.

'இப்போ நான் என்ன ஐயா செய்கிறது?-'

'வண்டி நசுங்கியிருக்கிறதே ஒழிய ஓடாமல் போய்விடாது. நீங்கள் உங்களுடைய பெயரையும் விலாசத்தையும் கொடுங்கள். நான் என்ன நஷ்டஈடு செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிடுகிறேன். என் செக் புஸ்தகம் இப்போ வீட்டில் இருக்கிறது! நாளைக்கே...' என்றான் மணி.

ஈடு செய்துவிடுவதாகச் சொன்னவுடன் அந்த மனிதரின் முகம் சிறிது பிரகாசம் அடைந்தது; பேச்சின் உஷ்ணமும் தணிந்தது. சட்டைப்பையிலிருந்து ஒரு விஸிடிங் கார்டைக் கொடுத்தார். மணி அதைப் படித்துப் பார்த்தான்.

திவான் பகதூர் திரிகாலாக்னி, 'ஜாஸ்மின் ஹவுஸ்' லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

'ரொம்ப சந்தோஷம்... நானே லாயிட்ஸ் ரோடுக்கு தினம் மூன்று தடவை வருகிறவன்தான். உங்களை வந்து கட்டாயம் பார்க்கிறேன்... ரொம்ப நல்ல ரோட், சார், அது! எங்க மாமா ஒருத்தர் கூட அங்கே முன்னே பங்களா கட்டிக்கொண்டு...'

திவான் பகதூர் திரிகாலாக்னிக்கு மணியுடன் வம்பளந்து நடு ரஸ்தாவில் நிற்பதில் ஒன்றும் ரசம் இல்லை. 'அதிருக்கட்டும், ஏய்! உம் பெயர் விலாசத்தைச் சொல்லும்!' என்றார்.

'ஓ! ஆமாம், ஆமாம்! அதுவும் உங்களுக்குத் தெரிய வேண்டியது நியாயம்தானே? என்று கூறினான் மணி. ஒரு புதிய யோசனை மெல்ல மனத்தில் உருவமாகிக் கொண்டுவரவே, 'அடடா! என் விஸிடிங் கார்ட் கூடக் கொண்டு வராமல் வந்துவிட்டேனே!' என்றான்.

திவான் பகதூர் திரிகாலாக்னி அதற்காக விடவில்லை. தமது பேனாவை எடுத்து உதறிவிட்டார். 'சொல்லும்! நான் எழுதிக்கொள்கிறேன்.!'

'பெயர் வந்து... ராஜாராமன் ராஜாராமன்... எழுதிக்கொள்ளுங் கள். c/o பிரணதார்த்திஹர அய்யர், என் வியாபாரம், வெங்கட நாராயணா ரோடு, தியாகராஜ நகர்.'

'சரி! நான் அங்கே வருகிறேன்.'

'அதற்கு அவசியமே இருக்காதுன்னா! சிநேகபாவத்தில் நீங்கள் வாருங்கள். ரொம்ப சந்தோஷமாயிருக்கும்!'- இப்படிப் பேசிக்கொண்டே பின் நடையாக வந்து மணி மோட்டாரில் ஏறிக்கொண்டான். அதை ஸ்டார்ட் செய்து கொண்டே, 'குட் மார்னிங், நான் வரேன்!' என்றான்.

வேடிக்கை பார்த்த சிறு கூட்டமும், விறுவிறுப்பாக ஆரம்பித்த வாக்குவாதம் இப்படிச் 'சப்'பென்று சிநேகபாவத்தில் முடிந் ததைக் கண்டு முற்றும் ஏமாற்றமடைந்து, அங்கிருந்து மெல்லக் கலையத் தொடங்கியது.

மணியின் மோட்டார் கிளம்பிவிட்டது. மோதியதால் சிறிதுகூட அதில் பழுதேற்படவில்லை என்பதை அப்போது அவன் கண்டான். மீண்டும் ரங்கராஜனைத் தொல்லைப்படுத்த ஒரு சந்தர்ப்பம் தற்செயலாக ஏற்பட்டதை எண்ணி, குதூகலமாகவே மேலும் வண்டியை விட்டுக்கொண்டு சென்றான்.



## அத்தியாயம் - 11

'... பண்டாஸுரனானவன் காலாக்னி போன்ற கோபத்துடன், 'யாதனை' என்ற கத்தி பிடித்து, 'ஆபிலம்' என்னும் ரதத்தில் ஏறி ஆவேசத் துடன் கிளம்பினான்...'

**- லலிதோபாக்யானத்தில்**
**அகஸ்திய-ஹயக்ரீவ ஸம்வாதம்**

ஒரு பெரிய காரியம் நடக்கவேண்டி முயற்சி களைச் செய்துவிட்டுப் பலனை எதிர்பார்த் திருப்பவர்கள் மனத்தைத் தாமரை இலைமீது தத்தளிக்கும் நீர்த் துளிக்கு ஒப்பிட்டார்கள் பெரியோர்கள். போட்டோவைக் கொண்டு வரும் படி தன் டிரைவரை அனுப்பிய பிரணதார்த்தியும் கூட, அதேபோல் 'நலினீ-தல-கத-ஜல'த்தின் 'அதிதரல'மான தன்மையை அடைந்திருந்தார். அந்தச் சஞ்சலத்தைப் போக்குவதற்கு எங்கேனும் கிளம்பிப் போய் வரலாமென்று நினைத்த சமயம், பாக்கியம் அறைக்குள் வந்து சேர்ந்தாள்.

'என்னன்னா, உங்களைத்தானே! பத்தர் வைர புரூச்சை இப்போ கொண்டுவந்து விடுவாரே!' என்று ஆரம்பித்தாள்.

'எப்போ பார்த்தாலும் நகைதானா, ஹே!' என் றார் பிரணதார்த்தி. இதைச் செல்லமாகத்தான்

சொல்லுகிறோமென்பதற்கு அடையாளமாக, பாக்கியத்தைப் பார்த்து அவர் ஒரு புன்னகையும் செய்தார்.

பாக்கியம் அறைக் கதவைச் சார்த்திக்கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள். 'ஏன், நீங்கள் நகை செய்து போடப் படாதோ எனக்கு? உங்களிடம் பணம் இல்லையாக்கும்?' என்றாள் கொஞ்சலாக.

'யதேஷ்டமாக இருக்கிறது! நீ கவலைப்படாதே, பாக்கியம்! எது வேண்டுமானாலும் செய்துக்கோ! அந்தக் கடங்காரி மங்களம் வைத்துவிட்டுப் போனதையெல்லாம்கூட நீயே அழித்துப் பண்ணிப்போட்டுக் கொள்ளேன் நிறைய!' என்றார்.

'அதிருக்கட்டும்! காலம்பற எழுந்திருந்ததும் எழுந்திருக்காததுமாக மோட்டாரை யார் வீட்டுக்கு அனுப்பிச்சேளாம்?'

'அடே! உனக்குச் சொல்லல்லையே நான்! எலெக்ஷன் டயம் நெருங்கி வருகிறதல்லவா? அதற்காக முதலியாருக்கு நாளைக்கு ஒரு சின்ன டீபார்ட்டி வைக்கலாம்னு பார்க்கிறேன். நானே முதலியாரிடம் போய்ச் சொல்லிவிட்டு வரலாமின்னுதான் கிளம்பினேன். நீயும் வந்தே!' என்றார் அவர்.

'அதிருக்கட்டும், செய்யுங்கள்! அந்த டிரைவர்தான் திருடன் என்று சொன்னானே. அப்புறமும் அவனை எதுக்கு இங்கே வைத்துக் கொண்டிருக்கேள்?'

பிரணதார்த்தி ரங்கராஜனிடம் அவனுக்காகத் 'நமது ஒய்ஃபிடம் பொய் சொன்ன'தாகச் சொன்னார் அல்லவா? அதுவே ஒரு பொய்தான். இப்போதுதான் அந்தப் பொய்யைச் சொல்ல அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. 'என்ன, பாக்கியம்! எவனோ ஒரு பயல் சொன்னான் என்று நாம் உடனே நம்பிவிடுகிறதா? இவனை நமக்குச் சிபாரிசு செய்தது யார் தெரியுமோ? அந்த நாகநாத முதலியார்தான்! அப்படி இருக்கும் போது, இவன் திருடுவானா? இல்லை, நான்தான் விசாரிக்காமல் ஒருத்தனை வேலைக்கு வைத்துக் கொண்டு விடுவேனா? ஹே!' என்று பாக்கியத்தின் கன்னத்தைப் பிடித்து ஆவலுடன் இலேசாக இழைத்தார் பிரணதார்த்தி. அந்தச் சமயம் பார்த்துக் காற்றடித்து, அறைக் கதவு தடால் என்று திறந்துகொள்ள, வெளியில் நின்ற பிரணதார்த்தியின் தமக்கைக்கு இந்தக் காட்சி முழுதுமே கிடைத்தது. பிரணதார்த்தி அசட்டுச் சிரிப்புடன் ஒருவாறு



சமாளித்துக்கொண்டு, 'அக்கா! உன்னிடம் இன்னும் சொல்லவில்லையே?' என்றார்.

'சொல்லேன், கேக்கறேன்!'

'நம்ம முதலியார் இருக்கிறாரே, அவருக்கு நாளைக்கு நம் வீட்டில் ஒரு சின்ன டீ பார்ட்டி வைக்கலாமென்றிருக்கிறேன்.'

'குசாலா வையேன்...'

'அதை ஒரு காரியார்த்தமாகத்தான் வைக்கிறேன். சிறு மீனைப் போட்டுத்தானே பெருமீனைப் பிடிக்கணும்? முதலியாரால் நமக்கு இப்போ காரியம் ஆகவேண்டியிருக்கு. இல்லையா? ஹே! அதுவரை ஒருமாதிரி தாஜா பண்ணியாகணும்... குடிகாரன், ஸ்திரீ லோலன், அவன். நம்ம சிநேகத்துக்கு லாயக்கே இல்லை... இருந்தாலும், நமக்கு ஆகவேண்டியதை உத்தேசித்து... ஹே!'

'எது அவசியமோ, அதைச் செய்யேன்!'

'அப்புறம் அந்தப் பையன், ஜமீன்தார் பிள்ளைகூட வந்திருக்கான், அவனையும் கூப்பிடுகிறேன். நேத்துத்தான் அவன் வரபோது நான் இல்லை... என்ன சொல்றே, அக்கா? ஹே!'

'எதை வேணாச் செய்' என்றாள் அக்காள். அவர் பாக்கியத்துடன் சல்லாபம் செய்தது அவளுடைய ஆர்வத்தை அப்போது பெரிதும் குறைத்திருந்தது.

'அதிருக்கட்டும்... இந்தப் பெண் கோமதியை இங்கே விட்டுட்டுப் போனானே ஒரு பிராமணன், எப்போ வந்து கூப்பிட்டுக்கொண்டு போகப் போகிறானாம்? கொஞ்சமாவது கூச்சம் நாச்சம் இல்லாமல், அது டிரைவரோடே பேசிண்டு நிற்கிறதே!' என்றாள் பாக்கியம்.

'அப்படியா? ஹே! வந்துடுவார் இரண்டு நாளிலே. கேஸ்கூட முடிந்துவிட்டதாகச் சொல்றா. பதினைந்து நாள் வைச்சிண்டிருந்தாச்சு. இன்னும் இரண்டு, மூணுநாள் இருந்துட்டுப் போகட்டுமே...'

அக்காள் உடனே, 'அது இருக்கிறது உன் பெண்ணுக்கே சங்கடமாப் போயிடும்டா, பிரணதார்த்தி! உன் பெண்ணைப் பார்க்க வர

பிள்ளை, இவளைப் பார்த்துவிட்டு, லட்சணமாயிருக்காள்னு கல்யாணம் பண்ணிண்டாலும் பண்ணிப்பான்!' என்றாள்.

'பார்ப்போம்' என்று எழுந்தார் பிரணதார்த்தி. 'நான் முதலியாரிடம் சொல்லிவிட்டு வருகிறேன். டிபன் எல்லாம் ஒரு எட்டுப் பேருக்கு ஹோட்டலிலிருந்தே தருவிச்சுடறேன்... என்ன... ஹே!' என்றார். பதிலை எதிர்பார்க்காமல் கிடுகிடென்று கீழே இறங்கிச் சென்றார்.

சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு பிரணதார்த்திஹர அய்யர் ஒரு சோபாவில் அமர்ந்து, ராவ்பகதூர் நாகநாத முதலியாருடன் பேசிக்கொண்டிருந்தார்.

'அதெல்லாம் வேண்டாம்னா! எனக்கு டீ பார்ட்டி கொடுத்தால் தானா?' என்றார் முதலியார்.

'இதை ஏன் டீ பார்ட்டி என்று பெரிசாகச் சொல்கிறீர்கள்? நம் வீட்டுக்குச் சாதாரணமாக எப்போதும் வருகிறாற்போலவே வாருங்கள்; சகஜமாக டிபன் சாப்பிடுகிறாற்போல் சாப்பிடுங்களேன்... அந்தப் பையன் ரங்கராஜனையும் வரச் சொல்லிவிட்டால்-'

'ஆமாம், சொல்லுங்க... இன்னொரு விஷயம்... எலெக்ஷன் டயத்திலே நல்லா வேலை செய்ய எனக்கு ஒருயோசனை தோணறது.'

'சொல்லுங்க! அது உங்க காரியம், பொறுப்பு முழுதும் உங்களதுன்னுதான் சொல்லிவிட்டேனே, முதலிலேயே நான்' என்றார் பிரணதார்த்தி.

'ஒண்ணுமில்லே- சக்தி இல்லாமே சிவன் இல்லே,என்பாங்க! அது மாதிரி பொம்பிளே இல்லாமே ஒரு காரியம் இல்லே...'

'ஆமாம், ஆமாம்!'

'நம்ம எலெக்ஷனுக்கும் ஒரு ஆளு வைச்சிருக்கேன் அந்த மாதிரி. ஒரு சினிமா ஸ்டார் நமக்கு ரொம்ப வேண்டப்பட்டவள்தான் மிஸ் பாரிஜாதம்னு பேர். அவளை விட்டு நாலு எடத்துக்குப் போகச் சொன்னா, காரியம் பாதி ஆனாப்பலேதான். எதினாலும் அவளுக்கும் கொடுத்திடலாம்!'



'முதலியார்! செய்யுங்க பின்னே அப்படியே! ஹே!'

'எங்கே நீங்க வேண்டாமுன்னு சொல்லுவீங்களோன்னு பயந்துட்டேன். இன்னொரு யோசனை; நாளை டீ பார்ட்டிக்கு அவளையும் அழைச்சுட்டா?'

'எனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் கிடையாது. முதலியார்வாள்!'

'பேஷாப் போச்சுங்க, போங்க! நான் அங்கே வந்து, என் காரை அனுப்பினேனா, அஞ்சே நிமிஷத்திலே வந்துடுவா. நான் ஒரு வார்த்தை சொல்லிட்டா, அந்தப் படிக்கு நடப்பா!' என்றார் முதலியார்.

'எது உசிதம்னு தோணறதோ, செய்யுங்க... அப்புறம் அந்தப் பையன் ரங்கராஜன் மாமா ஒருத்தர் இருக்காரே, அவரையும் கூப்பிட்டால், மெல்லப் பையனைப்பத்தியும் விசாரிக்கலாம். என்ன சொல்றீங்க? ஹே!'

'ரொம்ப ரைட்டாப் போச்சு!'

'அப்போ நான் வரேன்! நீங்க கட்டாயம் வரணுமே, ஹே!'

'என்னா போங்க, இலவச சாப்பாடுன்னா நான் மறப்பேனுங்களா?'

பிரணதார்த்திஹர அய்யர் திரும்பிய சமயம் வெயில் ஏறிவிட்டது. வரும்போது மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நுழைந்து, தமது மோட்டார் கேஸ் விஷயமாக விசாரித்தார். அநேகமாக சம்மன்ஸ் இரண்டு நாளில் வருமென்று தெரிந்தது. அவருடைய நண்பரான வக்கீல், மாஜிஸ்டிரேட்டை அவருக்குச் சுட்டிக்காட்டி, 'ரொம்பக் கண்டிப்பான பேர்வழிதான்! நூறு ரூபாய் அபராதம் போடுகிறானோ, தண்டனை என்று போடுகிறானோ அவன் இஷ்டம் அது! இந்த மாதிரி கேஸுகளில் நிர்த்தாட்சண்யமாகத் தான் இருக்கிறான் அவன்' என்றார்.

'பார்த்துக்கொள்ளுங்கள். அபராதமானால் பரவாயில்லை. நம்ம பேர் வெளியிலே அநாவசியமாக வரக்கூடாது! தெரிந்ததா? ஹே!' என்று சொல்லிவிட்டுப் பிரணதார்த்தி வீட்டுக்குத் திரும்பினார்.

சற்று முன்னால் நிறுத்திவிட்டுச் சென்ற மோட்டாரை ஸ்டுடியோ வாசலில் காணோமென்றவுடன் ரங்கராஜனுக்குப் பகீர் என்றது.

அது எங்கே போயிருக்கும், எப்படிப் போயிருக்கும், யாரைப் போய்க் கேட்பது என்று ஒன்றுமே புரியாமல் திகைத்தான். திரும்பிப் பிரணதார்த்தியிடம் போய்ச் சொல்வதில் ஒன்றும் உபயோகமில்லை. 'வாள் வாள்' என்று கத்துவார். 'வேலையை விட்டுப் போ' என்பார், அவ்வளவுதான்! அப்போதே போலீஸில் தெரியப்படுத்துவதும் உசிதமாகத் தோன்றாமல் போகவே, அவனுக்குச் சட்டென்று சீனுவின் ஞாபகம்தான் வந்தது.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்று ஆகியிருந்தது. அப்போதே புறப்பட்டுப் போனால் அவனை அவனுடைய ஆபீஸிலேயே பார்க்கலாம். அவனுடன் கலந்துகொண்டுதான், மேலே செய்ய வேண்டிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்று எண்ணியவனாக டவுனுக்கு பஸ் ஏறினான்.

லிங்கி செட்டித் தெருக்கோடியில் தன் ஆபீஸ் அறையில் சீனு கை கட்டிக்கொண்டு முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்தான். திரும்பத் திரும்பப் பெருமூச்சுகளே கிளம்பின. அவனுக்கு வேலையே ஓடவில்லை. அப்போதுதான் பரங்கி மலையி லிருந்து திரும்ப வந்திருந்த அவன் கண்முன், ருக்மிணி நின்று புன்னகை செய்வது போன்ற தோற்றமே வந்தது. 'நான் வரும் போது அவள் என்னை எதற்காக அப்படிப் பார்க்க வேண்டும்? ஒவ்வொருத்தனையும் அவள் அப்படித்தான் பார்ப்பாளா, என்ன? ஊம்... ஹூம்... மாட்டாள்... என்னைப் பார்த்தபோது அவளுக்கு என்னைப்பற்றி நல்ல அபிப்பிராயம் தோன்றியிருக்க வேண்டும்! அதாவது, ஒருவித அன்பு உண்டாயிருக்க வேண்டும்!' என்று எண்ணினான். மேலும், முன்னும் பின்னும் நடந்தான். 'மறுபடி ஒரு தடவை போய்ப் பார்க்க வேண்டும்!' என்றுதானே முணுமுணுத்துக்கொண்டான். பிறகு அறையின் கோடியிலிருந்த ஜன்னல் வழியே வெறிக்கப் பார்த்தான். வெறிக்கப் பார்த்தானே ஒழிய, வெகு நேரம் வரையில் பார்த்தது என்னவென்று அவன் கண்களிலிருந்து மூளைக்குச் செய்தி எட்டவில்லை. அது எட்டியபோது, அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இது எப்படி, இந்த இடத்துக்கு வந்தது என்று ஆச்சரியப்பட்டான்.

சீனுவின் ஆபீஸ் லிங்கிச் செட்டித் தெருவில் இருந்ததெனினும், அதன் பின்புறத்து வாசல் ஒரு சந்தில்தான் இருந்தது. இப்போது அவன் பார்த்தது அந்தச் சந்தைத்தான். அங்கே, கீழே அவன்



கண்முன்னே பிரணதார்த்திஹர அய்யரின் மோட்டார் கார் நின்று கொண்டிருந்தது. கார்களே வராத அந்தச் சந்துக்கு அது ஏன், எப்போது வந்தது? ரங்கராஜன்தான் கொண்டுவந்து நிறுத்தி னானா? பின் ஏன் இன்னும் அவன் வரவில்லை? இந்த யோசனைகளுடன் அவன் திரும்பியபோது, சாட்சாத் ரங்க ராஜனே அவன் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

'என்னடாது! கார் மட்டும் நிற்கிறதே, ஆள் மேலே வரக் காணோமே என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்! நீயும் வருகி றாய்!' என்றான் சீனு.

'எந்த கார்?'

'பிரணதார்த்தியின் கார்தாண்டா! என்ன அப்படிப் பார்க்கிறாய் என்னை? நீ கொண்டு வராமல் அது எப்படி வருகிறது இங்கே?' என்றான் சீனு.

கீழே எட்டிப் பார்த்த ரங்கராஜன் ஒரு கணம் திகைத்துப் போனான். பிறகு, 'சீனு! நீ இப்படியும் விளையாடக் கூடாது! நீ பாட்டுக்குச் சொல்லாமல் காரைக் கொண்டு வந்து விட்டாயே! என் மனசு இத்தனை நாழி பட்டபாடு உனக்குத் தெரியுமா?' என்று கேட்டான் ரோஷத்துடன்.

'யார் அப்பா உன் காரைக் கொண்டு வந்தது? இது வேறே வேடிக்கையா?' என்றான் சீனு.

'முழுப் பூசணிக்காயை மறைக்கப் பார்க்கிறாயே! நீ பண்ணி யிருக்கிற காரியம்-'

'மடையன் மாதிரி பேசாதே! ஆமாம்! அறையப் போகிறேன் உன்னை! எவளோ நடத்தை கெட்டவளைக் கொண்டு போய் விட்டுவிட்டு, இங்கே குடித்துவிட்டும் வந்திருக்கிறாயோ?'

'நிறுத்து! பின் எப்படி இங்கே வந்தது இந்த கார்?'

'அது எனக்குத் தெரிய வேண்டிய அவசியம்? பிரணதார்த்தியின் கார் நெருப்புப் பற்றிக்கொண்டதென்று கேள்விப்பட்டாலும் என் நெஞ்சு கொஞ்சம் குளிருமே!'

'அதனால்தான் நீ கொண்டு வந்திருக்கிறாய் என்கிறேன் நான்!'

'அடே! நான் அதைக் கொண்டு வந்திருந்தால் உருப்படியாக, நீ பார்க்கும்படி, இங்கே வைத்திருக்க மாட்டேண்டா! உட்காரு, விஷயத்தைச் சொல்லு!' என்றான் சீனு.

ரங்கராஜன் விவரங்கள் பூராவும் சொல்லி வந்தான். பொன்னாயி அவனை ஏமாற்றியதைச் சொன்னபோது, சீனு சிரித்தான். 'பயித்தியக்காரா, பயித்தியக்காரா, போ! அவளுக்கு நாயைக் கொண்டுபோய் அவசரமாகக் கொடுத்தியே!' என்றான். ரங்கராஜன் கார் காணாமற்போனவரைச் சொல்லி நிறுத்திக் கொண்டான்.

மணி அதைக்கொண்டு சென்றதையும், மோதியபின் யார் கண்ணிலும் படாமல் சந்து பொந்துகளில் விட்டு வந்ததையும் அவன் எப்படி அறிவான்? காரைத் திருடிய மணி, அதை இஷ்டப்பட்டபடி கொண்டுபோக உத்தேசித்தானே ஒழிய, அதில் போதுமான பெட்ரோல் இருந்ததா என்று கவனிக்காமல் போனான், பெட்ரோல் விஷயத்தில், கடும் சிக்கனத்தைக் கடைப் பிடித்த பிரணதார்த்தி, கொஞ்சமாகத்தான் அந்தப் பண்டத்தைச் செலவழிக்க அனுமதித்திருந்தாராகையால் ரங்கராஜன் கிளம்பிய போதே அதில் சொற்பம்தான் இருந்தது.

எதிர்பாராதபடி பொன்னாயியை ரங்கராஜன் ஸ்டூடியோவுக்கு வேறு இட்டுச் சென்றானாகையால், வண்டியில் மிகுதி இருந்த பெட்ரோல் சொற்பமே. மணி அரண்மனைக்காரன் தெருவில் வேறொரு வண்டிமீது மோதிவிட்டு, பிறர் கண்ணில் படாமல் சந்துகளின் வழியே வந்தபோது, பெட்ரோல் முழுதும் சூன்ய மாகி நின்றே விட்டது. அது நின்ற இடம் அகஸ்மாத்தாகச் சீனு ஆபீஸின் பின்புறமாக இருந்தது. மணியும் இதோடு திருப்தி அடைந்து, அங்கேயே அதை விட்டுச் செல்ல வேண்டி வந்தது. இதையொன்றும் அறியாத ரங்கராஜன் யோசனையில் ஆழ்ந் தான்.

சீனுவும், தான் சென்று வந்த விவரங்களைச் சொல்லி, 'இதில் யோசனை செய்ய ஒன்றுமில்லை. உன் பின்னால், யாரோ ஒருவன் வேலை செய்துகொண்டேயிருக்கிறான். சந்தேக மில்லை. ஜாக்கிரதையாக இரு... இன்றைக்கே உன் மாமாவிடம் எல்லாம் சொல்லிவிடலாமென்றுதான் பார்த்தேன். அதற்கு நான் போன சமயம் ஒத்துக்கொள்ளவில்லை. நாளைக்காவது...' என்றான் சீனு.



'டேய்... என் வழிக்கு வராதே, ஆமாம்... நான் உன் வழிக்கு வர வில்லை!'

'என் வழி என்ன இருக்கிறது நீ வருவதற்கு?'

'என் மாமா பெண் இருக்கிறாளே' என்று சிமிட்டினான் கண்ணை.

'ஓஹோ! அதுதான் குறும்புத்தனம் வேண்டாமென்கிறேன்!' என்றான் சீனு.

ரங்கராஜன் கிளம்பினான். சீனுவே பெட்ரோல் போட்டுவிட்டு, 'அடே, மறுபடி வண்டியை எங்கேயானும் கோட்டை விட்டு விட்டு இங்கே வந்தாயானால், அகப்படாது! அப்புறம் உங்கள் பிரணதார்த்தி மீனாட்சியைத்தான் கேட்கவேண்டியிருக்கும்!' என்றான் சீனு சிரித்துக்கொண்டு.

'அது யாரது, மீனாட்சி? அப்படி யாரும் அங்கே இல்லையே!'

'இந்த மீனாட்சி அந்தப் பரமசிவனின் தர்மபத்தினியாகிய பரமேச்வரிதான். பிரணதார்த்திக்கு எதிலாவது சந்தேகம் வந்தால் அந்தத் தேவியின் முன்னால் இரண்டு சீட்டு எழுதிப்போட்டு எடுப்பாரே... நீ பார்க்கவில்லையா இன்னும்? தமக்கு இஷ்டமான சீட்டு வருகிறவரைக்கும் குலுக்கிப் போடு வார் அப்பா, அவர்!'

'எனக்குத் தெரியாது! நான் பார்த்ததில்லை அதை!'

'அதையும் சீக்கிரம் பார்க்கப்போகிறாய், போ! அது போகட்டும். பிரணதார்த்தியிடம் என் ஆபீஸின் பின்னாலேயிருந்து மோட்டார் கிடைத்ததாகச் சொல்லி வைக்காதே! மறுபடி மாம்பலத்திலேயே வீட்டுக்குப் பக்கத்தில் இருந்ததாகச் சொல்லி வை!'

'உன் பேரை நான் ஏண்டா அங்கே சொல்கிறேன்?' என்றான் ரங்கராஜன்.

திரும்ப வண்டியில் ஏறிய ரங்கராஜன், அது திருப்திகரமாகவே இருப்பதை அறிந்தான். நடந்தது என்னவோ மர்மமாகத்தான் இருந்தது. என்றாலும், வண்டி கிடைத்துவிட்டதனால் மேலும் அதை நோண்டிக் கொண்டிருக்க விருப்பமில்லாதவனாக, பிரணதார்த்தியின் வீட்டை நோக்கி அதைச் செலுத்தினான்.

அவன் நுழைவதும், பிரணதார்த்தி மாஜிஸ்டிரேட் கோர்ட்டி லிருந்து திரும்புவதும் சரியாக இருக்கவே, அவர் அவனை உடனேயே மாடிக்கு அழைத்து சென்றுவிட்டார்.

'என்ன கேட்கிறான் அவன்? ஹே!' என்றார் பிரணதார்த்தி நாற்காலியில் அமர்ந்து.

'அது கிடைக்காது, ஸார்!' என்று ரங்கராஜன் விஷயத்தைச் சொன்னான். ஆனால், வெகு ஜாக்கிரதையாகச் சீனு சம்பந்தப் பட்ட விஷயங்களை மட்டும் வெளியிடவேயில்லை.

'நீ ஒன்றும் உபயோகமில்லை, போ!' என்றார் அவர் முடிவில்.

'நான்தான் முன்னாலேயே சொன்னேனே, நடக்காது என்று!'

'ஹே! நீ ரொம்பக் கண்டியோ? பொன்னாயியா பணம் வேண்டாம்னு சொல்லுவாள்? ஹே! உனக்கு வாங்கச் சாமர்த்தியம் இல்லை! கடைசியிலே நானே போனாத்தான் இந்தக் காரியம் ஆகப்போகிறது! ஹே!'

'நீங்கள் போனாலும் ஆகும் என்று தோன்றவில்லை, ஸார்! அவள் பெரிய ஜாலக்காரியாயிருக்கிறாள்.'

'இருக்கட்டுமே, ஹே! இருக்கட்டுமே என்கிறேன்! நான் அவளை விட ஜாலக்காரன்! தெரிந்ததா, ஹே! நாளைக்கு டீ பார்ட்டி ஆகட்டும்... அப்புறம் அதைக் கவனிக்கிறேன்! நீ போகலாம் இப்போ! இது விஷயமாக நீ போனது வந்தது, ஒண்ணும் யாருக்கும் தெரிய வேணாம், தெரிந்ததா, ஹே!'

'அதை ஏன் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்? இன்னொரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே; ரொம்ப ஆச்சரியம் அது... ஸ்டுடியோ வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போனேனா? திரும்பி வந்து பார்த்தால் அதைக் காணோம் அங்கே!'

'காணோமா? ஹே! என் மோட்டாரையா? என்ன? ஹே!' -பிரணதார்த்தி. தேள் கொட்டிவிட்டாற்போல் துடிக்கத் தொடங்கிவிட்டார்.

'ஒன்றும் பயப்பட வேண்டாம், ஸார்! இப்போ அகப்பட்டு விட்டது!'



'அகப்பட்டதா? ஹே! கெட்டுப் போச்சு என்கிறே? அப்புறம் அகப்பட்டது என்கிறே! என்ன அப்பா இது. ஹே! சரியாச் சொல்லு!'

'சொல்லிக் கொண்டேதான் வருகிறேனே! காரை வந்து பார்த்தால் காணோம்! எனக்குப் பகீர் என்றது...'

'உனக்கு என்ன செய்தால் என்ன? ஹே! என் கார் என்ன ஆச்சு?'

'பார்த்தேன், சுற்று வட்டாரத்துக்கு ஒரு ஈ காக்காய்க்கூட இல்லை.'

'ஈயையும் காக்காயையும் உடைப்பிலே கொண்டு போடு! என் கார் சமாசாரம் என்ன, ஹே!'

'உடனே புறப்பட்டு இங்கே வந்தேன். வந்து, இதோ வெங்கட நாரயணா ரோட் முக்கில் பார்த்தால் அங்கே வந்து அது நிற்கிறது!'

'அதெப்படி வந்தது? ஹே!'

'எனக்கும் தெரியவில்லை? ஜட்கா குதிரைக்கு வீட்டு ஞாபகம் வந்து திரும்பும் என்று சொல்லுவார்கள். மோட்டாருக்குக்கூட அப்படி வந்து நான் இதுவரை பார்த்ததில்லை.'

'வேடிக்கை இருக்கட்டும்! யாரோ அதைத் திருடியிருக்கான். ஹே!'

'திருடினால இங்கே அதைக் கொண்டுவந்து விடுவானேன்?'

'அதுவும் சரி, ஏதாவது பழுதாகப் போயிருக்கோ பார்த்தாயா?'

'போயிருக்கிறதாகத் தெரியவில்லை! நான் இப்போ போய் இன்னும் நன்னா கவனிக்கிறேன்!'

'பின்னே போ, உடனே! போன காரியத்தையும் பாழாக்கிவிட்டு, மோட்டாரையும் கூடவே தொலைக்காமல் வந்தீரே, புத்திசாலி தான்! ஹே!'

ரங்கராஜன் பதில் சொல்லவில்லை, சேவகாவிருத்தியில் சில அக்கிரமமான வார்த்தைகளைக் கேட்கத்தான் வேண்டுமென்பதை அவன் உணர்ந்தான். அப்போது அவை காதில் கேட்கவில்லை

போல் பாவனை செய்து கொள்ள வேண்டுமென்பதையும் கற்றுக் கொண்டிருந்தான். கேரேஜுக்குள் சென்று, மோட்டார் பான்னெட்டைத் திறந்தான். எவ்வளவு சொற்ப நாள்களுக்குள் எத்தனை எதிர்பாராத காரியங்கள் நடந்துவிட்டன! நடந்த விஷயங்களைப் பற்றிய சிந்தனையில் கவனம் செலுத்திய ரங்க ராஜன் வாசற்புறம் ஒரு மோட்டார் சைக்கிள் வந்ததைக் கவனிக்க வேயில்லை.

அதிலிருந்து இறங்கிய மணி, நிச்சயமாக ரங்கராஜனும், மோட்டாரும் இராது என்ற நம்பிக்கையுடன் தான் வந்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. மோட்டார் காணாமல் போனதில் வீடு அல்லோலகல்லோலப்படும் என்றும் எதிர்பார்த்தான். அதற்கு மாறாக வீட்டில் நிம்மதி நிலவியது!

பிரணதார்த்தியே வாசலில் வந்து அவனை அன்புடன் வரவேற் றார். 'நேற்றுச் சித்தே இருக்கப்படாதோ? நீ போன உடனேயே நான் வந்துவிட்டேன். நீ ஒரு வித்தியாசமும் பார்க்காதே இங்கே... உன் வீடு மாதிரி நினைத்துக் கொள்!' என்றார்.

மணி உள்ளூறத் துடித்துக்கொண்டிருந்தான். 'மோட்டார் வந்துவிட்டதா? ரங்கராஜன் இருக்கிறானா?' -இதுதான் அவன் விரும்பிய விஷயம்.

'ஒன்றுமில்லை, பார்த்துப் போகலாமென்றுதான் வந்தேன்' என்றான்.

'உள்ளே வா! வராமலே போகிறதா என்ன, ஹே! நான் இனிமேல் தான் சாப்பிடப் போகிறேன். நீயும் இங்கேயே சாப்பிடு... ஹே!' என்று அவர் உள்ளே அழைத்துச் சென்றார்.

காபி சாப்பிட்ட மணி, பங்களாவைச் சுற்றிப் பார்க்க வேண்டு மென்று கிளம்பினான். பிரணதார்த்திக்கு அலுப்பு சலிப்பு தராத விஷயம் ஒன்று உண்டென்றால், தம் வீட்டைச் சுற்றிக் காட்டுவதுதான். சமையல் அறை, படுக்கை அறை, ஸ்நான அறை, ஹால், ஜன்னல், மாடி வராந்தா என்று ஒவ்வொன்றாகக் காண்பித்துப் பூரித்துப் போனார். மணி தோட்டத்தில் இறங்கினான். கேரேஜை இருவரும் நெருங்கினார்கள்.

அங்கே மோட்டாரைக் கண்ட மணிக்குத் 'திக்' கென்றது. அது எப்படி அதற்குள் திரும்பியது என்பதை அறியாதவனாகத்



திகைத்தபோது, பிரணதார்த்தி ரங்கராஜனை அழைத்து, 'ராஜா ராமா! என்ன செய்திண்டிருக்கே! ஹே! இப்படி வா! இவர் யார் தெரியுமா உனக்கு? சின்னவேலி ஜமீன்தாரின் இரண்டாவது பிள்ளை ரங்கராஜன்னு பேர். நம்ம வண்டியைக் காண்பி இவருக்கு!' என்று சொல்லிவிட்டு, மணியின் பக்கம் திரும்பி, 'உங்கள் ஊரில் இதைவிட நல்ல காராக வைத்திருப்பீர்கள் இல்லையா, ஹே!' என்றார்.

மணி பதில் சொல்லவும் முடியாமல் சொல்லாமல் இருக்கவும் மாட்டாமல் தவித்து, கடைக்கண்ணால் ரங்கராஜனைப் பார்த்தான். அவனோ வெட்டுகிறாற்போல் ஒரே பார்வையாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மணி அங்கே சாப்பிடப் போகும் விஷயத்தை உள்ளே தெரிவிக்க விரும்பியவராகப் பிரணதார்த்தி, 'நீங்கள் இங்கே இருங்கள்... இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்!' என்று வீட்டுக்குள் ஓடினார்.

கேரேஜுக்கு வெளிப்புறத்தில், இப்போது ஒருவரையொருவர் விழுங்கி விடுகிறாற்போல் பார்த்துக்கொண்டு தனியே ரங்க ராஜனும், மணியும்தான் நின்றார்கள்.





## அத்தியாயம் – 12

'எனக்கு 106 டிகிரி வரை ஜுரம் ஏறிடிச்சு! எல்லாரும் பயந்துட்டாங்க!'

'அது என்னடா பிரமாதம்? போன வருசத்திலே எனக்கு ஜுரம் வந்தப்போ நூத்தி ஐம்பது நூத்தி அறுபது டிகிரிக்கும் மேலேகூட ஏறிடிச்சே!'

– ஒரு பழைய விகடத் துணுக்கு

ரொம்ப ஆப்தமானவர்களையோ, வெகுகால மாகப் 'பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும்' என்று துடித்துக் கொண்டிருப்பவர்களையோ திடீ ரென்று சந்தித்துவிட்டால், முதலில் என்ன பேசுவ தென்று சகஜமாகத் தெரிவதில்லை. இரண்டொரு நிமிஷங்கள் மௌனமாகவேதான் செல்லும். ரங்க ராஜன் தன் முன்னால் ஓர் ஆசாமி, தன் பெயரைச் சொல்லிக்கொண்டு வந்திருக்கும் ஒரு பேர் வழியைக் கண்டபோது, என்ன பேசுவதென்று தெரியாமல் தான் சிறிது நேரம் திகைத்துவிட்டான். மணியும்கூடத்தான் ரங்கராஜனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

பிறகு, 'நீதான் இங்கே டிரைவராக்கும்?' என்று கேட்டான் ஒரு புன்னகையுடன்.

'ஆமாம், நீதான் ஜமீன்தார் பிள்ளையாக்கும்!' என்றான் பதிலுக்கு ரங்கராஜன் எகத்தாளமாக.

மணியின் முகத்தில் சிறிது விகாரம் தென்பட்டது. இம்மாதிரி பதில்தான் வரும் என்று அவன் எதிர்பார்த்தது ஒருகால் அதற்குக் காரணமாயிருக்கலாம். தைரியத்தை மட்டும் விடாமல், 'நீ சொல்றது புரியல்லையே!' என்றான் மணி.

'புரியல்லையா? புரியாது! இந்த முஷ்டியினாலே உன் மூஞ்சியிலே நாலு குத்துக் குத்தி, உன் பல்லையெல்லாம் உதிர்த்தால் அப்போது புரியும்' என்று சொன்னான் ரங்கராஜன்.

'ஏய்! நீ என்ன பேசறே? மரியாதைப் பிசகான்னா போகறாப்பலே யிருக்கு! நான் என்ன ஜமீன்தார் பிள்ளை இல்லை என்கிறாயா? இந்த வீட்டிலே யாரை வேணா கேட்டுப் பாரேன்!'

'சபாஷ், அது சரியான யோசனை! இந்த வீட்டிலே இருக்கிறவர்கள் யாருக்குமே போன வாரம் வரையில் சின்னவேலியிலே ஜமீன்தார் ஒருத்தர் இருக்கிறார் என்ற சமாசாரமே தெரியாததனாலே அவர்களைத்தான் போய்க் கேட்கணும்! ஏன், அன்றைக்குச் சத்திரத்து வாசலில் அந்தப் பெட்டியைத் தூக்குகிறதற்கு முந்தி, உனக்கே அது தெரியுமா! கொஞ்சம் சொல்லு, அண்ணா!' என்றான் ஏளனமாக.

'ஓ! ரொம்ப விஷயம் தெரிஞ்சிருக்கே உனக்கு?'

'பின்னே தெரியாமே! நீ சின்னவேலி ஜமீன்தார் பிள்ளையானா, எனக்கு அண்ணனாச்சே, அப்பா!'

'ஏது! என்னவெல்லாமோ பேசறியே! நான் பெட்டியைத் திருடினேன் என்றுதான் தெரியுமே உனக்கு! பின்னே ஏனப்பா பேசாமே இருக்கே? நீ உடனே அதை இங்கே ஏன் சொல்லல்லை? இப்பக்கூடத்தான் சொல்லிவிடலாமே? அதெல்லாம் விட்டுவிட்டு எதுக்கு இங்கே நீ டிரைவராக இருக்கணும்!' என்று கேட்டான் மணி.

இந்தக் கேள்வி ரங்கராஜனைத் தூக்கிவாரிப்போட்டது. மணியை ஒரு மடக்கு மடக்கலாமென்று எண்ணிய அவன், தானே அவன் கையில் சுருண்டு வருவதை உணர்ந்தான். இது விஷயமாகக் கோமதியிடம் பூரா விவரங்களையும் ஒப்புக்கொண்டு விடுவதென்று அவன் முதல் நாள் மாலையிலிருந்து துடிக்கிறான். ஆனால், சந்தர்ப்பங்கள் அவனுக்கு நேர் எதிராகவே இருந்து வந்தன. இப்போதே பிரணதார்த்தியிடம் சொல்லிவிடலாமென்றால், அதன் பலனாக அவன் கோமதியை விட்டுப் பிரிய நேரிடுவதுடன்கூட, லகுவாகத் தப்பித்துக் கொள்ள மணிக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியும் வரலாம். சரியான காலம் வரும்வரை இதை விட்டு வைப்பதே உத்தமம் என்று தீர்மானித்தவனாக, மணிக்கு என்ன பதில் சொல்லலாமென்று தயங்கினான்.

'என்ன மிஸ்டர்! யோசனை செய்கிறீர்கள்? நான் கேட்ட கேள்விக்குப் பதில்?' என்றான் மணி கேலியாக.

'பதிலா? நான் அதை வெளியிடாதற்கு முக்கியக் காரணம்... ஒன்று... இருக்கிறது!'

'எனக்குத் தெரியும் அந்தக் காரணம்! அந்தப் பெட்டி இருக்கிறதே, அது உன்னுடையதல்ல. நீயே அதைத் திருடியிருக்கிறாய்! தெரிந்ததா? நான் இப்போ கண்டுபிடித்துவிட்டேன்!' என்றான் மணி.

ரங்கராஜன் திகைத்து நின்றான்.

மணி, இதைக் கவனித்துக்கொண்டு, 'சொல், அப்பா! ஒப்புக் கொள், தம்பி! உம்... விஷயம் வெளியிலே வரட்டும்!' என்று அவசரப்படுத்தினான்.

மாடி அறையில் பாலுவுக்கும் கோமதிக்கும் அப்போது வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. 'தோட்டத்திலிருந்து பறித்துக் கொண்டு வந்து தன் பக்கத்தில் ஒரு செம்பருத்திப் பூ வைத்தால்தான் சாப்பிடுவேன்' என்று பிடிவாதம் பிடித்தான் பாலு.

'இப்போ சாப்பிடுடா, கண்ணே! அப்புறம் வேண்டிய பூ பறித்து விளையாடலாம்!' என்றாள் கோமதி.

'கீழ்க்கண்ட ஸ்டேஷன்கள் ஒவ்வொன்றிலும் தயிர் சாதப் பொட்டலங்கள் கிடைக்கும்' என்றான் பாலு.

'சீ! சாப்பிடு! எனக்குக் கோபம் வந்தா என்ன பண்ணுவேன் தெரியுமா?'

'ஜிப்ஸன் மூக்குக் கண்ணாடிகளையே அணியுங்கள்!' என்றான் அவன்.

'சாப்பிடமாட்டே இப்போ?'

'நீ பூப் பறிச்சுண்டு வரமாட்டே?'

குழந்தை கேட்டபடிதான் செய்வோமென்று கோமதி உடனே எழுந்து, அவசரமாகக் கீழே வந்தாள். பின்கட்டுக் கதவு வழியாகத்

தோட்டத்தில் இறங்க வேண்டியவள், கேரேஜின் பக்கத்தில் இரு குரல்களைக் கேட்டு, அங்கேயே நின்று கவனித்தாள். அப்போது மணிதான் பேசிக்கொண்டிருந்தான்.

'சொல், அப்பா! என்னிடமாவது ஒப்புக்கொண்டுவிடு...உம்... விஷயம் வெளியே வரட்டும்!' என்றான்.

'என்னத்தைச் சொல்லச் சொல்கிறாய்? நான் இங்கே திருட வந்திருக்கிறேன் என்று நினைக்கிறாயா?' என்று கேட்டான் ரங்கராஜன்.

'நினைக்கிறதாவது? எனக்குத்தான் தெரியுமே அது! பாக்கி உன் பிளான் என்ன என்று சொல்லு!'

'அதை உனக்கு ஏன் அப்பா சொல்லணும்? நீயே யோசித்துக் கண்டு பிடிச்சுக்கோயேன், சிங்கமாச்சே!'

'பிரணதார்த்தியிருக்கிறாரே, அவரிடம் இப்போது சொல்லணும் இதை! குதிப்பார்!'

'அண்ணா! அதைச் செய்யுங்கள்! அவர் குதிக்கட்டும்; பார்க்க வேடிக்கையாக இருக்கும்!'

'தம்பி! அதைச் சொல்லவேண்டியபோது நான் சொல்லிக் கொள்கிறேன். அங்கே பெட்டியைத் தூக்கினாற்போல் இங்கேயும் எதையாவும் எடுத்து வைக்காதே. உன்னைக் கவனிச்சுண்டே இருப்பேன். ஜாக்கிரதையாயிரு!' என்றான் மணி. சும்மா தடாலடியாக இப்படி மிரட்டி வைத்தானே ஒழிய, மனத்துக்குள் அவனுக்குத் தைரியம் இல்லைதான். ரங்கராஜனும் மணியின் சாகசம் எவ்வளவு தூரம் போகிறது பார்க்கலாமென்று புன்னகையுடன் பேசாமலேயே கவனித்தான்.

வாசற்புறமாகத் தோட்டத்துக்குள் வந்துகொண்டிருந்த பிரணதார்த்தியைக் கண்ட கோமதி, தான் கேட்டது வரை போதுமென்று, மெல்லத் திரும்ப மாடிக்கே போய்விட்டாள்.

'என்ன காரைப் பார்த்தாயா, ரங்கராஜா! எப்படி இருக்கிறது? ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'அருமையாக இருக்கிறது!' என்றான் மணி.



'வாயேன் உள்ளே! பதினைந்து நிமிஷத்துக்குள் இலை போட்டுவிடலாம்... ஒண்ணுமில்லே! சட்டென்று இரண்டொரு ஐட்டம் கூடப் பண்ணச் சொன்னேன், ஹே!'

'அதெல்லாம் வேண்டாம்னா...'

'நீ வாயேன் உள்ளே! ஹே!'

அவர்கள் போன பிறகு ரங்கராஜன் யோசனையில் ஆழ்ந்தான். மணி பெரிய போக்கிரி என்பதைப்பற்றி ரங்கராஜனுக்குச் சந்தேகம் இல்லை. அவனைச் சாதாரணமாகக் கட்டிப் பிடிப்பதும் சிரமம். என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் அவன் இருக்கும் வீட்டிற்கே வருவான்! இங்கேயும் எதையாவது கிளப்பும் நோக்கம் இல்லாமல் இராது. வீட்டில் பாக்கியத்தின் நகைகள் அங்கும் இங்கும் இறைபட்டுக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். அவன் வந்த அன்றே அவள் மூக்குப் பொட்டை மாடத்தில் வைத்துவிட்டு, எல்லார் பேரிலும் சந்தேகப்பட்டது ஞாபகம் வந்தது. இந்தத் திருடன் எதையாவது கொண்டுபோய் விட, போகிறதே என்று அவன் பயந்தான்.

சுமார் அரைமணிக்குப் பிறகு, பிரணதார்த்தியின் குரல் சமையற்கட்டில் கேட்டது. 'என்ன பாக்யம்! ஆயிடுத்தா? ஹே...' என்றார் அவர்.

'ஆகிக்கொண்டுதான் இருக்கிறது... பத்தரிடமிருந்து அந்தப் புருச்சை வாங்கி, பீரோவில் வைத்தேன். இன்னும் சரியாகக் கூடப் பார்க்கவில்லை. சமையல் கட்டு பிடித்துக் கொண்டுடுத்து என்னை' என்றாள் பாக்கியம்.

'பார்க்கலாம்டி, பார்க்கலாம்... சீக்கிரம் ஆகட்டும். ஹே! நான் வேணா, இந்தக் கும்மட்டியைச் சித்தே விசிறட்டுமா? ஹே!'

'நீங்க பேசாமே தானே போங்கோ, பெரிய உபகாரமாயிருக்கும்! உங்க அக்கா கண்டுட்டா மாய்ஞ்சுடுவார்.'

'இருக்கட்டுமடி, ஹே! இப்படிப்போடு அந்த விசிறியை. எனக்கு நன்னா விசிறத் தெரியாதுங்கறியோ, ஹே! பார்த்துண்டே இரேன் நீ!'

இந்தப் பேச்சு கேரேஜ் வெளியில் நின்ற ரங்கராஜன் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தது. அவன் எது நடக்குமென்று எதிர்பார்த்தானோ

அதுவே நடந்துகொண்டிருக்கிறது. திருடன் தனியாக ஹாலில் இருக்கிறான்! அவன் அங்கே என்ன செய்கிறான் என்று பார்க்க ஆவல் தோன்றவே, ரங்கராஜன் வேகமாக மாடிக்கு ஓடினான்.

மாடியில் இருந்த மணிக்கும் மனத்தில் ஒரு பயம் பிடித்துக்கொண்டுதானிருந்தது. ஏதோ ஒரு காரணத்தினாலேயே டிரைவர்தான் யார் என்று சொல்லிக்கொள்ளவில்லை என்பதை அவன் ஊகித்தான். எந்த நிமிஷத்திலும் அதை அவன் வெளியிடலாம். இப்போதே, இந்தத் தடவையிலே அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டால் என்ன என்று தோன்றியது அவனுக்கு. சௌகரியமாகப் பிரணதார்த்தியும் அப்போது சமையல் கட்டுப் பக்கம் போயிருந்தார்.

எழுந்திருந்த மணி, பீரோவைத் தைரியமாகத் திறந்தான். அதன் டிராயரை இழுத்தவுடனே, மேலாக இருந்து தென்பட்டது புத்தம் புது வைர புரூச். அதை எடுத்துக் கொண்டு, ஒரே நொடியில் டிராயரை மூடி, பீரோவையும் சார்த்திவிட்டுத் திரும்பினான் மணி. அதேசமயம் மாடிப் படியில் யாரோ ஏறிவருவது போன்ற காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். நகையைத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொள்வது முட்டாள்தனம். அறையின் மூலையில் வண்ணானுக்குத் துணிமணிகள் சுமந்திருந்த கூடை ஒன்று தென்படவே, தாற்காலிகமாக அதில் போட்டு, மேலே ஒரு துணியையும் போட்டு மூடிவிட்டுத் திரும்பினான். மாடி ஏறிய ரங்கராஜன், வாசற்படியிலேயே சிறிது தயங்கினான். அறைக்குள் மாட்டியிருந்த கண்ணாடியின் மூலம் உள்ளே நடப்பது தெரிந்தது. ஜமீன்தார் பிள்ளையென்று வந்திருக்கும் ஆசாமி, வண்ணான் அழுக்குகள் நிறைந்த கூடைமீது ஏனோ அப்போது குனிந்து கொண்டிருந்தான்; எதையோ போட்டு மூடினான்; பிறகு திரும்பினான். 'இது என்னவாயிருக்கும்? ஏதோ மர்மம் இருக்கிறது' என்று தீர்மானித்தான் ரங்கராஜன்.

முகத்தில் வியர்வை தோன்ற, மணி அறைக்கு வெளியே வந்தவன், ரங்கராஜன் நிற்பதைப் பார்த்ததும் திணறினான்.

ஆனால், அவன் யோசனைகளுக்கு இடம் வைக்காமல், 'ரங்கராஜா! ரங்கராஜா!' என்று பிரணதார்த்தியின் குரல் கீழே இருந்து அப்போது பலமாகக் கேட்கவே, மணி இறங்கிச் சென்றான். போகும்போது, ரங்கராஜனை மாடியில் தனியே விட்டுச் செல்லுகிறோமே என்ற கவலையுடன்தான் போனான்.



அவன் கீழே சென்றதுமே ஒரே துள்ளலில் ரங்கராஜன், அறைக்குள் நுழைந்து அழுக்குத் துணிகள் நிறைந்த கூடையை அடைந்தான். மேலாக இருந்த சட்டையை நகர்த்தவே, ரங்கராஜனுக்கு உண்மை விளங்கிவிட்டது. 'ஓஹோ, இதுதான் வேலையோ?' என்று தலையை ஆட்டிக் கொண்டு நின்றபோது, அறை வெளியே 'ஹே!' என்று பிரணதார்த்தியின் குரல் கேட்டது.

'என்ன பண்றே ராஜாராமா, ஹே!' என்று உள்ளே வந்தார் அவர். ரங்கராஜன் அந்தக் கூடையை மறைத்தவாறு சட்டென்று திரும்பி நின்றுகொண்டான். அவனுக்கு சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. இந்த நிலையில் பிரணதார்த்தி கூடைக்குள்ளிருந்த நகையைப் பார்த்து விட்டால் யார் மீது குற்றம் சாரும்? அவன் உண்மையை எடுத்துச் சொன்னால்தான் நம்புவாரா? பிரணதார்த்தி நெருங்கிக்கொண்டே வந்தார். ரங்கராஜன் பின்னால் கையைக் கோத்தவாறே குனிந்து கூடையில் துழாவி, புரூச்சை பற்றிக்கொண்டான்.

சமீபத்தில் வந்த பிரணதார்த்தி, அதற்கு அவன் பதிலை எதிர்பாராமலேயே, 'ஹே! மோட்டாரைப் போய்ப் பார்த்தாயா? ஹே!' என்று கேட்டார்.

'பார்த்துவிட்டேன், ஸார்! அதில் ஒன்றுமே பழுதில்லை சார்!'

'சரி... இனிமே நீயாக வண்டியை எங்குமே கொண்டுபோக வேண்டாம். தெரிந்ததா, ஹே! யார் கேட்டாலும் ரிப்பேர் ரிப்பேர்னு சொல்லணும், தெரிந்ததா? ஹே!'

'தெரியும், ஸார்!'

'ஆமாம்... இந்த மாச பெட்ரோல் பில் ரொம்ப ஆகிவிட்டது. அந்தப் பையனுக்குத் தெரியாமல் அதைச் சொல்லத்தான் வந்தேன். என்ன நான் சொல்றது, ஹே!' என்று கூறிவிட்டுத் திரும்பினார்.

பிரணதார்த்தி இறங்கிவிட்டார் என்று நிச்சயம் செய்து கொண்ட ரங்கராஜன், தன் கையிலிருந்த பண்டத்தை எங்கே வைக்கலாம் என்று யோசித்தான். பீரோவைத் திறந்து வைப்பது அபாயம். நடுவில் யாராவது வந்துவிட்டால் கேவலமாகிவிடும். அப்போதைக்கு அங்குள்ள பீரோவின் மேலே அதைப் போட்டு வைத்துவிட்டு, பின் தனிமையில் கோமதியிடம் சொல்லியோ வேறு விதமாகவோ பண்டத்தைத் திரும்பச் சேர்ப்பித்துவிடுவதே சிலாக்கியம் என்று தோன்றியது.

இதே காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தவன் அறைக்கு வெளியே சந்தடியின்றி வந்த கோமதியைக் கவனிக்கவே யில்லை. கோமதியும்கூடக் கவனித்திருக்கமாட்டாள்; ரங்கராஜன் எப்போது மில்லாத அவசரத்துடன் பீரோவிடம் சென்றதுதான் அவள் சந்தேகத்தைத் தூண்டி விட்டது. 'சரி, இதில் ஏதோ விஷயம் இருக்கிறது, கவனிக்க வேண்டும்' என்று யோசித்தவளாய், வந்த சுவடு தெரியாமல் அப்போதே திரும்பிவிட்டாள். ஆனால், அவள் பத்து நிமிஷங்களுக்குப்பின் யாரும் இல்லாதபோது அங்கே வந்து, பீரோவின்மீது கை வைத்துத் துழாவி எடுத்தவள், 'ஆ!' என்று வாய்விட்டுக் கூவிவிட்டாள். டிரைவர் பீரோவின்மேல் ஒளித்து வைத்தது வைர புரூச்சைத்தான் என்று கண்டபோது அவள் தலையே சுழன்றது. இப்போது கண்ணால் காண்பது வாஸ்தவந்தானா? என்ன ஆச்சரியம்! யாரை நம்புவது, யாரை நம்பக் கூடாது என்று கூடத் தெரியவில்லையே என்று திணறினாள். எனினும், வெகு விரைவிலேயே ஒரு முடிவுக்கு வந்தவளாக, பீரோவைத் திறந்து, டிராயரையும் இழுத்து, புரூச்சை அது முன் இருந்த இடத்திலேயே திரும்ப வைத்துவிட்டு, துரிதமாகக் கீழே சென்றாள்.

பிரணதார்த்தியும், மணியும் சாப்பிட்ட பிறகு மாடி வராந்தாவுக்கு வந்து உட்கார்ந்தார்கள். பிரணதார்த்தி அப்போது மணியிடம் தமக்கு முன்பு ஒரு சமயம் உடம்புக்கு வந்ததைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார். 'பார், ரங்கராஜா! ஜுரம் குபுகுபுவென்று 106,107 வரை ஏறிவிட்டது; கண்களைச் சுத்துகிறது; பேச வேண்டுமென்று பார்க்கிறேன், முடியல்லை. பாக்கியத்துக்கா ஒண்ணுமே தெரியல்லை. அந்தப் பெண் மங்களம் இருந்தாள் அப்போ. அவளானால் ஹோவென்று அழறாள். நீ என்ன நினைப்பே அப்போ? ஹேற!' என்றார்.

'டாக்டரைக் கூப்பிட்டேளா?' என்று கேட்டான் மணி. அவன் திருஷ்டி அப்போது ஹாலில் இருந்த வண்ணான் கூடையின் மீதே இருந்தது.

'டாக்டரைச் சொல்லு, மகா கெட்டிக்காரர்! யமன் வாயிலேருந்து என்னைப் பிடுங்கிண்டே வந்துட்டார்னா, ஹேற!'

'அவர் யாருன்னு சொல்லுங்கோ... எங்க ஊருக்கே கொண்டு போயிடறேன் அவரை!'

இப்படியாகப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. சுமார் ஒரு மணி நேரம். பிரணதார்த்தி தமக்கு வந்த மலேரியா, பாக்கியத்துக்கு வந்த இன்புளுவன்ஸா, சாரதாவுக்கு வந்த நிமோனியா முதலியவற்றைப்பற்றியெல்லாம் அளந்துவிட்டு, 'ஹேற! முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே! நாளைக்குச் சாயந்தரம் ஏழு மணிக்குள்ளே இங்கே வந்துடு. நம்ம நாகநாத முதலியாரையும் வரச் சொல்லியிருக்கேன். ஒண்ணும் விசேஷமில்லை. லைட் டிபன் அவ்வளவுதான். என்ன? ஹேற!' என்றார்.

'அதற்கென்ன, வருகிறேனே!' என்றான் மணி. அப்போதே புரூச் கிடைத்துவிட்டால், அன்றே சென்னைக்கு முழுக்குப் போட்டுவிட்டுப் போய் விடலாமென்பதுதான் அவன் மனத்துக்குள் உத்தேசம்.

'அப்புறம், உங்க மாமாவையும் கூப்பிடலாம்னு ஒரு ஐடியா! என்ன? ஹேற! வருவாரா?'

'அவரையே கேட்டுப் பாருங்களேன், வந்தால் வரட்டும்!'

'நீ சொல்லப்படாதா? ஹேற!'

'நீங்களே சொல்லுங்கோ... எனக்கு அவரோட ஒரு சின்ன அபிப்பிராய பேதம்... இரண்டு நாளிலே சரியாப் போயிடும்!'

'சரியாப் போச்சு! டீ பார்ட்டியிலே அதை நானே சரி பண்ணிடறேனே? ஹேற!' என்றார் பிரணதார்த்தி.

அந்தச் சமயத்தில் ரங்கராஜன் ஏதோ வியாஜம் வைத்துக்கொண்டு மாடிக்கு வந்தான். மணியைக் கவனிப்பதுதான் அவன் நோக்கம் என்று சொல்ல வேண்டியதில்லை. ரங்கராஜன் வந்ததைக் கவனித்த மணியும் உதட்டைக் கடித்துக்கொண்டு, சந்தேகத்துடன் பார்த்தான். இவர்களுக்குள் அதிக நேரம் சம்சயங்கள் இல்லாதபடி பாக்கியமே தீர்த்து வைத்துவிட்டாள்.

'என்னா! அந்தப் புரூச்சை நீங்கள் இன்னும் பார்க்கவில்லையே? மூவாயிரம் வரை பொறும் என்கிறா எல்லாரும்!' என்று சொல்லிக் கொண்டே வந்து பீரோவைத் திறந்தாள். மணிக்குக் குபீரென்று வியர்த்தது; அவ்வளவு சீக்கிரம் தன் திருட்டு வெளியாகுமென்று அவன் நினைக்கவில்லை. ரங்கராஜனுக்கும் கூட திக்கென்றது; அதை அங்கே காணாமல் அவள் அலறப்போகிறாள் என்று எதிர்பார்த்தான். இதையெல்லாம்விட, ஆச்சரியத்தில் ஆழ்த்தியது பாக்கியம் செய்த காரியம். பீரோவிலிருந்து அவள் பளபளவென்று

புது மெருகுடன் ஜொலிக்க அந்தப் புரூச்சை அவர்கள் கண்ணின் முன்னிலையில் எடுத்துவிட்டாள்!

'இதென்ன இட்சிணி வேலையா?' என்று இருவரும் பிரமித்த போது, பிரணதார்த்தி அதை முன்னும் பின்னும் வைத்து நோட்டம் பார்த்தார்.

அரைமணி நேரத்திற்கெல்லாம் மணி வெறுங்கையுடன் கிளம்பி னான். வேண்டுமென்றே கேரேஜின் பக்கம் சென்று 'இது என்ன வேலை என்று கேட்கிறேன்!' என்றான் ரங்கராஜனிடம்.

'நானும் உன்னை அதையே கேட்கலாமென்று நினைத்தேன்' என்றான் ரங்கராஜன்.

'நான் சொல்றேன், கேளு...'

'நான் சொல்றேன், கேளு...'

'டேய்!'

'டேய்!'

இரண்டு பேரும் தங்கள் முஷ்டியைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டுவிட்டார்கள்.

'ஹே! அங்கேயா இருக்கே, ரங்கராஜா!' என்று பிரணதார்த்தியின் குரல் கேட்டது.

'ஒன்றுமில்லை, மோட்டார் விஷயமாக டிரைவரை ஒன்று விசாரிக்க வந்தேன்' என்றான் மணி.

'அது சரி, ராஜாராமா! நாளைக்கு டீ பார்ட்டியாச்சே, ஓடி ஆடி வேலை செய்ய ஓர் ஆள் வேண்டுமே? ஹே!'

'இதுதானா! எனக்குத் தெரிந்த ஒரு பஸ்ட் கிளாஸ் ஆள் இருக்கான். நான் அனுப்பட்டுமா?' என்றான் மணி. பதிலுக்குக் கூடக் காத்திராமல், 'நாளைக்கு எட்டாவது மணி இங்கே இருக்கும்படி அவனை அனுப்புகிறேன்' என்று சொல்லிவிட்டான்.

பிரணதார்த்தி, 'ஹே!' என்றார்.

'அவனுக்கு ஒன்றுமே கொடுக்க வேண்டாம்; ரொம்ப யோக்கியன்; வேலையும் சுத்தமாயிருக்கும். நீங்களே பாருங்களேன்!'



'ஒன்றுமே கொடுக்கவேண்டாம்' என்றதுதான் பிரணதார்த்திக்குத் திருப்தி அளித்திருக்க வேண்டும். உடனே ஒப்புக்கொண்டு விட்டார்.

மேலும், ரங்கராஜனுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காமல் மணி கிளம்பினான். போகும்போதே, 'நான் வரேன்' என்று ஒரு மாதிரியாக அவனைப் பார்த்துத் தலையை ஆட்டிவிட்டுப் போனான்.

மணியைப் பார்த்தது முதல் அதுவரை தான் செய்ததெல்லாம் சரிதானா, அல்லது உடனே அவனைக் காண்பித்துக் கொடுத்திருக்க வேண்டுமா என்று ரங்கராஜன் பெரிய சந்தேகத்தில் சிக்கி நின்ற போது, பாலு பின்தொடர கோமதி தோட்டத்துக்கு வந்துவிட்டாள். அவளே அவனைப் பார்க்க வருகிறாற்போல் பட்டது அவனுக்கு. இதுவே தருணம் என்று ரங்கராஜன் அவளை நெருங்கி, 'என்ன பேசக்கூட மாட்டேனென்று இப்படி ஒதுங்கினால்...' என்றான்.

கோமதி எரிக்கிறாற்போல் ஒரு பார்வை பார்த்து, பாலுவைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, 'நீங்கள் இனிமேலும் போகமாட்டீர்களா?' என்று கேட்டாள்.

'எங்கிருந்து போவது?'

'மதுரை ஜங்ஷன், பரமக்குடி, ராமநாதபுரம் ஸ்டேஷன்களுக்கு இங்கே மாற வேண்டும்' என்றான் பாலு.


'இந்த வீட்டிலிருந்துதான்! இந்த வேலையிலிருந்துதான்! நேற்றே சொன்னேனே!'

'எதற்காக? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'

'எச்சரிக்கை; கதவு ஓரமாகப் பிரயாணிகள் நிற்கவும் உட்காரவும் செய்வது கீழே விழ ஏதுவாகும்' என்றான் பாலு.

'உங்களுக்கா புரியவில்லை? நீங்கள் உடனே போகாவிட்டால், நீங்கள் இன்றைக்குச் செய்ததை நான் சொல்லிவிடுவேன்! வாடா, பாலு' என்று கோமதி பாலுவை இழுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

திகைத்து நின்ற ரங்கராஜனைப் பார்த்து பாலு, 'டிரைவர் மாமா! அத்துமீறி நடப்பவர்கள் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்படுவார்கள்' என்று சொல்லிக்கொண்டே போனான்.





## அத்தியாயம் - 13

'உமக்குத் தெரிந்தவரையில், உமது குடும்பத்தினரில் யாருக்காவது எப்போதாவது பயித்தியம் பிடித்திருந்தது உண்டா?'

**- இன்ஷூரென்ஸ் நமூனாவில் ஒரு கேள்வி**

சின்னவேலி ஜமீன்தார் சுப்ரமணிய அய்யருக்குக் கோபம் வந்திருந்தது. கோபம் வந்த வேளைகளில் வழக்கமாக அவர் இரண்டு காரியங்களில் ஒன்று செய்வார். ஒன்று, குறுக்கும் நெடுக்கும் கூண்டில் அடைக்கப்பட்ட புலி மாதிரி உலாத்துவார். இல்லாவிட்டால், ஒரு மணிக்கயிற்றை எடுத்து வைத்துக்கொண்டு அதில் முடிச்சுப் போட்டுப் போட்டு அவிழ்ப்பார். இந்த இரண்டு காரியங்களையும் செய்ய அவர் மதுரையில் தங்கியிருந்த இடம் வசதி அளிக்கவில்லையாதலால், அவருக்கு வந்த கோபம் தணியாமல், வர வர உச்ச நிலையையே அடைந்துகொண்டு வந்தது. அதனால், அவருடன் வந்திருந்த வேலைக்காரன் தங்கவேலுவின் பாடு திண்டாட்டமாகப் போய்விட்டது என்று சொல்ல வேண்டியதில்லை.

ஜமீன்தார் மதுரைக்கு வந்த காரணம், முல்லைவாசல் கேஸ் விஷயமாகத்தான். சென்னை ஹைகோர்ட் நீதிபதிகளும் பிரபல வக்கீல்களும்

அதன் சுவான்தாரர் யார் என்பதைப்பற்றிப் பதினேழு வருஷமாக பலத்த அபிப்பிராயபேதம் கொண்டிருந்தார்கள்; மேலும், அது பெடரல் கோர்ட்டுக்கே சென்று அங்குள்ள படே படே நீதிபதிகளையும் விழிப்படையச் செய்து வந்திருக்கும்போது, அதன் நுணுக்கங்களையும் நுட்பங்களையும் நாம் இங்கே விஸ்தரித்துக்கொண்டிருப்பதில் உபயோகம் ஒன்றுமிருக்கப் போவதில்லை. பொதுவில், அந்த ஜமீனுக்கு நடேசய்யர் என்பவரும், கல்யாணராமய்யர் என்பவரும் தாங்களே தான் சுவான்தாரர் என்று வியாஜ்யம் போட்டிருந்தார்கள். சின்னவேலி ஜமீன்தார் சுப்ரமணிய அய்யர், வருங்காலத்தில் முல்லை வாசலையும் தம்முடைய ஜமீனுடன் சேர்த்துக் கொள்ளலா மென்ற ஒரே ஆசையினால் தூண்டப்பட்டு, கல்யாணராமய்ய ருக்குப் பணமாகவும் குணமாகவும் எத்தனையோ உதவி செய்து வந்திருக்கிறார். அன்று மாலைதான் கேஸ் விஷயமான முடிவு வெளியாகிவிட்டதாகவும், அது நடேசய்யருக்குச் சாதகமாக இருப்பதாகவும் அரசல் புரசலாக அவர் கேள்விப்பட்டார். அவ்வளவுதான்; கோபம் அந்த க்ஷணமே ஜனனம் எடுத்தது. விஷயத்தைத் தீர விசாரித்துக்கொண்டு சின்னவேலிக்குத் திரும்பலாமென்று அவர் நினைத்திருந்த சமயம், சின்னவேலி யிலிருந்தே அவரை அவசரமாக வரும்படி குமாஸ்தா ராமய்யர் தந்தி அடித்திருந்தார்.

'ஆத்தில் ஒரே ரகளை. உடனே புறப்பட்டு வரவும்.'

அதைப் பார்த்ததும் துள்ளிக் குதித்தார் சுப்ரமணிய அய்யர். 'என்ன ரகளை? எதற்காகப் புறப்பட்டு வருகிறதாம்? தலைகால் புரியாமல் இருக்கிறதே!' என்று உறுமினார். யோசிக்க யோசிக்க அவர் கோபம் அதிகமாயிற்றே ஒழிய, அதனால் வேறு பலன் ஒன்றும் ஏற்படவில்லை. அன்றே கிளம்புவோமென்றால், அன்றிரவு வண்டி போய்விட்டது. ஜமீன்தார் மேலும் மேலும் துடித்தார்.

'மடையன்! தந்திதான் அடித்தானே, விவரமாக அடிக்க மாட்டான்?' என்று சொல்லிக் கொண்டார்.

தங்கவேலு தலையைச் சொறிந்துகொண்டு, 'ஆமாமுங்க' என்றான்.

'என்னடா ஆமாமுங்க?' என்று கர்ஜித்தார் ஜமீன்தார்.



'இல்லிங்க, ஒண்ணும் இல்லிங்க' என்றான் அவன்.

'என்னடா ஆமாம், என்னடா இல்லை? மடத்தனமாயிருக்கு!' என்று கூறினார் ஜமீன்தார்.

'சரிதானுங்க!'

ஜமீன்தார் வெட்டுகிறாற்போல் அவனையே பார்த்தார். அவன் வெறிக்க எதையோ வெளியே பார்க்கிறாற்போல் பாவனை செய்தான். மிகப் பழைய நாளைய வேலைக்காரனான தங்க வேலுக்கு எஜமான் கோபம் சகஜமானதுதான்.

மறுநாள் காலை ஜமீன்தார் அலைந்து பார்த்ததில், நடேசய்ய ருக்குச் சாதகமாகத் தீர்ப்பாகியிருப்பதாகப் பொதுவாக அறிய முடிந்ததே தவிர, அதிக விவரம் ஒன்றும் தெரிந்துகொள்ள முடிய வில்லை. அன்று மாலை அதாவது, ஆறாவமுதுவும் சேதுவும் சென்னைப் பட்டணத்தில் ரயிலேறிய அதே மாலையில்-அவர் மதுரையில் தஞ்சாவூருக்கு ரயிலேறினார். என்றுமில்லாத புதுமை யாக மதுரை வண்டியும் பட்டணத்திலிருந்து வந்த வண்டியும் தஞ்சாவூரில் சந்தித்துக்கொண்டன.

ஸ்டேஷனில் இறங்கி வெளியே வந்ததுமே, தெரிந்த முகமாக யாராவது தென்பட்டால் விசாரிக்கலாம் என்று கண்களை ஓட்டினார். ஜமீன்தார் வண்டியிலிருந்து இறங்குவதை ஜாடை யாகக் கவனித்துவிட்ட சேது, இவர் கண்ணில் தென்படாமல் போக வேண்டுமென்று சுற்றி வளைத்துக் கொண்டு வெளியே வந்து, அதன் காரணமாகவே நேரில் இவர் கண்ணில் படவே, 'டேய்! யாரடாது!' என்று கூப்பிட்டுவிட்டார் ஜமீன்தார்.

நெஞ்சும் மார்பும் படக், படக்கென்று அடித்துக் கொள்ள, பாம்பின் வாய்க்குள் வலியச் செல்லும் தேரையைப்போல் சேது நெருங்கினான்.

'என்னடா விசேஷம்?'

'ஒண்ணுமில்லே, மாமா!'

'என்னடா ஒண்ணுமில்லே? எங்கேடா போயிட்டுவரே? உம்?' என்றார் ஜமீன்தார்.

'எங்கேயுமில்லே, மாமா! உங்கள்கிட்ட சொல்லப்படாது மாமா!'

'ஏண்டா சொல்லப்படாது?'

'மாமி ரொம்பக் கண்டிப்பாகச் சொல்லியிருக்கா, அதனாலே தான்!'

ஜமீன்தார் சேதுவின் காதைப் பிடித்துக்கொண்டார், 'எந்த மாமி; என்னடா சொன்னா? விஷயத்தைச் சொல்லுடா!' கையானது காதைத் திருகவே சேது வாயைப் பிளந்தான்.

'உங்க ரங்கராஜனைத்தான் பார்க்கச் சொன்னா, மாமா..! காதை விடுங்கோ, மாமா..! சினிமா ஸ்டாரோடே இருக்கான், மாமா..! வலிக்கிறது, மாமா! மாமி சொல்ல வேண்டாம்னா; ஐயோ ஐயோ! வலிக்கிறதே, மாமா..! இன்னமே இல்லை, மாமா, சொல்லிட றேன், மாமா! ஐயையோ, மாமா..! நான் என்ன பண்ணுவேன், மாமா! அப்பா! காது போச்சே!' என்று துள்ளிக் குதித்தான் சேது.

ஜமீன்தார் கையைச் சிறிது தளர்த்தினார். 'உம்... 'மயிலே மயிலே'ன்னா சரிப்படுமா? டேய் பட்டணமாப் போயிட்டு வரே நீ? உம், ஏறு வண்டியிலே என்கூட! விவரமாகப் பேசிக் கொண்டே போகலாம். நீயே வந்து, உன் மாமிகிட்டச் சொல்ல லாம்!' என்றார். பக்கத்தில் வந்து நின்ற ஜட்காவில் இருவரும் உட்கார, சின்னவேலியை நோக்கி வண்டி கிளம்பிற்று, இங்கே நடந்த சகல விஷயங்களையும் கவனித்துக்கொண்டே ஆராவ முது வேறொரு ஜட்காவில் ஏறினான்.

குமாஸ்தா ராமய்யர் தவியாகத் தவித்துக்கொண்டிருந்தார். தாம் தந்தி அடித்த விஷயம் தெரிந்தால் கோபாலன் தன்னைக் காளவாயில் வைத்துவிடுவானே என்று பயந்தார்; ஜமீன்தாருக்கு வண்டி அனுப்பாமல் இருந்தால், அவர் மென்னியை முறித்து விடுவாரே என்று நடுங்கினார். இந்த இருதலைக் கொள்ளியில் அகப்பட்டிருந்த மனுஷன் ஒரு முடிவுக்கு வருவதற்குள் ஜமீன் தார் ஏறி வந்த ஜட்கா பங்களா வாசலில் நின்றுவிட்டது. குமாஸ்தா ராமய்யர் தைரியமாக எழுந்து, ரேழிவரை வந்து, அங்கே வைத்திருந்த பெரிய மரக் குதிருக்குப் பின்னால் போய் ஒண்டிக்கொண்டார்.

எதிர்பாராத விதமாக ஜமீன்தார் திரும்பியதைக் கண்ட கோபாலன், முதலில் திடுக்கிட்டான். ஏதோ உத்பாதம் நடக்கப் போகிறதென்று எதிர்பார்த்தான். மெல்ல அவர் பக்கத்தில் வந்து, 'ஒரு தந்தி அடித்தால் காரை அனுப்பியிருப்பேனே!' என்றான்.



ஜமீன்தார் அவனை மதித்துத் திரும்பிக்கூடப் பார்க்காமல் விறைத்தவாறு, யாகசாலைக்குச் செல்லும் ஆடுபோல் சேது பின் தொடர, உள்ளே சென்றார். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஜமீன்தாருடைய நித்ய கர்மானுஷ்டானங்கள் முடிந்த பின்னர், பங்களாவில் இடிஇடித்தது. ஜமீன்தாரின் குரல் கேட்டு ஜன்னல்கள் கிடுகிடுத்தன.

கோபாலன் ஆராவமுதுவிடம் விஷயங்களைச் சுருக்கமாக விசாரித்துக்கொண்டு தகப்பனாரின் அறைக்குள் நுழைந்தபோது, அவர் முன்னால் காவேரி அம்மாள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

'உனக்குப் புத்தி இருக்கான்னு கேட்கிறேன். உன்னைத்தான்டி, உன்னைத்தான்!' என்று கத்திக் கொண்டிருந்தார் ஜமீன்தார்.

காவேரி பதிலே சொல்லவில்லை. கோபாலனைப் பார்த்ததும் ஜமீன்தார் ருத்ரமூர்த்தியானார். 'உன் மண்டையிலே இருப்பது களிமண்ணாடா? உம்? அவன் தான் சிறுபயல் ஏதோ சொன்னான் என்றால்... உம்... உம்...'

'சிறு பயலா, அப்பா, சிறு பயல்! அவன் பண்ணுகிற காரியத்தை ஆராவமுது வந்து சொல்கிறான், கேளுங்கோ!' என்று, ஆராவ முது சென்னையில் விசாரித்து வந்த விவரங்களை வெளியிட் டான். இதனால் தன்மீதிலுள்ள பழியை ஒருவாறு விலக்கிக் கொள்ளத்தான் கோபாலன் உத்தேசித்தது. ஆனால், ஏற்பட்ட பலன் அதற்கு நேர் எதிராக இருந்தது. ஜமீன்தார் எழும்பிக் குதித்தார்.

'உங்களுக்கெல்லாம் பைத்தியம்! இங்கே எல்லோருக்கும் பைத்தியம்! இவள் ஓர் ஆளை அனுப்பினால், நீயும் ஒரு ஆளை அனுப்பி, என் குடும்பம் சந்தி சிரிக்கிறதேடா?' என்று கூச்சல் போட்டார். கைகளை நாலாபுறமும் வீசி உதறினார். ஏதோ யோசனை வந்தவர்போல், அறைக்கு வெளியில் போய், அங்கே நடுங்கிக்கொண்டு நின்றிருந்த சேதுவைக் காதைப் பிடித்து அறைக்குள் இழுத்து வந்தார்.

'மாமா! இன்னொரு காதைப் பிடியுங்கோ, மாமா! மாமா, மாமா!' என்று பரிதாபமாகக் கெஞ்சினான் சேது. 'வலிக்கிறதாடா? நன்னா வலிக்கிறதாடா? எனக்குத் தெரியப்படாதுன்னுதானேடா சொன்னே?'

'மாமா... மாமா... மாமா...'

'அவன் குழந்தை, அவனை ஏன்?' என்று காவேரி ஆரம்பித்தாள்.

'பேசாதே!' என்று கர்ஜித்தார் ஜமீன்தார். 'உன் புடைவை, துணிமணிகளை எடுத்துக்கொண்டு வா!'

'எடுத்துக்கறேன்... இவனை முதலில் விட்டு விடுங்கள்!'

'நீ எடு முதலிலே!'

ஜமீன்தார் ரொம்பக் கோபமாயிருக்கிறார் என்று அறிந்த பண்ணையாட்கள், தோட்டக்காரன் முதலியவர்கள் அப்படி அப்படியே பதுங்கிக்கொண்டார்கள். 'எடுத்துண்டாச்சா?' என்று கேட்டது ஜமீன்தார் கர்ஜனை. 'வாருங்கோ எல்லாரும் வாசலுக்கு!'

காதைப் பிடித்துக்கொண்டு வந்த சேதுவை வாசலில் நிறுத்தி, 'துரைசாமி டேய்!' என்றார் ஜமீன்தார்.

காரைக் கொண்டு வந்து விட்டு, டிரைவர் துரைசாமி நின்றான், அவர் உத்தரவை எதிர்பார்த்தவாறு.

'காவேரி! ஏறு முதலிலே!' -காவேரி வாய் திறவாமல் ஏறினாள்.

'துரைசாமி! இந்தப் பயலை முன்னாலே உன் பக்கத்திலே ஏத்திக்கோ!'

'என்னையா, மாமா!' என்றான் சேது.

'நீ தாண்டா! மடப்பயலே! ஏறுகிறாயா, இப்போ...'

'ஏறிடறேன் மாமா, சொன்னபடியெல்லாம் கேட்கிறேன், மாமா! காதைமட்டும் தொடாதீங்கோ, மாமா!'

'அப்பா! நீங்கள் இப்போ...' என்று ஆரம்பித்த கோபாலன் மீது ஜமீன்தார் பாய்ந்தார். 'போடா, உள்ளே போடா!' என்றார். பிறகு வண்டியில் உட்கார்ந்து கொண்டு, 'பட்டணத்துக்கு விடு!' என்று டிரைவருக்கு உத்தரவு கொடுத்தார்.

'பட்டணத்துக்கா, எஜமான்?'

'என்னடா சந்தேகம் உனக்கு?'



'போக ரொம்ப நேரம் பிடிக்குமே, எஜமான்!'

'எனக்குத் தெரியும்டா, அது!'

'சரிங்க, எஜமான்!'

டிரைவர் ஏறி உட்கார்ந்துகொண்டான். உடனே கார் கிளம்பியது.

★

சின்னவேலியில் இந்த அமர்க்களமெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது, பிரணதார்த்தியின் வீடும் திமிலோகப்பட்டது. பொழுது விடிந்ததும் விடியாததுமாகப் பிரணதார்த்தி ரங்கராஜனை எழுப்பிவிட்டார். 'இன்னிக்கு டீ பார்ட்டி, உனக்கு ஞாபகம் இருக்கோல்லியோ? ஹோ!' என்றார்.

'இருக்கிறது ஸார், என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!'

'ஆத்திலே ஒண்ணும் சௌகரியமில்லே. என் தமக்கைக்குக் காலில் சுளுக்கு. பாக்கியம் என்னவோ இருக்காளேன்னு நினைக்காதே; ரொம்ப வீக் அவள். தலைச் சுத்தல் என்று படுத்துண்டுட்டா... இன்றைக்கு எல்லாம் கவனிச்சுக்க வேண்டியது நீயும் கோமதியும்தான். தெரிந்ததா, ஹோ!'

'ஆகட்டும், ஸார்!'

'ஆமாம்... அந்தப் பெண் சாரதாவுக்குச் சொல்லியனுப்பணுமே!'

'நான் வேணாப் போய்ச் சொல்லிவிட்டு அழைத்து வரேன், ஸார்!'

'பத்து மணிக்கு மேலே போ. ஆமாம்! காரிலே போக வேண்டாம். தெரிந்ததா, ஹோ! நீயும் அழைத்து வர வேண்டாம். அவள் சித்தப்பாவையே கொண்டுவந்து விடச் சொல்லு. என்ன, நான் சொல்றது, ஹோ!'

'ரொம்ப சரி, ஸார்!'

பத்து மணிக்குக் கிளம்புவதற்குள்ளாக ரங்கராஜன் எப்படியாவது கோமதியைச் சந்தித்து, தன்னைப் பற்றிய பூரா விவரங்களையும் வெளியிட வேண்டுமென்று பார்த்தான். நினைத்துப் பார்த்தபோது, அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு சின்ன வார்த்தை, தன் சொந்த அண்ணன் சொன்னது பொறுக்காமல் பட்டணம்வரை ஓடி வந்த அவனோ, இப்போது எவ்வளவோ பெரிய அபாண்டங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறான்! ஏன்? அந்தப்

பெண் செய்த வசியமா அது? யோசிக்க யோசிக்க, மேலும் அங்கே தங்கவேண்டுமென்று தோன்றியதேயொழிய, கோமதியைவிட்டுப் போக அவன் மனம் இடம் தரவில்லை.

கோமதிக்கும்தான் மனம் மிகுந்த சஞ்சலத்தை அடைந்திருந்தது. ரங்கராஜன் ஒரு பண்டத்தை ஒளிப்பதைத் தான் கண்ணாலே பார்த்துவிட்ட பிறகும்கூட அவன் மீது ஏன் வெறுப்பு வரவில்லை என்று ஆச்சரியப்பட்டாள்.

அவனைப் 'போய்விடு' என்று சொன்னப்புறம், ஒருகால் அவன் போய்விட்டால் என்ன செய்வது என்று பயப்படவும் தொடங்கி
னாள். அவனைச் சந்தித்து, 'இனியாவது ஜாக்கிரதையாக இருங்
கள்' என்று எச்சரிக்கையாவது செய்து விடுவோம் என்று முடிவு
செய்து கிளம்பினாள்.

அந்தச் சமயத்தில் அதிவேகமாகப் பிரணதார்த்தியின் பிள்ளை தத்தாத்திரி வந்து சேர்ந்தான். அன்று ரங்கராஜன் கையினால் 'பிரசாதம்' பெற்றுக்கொண்ட பிறகு இன்று வரை கோமதியின் பக்கம் வந்தவனுமில்லை;வீட்டில் தங்கினவனுமில்லை. இன்று கோமதியின் முன்னால் அவன் வந்து நின்றதும், அவள் சிறிது திடுக்கிட்டாள்.

'கோமதி! நீ ஓர் உபகாரம் செய்யணும்!' என்றான்.

'டிரைவர் இந்தப் பக்கம் வருகிற சமயம்' என்றாள் கோமதி ஜாடையாக.

'அவன் நாசமாய்ப் போகட்டும்! உன்னிடம்தான் ஒன்று வேண்டும்.'

'டிரைவர்கூட உனக்கு இரண்டாகத் திருப்பிக் கொடுக்க வேண்டு மென்று சொல்லிக்கொண்டிருந்தார்.'

'இரு, கோமதி! நான் கேட்பது வேறு விஷயம்; அவசரமாக எனக்கு முந்நூறு ரூபாய் வேண்டும்.'

'முந்நூறு ரூபாய்தானே? உன் அப்பாவைக் கேட்டால் கொடுப் பாரே? நிறைய பணம் இருக்கே!'

'அந்தச் 'சோழ'னா? ஒரு நாளும் கொடுக்க மாட்டானே!'

'உன் அம்மாவிடம் போய்க் கேள்.'



'தட்டான் பாக்கிக்கு அம்மா என்னையே கடன் கேட்டு விடுவாளே! வேறு ஒரு வழி சொல்லு, கோமதி!'

'கடன் கொடுத்தவனையே வழி கேளேன். இங்கே அதிக நாழி நின்றால் அந்த டிரைவர் வந்து, கேட்பதற்கு முந்தி அவர் வழியைச் சொல்லிவிடுவார்' என்று உள்ளே போனாள் கோமதி.

'தினம் ஒன்றிற்கு நாலணாவாவது மிச்சப்படுத்துங்கள். நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள்' என்றான் பாலு குறுக்கே.

'உன்னை உதைப்பேன், ராஸ்கல்!'

'நாய் கடிக்கும், கழுதை உதைக்கும், மாடு முட்டும்' என்று சொல்லி, பாலுவும் உடனே பின்வாங்கினான்.

'என்னடா உனக்குச் சமையற்கட்டிலே வேலை, ஹே!' என்று பிரணதார்த்தி கேட்டுக்கொண்டு வரவே, 'உங்களுக்கு மட்டும் அங்கே ரொம்ப வேலையோ?' என்று முணுமுணுத்துக்கொண்டு தத்தாத்திரி வெளியே சென்றான்.

கோமதியைக் கண்டு பேசலாம் என்று கிளம்பின ரங்கராஜன், நேர் எதிரில் வாசற்புறத்தில் ஓர் ஆள் நிற்பதைக் கண்டான். தலையில் சிவப்பு முண்டாசும், அவனைப் போல் இன்னும் ஓர் ஆள் நுழைந்து கொள்ளக்கூடிய அளவு பெரிய சட்டையும், திருட்டுப் பார்வையுமாக நின்ற அந்த ஆசாமியிடம் ஏதோ பரிச்சய மாகப்பட்டதுபோல் இருக்கவே, வேகமாகப் பக்கத்தில் நெருங்கிக் கூர்ந்து பார்த்தான். இருபது விநாடிக்குள் விஷயம் விளங்கினவனாக, 'என்ன தம்பி! நீ என் வேலூர் அண்ணன் இல்லை?' என்று அவனைப் பிடித்துக்கொண்டான் ரங்கராஜன்.

அவன் புரிந்து கொள்ளாததுபோல், 'என்னை யாரோன்னு தவறாக நினைச்சுட்டில்ல பேசறே?' என்றான்.

'என்ன அண்ணே! ஜெயிலிலே நாம பாண்டி ஆடினதுகூட நீ மறந்திட்டியா? அன்னிக்கு அவ்வளவு அன்பா வந்து அணைச்சிக் கிட்டே, இன்னிக்கி நகரப் பாக்கிறியே! இது தருமமா?'

'நான் இல்லேப்பா அது! என் சித்தப்பன் மவன் ஒருத்தன் என்னைப் போலவே இருப்பான், அவனைச் சொல்றே போலேருக்கு நீ?'

'மீசையை எடுத்து, முண்டாசும் கட்டிட்டா தெரிஞ்சு போயிடா துன்னு நினைச்சுட்டே! இல்லையா, அண்ணே?'

'ஹே! யார் அது அங்கே?' என்று கேட்டுக் கொண்டு வந்தார் பிரணதார்த்தி.

இது சம்பந்தமாக ஒன்றும் தலையிட்டுக்கொள்ள விரும்பாத ரங்கராஜன் ஒதுங்கிக்கொள்ள, வந்திருந்த பக்கிரி, 'ஜமீன்தாரு மகன்தான் என்னை அனுப்பிச்சாரு, வேலைக்கு ஆளு தேவைன் னீங்களாமில்ல!' என்றான்.

'ஹே! நீயா அது?' என்றார் பிரணதார்த்தி. மீசையுடன் அன்று பக்கிரி வந்தபோதே சரியாகக் கவனிக்காத பிரணதார்த்திக்கு, இன்று அதை ஒட்ட க்ஷவரம் செய்து கொண்டு வந்திருந்ததால் அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

'ஆமாமுங்க. நான்தான்.'

'உன் பெயர் என்ன? ஹே!'

'பக்கிரி, பக்கிரிம்பாங்க!'

'வா இப்படி! முதலிலே மாடி ஹாலை ஒட்டடை அடி! ஹே!' என்று கூடவே அழைத்துச் சென்றார் பிரணதார்த்தி. போகும் போதே, 'ராஜாராமா! சாரதாவைக் கூப்பிடணும்னேனே, இப்பவே போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடேன்!' என்றார்.

கோமதியை பின்னால் சந்தித்துக் கொள்ளலாமென்று ரங்கராஜன், டவுனுக்குக் கிளம்பினான். போன இடத்தில் சாரதாவும் சித்தியும் திருநீர்மலைக்குச் சென்றிருப்பதாக அறிந்து, வந்த உடனே அவர்களை அனுப்பும்படி சொல்லிவிட்டுத் திரும்பினான்.

பிரணதார்த்தியின் வீட்டைத் திரும்ப அடைந்தபோது, அவனுக்கு வேலைத் தொந்தரவு அதிகமாயிருந்தது. ஹோட்டலிலிருந்து சிற்றுண்டிகளை வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். ஹாலில் நின்று கொண்டு பிரணதார்த்தி பொட்டை அதிகாரம் செய்து கொண்டிருந்தார். ரங்கராஜனைக் கண்டதும், 'ஹே! இப்படி வா! இந்த டேபிளைத் தூக்கு! ஹே!.. அதோ அந்தப் படம் அங்கே இருக்கப்படாது, தெரிந்ததா, ஹே!' என்று ஆரம்பித்துவிட்டார். கூடமாட வேலை செய்த கோமதி அவனைக் கண்டதும், ஒரு புன்னகை செய்தது ஆறுதல் அளித்தது. 'இப்படிக் கொஞ்சம்



பிடிக்கிறீர்களா?'...'அதைச் சித்தே நகர்த்துங்களேன்' என்று கோமதி அவனை ஒத்தாசைக்கு அழைத்தபோது புளகாங்கிதமே அடைந்துவிட்டான் அவன்.

ரங்கராஜன் உற்சாகமாக வேலை செய்தான். கோமதியை நினைத்துக்கொண்டு ஆறு தடவை பிரணதார்த்திக்காகக் கடைத் தெருவுக்கு ஓடிவிட்டு வந்தான். சரியாக ஆறு மணிக்கு டீ பார்ட்டி நடத்துவதற்கு மாடியில் ஹால் தயாராயிற்று.

பாக்கியமும் வந்து பார்வையிட்டு, 'நன்னாத்தான் இருக்கு!' என்றாள்.

'அந்த ரங்கராஜனுடைய மாமாவுக்கு டெலிஃபோன் செய்திருக் கிறேன்; நாகநாத முதலியாரிடம் சொல்லிக் கூப்பிடச் சொல்லி யிருக்கேன். அவர் வரணுமே, ஹே' என்றார் பிரணதார்த்தி.

'எல்லாம் வருவார், பேசாமே இருங்கோ!' என்றாள் பாக்கியம்.

'கோமதி! பேசாமே நிக்கறயே! பாரு, பாக்கியத்துக்குத் தலைச் சுத்தல்! காபி ரெடிசெய், சீக்கிரம் இதோ ஏழு மணியாயிடும். ஹே!'

ரங்கராஜன், பிரணதார்த்தியை எரித்து விடுகிறாற்போல் பார்த் தான்.

'எங்கே அந்தப் பக்கிரி, ஹே!'

'பார்த்துவிட்டு வருகிறேன்' என்று நகர்ந்தான் ரங்கராஜன்.

சரியாக ஏழாவது மணிக்குப் பிரணதார்த்தியின் வீட்டு வாசலில் ஒரு பெரிய மோட்டார் வந்து நின்றது. ஆனால் கேட்டுக்குள் நுழையாமல், ஒருவரை மட்டும் இறக்கிவிட்டு அது மேலே சென்றது.

'முதலியார் வந்துவிட்டார்!ஹே!' என்று கீழே ஓடினார் பிரண தார்த்தி. இவர்தான் நாகநாத முதலியாராக இருக்க வேண்டு மென்று ரங்கராஜன் ஊகித்தான். முதலியார் மாடிப்படி ஏறும் போதே, 'காரைப் பாரிஜாதத்தின் வீட்டுக்கு அனுப்பினேன். டி.வி.எஸ்.அய்யருக்கும் சொல்லிவிட்டேன்; கட்டாயம் வருகிறார்!' என்று பிரணதார்த்தியிடம் சொல்லிக்கொண்டு வந்தார்.

ஹாலில் வந்தவர், 'உம்... நான்தான் 'முதல் சாப்பாட்டுராமன்' போலிருக்கிறது!' என்று நாலாப்புறமும் பார்த்தார். அவர் திருஷ்டி ரங்கராஜன் மீது விழுந்ததும் சட்டென்று நின்றது. புருவம் நெறிந்தது, ரங்கராஜன் அங்கிருந்து மெல்ல நழுவப் பார்த்தான்.

'இது யார் இவன்? எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கே?' என்று கேட்டார் முதலியார்.

'இருக்கலாம்! என் டிரைவர் இல்லையா இவன், ஹே!' என்றார் பிரணதார்த்தி.

முதலியார் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நெற்றியைக் கசக்கிவிட்டுக் கொண்டார். பழைய ஞாபகம் எதையோ வெளிக் கொண்டுவர அவர் முயன்றுகொண்டிருந்தார். 'இவனை எங்கோ பார்த்திருக்கிறேன், எங்கே, எங்கே!' என்றார்.

பாக்கியம் அந்தச் சமயம் ஹாலுக்குள் எட்டிப் பார்த்தாள். முதலியார் இன்னும் யோசனையிலேதான் இருந்தார். வாய் மட்டும் முணுமுணுத்துக்கொண்டிருந்தது. 'ஒரு முகத்தைப் பார்த்தால் எனக்கு மறக்கிறதில்லையே? உம்..எங்கே பார்த் தேன்?' என்ற போது ஞாபகம் வந்து விட்டது! பல்லை நறநற வென்று கடித்து, கண்ணை அகல விழித்தார். 'அடே! நீதானேடா அன்னிக்குச் சாயங்காலம் அபாயச் சங்கு ஊதினபோது-எழும்பூர் பக்கத்திலே என்னை வழிமறித்து அடித்து உதைத்துத் தள்ளின பயல்? அயோக்கியப் பயலே!.. இல்லையாடா? ஒப்புக் கொள்ளுடா!' என்றார் இடிபோன்ற குரலில்.

ரங்கராஜன் மென்று விழுங்கினான். எள் விழுந்தாலும் சத்தம் கேட்கும் நிசப்தம் அங்கே நிலவியது. பிரணதார்த்தியால் ஒரு நிமிஷத்துக்கு, 'ஹே...ஹே...ஹே!' என்பதைத் தவிர வேறொன் றும் சொல்ல இயலவில்லை.



## அத்தியாயம் - 14

**'ப்ரஹ்ம மே துமாம்; மது மே துமாம்;**
**ப்ரஹ்ம மேவ மது மே துமாம்...'**

-போஜனத்துக்கு முன் சொல்லும்
(த்ரிஸுபர்ண மந்திரம்)

செங்குத்தான மலைப்பாதையில் ஒருவன் ஏறுகிறான். கை வைத்த இடமெல்லாம் அவ னுக்கு வழுக்குகிறது; மிகுந்த பிரயாசையின் மேல் கடைசியில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு ஏற முயற்சிக்கும்போது, தலைக்கு மேலே பெரிய பாறையொன்று நிலை பெயர்ந்து உருண்டு வருவது தெரிகிறது. அவன் அப்படியே அசந்துபோகிறான். இப்பேர்ப்பட்ட பிரமைதான் ரங்கராஜனுக்கும் உண்டாயிற்று. எங்கேயோ ஒரு நாள் தெருவில் குடித்துவிட்டுத் துஷ்டத்தனம் செய்த ஓர் ஆளை இரண்டு தட்டுத் தட்டி வைத் தால், அந்த ஆள் இந்த முதலியாராக இருந்து தொலைப்பது தலைவிதியே தவிர, வேறென்ன வாயிருக்க முடியும்? அந்த ஆளின் செய்கையை வெளியிடலாமென்றாலோ, அவன் உதடுகள் அசைய மறுத்தன. அப்போது கோமதியின் பெயரையும் அல்லவா இழுக்க வேண்டும்?

பிரணதார்த்திஹர அய்யர், 'ஹே!ஹே!' என்று விக்கித்துப் போனவர், ஒரு மட்டாய் மூச்சு

விட்டு, 'என்ன! உங்களை இவன் அடித்தானா? ஹே! உங்களை யா?ஹே!' என்றார்.

'ஆமாமுங்க... அஞ்சாறு நாளைக்கு முந்தி, சாயங்காலம் என்னை அடிச்சுத் தள்ளிப்பிட்டு ஓடியே பூட்டான்னா! இவன் நின்னிருந் தான்னா, நானே நாலு கொடுத்திருப்பேன்! காவாலிப் பயல்!'

பிரணதார்த்தி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்றார். பின்னால் பாக்கியத்தின் குரல் கடுமையாகக் கேட்டது; 'ஏன்னா, இப்படி வாங்கோ! இது உங்களுக்கு அடுக்குமா? அத்தனை பெரிய பொய் சொன்னேளே, இவனை முதலியார்தான் சிபாரிசு பண்ணினார்னு! உம்?' என்று கேட்டாள் அவள்.

பிரணதார்த்தி கசக்கிப் பிழியப்படுபவர்போல் வேதனைப் பட்டார். அவர் உடம்புகூடச் சிறிது நடுங்கியது. 'ஆமாம்னா... ஹே! அந்தப் பயல் அப்படிச் சொன்னான்டின்னா... ஹே!'

பாக்கியம் அவரையே குரோதத்துடன் பார்த்தாள். அந்தப் பார்வையில், அவர் வார்த்தையை நம்பியதற்கு அறிகுறியைக் காணோம்! 'எவனோ குதிரைக் காஸாரியைக் கொண்டு வந்து, விட்டிலே ஏற்றி, டிரைவராகவும் வச்சிண்டு... நன்னாயிருக்கு!'

'இந்தாருங்கள், அம்மா! நான் குதிரைக் காஸாரியும் இல்லை; ஒண்ணையும் கொள்ளையடிச்சுண்டும் போயிடல்லை. அம்மா! இவர் என்னை டிரைவராயிருன்னு ரொம்பக் கேட்டுக் கொண் டார்...' என்றான் ரங்கராஜன் உஷ்ணமாக.


'ஹே! என்னடா சொல்றே நீ, ஹே! நீ போடா வெளியிலே! போடாங்கறேன், ஹே!' என்றார் பிரணதார்த்தி. அவன் மேலும் அங்கே நின்றால் தன் 'குட்டு' வெளிப்பட்டுவிடும் என்ற அச்சமே அவர் அவனை விரட்டுவதுக்குக் காரணம்.

'என்னத்தைச் சொல்றது! போகச் சொன்னால் போய் விடறேன்... முதலியாரையே நன்றாக நினைத்துப் பார்க்கச் சொல்லுங்கள். அவர் பிசகாக...' என்று ஆரம்பித்தான் ரங்கராஜன்.

'பிசகா? உன்னை எனக்கு நல்லா நினைப்பிருக்கே... குத்தித் தள்ளிவிட்டு ஓடினாயே! குடிச்சிருந்தயோ நீ?' என்றார் முதலியார்.

'நானா குடிச்சிருந்தேன்?'





'ஹே! போடாங்கறேன்! போ... ஹே! நிக்காதே இங்கே! ஹே!' என்று பிரணதார்த்தி அவனை முன்னால் போகச் சொல்லித் தாமும் கீழே இறங்கினார். ஹாலில் வந்ததும், 'ஏ ராஜாராமா! என்னடா சமாசாரம் இது? ஹே!' என்று அவர் ரங்கராஜனைக் கேட்டார், பாதி அந்தரங்கமாகவும் பாதி அதிகாரமாகவும்.

ரங்கராஜன் ஒரு பெருமூச்சு விட்டான். இந்தப் பிரணதார்த்தியை யும் நாகநாத முதலியாரையும் கோட்டை அறையாக அறைய முடியவில்லையே என்றுதான் அவன் பெருமூச்சு விட்டது. ஒரு மட்டாகத் தனது நெஞ்சில் குமுறிய கோபத்தை அடக்கிக் கொண்டு, 'ஸார்! சும்மா விரட்டாதீங்கோ. சொல்றேன். இந்த ஆள் ஒரு நாள் குடித்துவிட்டு, ஸ்திரீகள் முன் ரொம்பக் கேவலமாக நடந்து கொண்டான். இரண்டு அடியும் வைத்து, ஓர் உதையும் கொடுத்தபிறகுதான் அடங்கினான். இதை உங்களிடம் நான் இதற்குமுன் சொல்லாததற்குக் காரணம், இவன் உங்கள் நாகநாத முதலியார் என்று எனக்குத் தெரியாததுதான்' என்றான் கருக்கமாக.

'என்ன! முதலியாரை நீ நிஜமாகவே அடித்து உதைத்தாயா? ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'ஆமாம். முதுகிலே லைட்டா இரண்டே இரண்டு குத்து விட்டேன்; மெல்ல ஒரு குலுக்குக் குலுக்கி இடுப்புக்குக் கீழே கூட ஓர் உதை விட்டதாகவும் ஞாபகம் வருகிறது' என்று விவரித் தான் ரங்கராஜன். தன் காரியத்தைப் பிரணதார்த்தி ஒப்புக் கொள்வார் என்று அவன் எதிர்பார்த்தோ என்னவோ மிகவும் ரசித்துத்தான் மேற்சொன்ன வார்த்தைகளைச் சொன்னான். ஆனால், அவர் முகம் கோவைப் பழம் மாதிரி சிவந்து விட்டது. 'போடா வெளியிலே! ஹே! போடா!' என்றார்.

'என்ன ஸார்! நீங்கள்? அவனுக்குக் கொடுத்தது போறாதுன்னு நான் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கேன்... நீங்களானால்...'

'ஹே!'

'ஆமாம், ஸார்! தவிர, உங்க ஆசாமின்னு நான் என்னத்தைக் கண்டேன்? உங்களிடம் வேலை ஒப்புக்கொள்கிறதுக்கு முந்தி தானே நான் அடிச்சேன், ஸார்?'

'இதெல்லாம் சொல்லி என்ன உபயோகம்! ஹே! நாலு மாசமா இந்த முதலியாரைக் காலைப் பிடிச்சுண்டு அலைஞ்சுண்டு



வரேன். எலெக்ஷன் நெருங்கிற சமயத்திலே நீ வந்து கெடுக் கிறதா? ஹே? உன்னை நான் வேலையை விட்டுத் துரத்தா விட்டால் அவர்தான் என்ன நினைப்பார்? ஹே! நீ போய்விடு!'

பிரணதார்த்தி அவனை மென்னியைப் பிடித்துத் தள்ளுவது போல் வந்தார். ரங்கராஜனுக்கும் ரோஷம் ஏறிக் கொண்டே வந்தது. அவர் கை மேலே பட்டவுடனே தன் கையையும் தாராளமாக உபயோகித்து விடுவதென்றே முடிவு செய்து விட்டான்.

இந்த நெருக்கடியான சமயத்தில் முதலியாரின் கார் திரும்பிவிட்டது. அதிகச் சத்தமின்றி அதைத் திறந்து கொண்டு மிஸ். பாரிஜாதம் இறங்கி வந்தாள். வாசற்படியில் அவள் நின்று, 'என்னங்க, ஐயா, கலாட்டா!' என்றாள்.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

'நீ பொன்னாயி இல்லையா? ஹே! இப்போ என்னத்துக்கு வந்தே?' என்று கேட்டார் பிரணதார்த்தி ஆச்சரியத்துடன்.

'முதலியாரு வண்டி அனுப்பியிருந்தாரே! ஓஹோ! தெரியாதோ உங்களுக்கு? பாரிஜாதம்னா யாருன்னு நினைச்சீங்க! நான்தான் ஸினிமாவிலே 'பொன்னாயி'ன்னா பேரு எடுக்காதுன்னுப்பிட்டு, அதை மாத்தி வைச்சிக்கிட்டேன்!' என்றாள். பிறகு ரங்க ராஜனைப் பார்த்து, 'உங்களுக்குக்கூடத் தெரியாதுங்களா? நம்ம ஊட்டுக்குப் பேரு 'பாரிஜாத விலாஸ்' ஆச்சுங்களே!' என்றாள்.

'நான் கவனிக்கவில்லை' என்றான் அவன்.

இவள்தான் 'பாரிஜாதம்' என்றவுடன் ரங்கராஜன் மனத்தில் இருந்த ஒரு பெரிய சந்தேகம் தீர்ந்தது. முதலியார் குடிவெறியில் கோமதியைப் 'பாரிஜாதம், பாரிஜாதம்' என்று வழிமறித்தார் அல்லவா? கோமதியும் பொன்னாயியும் ஒரே சாயலாக இருந்தத னால்தான் நினைத்திருக்க வேண்டும் என்று ஊகித்தான்.

பிரணதார்த்திக்கு மனத்துக்குள் வேதனை செய்யத் தொடங்கி விட்டது. 'இவளா பாரிஜாதம்! தெரியாமல் போச்சே!' என்று புழுங்கினார். மாடியிலோ முதலியார் காத்திருக்கிறார். ரங்க ராஜனை ஒழித்துவிட்டு ஒருவழியாக மாடிக்குப் போகலா மென்று, 'ராஜாராமா! நீ இப்போ போயிடு! அப்புறமா வா! ஹே!' என்றார்.

'ஏனுங்க? இவரும் இருக்கட்டுமே!' என்றாள் பொன்னாயி.

'ஹே!'

'கோபிக்காதிங்க. அவரு என்ன செய்துட்டாரு. இப்போ நீங்க விரட்டும்படிக்கு? நீங்களும் இருங்க ஐயா!'

'நீ தலையிடாதே பொன்னாயி. இந்த விஷயத்திலே! ஹே!'

'சும்மா இருங்க நீங்க! இவரு படம் கேக்கறப்போ மாத்திரம் வேணும், டீ பார்ட்டிக்கு மாத்திரம் வேணாமுங்களா? முதலியாருகிட்டக்கூட நான் அதெல்லாம் இன்னும் சொல்லவில்லை. அவரு வந்தப்போ நினைப்பு வரல்லை!' என்றாள் அவள்.

'உனக்கு விஷயம் தெரியாது, பொன்னாயி! இவன் முதலியாரை அடித்துவிட்டான், ஹே!'

'அவர் குடிச்சுப்பிட்டு ஒரு பொம்புளையைத் துரத்தினார்; கொடுத்தேன் ரெண்டு!' என்றான் ரங்கராஜன்.

பொன்னாயி சிரித்தாள், 'நல்லாக் கொடுத்தீங்களா சாமி? நிறையப் போட்டீங்களா ஐயா? என் நெஞ்சு இன்னிக்குத்தான் குளிர்ந்திருக்கு. ரொம்ப நாளா அடி இல்லாமே அவரு கெட்டே பூட்டாரு!'

பிரணதார்த்தி விழித்தார். பொன்னாயியை விரோதப்படுத்திக் கொண்டால், பட விஷயத்தை வெளிப்படுத்தி, மானத்தை வாங்கிவிடுவாள். ரங்கராஜனை வைத்துக் கொண்டாலோ முதலியாரின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். என்ன செய்யலாம்!

'என்ன யோசனைங்க? வாங்க உள்ளே!' என்று பொன்னாயி மாடி ஏறினாள்.

முதலியார் நெற்றியைப் பிசைந்துகொண்டிருந்தார். பழைய ஞாபகங்கள் மெல்ல வந்துகொண்டிருந்தன. ஒரு பெண்ணை வழிமறித்தது, ரங்கராஜன் தாக்கியது எல்லாம் நினைவுக்கு வந்தன. 'ரங்கராஜன் மீது அவசரத்தில் குற்றம்சாட்டிவிட்டோமே, அவன் 'குட்டை' உடைத்துவிட்டால் என்ன செய்வது!' என்று இப்போது பயந்தார்.

மாடி ஏறிவந்த பொன்னாயியைக் கண்டதும் அவர் பயம் அதிகரித்தது. இவள் எதிரில் தம் விவகாரங்களை அவன் சொல்லி



விடாமல் இருக்கவேண்டுமென்று நினைத்தபோது அவளே, 'இந்த மனுஷர் உங்களைப் பார்த்ததே இல்லைங்கிறாரு! நீங்களானா, 'அடிச்சான் புடிச்சான்' என்கிறீங்களாம். இவரானா 'வேலையைவிட்டுப் போ'ங்கறாரு... என்னா இது?' என்றாள் பொன்னாயி.

'ஆமாம், இவன் மாதிரிதான் இருந்தது அன்னிக்கு.'

'என்னாங்க நீங்க? ஒருத்தர் மாதிரி ஒருத்தர் இருந்தாக்கே, அதுக்காவ...'

'அவர் இல்லைன்னு சொன்னா, சரிதான்... சந்தேகப்பட்டேன், அவ்வளவுதான்' என்று மழுப்பினார் முதலியார்.

விஷயத்தை மேலே வளர்த்த முடியாமல் படபடவென்று மோட்டார் சைக்கிள் வந்த சத்தம் கேட்டது. 'ரங்கராஜன் வந்துவிட்டான், ஹே!' என்று பிரணதார்த்தி கீழே இறங்கினார். பாக்கியம் உள்ளே சென்றாள். ரங்கராஜன் மட்டும் நின்று பொன்னாயியையும் முதலியாரையும் பார்த்தான்.

'நம்ம பிரணதார்த்தி அய்யரைப் பார்த்திருக்கிறாயா, நீ, பாரிஜாதம்? பெரிய எள் வியாபாரி இவரு' என்றார் முதலியார்.

'நான் யாரைக் கண்டேனுங்க?' என்றாள் அவள். 'என்ன பாசாங்கு இவளுக்கு!' என்று ரங்கராஜன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

மோட்டார் சைக்கிளைக் காம்பவுண்டுக்குள் நிறுத்திவிட்டு, நேரமாகிவிட்டது என்ற காரணத்தால் மணி வேகமாக வந்தான். 'ஏ ஹிட்லர்!' என்று பாலு கூறியது அவன் காதில் படவில்லை. பின்னாலேயே ஓடிவந்த பாலு, மோட்டார் சைக்கிள் அருகில் வந்தவுடன் நின்றான். அதன் அருகில் கிடந்த ஒரு வஸ்து அவன் கவனத்தைக் கவர்ந்தது. எடுத்துப் பார்த்தால், ஒரு டயரியாக இருந்தது. அப்படியே சட்டைப் பையில் போட்டுக்கொண்டு வீட்டுக்குள் ஓடினான்.

பிரணதார்த்தி மாடிப்படியிலேயே மணியைச் சந்தித்துவிட்டார். 'வா, அப்பா! மாமா வரக்காணோமே இன்னும்? ஹே!' என்றார்.

'என்னோடுதான் கிளம்பினார். அவர் மோட்டாரில் வருகிறார்... இதோ வந்துவிட்டாரே!' என்றான்.

அவன் சொன்னபோதே டி.வி.எஸ். அய்யரின் கார் காம்பவுண்டுக்குள் நுழைந்துவிட்டது. மணியும் பிரணதார்த்தியும் அவரை வரவேற்றார்கள். அவர் முகத்தைப் பார்த்ததும் பிரணதார்த்தி துணுக்குற்றதை மட்டும் இருவரும் கவனிக்கவில்லை.

'வாருங்கள்! வாருங்கள்! ஹே! முதலியார்வாள்கூட வந்துட்டார். மேலே வாருங்கள் ஹே!' என்றார் பிரணதார்த்தி. தமது அச்சத்தைக் கூடியவரையில் மறைத்து.

எல்லாரும் மாடிக்கு வந்து சேர்ந்தவுடன் பத்து நிமிஷத்துக்கு ஒரே பேச்சாகத்தான் இருந்தது. முதலியாரும் டி.வி.எஸ். அய்யரும் பேசிக் குலாவிக் கொள்ள, பொன்னாயியும் பாக்கியமும் பேசிக் கொள்ள, கோமதியும் ரங்கராஜனும் டிபன் வகையறாக்களை எடுத்து வைக்க உள்ளே ஓடினார்கள்.

கோமதி அன்பு ததும்ப ரங்கராஜனிடம், 'என்னன்னா, இவர் உங்களை அப்படிக் கன்னாபின்னாவென்று பேசினார்?' என்று கேட்டாள்.

'கிடக்கிறான்! எள்ளத்தனை விவேகம் கிடையாது மனுஷனுக்கு!'

'நீங்கள் முதலில் ஆகாரம் செய்துவிட்டுப் போங்கள்... அப்புறம் ரொம்ப நேரமாகிவிடும்!'

'இல்லை... இப்போ வேண்டாம்...'

'அவர்கள்தான் சித்தே காத்துக்கொண்டிருக்கட்டுமே! நீங்கள் இரண்டு நிமிஷத்தில் சாப்பிடுங்கள், குழந்தை பாலு எங்கே போய் விட்டான், தெரியல்லை... ஒன்றைத் தொடவில்லை குழந்தை, பாவம்!' என்றாள் கோமதி.

ரங்கராஜன் அவளைப் பார்த்தான். 'இந்த டிபனைச் சாப்பிடுவதை விட, அந்த அழகிய அதரங்களைப் பருகினாலே போதும்' என்று தோன்றியது. கோமதி தலைகுனிந்து கொண்டாள். அவனை, 'இனிமேலாவது ஜாக்கிரதையாக இருங்கள்' என்று சொல்ல நினைத்தவள் அடக்கிக்கொண்டாள். அந்தரங்கமான இரண்டொரு வார்த்தை அவனிடம் சொல்லலாமென்றாலும், அதுவும் வர மறுத்தது.

'ஹே! எத்தனை நாழி? கோமதி! என்ன இன்னம் டிலே, ஹே?' என்று வந்துவிட்டார் பிரணதார்த்தி.



'இதோ வருகிறது, போங்கள் மாமா!' என்று அவரைத் திருப்பினாள் கோமதி.

★

நாகநாத முதலியார் ஒரு பெரிய வடையை முறித்து வாயில் போட்டுக்கொண்டு டீ பார்ட்டியை ஆரம்பித்து வைத்தார். பாக்கியம் ஓர் ஓரமாக நின்று கவனிக்க, இரு புறத்திலும் கோமதியும் ரங்கராஜனும் சிற்றுண்டி வகைகளைக்கொண்டு வைத்தார்கள். ரங்கராஜன் எதிர்பார்த்தபடியே பொன்னாயி வெகு ஜாக்கிரதையாகத் தான் நடந்து கொண்டாள். பிரணதார்த்தியை முன்பின் பார்த்ததாக அவள் துளிக்கூடக் காட்டிக் கொள்ளவில்லை.

டி.வி.எஸ்.அய்யர் அதிகமாகப் பேசவில்லை பிரணதார்த்தியை ஒரு பெரிய எட்டுக்கால் பூச்சியைப் பார்க்கும் குழந்தைபோல் கவனித்தார். ரங்கராஜன் முதல் தடவையாகத் தன் மாமாவைப் பார்த்தான். 'இவருடன் போய் எதற்காக, அப்பா சண்டை போட்டுக் கொண்டார்?' என்று எண்ணினான்.

எடுத்த எடுப்பில் சில நிமிஷங்கள் வரை மௌனமாகவே 'திண்டி' நடந்த பின், பிரணதார்த்தி முதன்முதலாகப் பேச்சைத் தொடங்கினார். மணியைப் பார்த்து 'ரங்கராஜா! நீ அனுப்பினயே ஓர் ஆள், அவன் ரொம்ப ஒத்தாசை, போ! நல்ல சமயத்துக்கு வந்தான்; நன்னா உழைச்சுச் செய்கிறான்... அவனுக்கும் டிபன் கொடு, ராஜாராமா, ஹே!' என்றார்.

'பக்கிரிதானே! நல்ல ஆளாச்சே அவன்! பார்க்கிறதுக்கு ஒரு மாதிரி இருப்பான், சோம்பேறி மாதிரி. வேலையிலே சூரன்! நீங்கள் ஒரு பக்கம் பார்த்திருக்கிறபோதே, இன்னொரு பக்கம் வேலையை முடிச்சுடுவான்!' என்றான் மணி.

'சொல்ல மறந்தே போயிட்டேனே. நேத்திக்கு ஒரு வேடிக்கைன்னா நடந்துடுத்து! பாரு நம்ம கார் காணாமல் போய்-ஹே!'

டி.வி.எஸ்.அய்யர் கவனித்தார். 'என்ன! அப்புறம்?' என்று கேட்டான் மணி. கார் திரும்பிய விவரங்களை அறிய அவன் துடித்தான்.

'கிடைச்சுடுத்து அப்புறம்...நம்ம டிரைவர் அதைப் பூந்தமல்லி ஹைரோடிலே ஒரு ஸ்டுடியோ வாசலிலே நிறுத்திவிட்டுப்

போயிருக்கான் உள்ளே... ராஜாராமா? ஏய்! இங்கே டேபிளைக் கவனி! திரும்பி வந்து பார்த்தால் வண்டியைக் காணோம்! எவனோ திருடிக்கொண்டு போயிருக்கிறான். ஹே!- அப்புறம் தேடிப் பார்த்தான். நம் வீட்டுப் பக்கத்தில் வந்து கிடக்கிறது அது!'

மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேச வாயெடுத்தான். நாக்குப் புரள மறுத்தது. முதலியார் மட்டும் 'என்னங்க இது, கொரக்குளி வித்தையாயிருக்குதே!' என்றார்.

'ஆமாம்னா! ஹே! ராஜாராமன், தேடிக்கொண்டே வந்தவன் வண்டியைப் பார்த்து, கேரேஜில் கொண்டு சேர்த்தான். எவனோ திருடியிருக்கான்; அப்புறம் அவனுக்கே நல்ல புத்தி தோன்றி யிருக்கு. எல்லாம் திரிபுரசுந்தரி செயல்தான்!ஹே!'

அந்தச் சமயம் ரங்கராஜன் உள்ளே போயிருந்ததைக் கவனித்த மணி, 'ஏன் ஸார், இந்தக் கதையை உங்களுக்கு யார் சொன்னது? டிரைவர்தானே? அவன் வார்த்தையை நீங்கள் நம்புகிறீர்கள்? நானாயிருந்தால் நம்பமாட்டேன்' என்றான்.

கோமதி கதவிடுக்கின் வழியாக அவனை வெறுப்புடன் பார்த்தாள்.

டி.வி.எஸ்.அய்யர், இவ்வளவு நேரம் மௌனமாக இருந்தவர், 'சொல்வதற்கில்லை, அவனைப் பார்த்தால் யோக்கியனாகத் தான் படுகிறான்... இன்னொரு வேடிக்கை கேஸ் வந்திருக்கிறது என்னிடம். நாளைக்கு விசாரணை, இங்கேதான் மாம்பலத்தில் யாரோ ஒருத்தர் என்ன செய்திருக்கார்னா, காரை ஓட்டுகிறபோது ஓர் உருளைக்கிழங்கு வண்டியையும் சேர்த்து மாட்டி இழுத்துக் கொண்டே போயிருக்கிறார்...' என்றார்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். பொன்னாயி கடகட வென்று விடாமல் சிரித்தாள். பிரணதார்த்தி முகத்தில் மட்டும் ஈயாடவில்லை; முகத்திலிருந்த ரத்தமெல்லாம் வறண்டு விட்டது. டி.வி.எஸ். அய்யர் அதைக் கவனிக்காமல் மேலே சொல்லிக்கொண்டே போனார். 'பாருங்கள்! அந்த வண்டியில் ஓர் உருளைக்கிழங்கு கிடையாது. அத்தனையும் சிதறிப்போய் வண்டியும் உடைந்துவிட்டது. வண்டிக்காரன் ஏழை, அழுகி றான்.மோட்டார்காரர் அவனையும் மிரட்டி, விசாரிக்க வந்த ஒரு போலீஸ்காரனையும் அடித்திருக்கிறார்' என்றார். அவருக்குப்



பிரணதார்த்தியை பற்றித்தான் சொல்கிறோமென்று சிறிதாவது யோசனை இருந்தால்தானே?

'நல்லாத் தீட்டுங்க ஐயா, ஓர் ஆறு மாசம், எட்டு மாசம்! மோட்டார் விடத்தெரியாதவங்க எதுக்கு மோட்டார் ஓட்டணும் என்கிறேன்!' என்றாள் பொன்னாயி.

பிரணதார்த்தி மென்று விழுங்கினார். ஒரு பெரிய தட்டு நிறையக் காபி டம்ளர்களுடன் வந்து, தட்டை வைத்துவிட்டுத் திரும்பவும் உள்ளே சென்றான் ரங்கராஜன்.

மணி காபியை அவசரமாகச் சாப்பிட்டுக்கொண்டே 'ஏன் ஸார், அந்த ஆள் பக்கிரி எங்கே இருக்கிறான்? அவனிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமே!' என்றான். எல்லாரும் காபி சாப்பிடும் நேரத்தில் அவனுடன் கலந்து கொள்ளலாமென்று அவன் பார்த்தான்.

'நீ இரு, அப்பா! நானே அவனை வரவழைக்கிறேன்... ராஜா ராமா! எங்கே போய்விட்டான் அவன்? ஹே!' என்றார் பிரணதார்த்தி.

அந்தச் சமயம், கீழேயிருந்து சுளுக்குக் காலுடன் நொண்டிய வாறு, பிரணதார்த்தியின் தமக்கை பரபரப்புடன் மாடி ஏறி வந்தாள். 'ஐயோ பிரணதார்த்தி! திருட்டுப் போயிருக்கேடா! நகையெல்லாம் போயிடுத்தேடா! கீழே இரும்புப் பெட்டி திறந்து கிடக்கேடா! மோசம் போயிட்டியேடா!' என்று அலறத் தொடங்கினாள்.

இதைச் சற்றும் எதிர்பாராத எல்லாரும் அசந்துபோய் விட்டார்கள். 'என்ன ஹே! என்ன சொல்றே? சரியாகச் சொல்லு! ஹே!' என்று பிரணதார்த்தி குதித்தார்.

'கேமிரா அறையிலே சத்தம் கேட்டாப்பலே இருந்ததுடா, பார்த்தாக்கே, இரும்புப் பெட்டி திறந்து கிடக்கு. ஓர் ஆள் ஓடினாற்போலே இருந்தது...'

'எந்தப் பக்கம் ஓடினான், ஹே!'

'உன் டிரைவருக்கு அறை ஒழிச்சுக் கொடுத்திருக்கிறாயே அந்தப் பக்கந்தான்!'

ஒரு கால் பக்கிரி வேலையாக இருக்குமோ இது என்று மணி ஊகித்தான். அவன் அகப்பட்டுக்கொள்ளாமல் இருக்க வேண்டுமே! தீவிரமாக யோசனை செய்துவிட்டு, 'ஸார், ஒன்றும் பயப்படாதீர்கள். என்னுடன் டிரைவர் ரூமுக்கு வாருங்கள். அவன் மேல்தான் முதலிலிருந்து எனக்குச் சந்தேகம்!' என்றான் அவன் தீர்மானமாக.

'ஹே!'

'ஆமாம், ஸார்! நாம் சாப்பிடுகிறபோது அடிக்கடி அவன் இங்கே இல்லை, ஸார்! நீங்கள் வாருங்களேன்!' என்று அழைத்துக் கொண்டு சென்றான்.

ஐந்து நிமிஷங்கள் ஆயின. ரங்கராஜன் ஹாலுக்குள் நுழைந்தான். விஷயம் எதுவும் தெரியாத அவன், ஏன் எல்லாரும் தன்னையே பார்க்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டான்.

யாரும் வாய் திறக்குமுன் பிரணதார்த்தியும் மணியும் ரங்கராஜன் அறைக்குப் போய்விட்டுத் திரும்பிவிட்டார்கள். அவர்கள் முகத்தில் ஒருவிதச் சோபை இருந்தது.பிரணதார்த்தி தம் கையோடு கொண்டுவந்திருந்த துணி மூட்டையை ரங்கராஜ னிடம் காட்டி, 'என்ன ராஜாராமா மூட்டை கட்டியிருக்கிறதே இந்தச் சட்டை, இது உன்னது தானே? ஹே!' என்று கேட்டார்.

'ஆமாம், ஸார்! அதில் என்ன?' என்றான் ரங்கராஜன் பரபரப் புடன்.

பிரணதார்த்தி மூட்டையை எல்லார் முன்னிலையிலும் அவிழ்த் தார். அதிலிருந்து ஒரு வங்கி, ஒரு நாகொத்து, இரண்டு மோதிரங்கள் ஆகிய நான்கு நகைகள் விழுந்தன. எல்லாருமே வாயடைத்து நின்றபோது, பிரணதார்த்தி 'டேய்! திருட்டுப் பயலே! உன் வேலையை என்னிடமே காண்பித்துவிட்டாயே! ஹே! இதை உன் ரூமிலிருந்து நான் எடுத்து வருகிறேன்! இரும்புப் பெட்டியிலிருந்து எடுத்த பாக்கி நகைகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? ஒப்புக்கொண்டுவிடு!' என்று அதட்டினார்.



## அத்தியாயம் - 15


'...அவசரமின்றி நிதானமாகவும் ஸ்பஷ்ட மாகவும் பேச வேண்டும். அம்மாதிரி செய்தால் இரைந்து பேச வேண்டுமென்கிற அவசியம் கூடக் கிடையாது.'

**- டெலிஃபோனில் பேசும் முறை**

அப்போது ஏற்பட்ட நிசப்தமானது, பதினைந்து விநாடிகள் வரை நிலைத்திருந்தது. பிரணதார்த்தி ஹர அய்யரின் குற்றச்சாட்டுதலின் வேகம் ரங்கராஜனை ஒரு கணம் வீழ்த்தியே விட்டது என்று கூடச் சொல்லலாம். ஒருவாறு நிதானத்தை வருவித்துக் கொண்டவன், 'என் அறையிலா இது இருந்தது என்கிறீர்கள்!' என்று கேட்டான்.

'ஏன், உனக்குத் தெரியவே தெரியாதோ? ஹே!' என்றார் பிரணதார்த்தி உதாசீனமாக. பிறகு நகைகளை மறுபடி சுருட்டி எல்லோர் எதிரிலும் கீழே வைத்தார்.

நாகநாத முதலியார், ஒன்றையும் கவனிக்காதவர் போல் கைக்குட்டைக்குள் மூக்கைச் சிந்திவிட்டு, மூக்கை பாலிஷ் கொடுத்துக்கொண்டிருந்தார். டி.வி.எஸ். அய்யர் சந்தேகத்துடன் உதட்டைக் கடித்துவிட்டுக் கொண்டார். 'இந்த ஆளைப் பார்த்தால் யோக்கியனைப்போல் இருக்கிறான்;





இந்தக் காரியம் செய்திருப்பானா?' என்று அவர் மனம் தீவிரமாக யோசனை செய்தது. பொன்னாயிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. 'இந்த அய்யரு இப்படி ஆப்பிட்டுக்கிட்டாரே, பாவம்!' என்று அவள் நினைத்தாள். கோமதியின் உணர்ச்சிகளைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை. குபீரென்று அழுது விடுவோமா என்றுகூட நினைத்தாள்; எப்படியாவது அவன் ஏதாவது சொல்லித் தப்பித்துக் கொள்ள மாட்டானா என்றுதான் எதிர் பார்த்தாள்.

மணிக்கும் இந்த நிலைமை பிடிக்கவில்லை. பிரணதார்த்தியை அவன் கீழே இட்டுச் சென்ற காரணம், பக்கிரி ஏதாவது செய்து கொண்டிருந்து அவர் நேருக்குநேர் பார்த்துவிடாமல் இருக்க வேண்டுமே என்பதுதான். ஆனால், அவன் சற்றும் எதிர்பாராத விதமாகத் திருட்டுப்போன பண்டங்களில் சில ரங்கராஜன் அறையில் அகப்பட்டுவிடவே, நிலைமை குளறுபடியாகி விட்டது. ரங்கராஜன் அவன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட வுடன், திருப்பித் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டால் என்ன செய்வதென்று மணி பயந்தான். 'உண்மையில் இந்த டிரைவரும் நம்மைப் போன்ற பேர்வழிதான்போல் இருக்கிறது!' என்று அவன் ஊர்ஜிதம் செய்துகொண்டான். அப்படியே டிரைவர் ஒருகால் தன் பெயரைச் சந்தியில் இழுத்தாலும் ஒரு கை பார்த்துவிடுவதென்று மெல்லத் தைரியம் செய்து கொண்டு விட்டான்.

ரங்கராஜன் பல்லைக் கடித்து, பிரணதார்த்தியை எரிக்கிறாற் போல் பார்த்து, 'என் ரூமிலே இதெல்லாம் இருந்திராதே, ஸார்! அது அங்கே எப்படி வந்தது?' என்று கேட்டான்.

'அதை நீன்னா சொல்லணும்! அதைக் கேட்கத்தானே நாங்க ளெல்லாரும் காத்திண்டிருக்கோம் ஹோ!'

'அப்படியானா நீங்க காத்திண்டேயிருக்க வேண்டியதுதான் ஸார்! எனக்கும் தெரியாது. நானும் உங்களைப்போல் இங்கேயேதானே இருந்தேன்!'

அப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? இந்த நகைகளானா உன் ரூமிலேருந்து அகப்பட்டிருக்கு. இன்னும் சில நகைகளும் காணாமே போயிருக்கு... உனக்குத் தெரிந்ததைச் சொல்லி, பாக்கி நகையையும் கொடுத்திட்டியானா... ஹோ!'

'ஸார்... நான் திருடினேன் என்கிறதாகச் சொல்றேளா?'

'என்னப்பா நீ வளத்தறே! எப்போ பாதி தெரிஞ்சுப் போச்சோ... ஹோ!'

இந்தச் சமயத்தில் மணி பேசாமல் இருந்திருக்கலாம். ரங்கராஜ
னின் நிலைமை மிகவும் கேவலமாகிக்கொண்டு வருகிறது என்ற
தைரியத்தினாலோதானோ என்னவோ, 'ஏன், ஸார், வீணாகப்
பொழுதைப் போக்க வேணும்? மேலே நடக்க வேண்டியதைப்
பாருங்கள்!' என்றான் பிரணதார்த்தியிடம்.

ரங்கராஜன் சீறி, 'டேய், மேலே நடக்க வேண்டியது, உன்
கையிலே விலங்குபோட வேண்டியதுதான்!' என்றான் ஆத்திர
மாக. பிறகு பிரணதார்த்தியின் பக்கம் திரும்பி 'சும்மா ஓட ஓட
விரட்டாதிங்கோ, ஸார்! எனக்கு இந்த பிஸாத்து நகை ஒண்ணும்
தேவையில்லை. தேவையானால் நான் திருட வேண்டியது
மில்லை. நானே வாங்கிக்கொள்வேன். தெரிந்ததா?' என்றான்.

'அடே அப்பா! பேச்செல்லாம் ஜோராக, ஜமீன்தார் - மிட்டாதார்
கள் பேச்சுமாதிரிதான் இருக்கிறது. வாங்கிக் கொண்டு விடு
வானாமே! ஹோ! உன் ரூமுக்கு இதெல்லாம் எப்படி வந்ததென்று
கேட்டால் அதற்கு உன்னால் பதில் சொல்ல முடியவில்லையே,
ஹோ!' என்றார் பிரணதார்த்தி. கூடிய வரை நயமாகவே
பண்டத்தைத் திரும்ப வாங்கிவிட வேண்டுமென்பது அவர்
யோசனை.

'எப்படி வந்ததா! கேளுங்கள்! அதோ இருக்கிறாரே, ஜமீன்தார்
பிள்ளை, அவரைக் கேளுங்கள்! சொல்லுவார். ஒரு வாரத்துக்குள்
அவர் ஏகப்பட்ட திருட்டுகள் செய்திருக்கிறார். முதலில் என்
கைப்பெட்டியையும் டயரியையும் எடுத்தார். இங்கே நேற்று
பீரோவிலிருந்து வைர புருச்சை எடுத்து, வண்ணான் கூடைக்குள்
ஒளித்திருக்கிறார்...' என்றான் ரங்கராஜன்.

'வண்ணான் கூடையிலா? வைர புருச்சையா? ஹோ!'

'ஆமாம், சார்! அவனையே கேளுங்கள்! விவரமாகச் சொல்லு
வான்!'

மணி கடகடவென்று சிரித்துக்கொண்டிருந்தான். 'சார்! உங்கள்
வீட்டில் வைர புருச் ஏதாவது எப்போதாவது கெட்டுப் போயிருக்
கிறதா, ஸார்?' என்றான் பிரணதார்த்தியைப் பார்த்து. 'பலே



வேடிக்கை ஆசாமியாக இருக்கிறாய் நீ! அப்புறம் இன்னும் என்ன என்ன கண்டுபிடித்திருக்கிறாய்? விவரமாகச் சொல்லு!' என்றான் ரங்கராஜனிடம்.

ரங்கராஜனுக்குக் கோபம் அவனையும் மீறி வந்து கொண்டிருந்தது. 'ஸார்! ஜமீன்தார் பிள்ளை இவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இவன் ஒரு திருட்டுப் பயல்!'

மணி கையைக் கொட்டினான். 'சபாஷ்! அப்படிச் சொல்லு! அப்போ நான் ஜமீன்தார் பிள்ளை இல்லை என்றால், அது நீதானாக்கும்!' என்றான்.

'ஆமாம், ஸார்! அதில் என்ன சந்தேகம்! நான்தான் சின்னவேலி ஜமீன்தார் சுப்ரமணிய அய்யரின் பிள்ளை ரங்கராஜன்!'

அவன் இந்த விஷயத்தைச் சொன்னவுடன் எல்லோரும் பிரமித்துப் போவார்கள், தன் வார்த்தையை மதிப்பார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால், அதற்கு நேர்மாறாக அவ்வளவு பேரும் சிரித்தார்கள். திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒருவனது வார்த்தை எங்கே எடுபடப் போகிறது என்பதை அவன் யோசிக்காமல் போனான்.

மணி பக்கத்தில் வந்து, 'தம்பி! நாளைக்கு நீ மைசூர் மகாராஜாவாக இரு!' என்று முதுகில் தட்ட வந்தான். ஆனால், ரங்கராஜன் கை வீச்சில் அகப்பட்டு நாலடி பின் வாங்க வேண்டி வந்தது அவனுக்கு.

'ஹோ! ஜாக்கிரதையாயிரு! ஆமாம்! நீ இப்போ நிஜத்தைச் சொல்ல மாட்டே?' என்றார் பிரணதார்த்தி கோபமாக.

'என்ன ஸார் நிஜம்? நிஜத்தைச் சொன்னால் நீங்கள் நம்புகிறேளா!' என்றான் ரங்கராஜன் வெறுப்புடன். பிரணதார்த்தி அவன் கண்ணில் இப்பொழுது புழு மாத்திரமாகப்பட்டார்.

'எல்லாரும் டிபன் சாப்பிடும்போது இவன் ஏன் அடிக்கடி வெளியே போய்கொண்டிருந்தான் என்று கேளுங்கள்' என்றான் மணி.

இதுவரை பேசாமல் பார்த்துக்கொண்டிருந்த கோமதி. 'மாமா! நானும்தான் கவனித்துக்கொண்டிருந்தேன். இவர் டீ-பார்ட்டியின்போது கீழே போகவே இல்லை' என்றாள்.

'வேலிக்கு ஓணான் சாட்சி! முந்திரிக்கொட்டை மாதிரி இவளை யார் கேட்டது!' என்று முணுமுணுத்தாள் பாக்கியம் வாயோடு.

பிரணதார்த்தியின் தமக்கை, 'கேட்டுக்கோடா பிரணதார்த்தி! நான் இன்னிக்கு என்ன சொன்னேன், இவள் என்ன சொல்றாள் இப்போ! எல்லாம் நீயே கவனிச்சுக்கோ!' என்றாள் குத்தலாக.

'என்ன கோமதி! என்ன சொல்றே, ஹே! உன்னை யாரு கூப்பிட்டுக் கேட்டா இங்கே? ஹே! வயசான பெண் நீ, - ஐயய்ய, ரொம்ப நன்னால்லியே, ஹே!' என்றார்.

'என்ன மாமா, அத்தையானால் என்னமோ சொல்றா. நீங்களும் அதைக் கேட்டுண்டு...' என்று ஆரம்பித்த கோமதிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது.

'பேசாதே!' என்று இடி போன்ற குரலில் சொல்லி, 'பேசாமே போ, சொல்றேன்! ஹே! உங்கப்பா வரட்டும்... போ சொல்றேன், உள்ளே!'

கோமதி விடுவிடுவென்று உள்ளே சென்றாள். சற்று நேரத்துக்கெல்லாம் பாலு ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டான்.

★

இதுவரை கோமதி இருந்ததானது, ரங்கராஜனை மரியாதை மீறாமல் ஓரளவு தடை செய்திருந்தது. அவள் போனவுடன், அதுவும் பிரணதார்த்தியின் துடுக்கான வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு சென்றதும்- அவன் ஆத்திரம் மேலும் கிளம்பியது.

'அப்போ நீ சொல்லமாட்டேனென்கிறே? ஹே!' என்று அதட்டினார் பிரணதார்த்தி.

'இருந்தா கொடுத்திடேன், ஐயரே! பாவம், இவரானா 'ஹே'ன்னு தொண்டையை வறட்டிக்கிறாரு. உனக்குத் தெரியவில்லை!' என்றாள் பொன்னாயி.

'என் ரூமில் இருந்தால் நான்தான் எடுத்தேன் என்று உடனே அர்த்தமாகிவிடுமாக்கும்!' என்று கேட்டான் ரங்கராஜன், ரோஷம் நிறைந்த குரலில்.

'அதுமட்டுமில்லை, ராஜாராமா! உனக்கும் இந்த லைனிலே பழக்கமும் உண்டோல்லியோ? அதனால் அப்படி யோசிக்க வேண்டியிருக்கிறது. ஹே!' என்றார் பிரணதார்த்தி.



'எந்த லைனிலே, என்ன பழக்கமோ?'

'அதான் அப்பா, வேலூர் ஜெயிலில் அன்னிக்கு உன் தோழன் ஒருத்தன்கூட வந்து சொல்லல்லையா? ஹே!'

மணி குறுக்கிட்டு, 'பார்த்துக்கொள்ளுங்கோ! நான் சொன்னேனே, கேட்டீங்களா அப்போ? இவனைப் பார்த்தவுடனேயே எனக்கு...' என்று சொல்ல வாயெடுத்தான். ரங்கராஜனது வலக்கரம் மின்னல் போல் சென்று, அவன் கன்னத்தில் 'பளார்' என்ற சத்தத்துடன் ஸ்பரிசித்தது. 'பேசாதே!' என்று இடிபோன்ற குரலில் சொல்லி, 'கூப்பிட்டுக்கொள்ளுங்கள் சார், போலீஸை! ஆனால் இந்தத் திருட்டுப்பயல் தப்பித்துக்கொள்ளாமல் முதலில் யாராவது பார்த்துக் கொள்ள வேண்டுமே!' என்றான்.

அறை வாங்கிய மணி, முகம் சிவந்து, ரங்கராஜன் மீது பாய்வதற்குத்தான் இருந்தான். பிரணதார்த்தியும் நடுநடுங்கிப் போய் விட்டார். முதலியாரும் டி.வி.எஸ்.அய்யரும்தான் குறுக்கிட்டார்கள். 'வேண்டாம்! நிறுத்து!' என்று அவனை அடக்கி, 'எய்! டிரைவர்! கேட்ட கேள்விக்கு உன்னால் பதில் சொல்ல முடியவில்லை. அறைகிறது, குஸ்தி பழகுகிறது எல்லாம் இங்கே வைத்துக்கொண்டிருக்கிறாயே! சொல், இப்போ!' என்றார்கள்.

'கட்டேல போறவன்! ஜமீன்தார் பிள்ளையைக் கைநீட்டி அடிக்கிறானே! அவனை அன்னிக்கே ஒழியுங்கோன்னேனே, கேட்டியளா?' என்று இரகசியமாகப் பிரணதார்த்தியை அதட்டினாள் பாக்கியம்.

'பிரணதார்த்தி, நீ அவன் பக்கத்திலேபோய் நிக்காதேடா! துஷ்டனாயிருக்கான். உன்னை என்னவானாலும் பண்ணி வைக்கப் போறாண்டா!' என்று தமக்கை எச்சரித்தாள்.

'இங்கே யாரையாவது ஏதானும் செய்வதாயிருந்தால், முதலில் உன்னைத்தான் செய்ய வேணும், உன்னாலேதான் இவர் கெடுகிறதெல்லாம்!' என்று உறுமினான் ரங்கராஜன்.

பொன்னாயி சிரித்தாள். 'இந்த அய்யரு ஆனாலும் ரொம்ப வேடிக்கைக்காரரு!' என்றாள் பேச்சாக.

'இப்படி உழப்பிக்கிட்டேயிருந்தால்! என்னப்பா எதினாச்சியும் ஒப்புக்கிறயா, போலீஸைக் கூப்பிடட்டுமா?' என்றார் முதலியார் மிரட்டலாக.

'தாராளமாகக் கூப்பிட்டுக்கொள்ளுங்கள்! என்னை விடப் போலீஸ்காரர்களுக்குத் தேவையான பேர் இங்கே, ரொம்பப் பேர் இருக்கார்களே!' என்றான் ரங்கராஜன்.

பிரணதார்த்திக்கு போலீஸ் என்றாலே பயம். தவிர, மோட்டாரை மோதிவிட்டு, அவர்பேரில் ஒரு கேஸ் பாக்கியிருக்கிறபோது, மறுபடி அந்த இலாகாவுடன் எந்த முறையிலும் சம்பந்தம் வைத்துக்கொள்ள அவருக்கு இஷ்டமில்லை. ஆகவே, டி.வி.எஸ். அய்யர் தலையிட்டு, அப்போது பேசியது அவர் மனத்துக்குச் சம்மதமாகவே இருந்தது.

'என்னப்பா டிரைவர்! இது எப்படி உன் ரூமுக்கு வந்தது என்று உனக்குத் தெரியாது என்றுதானே சொல்லுகிறாய்? அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறதாகவே வைத்துப் பேசுவோம்! நாங்கள் டிபன் சாப்பிட்டபோது நீ என்ன செய்துகொண்டிருந்தாய் என்றுதான் சொல்லேன்!' என்று கேட்டார்.

அவர் குரலில் தொனித்த சாந்தமும் நிதானமும் ஒரு கணம் ரங்கராஜனை மயக்கின.

'நான்தான் உங்களுக்கு டிபன் கொண்டு வைத்துக் கொண்டிருந்தேனே, ஸார்!' என்றான்.

'பார், நிஜத்தைச் சொல்! நடுநடுவில் உன்னைக் காணோம். தவிர, திருட்டுப் போயிற்றென்று இந்த அம்மாள் வந்து சொன்ன போதுகூட நீ இங்கே இல்லை!'

ரங்கராஜன் யோசித்தான். அவன் அடிக்கடி இல்லாததற்குக் காரணம் இருந்தது. இரண்டு மூன்று சமயங்களில் அவன் கீழேயே தங்கி கோமதியுடன் பேச முயன்றிருக்கிறான். மற்ற வேளைகளில் பக்கிரியைக் கவனித்திருக்கிறான். இவ்வளவு தூரம் நிலைமை மோசமான பிறகு பக்கிரியைப் பற்றிச் சொல்லாமல் இருப்பானேன் என்று, 'இன்று காலை முதல் இங்கே ஓர் ஆள் வேலைக்கு வந்திருக்கிறான். அந்த ஆள் இதோ இவன் அனுப்பின ஆள்!' என்றான்.

'அதனால், அவன் திருடனாக்கும்! உன்னைக் கட்டி வைத்து உதைக்கணும்டா!' என்றான் மணி.

'யார் யாரைக் கட்டி வைக்கப் போகிறார்கள் என்று இப்போ தெரியாது!' என்றான் ரங்கராஜன்.



'உம்... வேறு பேச்சு வேண்டாம்! கேட்டதற்குப் பதில் சொல். அவனை எதற்காக நீ அடிக்கடி பார்க்க வேண்டும்?' என்றார் டி.வி.எஸ்.அய்யர்.

'அவன் திருட்டுப் பயல், ஸார்! கொள்ளையடிக்காமல் பார்த்துக் கொண்டேன்!'

'அதற்காக இவன் முன்னாலே கொள்ளையடித்துத் தன் அறையில் பந்தோபஸ்தும் பண்ணிக்கொண்டான்! மூஞ்சியைப் பாருங்கள், மகா யோக்கியன் இவன்!' என்றான் மணி.

பொன்னாயி சிரித்தாள். 'நல்ல நாடகம் ஐயா இது! எங்க ஸ்டுடியோவில் சொல்லி இதைப் படம் பிடிச்சாக்கா நல்ல கலெக்ஷன் ஆவும்' என்றாள்.

'சரி போகட்டும்! நகையை எடுத்தது யார், எப்படி வந்தது உன் அறைக்கு, உன் சட்டையிலே அதைக் கட்டியது யார் என்று ஒன்றுமே தெரியாது என்கிறாய்...'

'சத்தியமாகத் தெரியாது!'

ரங்கராஜன் வார்த்தையை டி.வி.எஸ். அய்யர் நம்புகிறவர்போல் பட்டது. அவர் மேலும் கேட்டார், 'சரி... உன் அறையிலே இதை வைத்திருப்பவர் யாராயிருக்கலாம், சொல்லு! உனக்கு யாரானும் இங்கே விரோதிகள் இருக்கிறார்களா?'

ரங்கராஜன் மனத்தில், அந்தப் பெரிய வீட்டில் கோமதி ஒருத்தியைத் தவிர வேறு யாருமே அவனுக்குச் சிநேகிதர் என்று சொல்வதற்குத் தென்படவில்லை. அரை நிமிஷம் தலை குனிந்தவாறு சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

'என்ன யோசிக்கிறாய்? உனக்கு இங்கே யாருமே விரோதி கிடையாதா!' என்று திரும்பக் கேட்டார் டி.வி.எஸ்.அய்யர்.

'அவருக்கு இப்போ அவரேதான் விரோதி போலேயிருக்கு!' என்றாள் பொன்னாயி சிரித்து.

ரங்கராஜன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். அவன் சொல்லுமுன், தத்தாத்திரி பின்தொடர, கோமதி அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

அவள் ஏன் வந்தாள் என்பதை அறிய, சிறிது நேரம் பின்னோக்கி நேயர்களை அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது. பிரண தார்த்தி அதட்டி அனுப்பியவுடன் உள்ளே சென்ற கோமதிக்குத் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. 'கேவலம் ஓர் எள் மாத்திரமான யோக்கியதைகூட இல்லாத இந்தப் பிரணதார்த்தி, அவ்வளவு பேர் எதிரில் நம்மை இப்படிச் சொல்லுவதா!' என்று அவள் கொதித்தாள். 'ஏன், டிரைவருடன் பேசினால் என்னவாம்?' என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். 'அவர் வேறு எப்போது என்ன குற்றம் செய்திருந்தாலும் இப்போது மட்டும் அவர் நிரபராதி' என்று அவள் அந்தராத்மா கூறியது. 'இல்லாமற்போனால் இவ்வளவு கம்பீரமாக அவரால் பேச முடியுமா? துளி தடங்கல் இல்லாமல் மறுக்கிறாரே! நகை அவர் அறையில் இருந்ததாகச் சொன்னவுடன் அவருக்குத் தூக்கிவாரிப்போட்டதே, அதுகூடவா பாசாங்காக இருக்கும்? என்று எண்ணினாள்.

'ஆமாம்! அவர்தான் ஜமீன்தார் பிள்ளை என்கிறாரே, அது எப்படி நிஜமாக இருக்க முடியும். அதுமட்டும் நிஜமாக இருந்தால்!'

பாலு ஓடிவந்து அவள் கால்களைக் கட்டிக்கொண்டான். அன்புடன் அவனை வாரி அணைத்துக் கோமதி, 'அட கண்ணே! நீ ஒண்ணுமே சாப்பிட ல்லையேடா!' என்றாள்.

'அக்கா! இந்த நோட்டைப் பாரு. அக்கா! நம்ம டிரைவர் மாமா படம் இதிலே இருக்கே!' என்றான் பாலு.

'இது ஏதுடா உனக்கு!' என்று கோமதி அதை அவசரமாகப் பிடுங்கிப் பார்த்தாள்.

'இங்கே கொடு, அக்கா! எனக்கு வேணும்' என்று பாலு குதித்தான்.

அவன் கைக்கு எட்டாத உயரத்தில் பிடித்து, அதைப் பார்த்த கோமதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அது ரங்கராஜனின் டயரிதான்! அதன் அட்டையுடன் உள்புறம் ஒரு சிறிய அழகிய போட்டோ ஒட்டப்பட்டிருந்தது. சந்தேகமில்லாமல் அதில் இருந்த முகம் - அவள் இருதயத்தைக் குளிரச் செய்த அதே ரங்கராஜன் முகம்தான். அடியில் ஸ்பஷ்டமாக அவன் கையெழுத்தில் பெயரையும் எழுதியிருந்தான்.

கோமதிக்கு மார்பு படபடத்தது. 'என்ன ஆச்சரியம்! இவர் ஜமீன்தார் பிள்ளையா? பின் ஏன் மோட்டார் டிரைவராக வருகிறார்? என்னை இங்கே பார்த்த பிறகுதான் வேலை ஒப்புக் கொண்டாரோ? பெயரையும் அல்லவா மாற்றிக் கொண்டிருக்கிறார்! எனக்காகச் சேவகம் செய்கிறாரோ! எத்தனை அவமானங்களைப் பொறுத்துக்கொண்டார்! ஐயோ! நான் கூட அறியாமல் இவரை இரண்டு முறை புண்படுத்தி விட்டேனே!' -கோமதி இருதயத்தை அமுக்கிக் கொண்டாள்.

முதலில் அவள் மனத்தில், ஓடிப்போய்ப் பிரணதார்த்தியிடம் டயரியைக் கொடுத்து, உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்றுதான் தோன்றியது. ஆனால், அடுத்த நிமிஷம் அந்த எண்ணம் மாறிற்று. 'இப்போது முதலில் அவரைத் திருட்டுக் குற்றத்திலிருந்து விடுவிக்க வழி உண்டா?' என்று யோசித்தாள்.

'அக்கா, என் டயரியைக் கொடு!' என்றான் பாலு.

'இதுதான் வேண்டாமென்கிறது! போ-' என்றாள் கோமதி வெடுக்கென்று. அவள் கோபம் அடைந்தே பார்த்திராத பாலுவுக்கு அவள் சள்ளென்று விழுந்தது ஆச்சரியமாயிருந்தது.

'எதிரி விமானம் வரும்போது அபாயச் சங்குகள் ஒலிக்கும்' என்றான்.

'நீ போய்விட்டு அப்புறம் வாடா!' என்றாள் கோமதி.

'சங்கு ஏற்றியும் தாழ்த்தியும் ஒலித்தால் உடனே ஓடி ஷெல்டருக்குள் பதுங்கிக் கொள்ளுங்கள்.'

'நீ கீழே போய் விளையாடு, போடா, கண்ணே!'

'ஹிட்லரைக் கவிழ்க்க ஒரு சூழ்ச்சி! அப்படின்னு பேப்பரிலே போட்டிருக்கு, அக்கா! நானும் ஹிட்லரைப் போய்க் கவிழ்க்கிறேன்...' என்று சொல்லிக் கொண்டே பாலு ஓடினான்.

ஜன்னலில் கைவைத்து வெளியே பார்த்தவாறு யோசித்தாள் கோமதி; தோட்டத்தின் ஒருபுறம் கேரேஜ் இருந்தது. அதற்குப் பக்கத்தில் இன்னோர் அறை உண்டு. இது தோட்டக்காரனுக்காகப் பிரணதார்த்தி கட்டின அறை. ஆனால், இதுவரை ஒரு டஜன் தோட்டக்காரர்கள் வந்து போயும் ஒருவனாவது நிலைத்ததும் இல்லை; அதில் சேர்ந்தாற்போல் ஒரு வாரம் தங்கியதும் கிடையாது. சமீபத்தில் சில நாள்களாகப் பூட்டப்பட்டேயிருக்க, இப்போது மட்டும் திறந்து கிடப்பானேன் என்று வியப்புடன் பார்த்தாள்.

அப்போது அதனுள்ளிருந்து தத்தாத்திரி வெளியே தலையை நீட்டி இருபுறமும் பார்த்துவிட்டு மறுபடி சட்டென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டதைக் கண்டுவிட்டாள். சந்தேகம் எழுந்தவ ளாக, விடுவிடென்று கீழே இறங்கி அதை நோக்கிச் சென்றாள்.

கீழே குத்திட்டு உட்கார்ந்து நகைகளை ஒரு தகரப் பெட்டியில் அடுக்கிக்கொண்டிருந்த பிரணதார்த்தியின் தவப்புதல்வன், எதிர்பாராதவாறு கோமதி தோன்றியதும் திடுக்கிட்டுப் போனான். ஜப்பான் பொம்மையைப்போல் நாலைந்து முறை வாயைத் திறந்து திறந்து மூடினான். ஆனால், ஒரு வார்த்தைகூடக் கிளம்பவில்லை.

இரண்டு நிமிஷங்கள் கோமதி அவனையே முறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையிலேயே நூற்றுக்கு நூறு கோழையான தத்தாத்திரி தளர்ந்து போனான். 'ஊம்? என்ன?' என்றாள் அவள்.

தத்தாத்திரி முனகினான்.

★

இதற்கு ஐந்து நிமிஷங்களுக்குப் பின் தத்தாத்திரி பின் தொடர ஹாலுக்குள் அவசரமாக நுழைந்த கோமதியை எல்லோருமே ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். ரங்கராஜன் மட்டும் அப்போது டி.வி.எஸ். அய்யருக்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்துக் கொண்டிருந்தானாகையால், அவர்கள் வந்ததைக் கவனிக்க வில்லை.

கோமதி வந்ததும், 'மாமா! உங்கள் பிள்ளை ஏதோ அவசரமாகச் சொல்ல வேண்டுமென்று வந்திருக்கிறான். முதலில் கேளுங் கள்!' என்றாள்.

பிரணதார்த்தி அவளை வெறுப்புடன் பார்த்து, 'ஹே! சரிதான், போ அன்னண்டை சொல்றேன்! ஹே!' என்றார் அலட்சியமாக.

'அதையும்தான் கேளுங்களேன். எதினாச்சியும் இன்னும் வேடிக்கையாயிருந்தால் பார்க்கலாம்' என்றாள் பொன்னாயி. பிரணதார்த்தியின் சங்கடம் அவளுக்கு ஒரு கொண்டாட்ட மாகவே காணப்பட்டது.

இதுவரை குனிந்து வாசற்படியையே நோக்கி நின்ற ரங்கராஜன், ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தான். கால்கட்டை விரல் நசுக்கப்



பட்ட பிரணதார்த்தி நகர்ந்தார். அடுத்தாற்போல் அவன் பாய்ந்த பாய்ச்சலில் நாகநாத முதலியாரின் தொந்தி இடிபட்டு அதிர்ந்தது. குறுக்கே நின்ற மணி சடாரென்று மோதப்பட்டு, நிலை தடுமாறிப் பம்பரம்போல் ஒரு சுற்றுச் சுற்றித் தொப்பென்று கீழே உட்கார்ந்தான். வழியில் கிடந்த ஒரு நாற்காலி, உருட்டியடித்துக் கொண்டு போய்ச் சுவரில் மோதிக் கவிழ்ந்தது. பிரணதார்த்தியின் தமக்கைக் கூச்சல்போட நினைத்தவள், ஏனோ அடக்கிக் கொண்டாள். பீரங்கியிலிருந்து வெளிப்பட்ட குண்டுபோல் கிளம்பிப் புயல்காற்று வேகத்தில் ரங்கராஜன் மாடிப் படியில் தடதடவென்று இறங்கி ஓடினான்.

'பிடி, பிடி, டபாய்ச்சிட்டுக்கிட்டுப் போகிறான், திருட்டுப்பயல்!' என்று கத்தினார் நாகநாத முதலியார்.

'அவன் மேலே பிசகில்லாட்டா ஏன் இப்படி ஓடறான்?' என்றான் மணி மெல்ல எழுந்து கொண்டு.

'அடே ஹே?-..போகறச்சே கீழேயிருந்த முடிச்சையும்னா தட்டிக்கிட்டுப் போய்ட்டான். ஹே!' என்றார் பிரணதார்த்தி.





## அத்தியாயம் - 16

பாழாக வேணுமென்றால், அகப் பேய்!
பார்ப்பதை நம்பாதே! கேளாமல் சொன்
னேனே அகப் பேய்! கேள்வியுமில்லையடி.

*- அகப்பைச் சித்தர் பாடல்*

சாதாரணமாகக் கடிகாரத்தின் முள்ளைப் பின்புறமாகத் திருப்பக் கூடாதென்று சொல்லுவார்கள். இந்த விதியை யார் பின்பற்றினாலும் இல்லாவிட்டாலும் கதாசிரியர்கள் மட்டும் ஆதிகாலம் தொட்டு மீறியே வந்திருக்கிறார்கள். ஓர் இடத்தில் நடக்கும் சம்பவங்களைச் சொல்லி முடிக்கபிறகு. வேறு இடத்தில் அதேசமயத்தில் நடந்துகொண்டிருந்த விஷயங்களைச் சொல்ல வேண்டி வரும்போது, அவர்கள் கடிகாரத்தின் முள்ளைத் திருப்பாமல் வேறு என்ன செய்வது?

சின்னவேலியிலிருந்து ருத்ரகோபத்துடன் இளம்பிய ஜமீன்தார் சுப்ரமணிய அய்யர் சிறிது நேரம் மௌனமாகவே உட்கார்ந்து வந்தார். பக்கத்தில் அமர்ந்திருந்த காவேரி அம்மாளும் ஒன்றும் சொல்லவில்லை. 'பிள்ளைகளுக்கோ வயசாகி விட்டது. அது அதுகளுக்காகத் தெரிய வேண்டாமா?' என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு இரண்டு பக்கமும் சொல்ல



...MNERA ... PUBLIC LIBRARY

முடியவில்லை; இரண்டு பிள்ளைகள் பேரிலும் என்னவோ பிசகு இருந்தது.

'உம்' என்று உறுமினார் ஜமீன்தார். பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு, முன் ஸிட்டில் உட்கார்ந்திருந்த சேதுவின் உடம்பில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. முக்கியமாகத் தன் காதுக்கு மீண்டும் ஆபத்து ஏற்படலாமோ என்று அவன் அஞ்சினான்.

'உனக்குப் புத்தி எங்கே போச்சு?' என்றார் அவர் காவேரியிடம்.

'எனக்குத்தான் புத்தியே இல்லையே!' என்று ஒப்புக்கொண்டாள் அந்த அம்மாள். அப்படிச் சொன்னாலாவது அவர் சாந்தம் அடையட்டுமென்று.

'அரை மீசையாம்! உம்? சிகரெட்டாம்! குடிகூட உண்டாம்! உம்...அப்புறம்? ஒரு தாசி வேறு. சபாஷ்! அவனை வெட்டிப் போட்டுடறேன், உம்?' என்றார் பல்லைக் கடித்து.

'பதட்டப்படாதிங்கோ! நம்ம ரங்கராஜன் ஒருகாலும் இப்படியெல்லாம் இருக்க மாட்டான். எனக்கென்னமோ நம்பிக்கை.'

'நம்பிக்கை வரலையோ! ஓஹோ! இரண்டு ஆசாமிகள் போய், நேரிலே பார்த்துவிட்டு வந்திருக்கான்கள், சொல்றான்கள்! உனக்கு நம்பிக்கை வரலையாக்கும்! நான் சொல்றேன்; அவன் பிளான் போட்டுண்டே சண்டை போட்டுண்டு ஓடியிருக்கான்னா!'

'எல்லாம் போனால் தெரிந்து போகிறது.'

'அப்போ நான் சொல்றவன் என்ன, மடையனா?'

'நீங்கள் சொல்றது சரிதான்.'

'என்னடி சரி?'

'பேசாமேதானே வாருங்கோ.'

'நீ பண்ணியிருக்கிற காரியத்துக்கு...'

'நான் என்ன பண்ணிவிட்டேனாம்?'



ஜமீன்தார் சேதுவின்மீது அவன் காதைப் பிடிக்கப் பாய்ந்து, 'இவனை அனுப்பி... உம்... என் பெயரைச் சந்திசிரிக்க வைத்து...' என்றார்.

இதை எதிர்பார்த்த சேது, 'ஐயோ!' என்று தலையைக் குனிந்து கொண்டான்.

'அவனை எதுக்கு இப்படிக் கொடுமைப்படுத்தணும்?' என்றாள் காவேரி.

இப்படியே நிம்மதியின்றி அன்று பகல் பூராவும் பிரயாணம் நடந்தது. மோட்டார் தாம்பரம் ஸ்டேஷனை நெருங்கியபோது, அஸ்தமித்துவிட்டது; ஏழரை மணி இருக்கும்.

'துரைசாமி! விசாரித்துக் கொண்டு நேரே பரங்கிமலைக்கு விடு வண்டியை!' என்றார் ஜமீன்தார்.

'எனக்கே தெரியுமுங்க! மூணாம் வருஷம் வந்தோமுங்களே!' என்றான் துரைசாமி.

'பின்னே விடு, பேசாமே!'

பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் கார் பரங்கிமலை ஸ்டேஷனைத் தாண்டிச் சென்றது.

'நிறுத்தி விசாரி, எங்கே அந்த டி.வி.எஸ்.அய்யர் வீடு இருக்கிறதென்று! கண்ட பயல்கள் வீட்டையெல்லாம் தேடிக்கொண்டு போகும்படி வைக்கிறான் தடிக் கழுதை!' என்று உறுமினார் ஜமீன்தார்.

'என்ன, நீங்கள் என் தம்பி சுந்தரத்தையா 'கண்ட பயல்' என்கிறேள்! அவனும் ஒரு திவான் பெத்த பிள்ளைதான்! உங்களுக்குக் கையைக் கட்டிண்டு அவன் நிற்கல்லைன்னா...'

'பேசாதயேன், உன் பொறந்தாத்துப் பெருமையை! அவன் வீட்டுக்குள்ளே நான் நுழையப் போறதில்லை இப்பவும். உன் பிள்ளை இருந்தால் வாசலில் கூப்பிடப் போகிறேன்; அப்புறம்...' என்று அவர் சொல்லிக்கொண்டு வந்தபோதே, மோட்டார் இரண்டு முறை 'கர், கர்' என்று சப்தித்துவிட்டுத் தானாகவே நின்றது. டிரைவர் இறங்கி அவசரமாக முன்னால் சென்று பார்த்தான்.

'என்ன துரைசாமி! என்ன அது?' என்று ஆத்திரத்துடன் வினவி னார் ஜமீன்தார்.

'ஒண்ணுமில்லிங்க... இதோ...'

'என்னடா, இதோவாவது அதோவாவது! என்ன அங்கே?'

'இதோ ஸ்டார்ட் ஆயிடுத்துங்க!' என்றான் அவன். ஆனால், அது கிளம்ப மறுத்துவிட்டது! ஜமீன்தாரின் கோபம் பிரமாதமாக இருக்கப் போகிறதென்று நடுங்கிப்போன துரைசாமி, அவசர அவசரமாகத்தான் வேலை செய்து பார்த்தான்.

ஜமீன்தாரே வண்டியிலிருந்து இறங்கிவிட்டார். 'ஏண்டா, உனக்கு மூளை இருக்கா? உம்? என்ன பண்றே அங்கே? என்ன விஷயம்? ஒண்ணும் சொல்லாமே...' என்று மிரட்டவே, அவன், 'நிக்காமெ வந்ததிலே ஹீட் ஆயிப் போயிருக்குங்க. அரை மணியிலே...' என்றான் தயக்கத்துடன். ஜமீன்தாருக்கு வந்த ஆத்திரத்தில் இன்னது செய்வதென்று புரியாமல் நின்றார்.

'மாமா! எப்போ வந்தேள்?' என்ற குரல் கேட்டு, ஜமீன்தார் சட்டென்று திரும்பினார்.

'மாமியும் வந்திருக்காப்பலே இருக்கே? சௌக்கியமா, மாமி?' என்று கேட்டுக்கொண்டு சீனு நின்றான்.

'ஏண்டா சீனு! நீ இங்கேயாடா இருக்கே? உங்கம்மா இருக் காளாடா? உன்னைப் பார்த்து எத்தனையோ வருஷமாச்சுடா!' என்றாள் காவேரி.

'யார் இவன்? நம்ம ரங்கராஜனோடே படிச்சிண்டிருந்த பையன்தானே?' என்றார் ஜமீன்தார்.

'ஆமாம், மாமா! கண்டுபிடிச்சுட்டேளே என்னை! இங்கே எங்கே வந்தேள்? அடே! முன் வீட்டிலே யாரு? நம்ம கர்ணத்தின் பிள்ளை சேதுவா? முன்னெல்லாம் இவனை நான் காதைப் பிடித்தே தூக்குவேன், மாமா!' என்று சீனு அவனை நெருங்கினான். சேது காதைப் பொத்திக்கொண்டு திருதிருவென்று விழித்தான்.

'அடே! நாங்கள் ரங்கராஜனைத் தேடிண்டு வந்திருக்கோம். அவன் மாமா வீடு இங்கேதானே இருக்கு? உனக்குத் தெரியு மோடா!' என்று கேட்டாள் காவேரி.



'தெரியும், மாமி! ஆனா ஆத்திலே அவர் இப்போ இல்லை; அவரைப் பார்க்கப் போயிட்டுத்தான் நானும் வந்திண்டிருக் கேன்!' என்றான் சீனு.

சீனு முதல் நாள் மாலையிலேயே டி.வி.எஸ்.அய்யரைப் பார்க்க விரும்பினான். எதிர்பாராத ஆபீஸ் வேலைகள் சேரவே, மறுநாள் மாலை கண்டு, ரங்கராஜனைப் பற்றிய விவரங்களைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தான். தவிர, ருக்மிணியின் முகக் கமலத்தை மீண்டும் ஒருமுறை பார்க்கலாம் என்ற ஆசையும் உண்டு. இன்று அவன் வந்ததும், வாசலில் ருக்மிணி.

'வாருங்கள்!' என்றாள்.

'அப்பா இருக்கிறாரா?' என்று கேட்டான் சீனு.

'வாசலில் நின்று யார் என்ன கேட்டாலும் பதில் சொல்லக் கூடாது. அது ரொம்ப மரியாதைக் குறைச்சலாக்கும் என்று எங்க அப்பா கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். உள்ளே வாருங்கள்' என்றாள் அவள் குறும்புப் புன்னகையுடன்.

சீனு ஹாலுக்கு வந்தான். 'இப்போதாவது சொல்லலாமா?'

'இப்போதும் சொல்லக் கூடாது. 'வந்தவர்கள் டிபன், காபி சாப்பிட்ட பிறகுதான் பேசலாம்' என்று அம்மா உத்தரவு போட்டிருக்கிறாள்' என்றாள் ருக்மிணி.

அதற்குள்ளாக, 'அங்கே யாரோடே பேசறே, ருக்கு?' என்று கேட்டுக்கொண்டே அவள் தாயார் வந்துவிடவே ருக்மிணி, 'இவர்தான் அம்மா, அன்றைக்கு அப்பாவை விசாரித்துவிட்டுப் போய்விட்டார்' என்றாள். அதற்குள் அவள் முகம் சிவந்து, ஆயிரம் நாணல் கோணல்களைச் செய்து கொண்டு விட்டாள்.

'நீ போய் டிபனைக் கொண்டு வாடி! நான் பேசிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, 'உட்காருங்கோ! அன்னிக்கு உள்ளே வராமலே போய்விட்டேளே!' என்றாள் அந்த அம்மாள்.

சீனு ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

'உங்களுக்கெல்லாம் பூர்வீகம் தஞ்சாவூராக்கும்! எங்க நாத்தனார் பிள்ளைக்கூட அங்கே தெரிந்திருக்கலாமே!'

'ரங்கராஜனும் நானும் ரொம்ப நாள் சிநேகிதாள், மாமி! கூடப் பிறந்தவாளைவிட அந்யோந்யமாகப் பழகியிருக்கோம். ஜமீன் தாரையும் காவேரி அம்மாமியையும் எனக்கு நன்னாத் தெரியும்.'

'இவ அப்பாகூட இப்பத்தான் போகிறார். எங்கேயோ டீ-பார்ட்டி யாம்! யார்டி அவர், டீ பார்ட்டி வைக்கிறவர்?' என்று தன் பெண்ணைக் கேட்டாள் அந்த அம்மாள்.

ருக்மிணி மேஜைமீது டிபனைக் கொண்டுவந்த வெள்ளித் தட்டை வைத்துவிட்டு, 'பிரணதார்த்திஹர அய்யர், ஜிஞ்ஜில்லி மெர்ச்சண்ட், டி-நகர்' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள். 'ஓ!' என்றான் சீனு. அவன் மனம் சட்டென்று வேதனை செய்தது. மீண்டும் மங்களத்தின் ஞாபகம் குபீரென்று வந்துவிட்டது.

'இங்கே அந்த ரங்கராஜனும்கூட வந்திருக்கிறான். அவனும் இவர் கூட டீ-பார்ட்டிக்குப் போயிருக்கிறான்' என்றாள் ருக்மிணியின் தாயார்.

'இங்கே இருக்கிறவன் ரங்கராஜன் இல்லை, மாமி! அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் நானே இப்போது வந்தேன்' என்றான் சீனு.

'அதென்ன கூத்து!' என்று கேட்டாள் அந்த அம்மாள். ருக்மிணி சீனுவை தந்தப் பதுமைபோல் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள். அவனது ஒவ்வொரு அசைவும் சொல்கிற பாணியும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. சீனு தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்லி வா. அவள் தாயார் ஆச்சரியத்துடன் கேட்டு வந்தாள். 'சினிமா மாதிரின்னா இருக்கு இதெல்லாம்!' என்றாள் கடைசியில்.

'ஒன்றும் மிஞ்சி விடவில்லை, மாமி! நான் இப்போதே போய், உண்மையை உடைத்து விடுகிறேன்' என்று கிளம்பினான் சீனு.

'அவன் முரடனாயிருக்கப் போகிறான்! நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்' என்றாள் ருக்மிணி கவலையுடன்.

சீனு இதைக் கேட்டதும் புளகாங்கிதம் அடைந்தான்.

'நான் வருகிறேன், மாமி. இன்றைக்கே ரங்கராஜனை அனுப்பு கிறேன்' என்றான்.



'அவனுடைய கோமதியையும் பார்க்க வேண்டும் எனக்கு' என்றாள் ருக்மிணி கண்களைச் சிமிட்டி.

'தானே வருகிறாள் பின்னாலே' என்றான் சீனு சிரித்து.

வெளியே வந்தவுடன் சீனுவிடம், 'அப்பாவைப் பார்க்காமலே போகிறீர்களே! நீங்களும் அவர்களோடு வாருங்கள்' என்றாள் அவள்.

சீனு திரும்பிப் பார்த்தான்; ருக்மிணி தலையைக் குனிந்து கொண்டு உள்ளே சென்று விட்டாள். அங்கிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தபோதுதான் சீனு, நடு ரஸ்தாவில் மோட்டார் நிற்பதைக் கவனித்து, அதில் ஜமீன்தாரையும் காவேரி அம்மாளை யும் கண்டு விசாரித்தான்.

'மாமி! ரங்கராஜன் இப்போ இருப்பது பிரணதார்த்தி வீட்டில்!' என்றான் சீனு சுருக்கமாக.

'அவன் யாருடா பிரணதார்த்தி?' என்று சீறினார் ஜமீன்தார்.

'அவர் ஓர் எள் வியாபாரி,மாமா! எனக்குக்கூட மாமனாரா யிருந்தார்.'

'ஏண்டா அப்படிச் சொல்றே! உனக்கு ஆம்படையாள்...' என்று கேட்டாள் காவேரி.

'...போய்விட்டாள், மாமி! இரண்டு வருஷமாச்சு!' என்றான் சீனு முகம் இறங்கி.

'அவரிடம் இவனுக்கு என்னடா வேலை?' என்றார் ஜமீன்தார்.

'வேலைதான், மாமா! அங்கே மோட்டார் டிரைவராயிருக்கிறான்.'

'அச்சா இன்னானாம்! கேட்டுக்கொள்ளடி... உன் பிள்ளை வேலையை!'

'நீங்கள் கோபப்படப்படாது, மாமா!'

'இல்லை, சந்தோஷப்படறேண்டா'

'நான் விவரமாகச் சொன்னப்புறம்...'

'இப்போ கேட்டுக்கொண்டிருக்க டயம் இல்லை! துரைசாமி! வண்டியை ஸ்டார்ட் பண்ணு, சீக்கிரம்.'

டிரைவர் பயப்பட்டானே ஒழிய, ஜமீன்தார் அமலுக்கு வண்டி பயப்படவில்லை. 'இன்னும் அரைமணியாவது பிடிக்கும், எஜமான்!' என்றான் அவன்.

'பின்னர் வேறே ஏதானும் வண்டி பிடி!சீனு! சீனு! நீதான் பாரு!'

எட்டு மணி வேளைக்குப் பரங்கிமலைப் பக்கத்தில் அன்று தென்பட்டது ஒரே ஒரு ஜட்காதான். அந்த வண்டிக்காரன் சாவகாசமாய் ஓட்டி வந்து, வண்டியை நிறுத்தி, ஜமீன்தாரை ஏற இறங்கப் பார்த்து, 'என்னாங்க பார்க்கிறீங்க?' என்றான்.

'என்ன பார்ப்பாங்க? வர்றயா நீ?' என்று விசாரித்தார் ஜமீன்தார்.

'வர்றாதுங்க!'

'என்னது?'

'வர்றாதுங்க வண்டி, வர்றாது! அவ்வளவுதான்.'

'ஓஹோ!'

'ஆமாமுங்க!'

'கூலி பேசறதுக்கு முன்னயே...'

'கூலி வேண்டாமுங்க, ராவு வேளையிலே வண்டி வர்றாதுங்க!'

'நான் கேக்கிறேன்...' என்றார் ஜமீன்தார் விறைப்பாக.

'என்னாங்க நீங்க, அதட்டிறீங்களே? வர்றாதுங்கன்னுதான் சொல்லிக்கிட்டிருக்கிறேனே! ஜமீந்தாரு கணக்கா அதிகாரம் பண்றீங்களே!' என்றான் அவன்.

'அவர் ஜமீன்தார்தாண்டா, மடையா!' என்று சொன்னான் டிரைவர்.

'எந்த ஜமீன்தாராயிருந்தாக்கூட நம்ம குதிரை இப்போ வர்றாதுங்க!'

'வேறே வண்டி பார்!' என்றார் சுப்பிரமணிய அய்யர் திமிராக.



'வேறே வண்டி கிடையாதுங்க' என்று வண்டிக்காரனே பதில் சொன்னான்.

இதைக் கவனித்த சீனு, 'நீங்கள் சித்தே இருங்கள், மாமா! இவனையே எனக்கு வழிக்குக் கொண்டுவரத் தெரியும். பேசுகிற படி பேசுகிறேன்!' என்றான். பிறகு வண்டிக்காரனிடம், 'என்னா குதிரை அப்பா இது! இந்த வண்டியை இது இழுக்குமா?' என்றான்.

'ஏன் இழுக்காது?' என்றான் வண்டிக்காரன் ரோஷமாக.

'சந்தேகம்தான்! கண்ணு தெரியுமா இதுக்கு?'

'ஆயிரங்கண்ணு ஆதிசேஷன் இதுகிட்ட பிச்சை வாங்கணுங்க! சிங்கக்குட்டி சாமி, நம்ப குருதை!'

'சிங்கம்தான்! ஆள் அங்கமாயிருக்குது! இங்கேயிருந்து மாம்பலம் போக ஒரு மணி பிடிக்கும்!'

'போ சாமி! இருபது நிமிஷத்திலே போகாட்டி சொல்லு! முந்தாநேத்து பாரு...'

'அப்படித்தான் சொல்லுவே, அப்பா! ஏறினான்னா தெரியும்!'

'நிறுத்து, ஐயா! இப்ப நீ ஏறிக்கிறது... ஒரு ரூபா பந்தயம்!'

'பந்தயம் என்ன! அது போவறதானா இந்த அய்யரு கூப்பிட்ட போதே வரமாட்டியா?'

வண்டிக்காரனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'ஏறுங்க ஐயா நீங்க, சொல்றேன். சரியா இருபத்தைந்து நிமிஷத்திலே போகாட்டி, இதை வெட்டிப் போட்டுடறேன்!' என்றான்.

'இருபது என்கிறே! கிட்ட வந்தா, இருபத்தைந்து என்கிறே! எது நிஜம்?'

'நீ ஏறு ஐயா! பதினைஞ்சே நிமிஷம், பார்த்துக்கோ!'

ஜமீன்தார் டிரைவருக்கு உத்தரவு கொடுத்துவிட்டுக் காவேரியுடன் ஏறிக் கொண்டார். சீனு முன்னால் உட்கார்ந்து கொள்ள, வண்டி புறப்பட்டது. இந்த அமர்க்களத்தில் சேது மோட்டார் பின்னால் ஒளிந்துகொண்டான். அவர்களுடன் போனால்

ரங்கராஜன் என்ன செய்வானென்பதைப் பற்றி அவனுக்குச் சந்தேகமே இல்லை.

★

ரங்கராஜன் திடீரென்று ஓடினதால் ஏற்பட்ட அமளி அடங்கின வுடனே கணீரென்று கோமதி பேசினாள். 'மாமா! ரொம்பத்தான் கேவலப்படுத்திப் பேசி விடாதீங்கோ, உங்கள் பிள்ளை என்ன சொல்கிறான் என்று கேளுங்கள்! அதற்கும் முன்னால் அவன் கொடுப்பதைக் கையில் வாங்கிக் கொள்ளுங்கள்!' என்றாள் வெடுக்கென்று.

தத்தாத்திரியின் கையிலிருந்த தகரப் பெட்டியை வாங்கிப் பார்த்த பிரணதார்த்தி திடுக்கிட்டார். அதைச் சட்டென்று மூடிக் கொண்டு, 'இதற்கென்ன இப்போ அவசரம் வந்தது? ஹே!' என்றார்.

'இதற்குத்தான் மாமா, அவசரம்! உங்கள் பிள்ளை என்னைக் காலம்பற முந்நூறு ரூபாய் சம்பாதிக்க வழி கேட்டான். எனக்குத் தெரியாது என்றேன். சாயந்தரம் அவனே ஒரு வழி கண்டு பிடித்துச் சம்பாதித்தும் விட்டான். மூணு சீட்டில் ரொம்ப நஷ்ட மாம், மாமா! அதற்காகத்தான் இவன் இரும்புப் பெட்டியைத் திறந்திருக்கிறான்!' என்றாள்.

'பேத்தல், ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'உங்கள் பிள்ளையையே கேளுங்கள்! அவனே ஒப்புக் கொள் வான். இவன்தான் டிரைவர் அறையிலும் சில நகைகளை மட்டும் ஒளித்து வைத்தானாம். அதையும் ஒப்புக் கொண்டான். 'வாசலில் போலீஸ்காரன் வந்திருக்கிறான், உடனே ஒப்புக்கொண்டால் தான் நீ பிழைக்கலாம்; இல்லாவிட்டால் ஜெயிலுக்குப் போக ணும்' என்று மிரட்டியாக்கும் இவனைக் கொண்டு வந்திருக் கிறேன்!' என்றாள் கோமதி.

தத்தாத்திரி திருதிருவென்று விழித்தான். 'ஏண்டா கட்டலே போறவனே! நிஜமாடா! பிள்ளை பொறந்தியே நீயும்! உன்னை எருக்கை வெட்டி அடிக்க' என்றார் தமக்கை எரிச்சலுடன்.

'நீ ஏன் அப்பா டிரைவர் அறையில் சிலதை வைக்கணும்; அவன்மேல் உனக்கு ஏதாவும் கோபமா?' என்று கேட்டார் டி.வி.எஸ். அய்யர் சாந்தமாக.



'ஒரு நாள் விஷயம் பண்ணப் பார்த்தான். கொடுத்தேன் இரண்டு!' என்று சொல்லிக்கொண்டு ரங்கராஜனே வந்துவிட் டான். ஒரு சவுக்கத்தைச் கழுத்தில் சுற்றி முறுக்கி, ஆட்டை இழுத்து வருகிறாற்போல் கையோடு பக்கிரியையும் அவன் கொண்டு வந்திருந்தான். பக்கிரியின் கையில் ஒரு தலையணை உறை நிறைய ஏதோ நிரப்பிய சிறு மூட்டை ஒன்று இருந்தது.

'இந்த டிரைவரு ரொம்பப் பேருக்கு உடம்பை நசுக்கியிருக்காரு போலேன்னா இருக்குது!' என்றாள் பொன்னாயி.

ரங்கராஜன் தன் கைச் சவுக்கத்தை ஒரு முறுக்கு முறுக்கி, 'டேய்! பக்கிரி! இப்படி எதிரிலே கவிழ்த்து விடு உன் பையை! உம்!' என்றான்.

அதிலிருந்து சில சிறு வெள்ளிச் சாமான்கள், ஒரு பட்டுப் புடைவை, கடைசியாக ரங்கராஜன் சட்டையில் கட்டியிருந்த நகைகள் இவ்வளவும் விழுந்தன. கம்பீரமாக ரங்கராஜன் நிமிர்ந்து பார்த்து, 'நான் ஓடிப்போனதாக நினைத்திருப்பீர்கள்! பேச்சு சுவாரஸ்யத்தில் நீங்களெல்லாம் கவனிக்காமலிருந்தபோது, இந்த 'யோக்கியன்' மெல்ல என் சட்டையைக் கிளப்பினான். அதைக் கவனித்துவிட்டுத்தான் இவனைத் துரத்திக்கொண்டு ஓடினேன். சொல்லு அண்ணே, விவரத்தையெல்லாம்!' என்றான்.

பக்கிரியின் முகம் பரிதாபமாக இருந்தது. எல்லோரும் டிபன் சாப்பிடும்போது அடிக்கடி ரங்கராஜன் வந்து கவனித்துக் கொண்டதால் அவனால் ஒன்றும் எடுக்க முடியவில்லை. அப்புறம் பார்த்தால், அவன் குறி வைத்திருந்த பெட்டியை தத்தாத்திரி முன்னதாகக் காலி செய்திருந்தான். ஆகவே, கையில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு மேலே வந்து கவனித்திருக்கிறான். எப்படியும் மணி அகப்பட்டுக்கொண்டு விடுவான் என்ற பயம் அவனுக்கு உண்டாகவே, கீழே வைத்திருந்த சிறு முடிச்சையும் 'கிளப்பிக்' கொண்டு போகப் பார்த்திருக்கிறான். அதை எடுப்பதைத்தான் ரங்கராஜன் கவனித்துத் துரத்திச் சென்று அவனைப் பிடித்துவிட்டான்!

பக்கிரி விழித்தபோது ரங்கராஜன், 'நானே விஷயத்தைச் சொல்லி விடுகிறேனே! இவனும் நானும் வேலூர் ஜெயிலிலேயே இருந் திருக்கோம், ஸார்! இவன் மூஞ்சியை நன்றாகக் கவனித்துப் பாருங்கள்!' என்றான்.

பிரணதார்த்தி, 'ஹே!' என்றார்.

'ஆமாம், ஸார்! அன்னிக்கு என்னைக்கூட அழைக்கவில்லையா? இவன்தான் அது... என்ன அண்ணே, ஜெயில் தாழ்வாரத்திலே நாம் பாண்டி ஆடினமே, ஞாபகம் இல்லை?' என்று கேட்டு, பக்கிரியின் நடு முதுகில் பலமாக ஒரு குத்து வைத்தான்.

'ஆம்...ம்...மா!' என்றான் பக்கிரி வலி தாங்காமல்.

'கக்கு, அண்ணே! கக்கு! வேலூர் ஜெயில்லே இருந்தபோது... அந்தப் பொல்லாத வார்டர் படுக்கையிலே நானும் நீயுமா ஒரு பச்சைத் தப்பளையைப் போட்டமே, ஞாபகம் இருக்கா?' - இன்னொரு சிறு முறுக்கு.

'ஐயோ நானாச் சொல்லலிங்க... அவருதான் சொல்லச் சொன்னாரு... அவருதான் சொல்லச் சொன்னாரு...' என்று பக்கிரி கதறி, மணியை நோக்கிக் கையை நீட்டினான்.

ரங்கராஜன் இன்னொரு குத்து வைத்து, 'அவன் சொன்னான்னு நீ கேட்டியே, இந்தக் குத்தை அவன் வாங்கிக்குவானா, கேட்டுப் பாரேன்!' என்றான்.

'எலே, திருட்டுக் கழுதை! என்னையா சொல்றே! நானாடா சொன்னேன்? பொய் சொல்றயா?' என்றான் மணி. பிறகு மற்றவர்கள் பக்கம் திரும்பி, 'இவன் பெரிய போக்கிரியாயிருப் பான் போலிருக்கிறது! திருட்டுப்பயம், என்னைக் காட்டிவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறான்!' என்றான்.

டி.வி.எஸ். அய்யர் அப்போது பார்த்த பார்வை, மணிக்கு அதிக நம்பிக்கையூட்டுவதாக இல்லை. ரங்கராஜனும் பக்கிரியை விடு பவனாக இல்லை. 'இன்னும் என்ன சொன்னாரு?' என்று முறுக்கினான்.

'இன்னிக்கு வேலைக்குப் போடான்னாரு. அப்புறம், 'நாங்க டீ பார்ட்டியிலே இருக்கிறப்போ அகப்பட்டதைச் சுருட்டிக்கிட்டு நீ முன்னே கம்பி நீட்டிடு. அதுதான் சரியான டயம்' அப்படின் னாரு... ஐயோ! முறுக்காதிங்க கையை! ரொம்ப வலிக்குதே!'

'தொம்' என்று இன்னொரு குத்து விட்டு, 'சொன்னாரா? நீ கேட்டியா அதை?' என்றான் ரங்கராஜன்.



'என்னைப் போட்டுக் கொல்றீங்களே! சாமீ!' என்று அலறினான் பக்கிரி.

ரங்கராஜன் பிரணதார்த்தியைப் பார்த்தான். 'இவன் இன்னிக்கு ரொம்ப ஒத்தாசையாக இருந்தான், டிபன் கொடுக்கணும்டா, ராஜாராமா!' என்று எனக்கு உத்தரவு போட்டேளே, போறுமா, டிபன்? இன்னும் கொஞ்சம் போடணுமா?' என்று கேட்டான் எகத்தாளமாக.

'ஹே!' என்றார் பிரணதார்த்தி, திகைப்போய். எல்லாருமே இந்த எதிர்பாராத சம்பவங்களினால் திகைத்துத்தான் போயிருந்தார் கள். கோமதிக்கு இருந்த ஆனந்தத்தில், அவள் தனது புடைவைத் தலைப்புக்குள் ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

ஏதோ சந்தேகம் தோன்றியவராக டி.வி.எஸ். அய்யர் பக்கிரியின் அருகில் வந்து கூர்ந்து பார்த்தார். பிறகு சட்டென்று, 'எண்டா அயோக்கிய ராஸ்கல்! நீதானே செண்ட்ரல் ஸ்டேஷனில் என் சட்டைப் பையில் கை போட்டு மணிபாக்ஸை எடுத்தவன்?' என்றார்.

பக்கிரிக்கு முழங்கால்கள் தொய்ந்தன. கோமதி சட்டென்று நினைவு வந்தவளாக, ரங்கராஜனின் டயரியை எடுத்து அவன் மாமாவின் கையில் கொடுத்தாள்.

'யார் அய்யா ராஜாராமன் இங்கே?' என்று அந்தச் சமயம் மாடிப் படியில் அதிகார தொனியில் ஒரு குரல் கேட்டது. 'லொட்' 'லொட்'டென்று கைத்தடியின் சத்தமும் வந்தது. அடுத்த நிமிஷம் திவான் பகதூர் திரிகாலாக்னி உள்ளே நுழைந்து, 'ராஜாராமன்! ராஜாராமன்!' என்று ஒவ்வொருவரையும் பார்த்தார். ரங்கராஜன் அவரை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த போதே, அவர் மணியைத் தமது தடிக் கம்பால் சுட்டிக் காட்டி, என்ன ஓய், அப்புறம் மறந்தே போயிட்டீர்! ஹூம்?' என்றார்.

பிரணதார்த்தி குறுக்கிட்டு, 'இவன் அல்லவா ராஜாராமன்!' என்று ரங்கராஜனைக் காட்டினார்.

'ஹூம்! எனக்கு எல்லாம் தெரியும். ஓய்! இவன்தான் நேற்று என் கார்மீது இவன் காரை அரண்மனைக்காரத் தெருவில் மோதி விட்டு, என்னை வீட்டில் வந்து பார்ப்பதாகச் சொல்லிவிட்டுப் போனான். நன்றாகத் தெரியுமே, ஓய்! கார் நெம்பர். எம்.ஸி. 030742' என்றார் திவான் பகதூர் திரிகாலாக்னி.

'அது என் காராச்சே?' என்றார் பிரணதார்த்தி.

'இருக்கட்டுமே, ஓய்? இவன்தானே ஓய் மோதினான்?' என்றார் திரிகாலாக்னி.

இனியும் தாமதிப்பதில் உபயோகமில்லை. வெள்ளம் தலைக்கு மேல் ஓடுகிறதென்று கண்ட மணி, வேகமாக வெளியே செல்ல யத்தனித்தான். ரங்கராஜன் அருகாமையில் வந்ததும் மணியின் எண்ணத்தை அவன் ஊகித்து, பக்கிரியின் மீது பிடியைவிட்டு மணியின் கையைப் பற்றிக்கொண்டு, 'நில்லுங்கள், ஜமீன்தார் வாள்! இருந்து பதில் சொல்லிவிட்டே போங்கள்!' என்றான்.

இந்தச் சமயம் பார்த்து பக்கிரி கம்பி நீட்டிவிட்டான்.



## அத்தியாயம் - 17

'உடல் குழைய வென்பெலா நெக்குருக
விழிநீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற
ஊசி காந்தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னியுன்னி...'

**- தாயுமான சுவாமிகள்**

மணி கம்பீரமாக நின்றான். அவன் போக்கிரி தான் என்றாலும், போக்கிரிகளிடையே மன்னன் என்று தோன்றும்படியாக நடித்தான். பக்கிரி நழுவுவதைக் கவனித்த நாகநாத முதலியார், 'அடேடே! அந்தப் பயல்...' என்று ஆரம்பிக்கவே அவரை அடக்கி, 'சும்மா இருங்கள், ஸார்! அவன் போகட்டும்! நான் சொன்னபடி அவன் கேட்டு நடந்தானே தவிர, அவனாக ஒன்றும் செய்யவில்லை!' என்றான்.

'யார் சொன்னபடி? ஹோ!' என்று கேட்டார் பிரணதார்த்தி. மணி அவரை மதித்துப் பதில் சொல்லவில்லை.

ரங்கராஜன், மணியின் வார்த்தையில் நம்பிக்கை வைக்காமல் கையை இன்னும் கெட்டியாகவே பிடித்துக்கொண்டான். ஆக்ருதியில் கிட்டத் தட்டச் சமமாக இருந்த அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் திமிறிக்கொண்டு போயிருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

'எனக்கு ஒன்றும் புரியவில்லையே, ஹே!' என்றார் பிரணதார்த்தி மீண்டும்.

'என்ன புரியவில்லை? இந்த ஆசாமி நேத்துக் காலை ஒரு காரை ஓட்டிக்கொண்டு வந்து என் மேலே மோதினான், அரண்மனைக் காரத் தெருவிலே! ரொம்ப யோக்கியன் மாதிரி இந்த அட்ரஸை யும் கொடுத்துவிட்டு, என் வீட்டிலே வந்து ரிப்பேருக்குப் பணம் கொடுப்பதாகவும் சொல்லிவிட்டுப் போனான். நேற்றுப் பூராவும் காத்திருந்து பார்த்தேன்; இன்று இத்தனை நாழி வரையில் பார்த்தேன். ஹூம்?'

'ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'எத்தனை மணிக்கு என்று விசாரியுங்கள், ஸார்! இன்னும் உண்மை விளங்கும்!' என்றான் ரங்கராஜன்.

திரிகாலாக்னி, 'பதினொரு மணி இருக்கலாம், ஸார். இவனையே கேளுங்கள், நான் சொல்வது உண்மையா இல்லையா என்று!' என்றார்.

மணி அலட்சிய பாவத்தில் ஒரு பார்வை பார்த்து, 'ஆமாம் ஓய்! அதற்கென்ன இப்போ?' என்றான்.

'என்னவா! யார் ஐயா என் காரை ரிப்பேர் செய்கிறது?'

'உம்ம பேரிலேயும் பிசகு இருக்கு; அதனாலே நீர்தான் ரிப்பேர் செய்யணும். அந்த இடத்திலே உம்மோடே வாக்குவாதம் வேண்டாம்னு அப்படி ஒரு வார்த்தை நான் சொன்னால், பெரி சாக அதைத் தூக்கிக் கொண்டு இங்கே வந்து கூச்சல் போடறீரே? போங்காணும்!' என்றான் மணி.

திரிகாலாக்னி ஆவேசத்துடன் தமது தடியை ஆட்டினார். 'போக்கிரிப் பயலே! என்ன சொன்னே? உன்னை... உன்னை...' என்று குதித்தார். முதலியார் மட்டும் அவரை அடக்கிப் பிடித்துக் கொண்டிராவிட்டால் பெரிய ரகளை செய்திருப்பார்.

ரங்கராஜன் பிரணதார்த்தியைப் பார்த்து, 'நேற்று தன் காரைக் காணவில்லை என்று சொன்னேன் அல்லவா? அதை யார் கொண்டுபோனது என்று இப்போதாவது உங்களுக்குத் தெரிந்து விட்டதா, ஸார்?' என்று கேட்டான்.



'என்ன, ரங்கராஜா, நிஜமாக நீயா... ஹே! நீயா... என் காரை எடுத்துக்கொண்டு போனாய்?' என்று கேட்டார் பிரணதார்த்தி.

'யாரைப் போய் ரங்கராஜன் என்று கூப்பிடுகிறீர்கள், ஸார்? இவனையா' என்றான் ரங்கராஜன், மணியை ஓர் உலுக்கு உலுக்கி. சர்க்கஸில் சிங்கம் உறுமுகிறாற்போல் மணி ரங்க ராஜனைப் பார்த்து உறுமினான். ஆனால், பின்புறம் கையை வளைத்து அவன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தானாகை யால், மணி அசையும் போதெல்லாம் அசாத்தியமாக வலித்தது.

டி.வி.எஸ். அய்யர் விளக்கினடியில் கோமதி கொடுத்த டயரியைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அதிலிருந்த போட்டோவும் ரங்கராஜனும் ஒரே ஆசாமிதான் என்பதில் அவருக்குச் சந்தேகம் இல்லை. ஒருபுறம் ஏற்பட்டிருந்த பெரிய ஆச்சரியத்துடன் கூடவே, 'நாம் சின்னவேலிக்குச் சொல்லி அனுப்பிய விஷயங்கள் பொய்யானவை ஆயிற்றே' என்ற வருத்தமும்கூட அவருக்கு ஏற்பட்டது.

மணி இப்போது டி.வி.எஸ். அய்யரைப் பார்த்தான். அங்கிருந்தவர்களில் அவர் ஒருவர்தான் அவனுக்கு உண்மையில் பெரிய மனிதர் - மதிப்புள்ளவர் என்று பட்டது.

'ஸார், இவ்வளவு விஷயங்கள் தெரிந்துபோன பிறகு - அதுவும் அந்த டயரியையும் நீங்கள் பார்த்த பிறகு, உண்மையை மறைத்துக் கொண்டிருக்க எனக்கு இஷ்டமில்லை, அதனால் உபயோகமும் இல்லை. நான் சின்னவேலி ஜமீன்தாரின் பிள்ளை இல்லை; அதுவும் வாஸ்தவம். (ரங்கராஜனைச் சுட்டிக்காட்டி) இவனை இங்கிருந்து கிளப்ப நான் பிரயாசைப்பட்டதும் உண்டு...' என்றான் மணி.

'அடப்பாவி! ஹே!'

'யார் ஐயா பாவி? எள்ளுப் பேர்வழி நீ! நீ பண்ணியிருக்கிற பாவம் மட்டும் கொஞ்சமா?'

'உஷ்... அதிகம் பேச வேண்டாம்! விஷயத்தை மேலே சொல்லு!' என்று அதட்டினார் டி.வி.எஸ். அய்யர்.

'விஷயம் வேறு என்ன இருக்கிறது? என் முயற்சிகளில் ஒன்றும் பலிக்கவில்லை. அதை நான் ஒப்புக்கொண்டுவிடுகிறேன்' என்றான் மணி.

'ரொம்ப யோக்கியரு இவரு! எப்பவும் நிசமேதான் பேசறாரு' என்றாள் பொன்னாயி நடுவில்.

'இவன் காரை ஸ்டூடியோ வாசலில் விட்டுவிட்டுப் போனான். காரைப் பாழ் செய்யும் உத்தேசம் எனக்குக் கிடையாது; இவன் கண்ணில்படாமல் கொண்டு போய் விட்டுவைத்து...' என்றான் மணி.

'நீயா, ஹே!'

'ஆமாம், ஹெஹ்ஹே!' என்றான் மணி ஏளனமாக.

'தேவலை இந்த ஆளு, நல்ல வேடிக்கைக்காரரு!' என்று சிரித்தாள் பொன்னாயி.

'அப்புறம் அதை நான் இங்கே விடவில்லை! எப்படி இங்கே வந்ததென்றுதான் தெரியவில்லை' என்று சொல்லும்போது திரிகாலாக்னி துள்ளி, முதலியாரை உதறிக் கொண்டு, தம் கைத்தடியால் மணியின் தலையில் 'மொட்' டென்று ஓர் அடி போட்டுவிட்டார். 'ராஸ்கல்! திருடின காரை மோதிவிட்டு - பொய்ப் பெயரையும் எனக்குக் கொடுத்து - ஹும்! என் வீட்டுக்கும் வரதாகச் சொல்லி என்னை ஏமாற்றி...' என்றார்.

ரங்கராஜன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிராவிட்டால் மணி திரிகாலாக்னி மீது பாய்ந்து, அவரைக் கிழித்துப் போட்டிருப்பான்.

இப்போது மணியை என்ன செய்வதென்ற பிரச்னை எல்லோர் மனத்திலும் ஏக காலத்தில் எழுந்தது. அவனோ 'துளிர்த்த கட்டை'யாக இருக்கிறான். எல்லாவற்றையும் கூச்சம், அச்சம் இன்றிப் பெருமையுடன் ஒப்புக்கொள்கிறான்.

திரிகாலாக்னி, 'எனக்கு முப்பது ரூபாயாச்சே, ஓய்! என்னை விடுங்காணும்! அவனை நன்றாகப் போடுகிறேன்!'- என்று மீண்டும் முதலியார் கையிலிருந்து விடுபடத் திமிறினார்.

ரங்கராஜன் அவரைப் பார்த்து, 'சும்மா இருங்கள் ஸார்! ஏதானும் செய்தீர்களோ, இவனை விட்டுவிடுவேன். அப்புறம் உங்கள் பாடு தகராறுதான்!' என்று எச்சரித்தான்.

அந்தச் சமயத்தில் மாடிப்படியில் பேச்சுச் சத்தம் கேட்டது.



'இப்படி வாருங்கள், மாமா! பார்த்து ஏறுங்கள், இது அரைப்படி! மாமி! பார்த்து மெல்ல வாருங்கள்!' என்று சீனுவின் குரல் கேட்டது. அடுத்த நிமிஷம் சீனுவைப் பின்தொடர்ந்து சுப்ரமணிய அய்யரும் காவேரி அம்மாளும் மேலே வந்தார்கள்.

★

ஜமீன்தாரும் காவேரியும் சீனுவும் ஏறி உட்கார்ந்தவுடன் ஜட்கா வெகு வேகமாகத்தான் கிளம்பியது. ரப்பர் டயர் போட்ட சக்கரங்கள், வழுவழுப்பாகத் தார் போட்ட ரோடு, முதல் தரமான குதிரை - இவ்வளவுமாகச் சேரவே, வேகமாகவும் சுகமாகவும் தான் வந்து கொண்டிருந்தார்கள். வரும்போதே சீனு அவர்களுக்கு ரங்கராஜனைப்பற்றிய விருத்தாந்தங்களைச் சொல்லிக் கொண்டே வந்தான்.

'பார்த்துக் கொள்ளுங்கள், மாமா! நீங்கள் வீணாக ரங்கராஜன் மீது கோபித்துக்கொண்டு பிரயோசனம் இல்லை. அவனே இப்போது, 'ஏண்டாப்பா அண்ணனிடம் கோபித்துக்கொண்டு வந்தோம்' என்று மனசு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். நீங்கள் வேறு கோபித்துக் கொண்டால்...' என்றான் சீனு.

'சரிதாண்டா, கதை படிக்கிறே என்னண்டை! நீ ஒரு யோக்கியன், உன் சிநேகிதன் இன்னொரு யோக்கியன். இந்தக் காலத்துப் பசங்களே காலிப் பயல்கள்!' என்றார் ஜமீன்தார், எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுவிட்டு.

அவர் குரலில் இப்போது கோபம் இல்லை என்பதைச் சீனுவும் காவேரி அம்மாளும் கவனிக்கத் தவறவில்லை.

ஜமீன்தார் சட்டென்று, 'அதெல்லாம் சரிதான், அது யார்டா கோமதி என்கிற பெண்? நீ பார்த்திருக்கிறாயாடா?' என்று கேட்டார்.

'நான் பார்த்ததில்லை, மாமா! ரொம்ப ரொம்ப அழகு என்று ரங்கராஜன்தான் சொல்கிறான்!'

'ரொம்ப அழகைக் கண்டுவிட்டான், இவன்! காலிப் பயல்! கட்டி வைத்து நன்றாக உதைத்தால்-'

'என்னவோ மாமா, நீங்கள் இந்த விஷயத்தில் கண்டிப்பாக இருப்பது சரி என்று எனக்குப் படவில்லை-'

'பேசாம வாடா! சரி- தப்பு எல்லாம் தெரிந்து கரை கண்டவன் நீ! உன்னை யாருடா இதெல்லாம் கேட்டது இப்போ?' என்றார் ஜமீன்தார்.

சீனுவுக்குச் சங்கடமாய் இருந்தது. ஜமீன்தாருடைய மனசு அவனுக்குப் பிடிபடவில்லை. ஒரு சமயம் சௌஜன்யமாகப் பேசுவார்; ஒரு சமயம் பிரமாதமாகச் சண்டை பிடிப்பார். இப்போது என்ன செய்யப் போகிறார்? பேச்சை மாற்றலா மென்று, 'வண்டி இவ்வளவு வேகம்தான் போகும்போல் இருக் கிறது!' என்றான். உடனேயே 'ஏன் சொன்னோம்' என்று பயந்துவிட்டான் அவன்.

'யார் சாமி சொல்றது அப்படி! பார், இதோ பார். நம்ம 'டில்லி மட்டம்' எப்படிப் போவுது, பார்!' என்றான் வண்டிக்காரன், சாட்டைக் குச்சியைச் சகடையில் கொடுத்து ஓசைப்படுத்தி, 'பிர்ர்ர்ர்...' என்று கூச்சல் போடவே, குதிரை பாய்ச்சலில் கிளம்பி விட்டது. சைதாப்பேட்டை டோல்கேட் வந்ததும், அது நேரே போய்விடாமல் வெங்கடநாராயணா ரோட்டில் திருப்புவது பிரும்மப்பிரயத்தனமாகிவிட்டது.

பிரணதார்த்தி வீட்டு வாசலை அடைந்ததும் மாடியில் பல விளக்குகள் எரிவது தெரிந்தது. சீனு வாசலிலேயே நின்று கொண்டு, 'மாமா! நீங்கள் உள்ளே போய் விசாரியுங்கள்!' என்றான்.

'ஏண்டா? நீயும்தான் வாயேன்!'

'நான் உள்ளே வருகிறதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன்'.

'ஏண்டா?'

'என் மங்களம் செத்துப்போன இடம் மாமா இது! எனக்கு இது மசானம் மாதிரி.'

'சரிதான், போடா! சிறு பயல் நீ! என்னிடம் வேதாந்தம் படிக்கிறே!'

'அப்படி இல்லை, மாமா! தவிர, எனக்கு மங்களத்தின் ஞாபகம் எல்லாம் வருகிறது, மாமா! வயிற்றை என்னவோ செய்கிறது. அவளுடன் நான் இருந்தது, விளையாடினது எல்லாம் இப்போ நடக்கிறாற்போல் ஞாபகம் வருகிறது, மாமா!'



சீனு வாசற்படியிலேயே உட்கார்ந்துவிட்டான். அவன் கண்கள் நீர் ஊற்றுப்போல் வர்ஷித்தன. ஜமீன்தாருக்கும் மனம் இளகிவிட்டது. 'என்ன சீனு, நீ குழந்தைமாதிரி இருக்கியே.. துக்கம் இருக்கும்; நான் இல்லையென்று சொல்லவில்லை.. ரொம்பக் கஷ்டம்தான் உனக்கு...'

'மாமா, நான் சாயந்தரம் ஆபீஸிலிருந்து வரும் வரைக்கும் இந்தப் படியைவிட்டு உள்ளே போக மாட்டாள் மாமா! அவள் தெய்வப் பிறவி, மாமா! அவள் பேர்தான் மங்களம் என்றால், இருக்கிற இடமும் அப்படியே இருக்கும். இனிமேல் இந்த ஜன்மத்தில் எனக்கு...' சீனுவுக்குப் பேசமாட்டாமல் தொண்டையை அடைத்துக் கொண்டது.

காவேரியும் கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'ஐயோ பாவம்!' என்று ஏங்கியது அவள் உள்ளம்.

'அதையெல்லாம் நினைத்து என்ன பிரயோசனம், சீனு! நீ வண்டியில் உட்கார்ந்திரு, நான் போய்விட்டு வருகிறேன். உன் மனசைப் புண்படுத்த எனக்குப் பிரியமில்லை' என்றார் சுப்ரமணிய அய்யர். பார்வைக்குப் படாடோபமாக, முன்கோபக்காரரே ஒழிய, அவர் குணம் தங்கமானது என்பதை அவர் எதிரிகள் கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கணம் தயங்கின சீனு, ஏதோ தீவிரமாக யோசனை செய்தவன் போல் காணப்பட்டான். 'மாமா வாருங்கள்! நானும்தான் வருகிறேன்' என்றான் திடுதிப்பென்று.

'என்னடா இது, இப்போ என்னவோ சொன்னே, அதற்குள்ளே...'

'வேறே காரணம் ஒன்று இருக்கிறது, வாருங்கள்!' என்று அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

எதிர்பாராதவிதமாகத் தன் தகப்பனாரைக் கண்ட ரங்கராஜன் திடுக்கிட்டுப் போனான். முன்னால் சீனுவைக் கண்டதும், அவன் செய்த வேலை என்று அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான். 'நீ சும்மா இரு! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்ற பாவனையில் சீனு அவனுக்கு ஜாடை செய்தான்.

'என்னடா, என்ன கலாட்டா இங்கே?' என்றார் சுப்ரமணிய அய்யர், ரங்கராஜனைப் பார்த்து.

'ஒண்ணுமில்லே, அப்பா! இங்கே...'

'காலிப் பசங்களா! பெரியவாள், சின்னவாள் என்கிற மரியாதை கிடையாது. ஒட்டம், பிடி எல்லாம் என்னடா உனக்கு!' என்றார் அவர்.

'நான் ஓடவுமில்லை, பிடிக்கவுமில்லை, அப்பா!'

டி.வி.எஸ்.அய்யர் முன்னால் வந்து, 'அத்திம்பேரே! வாருங்கோ' என்றார்.

சுப்ரமணிய அய்யர் அவரை வெறிக்கப் பார்த்தார். 'ஏண்டா சுந்தரம்தானேடா?' என்றாள் காவேரி.

'ஆமாம், அக்கா! உன்னை நான் பார்க்கவில்லையே!' என்றார் அய்யர் தமக்கையை ஆவலுடன் பார்த்து.

'கோபித்துக் கொள்ளப்படாது, அத்திம்பேரே! பழசையெல்லாம் மறந்துடணும்! இவன்தான் ரங்கராஜன் என்று எனக்கு இப்போது தான் தெரியும்!' என்றார் டி.வி.எஸ்.அய்யர்.

சுப்ரமணிய அய்யர் மணியை ஏற இறங்கப் பார்த்து, 'என்னைத் தெரியுமாடா உனக்கு?' என்று கேட்டார்.

'அந்தப் பாக்கியம் இப்போதுதான் கிடைத்தது' என்றான் மணி திமிராக.

'அத்திம்பேரே, அவனோடு நீங்கள் ஏன் பேசறேள்?' என்றார் டி.வி.எஸ்.அய்யர்.

'யாருடா இங்கே பிரணதார்த்தி?' என்று விசாரித்தார் ஜமீன்தார் ரங்கராஜனை.

'ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'என்ன ஓய், அழகு காட்றீர் எனக்கு?' என்று ஜமீன்தார் அதட்டினார்.

'அவர் சுபாவம், அப்பா, அது! அவர்தான் என் வியாபாரி, அப்பா! என் விஷயமா உங்களுக்கு ஏதானும் தெரியணுமானால், இவர் நன்றாக எடுத்துச் சொல்லுவார்' என்றான் ரங்கராஜன்.

பொன்னாயி கலகலவென்று சிரித்து, 'அன்னிக்கு நம்ம ஊட்டுக்கு இவரு வந்தபோதே, ஜமீன்தார் பிள்ளையாங்



காட்டியும்னு நினைச்சுட்டேன்... இந்த எஜமானுக்கார ஐயாவுக்குப் பாரேன், அதிர்ஷ்டத்தை, ஒரு ஜமீன்தார் மவனே மோட்டார் ஓட்டியிருக்காரே' என்றாள், மோவாய்க்கட்டையில் கை வைத்து.

அங்கே நடக்கும் விஷயங்களைக் கவனித்த திரிகாலாக்னிக்கு ரோஷம்தான் வந்தது. அவரை யாரும் கவனிப்பதாகவோ அவரிடம் யாரும் அனுதாபம் காண்பித்ததாகவோ தெரிய வில்லை; அவருக்கு நியாயம் பிறக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. 'நீங்கள் எல்லாரும் பேசிக்கொண்டிருங்கள், வெட்டிப் பேச்சு! நான் போய் ஒரு போலீஸ்காரனைக் கொண்டு வர்றேன்! இந்தத் தடிப்பயலைச் சும்மா விடறதில்லை!' என்று சொல்லி வேகமாகக் கீழே இறங்கிப் போனார்.

மாடிப் படியில் மீண்டும் காலடிச் சத்தம். வேதராமய்யரின் உரத்த சிரிப்புக் குரல் கேட்டது. அவரைப் பின்பற்றி மற்றொருவரும் வந்தார். மேலே வந்ததும் வேதராமய்யர், 'ஏது, பெரிய சபையான்னா கூடியிருக்கு... வகையான விஷயத்தைச் சொல்லப் போறோம் இல்லையா?' என்றார். பிறகு 'பிரணதார்த்திஹரா அய்யர்வாள்! இப்போ என்னைக் கோபிக்க வேண்டாம்; உம்ம லோபித்தனத்தை நான் பிரஸ்தாபிக்கவில்லை இங்கே... இதோ நடேசய்யர்வாள் வந்திருக்கிறார். இவர் படே ஜமீன்தார் இப்போ! கேஸ் ஜெயிச்சுடுத்து! முல்லை வாசல் இவருக்கு எல்லை வாசலாக இருக்கப் போறது!' என்றார்.

'ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'ஆமாம், ஓய்! இவர் பெண் எங்கே, கோமதி! இப்படிக் கூப்பிடும் குழந்தையை!' என்றார் அவர். நடேசய்யர் சங்கோசத்துடனே எல்லாரையும் பார்த்தார். ரங்கராஜன் ஆச்சரியப்பட்டவனாகக் கோமதி இருந்த திசையில் பார்த்தான். அவள் முகத்தில் புன்னகை யின் ரேகை தென்பட்டது. அது விரிந்து நகையாகுமென்று எதிர்பார்த்தான். அவள் கண்களில் ஏனோ நீர் பெருகியது! பிடித்த கை பிடித்தபடி இருக்க, அவள் ஏன் அப்படிச் சிலைபோல் நிற்கி றாள்! ரங்கராஜனைத் திகில் பற்றிக் கொள்ள, மணியின் மீதிருந்த பிடியை விட்டு, அவள் பக்கத்தில் ஓடினான். அப்படியே மூர்ச்சை யடைந்து சாய்ந்தவளைச் சரியான சமயத்தில் கீழே விழாமல் தாங்கிக்கொண்டான். குழந்தையைத் தூக்குவதுபோல் தாங்கிச் சென்று பக்கத்து அறையில் கட்டிலில் கொண்டு படுக்க வைத்தான்.

பிடி நழுவிய மறுகணம் மணியும் நழுவினான். சிறிது நேரம் கழித்துக் கீழே மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட் செய்யப்படும் சத்தம் கேட்டுத்தான் அவன் தப்பித்துக் கொண்டதை எல்லாரும் உணர்ந்தார்கள்.

★

கட்டிலில் எழுந்து உட்கார்ந்த கோமதி கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டாள். தான் காண்பது கனவா நனவா என்று அவளுக்குப் புரியவில்லை. தன் தந்தைக்குக் கேஸ் ஜெயித்துவிட்டது என்ற செய்தி அவளுக்கு மட்டற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது; எனினும் திடீரென்று வந்த அதிர்ச்சி அவளைத் தள்ளிவிட்டது. தன் தாயார் இருந்து இந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்கவில்லையே என்று ஒரு பெருந்துக்கமும் அவள் இருதயத்தைத் துருவியது.

கண் விழித்தபோது, ஒருபுறம் ரங்கராஜனின் தாயாரும், ஒருபுறம் தன் தகப்பனாரும் நிற்பதைக் கவனித்தாள். சற்றே ஒதுங்கி னாற்போல் நின்ற ரங்கராஜன் முகத்தில் தேங்கியிருந்த கவலை யையும் அவள் காணத் தவறவில்லை.

அறைக்கு வெளியே மற்றவர்கள் கும்பலாக நின்று கொண்டிருந் தார்கள். கோமதியைப்பற்றிக் கலக்கப்பட அவசியம் இல்லை என்று அறிந்து, ஒவ்வொருவரும் பேச்சில் ஈடுபட்டார்கள். டி.வி.எஸ்.அய்யரும் ஜமீன்தாரும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்க, வேதராமய்யர் நாகநாத முதலியாரைப் பிடித்துக் கொண்டார்.

'என்ன ஐயரே! இப்போ என்ன ஜபம் வைச்சிருக்கீங்க நீங்க? ஐயருக்குப் பணமுடை வந்திருச்சின்னா, ஜபம், தபம் எல்லாம் வைச்சிடுவாரு. ஐயரு ஊட்டிலே நெல் இல்லேன்னா, ஹோமம் ஏற்பாடு பண்ணிடுவாரு! பலே கெட்டிக்கார ஐயரு இவரு!' என்றாள் பொன்னாயி.

'இரு பொன்னாயி! உன்னையும் விட்டுடப் போறதில்லை நான்! ஸ்டுடியோவிலே நீ நன்னாப் பேர் வாங்கறத்துக்கு சூரிய நமஸ்காரம் ஒண்ணு வை! சூரியன் மாதிரி உன் பேரு பிரகாசிக் கும்! பதினைஞ்சு ரூபாய்தான் பிடிக்கும்! என்ன சொல்றே?' என்றார் வேதராமய்யர்.

பொன்னாயி சிரித்தாள். 'அதுக்கென்ன, வாங்கிக்கிங்களேன்!' என்றாள் அவள்.



பிரணதார்த்தி தன் தமக்கையுடனும் மனைவியுடனும் பேசிக் கொண்டிருந்தார். 'எல்லாம் வேஷம்தான் போடறான்!' என்றாள் தமக்கை.

'ஹே! நீ அப்படியா சொல்றே, அக்கா? ஹே! நடேசய்யருக்குக் கேஸ் ஜெயிச்சுடுத்தாமே!' என்றார் பிரணதார்த்தி.

'இந்தக் கடன்காரன் - உன் மாப்பிள்ளைதான் - அவன் எங்கே வந்தான்?' என்று கேட்டாள் தமக்கை.

'தெரியவில்லை! ஏதானும் காரணம் இல்லாமலிருக்குமா, ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'நீ பாட்டுக்கு வாய் கொடுத்துடாதே! ஜாக்கிரதையாயிரு!' என்று எச்சரித்து வைத்தாள் தமக்கை.

திடீரென்று ஞாபகம் வந்தவராக, 'அந்தப் பயல் நம்ம மோட்டார் சைக்கிளைக் கொண்டு போய்விட்டான் போலிருக்கிறதே!' என்றார் டி.வி.எஸ்.அய்யர்.

'மாமா! ஹிட்லர் மோட்டார் சைக்கிளிலே நான் ஆணி அடிச்சிருக்கேன், மாமா! அன்னிக்கு அவன் என்னைக் குட்டினானோன்னோ! அதுக்காக அடிச்சேன்' என்றான் பாலு.

'என்னது? என்னடா பயலே சொல்றே?' என்று கேட்டார் சுப்ரமணிய அய்யர்.

'சைலன்ஸ் ப்ளீஸ்! வெளியே போகும் வழி! உயர்ந்த ரகப் பட்டு ஜவுளிகள் எம்மிடம் கிடைக்கும்! ஆல் கார்ஸ் ஸ்டாப் ஹியர்!' என்றான் பாலு மூச்சு விடாமல்.

'என்னடா பேத்தல் இது?'

'ஹிட்லர் மோட்டார் சைக்கிளை பங்சர் பண்ணிட்டேன், மாமா! அதை அவன் ஓட்டிக்கொண்டு போக முடியாது!' என்றான் பாலு.

கோமதியின் தகப்பனார் நடேசய்யர் ஹாலுக்கு வந்தார். 'திடீ ரென்று சொன்னதனால் ஏற்பட்ட அதிர்ச்சிதான்; வேறொன்று மில்லை. குழந்தை உட்கார்ந்து கொண்டு விட்டாள்' என்றார் பொதுவாக.

சுப்ரமணிய அய்யரைப் பார்த்ததும், அவர் நெருங்கிக் கையைக் குலுக்கினார். மனத்தில் சிறிதும் கல்மிஷமில்லாமல் நடேசய்யர் செய்த அந்தக் காரியம் ஜமீன்தாரைக் கொள்ளை கொண்டு விட்டது.

அந்தச் சமயம் பார்த்து, வெற்றி பெற்றுவிட்ட வீரன் போல் திரிகாலாக்னி ஒரு கான்ஸ்டபிளுடன் திரும்பி விட்டார். 'ஹூம்! எங்கே அந்தப் பயல்? என் மோட்டாரில் மோதிவிட்டுத் தப்பித்துக்கொள்வதா அவன்! ஹூம்!' என்று உறுமிக்கொண்டு வந்தார். அவர் பின்னால் வந்த கான்ஸ்டபிள் குமரவேல், சொல்லிவைத்தாற்போல் திடுதிடுவென்று சென்று அங்கே நின்ற பிரணதார்த்தியின் கையைப் பிடித்து, 'மறுபடியும் உன் வேலைதானா? நட ஸ்டேஷனுக்கு!' என்றான்.

'ஹே! விடு கையை! ஹே!' என்றார் பிரணதார்த்தி, குமரவேலை அடையாளம் புரிந்துகொண்டு.

'என்ன ஐயா நீ! நட ஸ்டேஷனுக்கு! ஒண்ணு ஆச்சே, அப்புற மாவது புத்தி வந்துதா உனக்கு? இவர் கார் மேலே மோதிப்பிட்டு வந்துட்டியாமே?' என்றான்.

'இவர் இல்லை அது!' என்றார் முதலியார்.

'இந்த ஆசாமியேதானுங்க! நாலுநாள் முந்திகூட உருளைக் கிழங்கு வண்டிமேலே மோதி, அதைக் கட்டி இழுத்துக்கிட்டே போய்...' என்று சொல்லி வந்தவன், டி.வி.எஸ்.அய்யர் முகத்தைத் தற்செயலாகக் கண்டு விட்டு, நிறுத்தி 'எஜமான்!' என்றான்.

'என்ன சமாசாரம்?' என்று கேட்டார் அவர் அதிகாரமாக.

குமரவேல் தன் கதையைச் சொல்லி, 'இவரு அடிக்கவே வந்துட்டாருங்க, எஜமான்!' என்றான்.

பொன்னாயி குறுக்கே, 'என்னங்க, எள்ளுக்கார ஐயா! நீங்கதானா அந்த வேலை செஞ்சது?' என்றாள்.

பிரணதார்த்திக்கு 'ஹே' என்ற பேச்சுக்கூடக் கிளம்பவில்லை.

திருகாலாக்னியைச் சமாதானம் செய்து, முப்பது ரூபாய் அனுப்புவதாகச் சொல்லி அனுப்பும் வேலையை நாகநாத



முதலியார் ஏற்றுக்கொள்ள, குமரவேலை டி.வி.எஸ்.அய்யர் அனுப்பினார்.

ஒரு வழியாக அமர்க்களங்கள் ஓடவே, சுப்ரமணிய அய்யர், 'சரி! நான் இனிமேல் கிளம்பலாமே!' என்றார். முதல் நாள் இரவு பூராவும் ரயில் பிரயாணம் செய்த அலுப்பு, அன்று முற்றிலும் மோட்டாரில் வந்த அசதி, எல்லாமாகக் களைப்பு மேலிட்டிருந்தது அவருக்கு. தவிர, டி.வி.எஸ்.அய்யரின் அந்தரங்க சுத்தமான வரவேற்பும் அவரைக் கவர்ந்துவிட்டது. 'எங்கேடா அவன், ரங்கராஜன்! கூப்பிடு அவனை!' என்றார். பாலு ஓடினான்.

ரங்கராஜன் கோமதியுடன் தனிமையில் பேசிக்கொண்டிருந்தான். 'நீங்கள்தான் புருச்சை எடுத்துவிட்டீர்களென்று இதுவரை எண்ணிக்கொண்டிருந்தேன்' என்றாள் அவள்.

'அடப் பாவமே! அந்தத் திருடன் கூடையில் ஒளித்து வைத்ததைத் தான் நான் திரும்ப அவன் கையில் அகப்படாமல்...'

'புரிந்தது, புரிந்தது! நீங்கள் ஏன் இங்கே முதன் முதலில் டிரைவராக வந்தீர்கள்? பிரணதார்த்திக்கு ஒத்தாசை செய்ய மட்டும்தானா? அதைச் சொல்லுங்கள்.'

'இதென்ன கேள்வி, கோமதி? உனக்கே இதற்குப் பதில் தெரியாதா? அதுபோகட்டும். நீ ஏன் என்னைப் பிரணதார்த்தியிடம் முதலிலேயே காட்டிக் கொடுக்கவில்லை?'

'இதென்ன கேள்வி?'

'சொன்னதைச் சொல்லுமாம், கிளிப்பிள்ளை; நீ கிளிப்பிள்ளை தானே கோமதி?'

சிறிது மௌனம்.

'சினிமாவிலே, கடைசியிலே ராஜகுமாரி ராஜகுமாரனை முத்தமிட்டாளே, அப்போ உன்னைக்காட்டிலும் சத்தம் போட்டு...' என்றான் பாலு பிரவேசித்து.

'சீ! போக்கிரிப் பயலே! இங்கே எங்கேடா வந்தே நீ?'

'உன்னைக் கூப்பிடறா கையோடே! உத்தரவன்னியில் யாரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாது. ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமான இடம் உண்டு.'

ரங்கராஜன் வந்தபோது, பொன்னாயி கிளம்பிக் கொண்டிருந்தாள். 'எனக்குப் பதினொன்றரை மணிக்கு ஷூட்டிங் இருக்குது. இன்னம் அரைமணிகூட இல்லை. எப்படித்தான் போகப் போறேனோ!' என்றாள்.

தானும் கிளம்ப ஆயத்தம் செய்பவனாகக் காணப்பட்ட ரங்கராஜனைப் பிரணதார்த்தி, 'நீ மனசிலே வைச்சுக் கொள்ளப் படாது!' என்றார்.

'எதை?'

'அன்றைக்கு ஒரணா கொடுத்தேனே உனக்கு... அதைத்தான்.'

'நன்றாகச் சொன்னீர்களே! அந்த ஒரணாவை நான் செல வழிக்கவே மாட்டேனே! அது ரட்சை மாதிரியல்லவா எனக்கு?' என்றான் அவன்.

சீனு அவன் காதில் மட்டும் படும்படி, 'பிரணதார்த்தி காசு யாரிடம் போனாலும் செலவாகாது, தங்கிவிடும்' என்று கூறி, தனியே இழுத்து ஏதோ சொல்லிவிட்டு, 'உன் காரியம் ஆகிவிட்டதென்று கிளம்பிவிடாதே! ஆமாம்!' என்றான்.

ரங்கராஜன் சுறுசுறுப்புடன் பொன்னாயியிடம் போய், 'எனக்காக நீங்கள் ஒரு நிமிஷம் இங்கே தங்க வேண்டும். ஒரு முக்கியக் காரியம் இருக்கிறது' என்று அவளை நிறுத்திவிட்டு வந்தான். பிறகு பிரணதார்த்தியை, 'ஸார்! பக்கத்து அறைக்குள் ஓர் அரை நிமிஷம் வருகிறீர்களா?' என்றான்.

அவனுடன் பிரணதார்த்தி வரவே, அவர்கள் பின் சீனுவும் நுழைந்தான். ஏதோ தன்னைக் கசக்கிப் பிழியத்தான் இவர்கள் வருகிறார்கள் என்று ஊகித்த பிரணதார்த்தி ஒருவர் மாற்றி ஒருவராக மிரள மிரள விழிக்கலானார்.



## அத்தியாயம் - 18

'...ஈசுவர கிருபையை முன்னிட்டுப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடக்கிறபடியால் முன்னதாகவே வந்திருந்து நடத்தி வைத்து, தம்பதிகளை ஆசீர்வதிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.'

**- கல்யாணப் பத்திரிகை**

பலமான ஆகாரம் செய்த பிறகு தேகத்துக்கு ஆயாசம் தரக்கூடியதான பயிற்சிகளில் ஈடுபடக் கூடாதென்று சில மேதாவிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பிரணதார்த்திஹர அய்யர் வீட்டு டீ பார்ட்டியில் வயிறு புடைக்கத் தின்றிருந்த மணிக்கு, மேற்கூறிய நிபந்தனையை அனுஷ்டிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது அவனைப் பற்றிய சகல விஷயங்களும் வெளியாகும் காலம் வந்து விட்டது. தன்னுடைய தோல்வியை அவன் ஓர் உண்மை வீரனைப்போல் ஏற்றுக்கொண்டு விட்டான். எந்த நிமிஷத்தில் அந்தத் திரிகாலாக்னி போலீஸ்காரனுடன் திரும்புவாரோ என்ற பயமும் போய், அவன் தப்புவதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. கோமதி மூர்ச்சை அடைந்துவிட்டபோது, ரங்கராஜன் கவனம் இல்லாமல் அவனை விடுவித்துவிட்டுச் சென்று விடவே, அவன் வேகமாகக் கீழே வந்தான்.





தப்பித்துக்கொண்டு செல்ல மோட்டார் சைக்கிள் இருந்தது அவனுக்கு ஒரு பலமாக இருந்தது. மணிக்குப் பக்கிரியின்மீது அசாத்தியக் கோபமும் வந்தது. அவன் மட்டும் பிசகு செய்யாமல் இருந்திருந்தால், ஒன்றுமே வெளிப்பட்டிராது. தவிர, 'குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாம்' என்பது போல், குத்து வாங்கிக் கொண்டு அவனையும் அல்லவா காட்டிக் கொடுத்துவிட்டான்? பக்கிரி தன் அறைக்குப் போய்ச் சேருவதற்கு முன்னதாகவேதான் அங்கே போய் அவனை வெளுத்து வாங்கவேண்டுமென்று துடித்தான். ஏறி உட்கார்ந்து மோட்டார் சைக்கிளைக் கிளப்பி, ஸ்டாண்டையும் தள்ளினான். பின் சக்கரமும் முன் சக்கரமும் 'ஜப்'பென்று கீழே உட்கார்ந்தன. 'ஏன் இப்படி?' என்று திடுக்கிட்டுப் போய்ப் பார்க்கும்போது, இரண்டு சக்கரங்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன. சற்றுத் தூரத்தில், டி.வி.எஸ்.அய்யரின் காரில் உட்கார்ந்திருந்த டிரைவர், 'அதிலே ஏறாதீங்க, ஸார்! அந்தச் சின்னப்பிள்ளை என்னவோ விளையாடி பங்சர் பண்ணிப்பிட்டுடுத்து! நீங்க அதை முன்னே ஒரு தடவை குட்டினீங்களாமில்லை?' என்றான்.

மணி உதட்டைக் கடித்துக்கொண்டான். 'இதேதடா கேட்டை மூட்டை செய்வாய்க்கிழமையாக எல்லாம் வந்து சேர்ந்தது!' என்று திகைத்த சமயம், தெருவின் கோடியில் திரிகாலாக்னி ஒரு கான்ஸ்டபிளுடன் திரும்புவது தென்பட்டது. இனியும் தாமதிப்பதில் உபயோகமில்லையென்று மான்போல் துள்ளி எதிர்த் திசையில் ஓடினான் மணி. மெயின் ரோடை அடைந்த சமயம் ஒரு பஸ் எதிர்ப்படவே அதில் ஏறிக்கொண்ட பின்னரே, 'அப்பாடா!' என்று பெருமூச்சு வந்தது. ஆனால், அதேசமயம் அவனுடைய அறையில் நடந்துகொண்டிருந்த ஒரு நாடகத்தை அவன் அறிந்திருந்தால் இந்த அற்ப சந்தோஷம்கூடப் பட்டிருக்க நியாயம் இல்லை!

போலீஸ் இலாகாவைப்பற்றி எத்தனையோ பேர் கேலி செய்திருக்கிறார்கள். கேலிகளை அஞ்சாமல் எதிர்த்து, குற்றவாளிகளை நிதானமாகப் பிடிப்பதில் அது நிகரற்று வந்திருக்கிறது. யோசித்துப் பார்க்கும்போது, துஷ்டர்களை மேலும் மேலும் துஷ்டக் காரியங்களைச் செய்யவிட்டு, 'இவர்கள் எவ்வளவு தூரம்தான் போகிறார்கள் பார்க்கலாம்' என்று பார்த்து, கடைசியில் தண்டிக்கும் கடவுளின் குணத்தைத்தான் அது பின்பற்றுகிறதோ என்றுகூடத் தோன்றுகிறது. மணி விஷயத்தில் போலீஸ்காரர்கள் இதே முறையைக் கையாண்டார்களோ என்னவோ, டில்லியிலும் பம்பாயிலும் கல்கத்தாவிலும் கராச்சியிலும் இன்னும் பல இடங்களிலும்

மணி செய்த மொத்தம் ஒன்பது குற்றங்களுக்காக அவனை ஒருமிக்க சென்னைப்பட்டணத்தில் பிடிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். ஒரு ஸி.ஐ.டி. உத்தியோகஸ்தர் மணியை மூன்று தினங்களாக மோட்டார் ஸைக்கிளில் அவன் போகும்போது கண்காணித்து வந்தார். அவன் ஜாகைகளில் ஒன்று புரசைவாக்கத்தில் இருந் ததையும் கண்டுவிட்டார். அவனும் அவனுடைய கூட்டாளியும் இல்லாத சமயத்தில் அறையைச் சோதனை போடுவதென்று திட்டம் போட்டிருந்தார். பிரணதார்த்திஹர அய்யர் வீட்டில் டீ பார்ட்டி தடபுடலாக நடந்துகொண்டிருந்த சமயம், ஸி.ஐ.டி. பால சுப்ரமணியம் இரு போலீஸ்காரர்களுடன் மணியின் அறையில் மும்முரமாக அவன் பெட்டிகளைக் குடைந்து கொண்டிருந்தார்.

அவருக்கு வேண்டிய பல ஆதாரங்கள் கிடைத்துவிட்டன. சோதனை முடிந்ததும் எல்லாருமாக விளக்கை அணைத்து விட்டுக் காத்திருந்தார்கள். சுமார் ஒன்பதரை மணிக்குப் பக்கிரி ஒரே ஓட்டமாக ஓடி வந்தவன், நேரே ஒரு போலீஸ்காரருடைய விரிந்த கைகளுக்குள் தான் புகுந்து கொண்டான். முதலில் ஒன்றுமே சொல்ல மறுத்த அவன், முதுகில் ஒரு குத்து வாங்கிக் கொண்டதும், உண்மையைக் கக்கினான்.

ஸி.ஐ.டி. பாலசுப்ரமணியம் மிக அனுபவஸ்தராகையால், பக்கிரி நிஜம் சொன்னபோதுகூட அவனை நம்பவில்லை. இரண்டு கான்ஸ்டபிள்கள் கையில் பக்கிரியை ஒப்புவித்துவிட்டு, 'நீங்கள் இப்படியே இவனைக் கவனித்துக் கொண்டிருங்கள். நான் வெளியில் இருக்கிறேன். ஒருகால் திடீரென்று அவன் வந்தால் விஸில் அடியுங்கள்' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

சுமார் அரை மணிக்குப் பிறகு வியர்க்க விறுவிறுக்க வந்த மணி, தன் ஜாகைக்கு வெளியே வந்ததும் தயங்கினான். மேலே வெளிச்சம் தெரிந்ததைக் கண்டதுமே அவனுக்குச் சந்தேகம் தட்டிவிட்டது. குகைக்குள் செல்லுமுன் மோப்பம் பிடிக்கும் துஷ்ட மிருகம்போல், எதிர்ச்சருகில் நின்று மேலே எழும்பிப் பார்த்தான். ஒரு போலீஸ்காரருடைய தொப்பி தென்பட்டது. மணியின் வாழ்க்கையில் இம்மாதிரி எத்தனையோ தடவைகள் நடந்தது சகஜமாகையால், இதில் ஒன்றும் அவனுக்கு ஆச்சரிய மில்லை. இன்றிரவு ஜாகை வேறிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று மின்னல் வேகத்தில் முடிவு செய்துகொண்டு அங்கிருந்து திரும்பினான்.



அப்போது அவன் தோள்மீது கனத்த கை விழுந்தது. 'எங்கே போகலாம் படுக்கைக்கு என்று யோசிக்கிறீர்களோ! போலீஸ் லாக்கப்பில் பெஞ்சி போட்டிருக்கிறார்கள். மூட்டைப்பூச்சி கிடையாது. சௌகரியமாகத் தூங்கலாம்!' என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தால் போலீஸ் அதிகாரி நின்றார்.

'இதென்ன ஸார்! என்னை யார் என்று நினைத்து...' என்று ஆரம்பித்தான் மணி, தைரியத்தை விடாமல்.

'வேறு யார் என்று நினைத்தாலும் இப்போ சிரமப்படுத்த மாட்டேனே! உங்களை நீங்கள் என்று நினைத்துத்தான் வந்திருக் கிறேன்!'

'வாரண்ட் இருக்கிறதா, ஸார்?'

'ஒரு வாரண்டில்லை; ஒன்பது வாரண்டுகள் இருக்கின்றன! போகும்போது ஒவ்வொன்றாக உங்களுக்குக் காண்பிக்கிறேன். நீங்கள் வீணாக அலட்டிக்கொள்ளப்படாது!'

அரை மணிக்குப் பிறகு போலீஸ் வண்டி ஒன்று வந்து மணியையும் பக்கிரியையும் இட்டுச் சென்றது.

மணிக்கு மரியாதை நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில், தியாகராய நகர் வெங்கட நாராயணா ரோட்டில் என் வியாபாரி பிரணதார்த்திஹர அய்யர் மிக மிகத் தர்மசங்கடமான நிலையில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடிக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தம்மைத் தனிமையில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்ற ரங்கராஜனையும் சீனுவையும் பார்த்து, மிரள மிரள விழித்தார். 'ஏன், என்ன சமாசாரம்? ஹே!' என்றார் கடைசியில்.

'ஒன்றுமில்லை... இந்தச் சீனு இருக்கிறான் அல்லவா, இவனும் நானும் அந்யோன்ய நண்பர்கள், ஐந்து வயதிலிருந்து. இவ னுடைய கோலிக் குண்டை எந்தப் போக்கிரிப் பயலாவது பிடுங்கிக் கொண்டு போனால், நான்தான் துரத்திக்கொண்டு போய்ப் பிடுங்கித் தருவேன். நான் எப்பவுமே முரட்டுப் பேர்வழி என்று பேர் வாங்கினவன்' என்று தொடங்கினான் ரங்கராஜன்.

'ஹே!' என்றார் பிரணதார்த்தி.

'இவனுக்கும் என்மேலே உசிரு. இவன் அம்மா அடித்தால்கூட என்னிடம்தான் வந்து சொல்லுவான். இவனுக்கு உங்கள் பெண்ணைக் கொடுத்திருந்தது என்று எனக்கு இரண்டு நாள் முந்திதான் தெரியும்...'

'சரி... நீ எதற்காக? ஹே!'

'இருங்கள்... இந்த அசடன் பெண்டாட்டிப் பித்துப் பிடித்து அலைகிறான். 'அவள்தான் போய்விட்டாளேடா' என்றால், 'ஞாபகத்துக்கு ஏதானும் வேண்டும்' என்கிறான். 'ஒரு போட்டோவாவது இருந்தால் வைத்துக்கொள்வேன்' என்கிறான். மறுத்துச் சொன்னால், கண்ணால் ஜலம் விடுகிறான்.' இப்படிச் சொன்ன ரங்கராஜன் திரும்பிப் பார்த்தபோது, சீனு உண்மையிலேயே கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தான். 'நீங்களே பாருங்கள்! இவ்வளவு கோழை மனசாக இருக்கிறவனிடம் நீங்கள் கொஞ்சம் இரக்கம் காட்டி...' என்று ரங்கராஜன் தொடர்ந்து சொல்லிவரும்போது, பிரணதார்த்தி எழுந்துவிட்டார். 'ஹே! என்னடான்னு பார்த்தேன். பழங்கதைதானே? ஹே! அதுதான் அந்தப் படத்தைத் தர முடியாதுன்னு சொல்லிவிட்டேனே, அப்போதே! ஹே!' என்றார்.

'நீங்கள் உட்காருங்கள், ஸார்! எனக்காக ஒரு வார்த்தை கேளுங்கள் ஸார்! அது சீனு எடுத்த படம்தானாம், ஸார்! அதோடு அதை அவனுக்கே அவனுக்கென்று கூடக் கேட்கவில்லை, ஸார்! அதிலிருந்து ஒரு காப்பி எடுத்துக்கொண்டு...'

'ஹே! பழங்கதை, பழங்கதை! நான்தான் அப்பவே இதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேனே!'

'என்ன ஸார் சொல்லிவிட்டீர்கள்? எனக்காகக் கேளுங்கள்; நான் உங்களுக்காக ஒரு படத்தைத் திருடக்கூடப் போகவில்லையா?' என்றான் ரங்கராஜன்.

இது பிரணதார்த்தியைச் சிறிது திகைக்க வைத்தது. ஆனால், இனிமேல் அதை யாரிடம் சொன்னால் என்ன உபயோகம் என்று அவர் எண்ணிவிட்டார். அன்று அவர் வீட்டில் நடந்த கலாட்டாவுக்கெல்லாம் பிறகு நாகநாத முதலியார்கூடத் தம்மிடம் முன் அவ்வளவு மதிப்பு வைத்திருப்பார் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. ஆகவே, 'ஹே! என்ன சொல்றே? படம் திருடச் சொன்னேனா? ஹே! நானா?



யாரிடம் வேண்டுமானாலும் போய்ச் சொல்லிக்கோ, அக்கறையில்லை!' என்றார் தைரியமாக.

சீனுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ஏதோ திட்ட ஆரம்பித்தவனை ரங்கராஜன் அடக்கி, பிரணதார்த்தியைப் பார்த்து, 'அப்போ நான் மேலே காரியத்தை நடத்தலாமா?' என்று கேட்டான்.

'ஹே, என்னமோ பூச்சாண்டி காட்டறியே!' என்றார் அவர்.

ரங்கராஜன் வெளியே எட்டிப் பார்த்தான். எல்லாருமே கீழே இறங்கிப் போயிருந்தார்கள். பொன்னாயி மட்டும் ஹாலில் நின்றுகொண்டிருந்தாள். அவசரமாக அவளிடம் வந்த ரங்கராஜன், 'உங்களைத்தான் சிரமப்படுத்த வேண்டியிருக்கிறது. நான் அன்று உங்கள் நாயைக் கொண்டு கொடுத்தபோது ஓர் உபகாரம் செய்வதாகச் சொன்னீர்களே!' என்றான்.

'சீக்கிரம் சொல்லுங்க... ஸ்டூடியோவுக்கு டைம் ஆயிப் போச்சுங்களே!'

'நான் கொண்டு விடுகிறேன் உங்களை அங்கே! இந்தச் சமாசாரத்தை முதலில் தீர்த்து விடுங்கள்' என்று சுருக்கமாகச் சீனுவின் விஷயத்தைச் சொன்னான். பொன்னாயி பிரணதார்த்தி இருந்த அறைக்குள் நேரே வந்துவிட்டாள்.

'என்னங்க, இவங்க ஒங்கமேலே ஒரு கம்ப்ளேண்ட் பண்றாங்களே, சாமி!' என்றாள் தயக்கமின்றி.

'பொன்னாயி, உனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. ஹே!' என்று சீறினார் பிரணதார்த்தி.

'நீங்க அப்படித்தான் முன்னை ஒரு தரம் என்கிட்டேயும் சொல்லிட்டு வந்தீங்க. அப்புறம் இவரை அனுப்பிப் படத்தைத் திருடி வர விட்டீங்களே, அதுமட்டும் நியாயமா?' என்றாள்.

பிரணதார்த்தி அவளை வெட்டுகிறாற்போல் பார்த்து, 'போக்கிரிப் பசங்கள்! உனக்கு முன்னைப் பின்னே தெரியாது இவங்க சமாசாரம், ஹே! நீ போ!' என்றார்.

'சும்மா இருங்க, சாமி! மனுசாளைப் பார்த்தாலே நல்லவங்க கெட்டவங்கன்னு தெரியாமே பூடுமா? இவரு கேக்கிறதைக் கொடுங்க, சாமி! இல்லாட்டி நான் பொல்லாதவளாயிருப்பேன்.

நயமாச் சொல்லுகிறேன்' என்று சொல்லி, பிரணதார்த்தியின் நாற்காலியின் பின்னால் பிடித்துக்கொண்டு நின்றாள்.

'நீ சொல்லிக் கொள்! முதலியாருடைய தயவு எனக்கு வேண்டாம்!' என்றார் அவர்.

'முதலியாரு கிடக்கிறாருங்கோ! உங்க சம்சாரத்துக்கே கொணர்ந்து காண்பிச்சுடுவேன், உங்க படத்தை... என்னாங்க, சரிதானே?'

ரங்கராஜன் சிரிப்பை அடக்கிக்கொண்டான். 'சபாஷ் பொன்னாயி! நீ நிஜத் தங்கம்தான், போ!' என்று மனத்துக்குள் சொல்லி ஆனந்தப்பட்டுக் கொண்டான்.

பிரணதார்த்தி அசைந்து கொடுத்தார். பாக்கியத்திடம் தகராறு ஏற்படுத்தி விடுவாளோ என்று பயந்தவர், எழுந்து சமையற் கட்டுப் பக்கம் செல்லும் மாடிப்படிக்குச் சென்றார். அங்கே நின்று பாக்கியத்துடன் பேசிக்கொண்டிருந்த தமக்கையிடம் வந்தார். அப்போது தமக்கை கோமதியின் மீது தன் வயிற்றெரிச் சலைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

'ஹே! அக்கா! நம்ம மங்களத்தின் படத்தைக் கேக்கிறான் அந்தப் பயல் சீனு! ஒரு என்லார்ஜ்மெண்ட் எடுத்துண்டு தந்துடறேன் என்கிறான். ஹே!' என்று சொல்லிக் கொண்டே வந்தார் பிரணதார்த்தி.

'எனக்கு அப்பவே தெரியுமே, அந்தக் கடன்காரன் ஏதோ சாக்கு வைச்சுண்டுதான் வந்திருக்கான்னு சொல்லிட்டேனே! இல்லைன்னு சொல்லிப் போகச் சொல்லு!' என்றாள் தமக்கை.

'எங்கேயோ காணோம், அப்புறம் தேடிப் பார்க்கிறேன்னு சொல்லி அனுப்புங்கோ!' என்றாள் பாக்கியம்.

'அதெல்லாம் சொல்லாமே வருவேனா, ஹே! அந்தப் பாரி ஜாதத்தையும் வைத்துக்கொண்டு மிரட்டுகிறான். அவளானா மானங்கெட்டவள், கண்டதைச் சொல்கிறாள். ஹே!'

'என்ன வேணுமானாலும் அவள் சொல்லிக்கட்டும்டா! அவள் வார்த்தையை யார் நம்பப்போறா, இங்கே? நீ போடா பிரணதார்த்தி, இல்லைன்னு சொல்லிடு!' என்றாள் தமக்கை.



பிரணதார்த்தி திரும்பினார். 'படம் இப்போ இல்லை; அப்புறம் பார்த்துக்கலாம். நான் கட்டாயமாகத் தர்றேன், இன்னொரு சமயம், ஹே!' என்றார்.

'அட கடங்கார மனுஷா!' என்று வாயோடு சொல்லிக்கொண்டாள் பொன்னாயி.

ரங்கராஜன் தீவிரமாக யோசித்தான். 'இருங்கள்! வந்துட்டேன்!' என்று சொல்லிவிட்டுக் கீழே ஓடினான்.

கீழே சுப்ரமணிய அய்யரும் நடேச அய்யரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நடேசய்யர் மனத்தில் துளிக்கூடக் களங்கம் கிடையாது. மேலும் ரங்கராஜன்மீது தம் பெண்ணுக்கு ஆசை விழுந்துவிட்டதென்று அறிந்தபின் -அதுவும் ரங்கராஜனைப் பார்த்த பின்னர்-அவர் சுப்ரமணிய அய்யரை வெகு மரியாதையுடன் நடத்தினார். கோமதி அபூர்வமான அழகிதான். அதுவும் முல்லை வாசல் ஜமீன்தாரின் ஏகபுதல்வி என்றதும் சுப்ரமணிய அய்யர் தம் புத்திரன் புத்திசாலிதான் என்று சிலாகித்துக் கொண்டார். கோமதிக்கும் ரங்கராஜனுக்கும் கல்யாணம் நிச்சயமாகி விட்டதுபோலவே அவர்கள் நடந்து கொண்டார்கள்.

காவேரியும் டி.வி.எஸ்.அய்யரும் பழங்கதைகளைப் பேசிக் கொண்டு நின்றார்கள். புயல் காற்று வேகத்தில் வந்த ரங்கராஜன், டி.வி.எஸ்.அய்யரை, 'மாமா! கொஞ்சம் உயர வாருங்கள்!' என்று கூப்பிட்டான்.

'ஏன்! என்ன விசேஷம்?'

'முன் ஒரு தரம் சீனு உங்கள் மணிபாக்ஸைக் காப்பாற்றிக் கொடுத்தானே, அதற்குப் பதில் உபகாரம் இப்போது செய்யுங்கள்!' என்றான்.

டி.வி.எஸ்.அய்யர் பின்தொடர, மீண்டும் அவன் பிரணதார்த்தி அறைக்குள் நுழைந்தான். பொன்னாயி உதட்டைப் பிதுக்கி, 'ஆனமட்டும் சொல்லிவிட்டேன், அசைய மாட்டேனென்கிறாரே!' என்றாள்.

'என்ன ஸார், சமாசாரம்?' என்று கேட்டுக் கொண்டே வந்த டி.வி.எஸ்.அய்யரிடம் பிரணதார்த்தி, 'ஒன்றுமில்லை! ஏதோ படம் கேட்கிறான்கள்! 'ஆகட்டும் அப்புறம் தருகிறேன்' என்றால் 'இப்போ கொடு' என்று பிடிவாதம் செய்கிறான்கள்' என்றார்.

'என்ன ரங்கராஜா! அப்புறம்தான் வாங்கிக்கொள்ளேன்!' என்றார் அய்யர் நாசூக்காக.

'வாங்கிக்கொள்ளலாம், மாமா! ஆனால், 'அப்புறம்' என்றால் எப்போ என்று தெரியவில்லையே! ஒரு நாளா, ஒரு மாதமா, ஒரு யுகமா?'

'நீ சும்மா இரு! சீனு ஸார்! நீங்கள் படத்தை அப்புறம் திருப்பிக் கொடுத்து விடுங்களேன், ஓர் என்லார்ஜ்மெண்ட் எடுத்துக் கொண்டு!' என்றார் அய்யர் தளுக்காக.

'படமே என்னதுதான்! இருந்தாலும் கொடுத்து விடுகிறேன் என்றுதான் சொல்லுகிறேனே!' என்றான் சீனு.

'உங்களுக்கென்ன ஸார், அதைத்தான் கொடுங்களேன்...பாவம், பரிதாபமான விஷயம்! உங்களுக்கும் மனசுக்குச் சிரமம்தான்!'

'ஹே! நான் நாளைக்குத் தர்றேன் என்கிறேனே! அதற்குள்ளாக, ஹே! என்மேல் நம்பிக்கையில்லாமல்...'

'படம் கையில் வருகிறவரைக்கும் நம்பிக்கை இல்லைதான்; இவர் வார்த்தையை...' என்றான் சீனு.

'தாமுடியாதுடா! போடா! ஹே! கேலியா பண்றே என்னை! ஹே!' என்று சீறினார் என் வியாபாரி. இதைச் சாக்காக வைத்துக் கொண்டு மறுத்து விடலாம் என்பது அவர் உத்தேசம். ஆனால், டி.வி.எஸ்.அய்யர் அவரைச் சாந்தப்படுத்த முயன்றபோது, 'இவன் திருட்டுப் பயல், ஸார்.' என்றார் பிரணதார்த்தி.

'இவர் வீட்டில் எப்போ கன்னம் வைத்தேன். கேளுங்கள்!' என்று கேட்டான் சீனு ரோஷத்துடன்.

'உஷ்... நீங்கள் பேச வேண்டாம்! இவர் அயோக்கியர் என்பதற்காக நீங்கள் படத்தை வைத்துக்கொள்வது நியாயம் இல்லையே! நான் சொல்வதை இப்போது நீங்கள் கேட்கவில்லை என்பதற்காக நாளைக்கு உங்கள் பேரில் வருகிற கேஸில் உங்களுக்கு ஆறு மாதம் தீட்டினால் நியாயமாயிருக்குமா?' என்றார் அய்யர். இது 'சொரேர்' என்று தைத்தது பிரணதார்த்திக்கு. 'இவரிடம் மரியாதையாக நடந்துகொள்ளாவிட்டால் அனர்த்தம்' என்ற பயமும் பிறந்துவிட்டது. ஆகவே, சட்டென்று படிமானமாக, 'கொடுப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை, ஸார்!



உயர இருக்கிறது; ஏணி வைத்துத்தான் எடுக்க வேண்டும்... நாளைக்கு...' என்றார்.

'நாளைக்கு இங்கே யார் வரப்போகிறார்கள், ஸார்? இன்றைக்கே எடுங்கள். ஏணிகூடத் தேவையில்லை!' என்று ரங்கராஜன் சொல்லி, படம் மாட்டியிருந்த அடுத்த அறைக்குச் சீனுவுடன் சென்றான்.

'நான் தருகிறேன் என்றால்... கட்டாயம்... உங்கள் பியூனை அனுப்புங்கள்... ஹே! கீழே விழுந்துவிடப் போகிறது! நான் ஏணி கொண்டு வருகிறேன்! அடேடே! வானரங்கள் மாதிரி... ஹே ஹே ஹே!' பிரணதார்த்தி இப்படித் துடித்துக் கூறும்போதே, ரங்கராஜன் ஒரு நாற்காலியைச் சுவரோரமாக இழுத்துப்போட்டு அதன் மேல் குத்திட்டு உட்கார்ந்துகொண்டான். அவன் தோள் மீது சீனு நின்றுகொள்ளவே மெல்ல ரங்கராஜன் எழுந்தான். அப்படியே சுவரின் மேலே மாட்டியிருந்த படத்தைக் கழற்றிக் கொண்டு விட்டான் சீனு.

திரும்ப அவர்கள் இறங்கியதும் ரங்கராஜன், 'இது எங்கள் ஸ்கூல் விளையாட்டு, ஸார்! 'பள்ளிக்கூடத்தில் படித்த பாடம் எதற்கு உபயோகம்?' என்பார்களே, பார்த்துக் கொள்ளுங்கள் இப்போது!' என்றான்.

'உங்கள் மனசோடு படத்தைக் கொடுங்கள், திருப்தியாகவே!' என்றார் அய்யர். பிரணதார்த்தியின் முகம் இறங்கி விட்டது. பரிதாபமாகப் பொன்னாயியைப் பார்த்தார்.

'பொன்னாயி! கடைசியில் உன்னிடம் இருக்கிற படம்...' என்றார் தாழ்ந்த குரலில். விஷயத்தை ஊகித்த டி.வி.எஸ்.அய்யர் அதைக் கவனிக்காதவர்போல் ஒதுங்கி நின்றார்.

'அதைப்பத்திக் கவலைப்படாதீங்க! அதை அன்னிக்கே நான் கொளுத்திட்டேன்!' என்றாள் அவள்.

'நிஜம்மாவா, ஹே!'

'நிசம்தானுங்க! அதுக்குப் பணம் கொடுத்து வாங்குகிறதாகச் சொல்லி அனுப்பிச்சபோது, 'அடப் பாவமே'னு நான் வவுறு எரிஞ்சேனுங்களே!'

பிரணதார்த்தி அதை நம்பாமல், 'அது போகட்டும். அதை யாரிடமும் காண்பிக்க மாட்டாயே?' என்றார்.

கலகலவென்று சிரித்தாள் பொன்னாயி. 'சாமி! நான் சினிமாவிலே பேர் எடுக்க வேண்டாமுங்களா? உங்களோடே இருக்கிற அந்தப் படத்தை யார்னாச்சியும் கண்டுட்டா, அப்புறம் என் பேரு, புகழ் எல்லாம் நிக்குங்களா? என் பொளைப்பு நிமிசம் நிலைக்குமா? அதுக்காவத்தான் நானே அதைக் கொளுத்தினேன்!' என்றாள்.

'என்ன பாரிஜாதம்! நீ இன்னிக்குக் கிளம்பப் போறியா? இல்லை, நாளைக்குத்தானா?' என்று கேட்டுக்கொண்டு முதலியார் வந்துவிட்டார். பின்னால் வேதராமய்யரும் வந்தார்.

'இங்கே ஒரு சர்க்கஸ் வேலை பண்ணினாங்க! இதோ கிளம்பி விட்டேன்! நான் வறேனுங்க, சாமி! ஞாபகம் இருக்கட்டும். நான் மறக்கவேமாட்டேன்! நல்ல விளையாட்டுங்க!' என்றாள் பொன்னாயி.

ரங்கராஜனும் சீனுவும் கீழே இறங்கிய சமயம் அங்கே நடுத்தர வயதுள்ள ஒருவரும், பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தியும் வந்திருந்தார்கள். பெண்ணின் எண்ணெய் வழியும் முகத்தைக் கண்டதுமே பிரணதார்த்தியின் புத்திரி இவள் என்று ரங்கராஜன் ஊகித்துவிட்டான். திருநீர் மலையிலிருந்து திரும்பிய பிறகு நேரே புறப்பட்டு வந்திருக்கிறார்கள் அவர்கள்.

'ஜமீன்தாரின் பிள்ளை ரங்கராஜன் யார்?' என்று கேட்டுக் கொண்டு அந்தப் பெண் அவனைப் பார்த்து அசடு வழியச் சிரித்தது. 'இவர் ராஜாவாட்டமாயிருக்கார். சித்தப்பா! இவரையேதான் நான் கல்யாணம் பண்ணிப்பேன், சித்தப்பா!' என்று ரகசியமாகத் தன் கட்டைத் தொண்டையில் சொல்லியது.

ஆனால், அதன் ரகசியம் அவ்வளவு பேருடைய காதிலும் விழுந்தது. 'பிழைத்தேன்!' என்றான் ரங்கராஜன்.

'இங்கே வாடி, ஜடமே! இங்கே வா! இங்கே வா!' என்று சாரதாவைப் பாக்கியம் கூப்பிட்டுக் கரகரவென்று கையைப் பிடித்து உள்ளே இட்டுச் சென்றாள்.

அரை மணிக்குப் பின் பிரணதார்த்தியின் வீட்டிலிருந்து மூன்று கார்களும் ஒரு ஜட்காவும் கிளம்பின.

ரங்கராஜன் கல்யாணம் சின்னவேலியில் நடந்ததா, முல்லை வாசலில் நடந்ததா என்று இன்றைக்கும் அந்த ஊர்வாசிகளுக்குச்



சந்தேகம்தான். சின்னவேலியில் தொடங்கிய பந்தல், முல்லை வாசலெல்லாம் வியாபித்திருந்ததாம்.

அப்போது சாப்பிட்ட விருந்துகளைப்பற்றி அந்தப் பிராந்தியத் தில் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

விருந்தாளிகள் பட்சய போஜனங்களைச் சாப்பிடமாட்டாமல் திணறிப் போனார்கள். போஜனம் நடக்கும்போது சுப்ரமணிய அய்யரும் நடேசய்யரும் வட்டமிட்டார்கள். அன்று ஸ்ரீராமச் சந்திரனுடைய சௌந்தர்யத்தைக் கம்பநாட்டாழ்வார்,

தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரும் அஃதே

என்று வர்ணித்ததுபோல, ரங்கராஜன் கல்யாணத்தில், லாடு தின்றவர்கள் லாடுவையே தின்றுகொண்டிருந்தார்கள்; பாயஸம் அருந்தினவர்கள் பாயஸமே அருந்தினார்கள்; ரஸமுண்டவர்கள் ரஸமே உண்டார்கள்!

வேதராம அய்யர் குறுக்கும் நெடுக்குமாய்ச் சென்று, 'பாயஸம் சாப்பிடுங்கள்; ஆயாசம் தீர இருக்கும்' என்று பிரசாரம் செய்தார். பாலுவும் அவரும் கல்யாண மகோத்சவத்தை எவ்வளவோ சிறப்பாக்கினார்கள் என்று சொல்ல வேண்டும். பாலு தனக்கு வாண்டுகளின் ஜமா ஒன்று சேர்த்துக் கொண்டு உலாவினான். அவர்களுக்குக் கோமதியின் கதையைத் தனக்குத் தெரிந்தபடி சொன்னான். நடுநடுவில் வழக்கம்போல் 'ஸைலன்ஸ் பிளீஸ்' 'சுருட்டுப் பிடிக்கக் கூடாது', 'மீல்ஸ் ரெடி', 'டுடேஸ் ஸ்பெஷல்ஸ்' என்றும் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஒரு சமயம் கோமதி சற்று முன்னால் வேகமாகப் போகவே பாலு, ரங்கராஜனை, 'மாமா வண்டியை நிறுத்த சங்கிலியைப் பிடித்து இழு' என்றான். ரங்கராஜன் சிரித்துவிட்டு, கோமதியின் சங்கிலியைத் தொடபோன சமயம், 'அகாரணமாய் உபயோகிப்பவர்களுக்கு ஐம்பது ரூபாய் அபராதம்!' என்றான்.

அவன் பின்னால் வேதராம அய்யர் சுற்றிக்கொண்டு உற்சாகப் படுத்தினார்; 'ஏலே பயலே, பலே!' என்றார் பிராஸம் தவறாமல்.

வேதராம அய்யர் புதுத் தம்பதிகளை எவ்வளவோ கேலிகள் செய்தார். கடைசியில், 'வேடிக்கை செய்வதே என் வாடிக்கை' என்றார். கல்யாணத்துக்கு வந்திருந்த சீனுவையும் ருக்மிணியையும் கவனித்து, 'கவலைப்படாதிங்கோ! உங்கள் முகூர்த்தம் ஆவணி கடைசியில் வைத்தாகி விட்டது. ஆனால், இப்பவே இவர்களை நன்னா கவனிச்சுக்குங்கோ!' என்றார்.

பிரணதார்த்திஹர அய்யரும் வந்திருந்தார். அவர் இப்போது மோட்டாரை விற்றுவிட்டதாகவும், எலெக்ஷனுக்கு நிற்கப் போகிறதில்லையென்றும் சொல்லிக்கொண்டார்கள். தத்தாத்திரி தத்தாரியாகவே திரிந்தானாகையால் அவர், 'மூட்டை மூட்டையாக ஊருக்கெல்லாம் எள் விற்றும், நமக்கு எள்ளும் தண்ணியும் இவன் எங்கே விடப்போகிறான்' என்றும் மனம் வெதும்பியிருந்தார். அவர் 'ஹே ஹே' என்பதைக் கவனித்த வேதராம அய்யர், 'யார் ஐயா அது அங்கே 'ஹே' கேட்கிறது! காலையிலே இட்லி சாப்பிடவில்லையோ! 'ஹே'ன்னா இங்கிலீஷிலே வைக்கோலாச்சே!' என்றார். எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். நல்ல வேளையாக இது பிரணதார்த்தியின் காதில்படவில்லை. சில சிறு பெண்குட்டிகளின் தொல்லைதான் அவருக்கு அதிகமாக இருந்ததாம். அவர்கள் பிரணதார்த்தி பக்கத்தில் வந்து காதோடு, 'மாமா, ஒரு ரகசியம். ஒருத்தரோடேயும் சொல்லாதிங்கோ! எள்ளுக்குள்ளே எண்ணெய் இருக்கு!' என்று சொல்லிவிட்டு ஓடினவாம்.

கோபாலனும் கல்யாணியும், ரங்கராஜன் - கோமதி பின்னாலேயே சுற்றினார்கள். புதிதாகப் பார்ப்பவர்களுக்கு அவர்கள்தான் புதுத் தம்பதிகளோ என்று சொல்லும்படியிருந்தது. அண்ணன் தம்பியின் அந்யோந்யத்தைப் பார்த்த பேர், 'இவர்களா அப்போது சண்டை போட்டுக் கொண்டார்கள்?' என்று நம்ப மறுத்தார்கள்.

காவேரி அம்மாளுக்கு வாயெல்லாம் பல்லாகவே இருந்தது. மிகவும் பெருமையாக, வந்திருந்தவர்களிடமெல்லாம், 'என் மூத்த பிள்ளைக்குப் பெண்டாட்டியிடம் பேசிக்கொண்டிருக்கப் பொழுது போதாது. என் இரண்டாவது பிள்ளை பெண்டாட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கப் போதில்லை என்கிறான்' என்று சொல்லிக்கொண்டாள்.

சேது பயந்துகொண்டு சாப்பிட வராமல் இருக்கவே, 'அவன் வருகிறானா, காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு வரட்டுமா!'



என்று சுப்ரமணிய அய்யர் கேட்டு அனுப்பினார். சேது ஓடிவந்து விட்டான். காதைச் சுற்றி ஒரு பெரிய முண்டாசு கட்டிக்கொண்டு வந்ததாகவும் கேள்வி.

மணிக்கு இரண்டு உதையாவது பரிமாறாமல் போனோமே என்று ரங்கராஜனுக்கு வருத்தம்தான். ஆனால், அவனும் அவன் தோழனும் வெளிவர ஏழு வருஷமாவது பிடிக்குமே!

டி.வி.எஸ்.அய்யர் வந்திருந்தார். மோட்டார் கேஸில் பிரணதார்த்தியை அவர் மன்னித்து எச்சரிக்கை மட்டும் செய்து அனுப்பிவிட்டாராம்.

வேதராம அய்யர் தமது பிராஸத்தின் வெற்றியை ஆசீர்வாதத்தின்போது அடைந்து அனுபவித்தார். அப்போது வேதராம சாஸ்திரிகளாக அவர் மாறி, அற்புதமாக வார்த்தைகளை ஜோடித்து ஒரு மணி நேரத்துக்கு மேலாக ஆசீர்வாதம் செய்தார். அவர் சொன்னதையெல்லாம் நாம் திரும்பச் சொல்ல அசக்தராக இருக்கிறோமெனினும் ஒரு சின்னஞ்சிறு பகுதியை மட்டும் குறிப்பிடலாம்.

'அநயோர் தம்பத்யோஹோ...

கரீயாம்ஸௌ, வரீயாம்ஸௌ, வித்வாம்ஸௌ, த்ரிடிஷ்டௌ, பலிஷ்டௌ, ச்ரேஷ்டௌ, ப்ரேஷ்டௌ, ஓஜஸ்விநௌ, தேஜஸ்விநௌ, வர்ச்சஸ்விநௌ, யசஸ்விநௌ, மனஸ்விநௌ...

ஸ்ரீமந்தௌ, ஹ்ரீமந்தௌ, புஷ்டிமந்தௌ, துஷ்டி மந்தௌ, ரித்திமந்தௌ, புத்திமந்தௌ, வித்யாவந்தௌ, மேதா வந்தௌ...

ஸுகுமாரௌ, ஸுகுமாரௌ, ஜிதமாரௌ, சாந்தௌ, தாந்தௌ, மஹாந்தௌ, ஜிதஜங்யௌ, கத தைந்யௌ, நித்யானந்தோ, நித்யோத்ஸவோ, நித்ய மங்களா பிவ்ருத்திஸ் ச பூயாஸ்தா மிதி பவந்தோ மஹாந்தோநு க்ரிஹ்ணந்து!'

இப்படி அடுக்கிக்கொண்டே போய், வார்த்தைகளில் பிரளய மாடி, கம்பீரமாக முடித்து, எல்லாரையும் திக் பிரமித்துப் போக வைத்துவிட்டார்.

தனியாகத் தன் சஹதர்மிணியை இரண்டு நிமிடம் சந்தித்த ரங்கராஜன், 'கோமதி!' என்று மெல்ல கூப்பிட்டான்.

'ஏன்?'

'நான் யார் என்று உனக்குக் கடைசிவரை தெரியவே தெரியாதே?' என்று கேட்டான் ஆவலுடன்.

'ஏன் தெரியாது? உங்களை முதல் தடவையாக பார்த்தவுடனேயே நான் தெரிந்துகொண்டு விட்டேனே' என்றாள் கோமதி.

'இதுதானே வேணாமென்கிறது! நிஜத்தைச் சொல்லு!'

'நிஜம்தான் சொல்கிறேன்!'

'என்ன, நான் ஜமீன்தார் பிள்ளை என்று என் முகத்தில் அப்போது எழுதி ஒட்டியிருந்ததோ?'

'அப்படித் தெரியும் என்று நான் உங்களிடம் சொல்ல வில்லையே!'

'பின் என்னவென்று தெரியுமாம்?'

'நீங்கள் 'கோமதியின் காதலன்' என்று தெரிந்து கொண்டு விட்டேன்!' என்றாள் கோமதி ஒரு புன்னகையுடன்.

R 2444
18/3/08